பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com
சனவரி 2024



மலையக மறுமலர்ச்சியின் மகுடம்

## கிழக்கிலங்கையில் உதித்த தாரகை
## இலக்கிய வானிலும் சாதனை

Happy New Year

# புத்தாண்டே வாவா

வருகிற நாட்கள் எல்லாம்
வளர்பிறை யாக மாற
தருகிற கரங்கள் நட்பாய்த்
தாங்கிட உறவாய் மாற
உருகிடும் பக்தர் கூட்டம்
ஓர்இறை என்றே எண்ணி
இருந்திட ஆண்டே வாவா
இதழினில் சிரிப்பைத் தாதா



இதுவரை வாழ்ந்து விட்டோம்
இதயமும் சோர்ந்து விட்டோம்
இதுவரை நோய்கள் தாக்க
இதழ்சிரிப் பிழந்து விட்டோம்
எதுவரை வாழ்வென் றார்க்கும்
எளிதினில் தெரிவ தில்லை
அதுவரை மகிழ்ச்சி தந்து
அகம்நிறை ஆண்டே வாவா

உன்னையே நம்பு கின்றோம்
உள்மனம் உருகு கின்றோம்
உன்னையாம் கடந்து போகும்
ஒவ்வொரு நாளும் எங்கள்
அன்னையாய் இருந்து நித்தம்
அமுதெனும் வாழ்வைத் தந்து
முன்னையில் லாத இன்பம்
முழுவதும் கொடுக்க வாவா

தமிழ்நெஞ்சம் அமின்

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – சனவரி 2024

625

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸீர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச்
சாலை வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண்
+91 9952529619 ( கட்செவி)
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர்களுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பான வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

புத்தம் புதிய ஆண்டொன்று மலரந்துள்ள நன்னாளில், நாம் செய்ய வேண்டிய பணிகளும் நீள்வரிசையில் இடம்பிடிக்க, மனதில் ஒரு புது உற்சாகத்துடன் அவைகளை செயல்படுத்தி வெற்றி காண சபதமேற்றிருப்போம். அதில் உறுதியாய் நின்று வெற்றி காணவேண்டியது நம் கடமை.

பாரதியின் பிறந்தநாளைக் கொண்டும் வகையில் இவ்விதழில் முண்டாசுக் கவிஞரை அழைத்து வந்திருக்கிறோம். எட்டயபுரத்து சுப்பிரமணியனாம் பாரதி, தீயாய் பழமைவாதத்தை சுட்டெரித்தவன். பெண்விடுதலைக்காகக் குரல் கொடுத்தவன். சாதிவெறியை தன் கவிதைச் சாட்டையால் விளாசியவன். தமிழை உயிர்மூச்சென சுவாசித்தவன். பெண்களின் முன்னேற் றத்துக்காக அவனது பேனா குனிந்து நிமிர்கையில், கூடவே அவர்களின் தன்மானமும் நிமிர்ந்து மரியாதைக்குரியதானது. காற்றுள்ளவரை நம் பாரதியைக் கொண்டாடி மகிழ்வோம்.

என் இதழியல் வேலைகள் இதுவரை எந்தப் பின்னடைவுமின்றி நடைபெற, 625 வது இதழின் மலர்ச்சியோடு . 53 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது தமிழ்நெஞ்சம்.

இதழொன்றைத் தொடர்ந்து நடத்துவதென்பது எளிதான விடயமல்ல. பல கரடுமுரடான பாதைகளைக் கடந்து தான் நிமிர வேண்டியதிருக்கிறது. தமிழ்நெஞ்சம் இலக்கியப் பந்தயத்தில் கவனம் பிசகாமல் பயணிக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. நம் வாசகர்களின் உற்சாகமான கரகோசமும், எழுத்தாளர்களின் பக்கபலமும் தான் என்னைத் தொடர்ந்து பயணிக்கத் தூண்டுகிறது. நான் அயர்ச்சியினாலும் துவளும் போதெல்லாம், ஊட்டச்சத்தாக என்னைத் தூக்கி நிறுத்துவது உங்களின் தொடர்ச்சியான உற்சாகப்படுத்தல் தான். உங்கள் அனைவரின் உறுதுணையோடு என் சேவை தொடரும். எனது நன்றியறிதலையும் உங்களனைவருக்கும் இத்தருணத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மலர்ந்த புத்தாண்டு நம் அனைவருக்கும் சுபீட்சத்தையும் வளத்தையும் நலத்தையும் தந்து, வாழ்வில் குதூகலம் பொங்கட்டும்! அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகளுடன் இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்!

நன்றி!

என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

## பூத்திடுவாய் புத்தாண்டே !

பாவலர் கருமலைத்தமிழாழன்

மனிதநேயம் பெருகவைத்து
மனிதத்தைப் பொலியவைத்து
இனியவாழ்வை மலரவைத்து
இங்கொளிர்வாய் புத்தாண்டே !

சாதிகளின் அணிவகுப்பும்
சண்டைகளின் கைகலப்பும்
வீதிகளில் ஒழிந்ததென
விளம்பிடுவாய் புத்தாண்டே !

நதிகளினை இணையவைத்து
நாடெல்லாம் செழிக்கவைத்து
புதியபாதை இங்கமைத்துப்
பூத்திடுவாய் புத்தாண்டே !

வளமையெனும் விதைதூவி
வறுமையெனும் களைபிடுங்கி
நலங்களினை வளரவைத்து
நகைதருவாய் புத்தாண்டே !

தன்னலமே இல்லாமல்
தவறுகளே செய்யாமல்
அன்பாலே அனைவரையும்
அணைக்கவைப்பாய் புத்தாண்டே!

செங்கரும்பின் சுவைபொழிந்து
செந்நெல்லின் மணிகுவித்து
மங்கலத்தை மனைநிறைத்து
மகிழ்வளிப்பாய் புத்தாண்டே !

# பொங்குக பொங்கல் பொலிந்து

## பாவலர் கருமலைத்தமிழாழன்

மதங்கள் அனைத்தும் மனிதநேயம் கூற
இதயம் பிரிதல் இனிதோ - விதையெனப்
பொங்கிடும் அன்பினைப் போட்டொருமைப் பாட்டினில்
பொங்குக பொங்கல் பொலிந்து !

பெண்ணை விலைபேசும் பேடித் தனமழிந்து
கண்மணியாய்க் காக்கக் கரம்பிடிக்கும் - அன்பனால்
மங்கலநாண் பூத்து மணநாள் மணக்குமெனப்
பொங்குக பொங்கல் பொலிந்து !

ஊழல் பெருக்கால் உதவிடும் திட்டமெல்லாம்
ஆழப் புதையும் அவலம்போய் - வாழவைக்கச்
செங்கதிராய் நேர்மைதனில் செய்வர்ஆள் வோரெனப்
பொங்குக பொங்கல் பொலிந்து !

பண்பழிக்கும் கையூட்டால் பாழாகும் நாடுதனில்
கண்ணியம் காணும் கடமையெனக் - கண்திறந்து
செங்கரும்பின் சாறாய்ச் செயல்செய்யும் மாற்றத்தில்
பொங்குக பொங்கல் பொலிந்து !


தொண்டுள்ளம் ஓடிவந்தே துன்பத்தைப் போக்கும்நல்
எண்ணம் அரவணைத்தே ஏற்றுமன்பு - மண்டுவதால்
பொங்கும் பொதுநலமே போம்தன் நலமென்று
பொங்குக பொங்கல் பொலிந்து !

செங்கதிர் வான்மழையால் செந்நெல் மணிகுவிய
மங்கலம் இல்லில் மணம்பரப்பக் - கங்குலெனத்
தங்கிருந்த நல்குரவு தான்மாய இன்பத்தில்
பொங்குக பொங்கல் பொலிந்து !

2024







10

# உளி பேசும் மொழி

**நெல்லை க. சோமசுந்தரி**
(கவிஞர், எழுத்தாளர் & தொல்லியல் ஆர்வலர்),
சென்னை, தமிழ்நாடு

‘குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டு வதேயிந்த மாநிலத்தே‘

என்ற பாடலில் திருநாவுக்கரசர், தில்லை அம்பலத்தானின்காட்சிஉருவினைஅழகாக எடுத்துரைக்கிறார். இப்பாடலின் படி, வளைந்த புருவங்களையும், கொவ்வைக் கனிப் போன்ற சிவந்த இதழ்களில் முகிழ்க்கும் புன்னகையையும், கங்கை நதி நீரால் ஈரமான சடைமுடியையும், பவளம் போன்ற சிவந்த திருமேனியில் அணிந்த பால் போன்ற வெண்மையான வெண்ணீற்று பூச்சினையும், பேரின்பம் நல்கும் உயர்த்திய திருவடிகளையும் காணும் வாய்ப்பினை பெறுவதாயின், இவ்வுலகில் மனிதராய் பிறப்பெடுத்தலும் வேண்டி விரும்பத்தகும் செயல் போன்றதாக நாவுக்கரசர் கூறுகிறார். ஆன்மீகத்தின் உச்சநிலையான பிறவி பெருங்கடலை கடப்பது தான் நோக்கமாய் இருப்பினும், மனிதப் பிறவியினை எடுப்பதும் சிறப்பு வாய்ந்ததாகக் கருது கிறார். ஏனெனில் மனித பிறவியில் மட்டுமே தில்லை அம்பலத்தானின் அருட் காட்சியினை அகக்கண்ணால் கண்டுணர இயலும். இதிலிருந்து, ஆடல் வல்லானின் அழகிய திருமேனியை திருநாவுக்கரசர் இப்பாடலின் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

தில்லை நாதனின் திரு உருவில் அமைந்த ஒவ்வொரு அங்கங்கள் மற்றும் அமைப்பிற்கும் ஒவ்வொரு வகையில் ஆழ்ந்த உட்கருத்துடன் கூடிய அர்த்தமானது உருவகப் படுத்தப் பட்டுள்ளது. அவ்வகையில், நடராசர் சிலையின் பின்புறத்தில் உள்ள வளைய மானது, இந்தப் பிரபஞ்சத்தைக் குறிக்கி றது. அவரது கையில் உள்ள உடுக்கை யானது இப்பிரபஞ்சத்தில் உயிரினங்களின் தோற்றத்தைக் குறிக்கிறது. உயர்த்தப்பட்ட கைகளானது, அனைத்து ஜீவராசிகளையும் காப்பாற்றுவதைக் குறிக்கிறது. மற்றொரு கையில் உள்ள அக்னியானது, தீயவகை களை அழிப்பதைக் குறிக்கிறது. நடராசரின் திருப்பாதத்தின் அடியில் இருக்கும் உருவமானது அறியாமை என்னும் அரக்கனைக் குறிக்கிறது. அவ் வகையில், மனிதஜீவராசிகளானது தனது அறியாமையை ஆடல் வல்லானின் பொற் பாதத்தில் சமர்ப்பித்தால், அவனருள் மூலம் அந்த அறியாமையானது நீக்கப்பெற்று உண்மையை உணரமுடியும் என்பதனைக் குறிப்பால் உணர்த்துகிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வடிக்கப்பட்ட சிற்பமானது, நாட்டியக் கலையின் அழகியல்களையும், மனித வாழ்க்கை தத்துவத்தினையும் குறிப்பால் உணர்த்தும் வகையில் ஒரு சிலை அமைக்கப்பெற்று, இன்றும் அதன் உட்பொருள் தத்துவங்கள் மற்றும் அதன் அமைப்பு ரீதியான வடிவமானது,





அறிவியலின் பிரபஞ்ச நடனத்துடன் (cosmic dance) ஒத்திருப்பதை நாம் காணும்போதும், அக்கால ஸ்தபதிகள் மற்றும் சிலை உருவாவதற்கான உருவத்தை படைத்தவர்களின் சூட்சும அறிவினை நோக்கும்போதும், நமக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

இத்திருக்கோவிலானது, ஒரே உயரம் உள்ள நான்கு ராஜகோபுரங்களை திசைக்கு ஒன்றாக எழுப்பப்பெற்றுள்ளன. ஒவ்வொரு கோபுரமும் 135 அடி உயரமும் மற்றும் 7 நிலைகளையும் கொண்டுள்ளவாறு அமைக்கப்பெற்றுள்ளது. ஒவ்வொரு கோபுரத் தின் தலைப்பகுதியில் 13 பெரிய செப்புக் கலசங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. கோபுர வாசல் ஒவ்வொன் றும் 40 அடி உயரம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன. அதன் சிறப்பு அம்சமாக கிழக்கு கோபுர வாசலில், நாட்டிய கலையின் 108 கரணங்களையும், நாட்டியச்சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளது. கோபுர வாசலானது, நீண்டு உயர்ந்து கட்டமைக்கப்பட்டிருப்பினும் அவ்வளவு உயரத்தில் சிற்பங்களானது செதுக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு சிற்பமும் நாட்டியக்கலையின் தத்துவார்த்த அர்த் தத்தை வெளிப்படுத்தும் விதமாகக் கலை நேர்த்தியுடன் உருவாக்கியிருக்கிறார்கள். அங்ஙனமே, ஒவ்வொரு சிற்பத்தினையும் உருவாக்குவதற்கான முயற்சியினையும், அக்கலைஞர்களின் பக்தியுடன் கூடிய ஈடுபாட்டுடனும், அவர்களை முழுமையாக அர்ப்பணித்து, உருவாக்கியிருக்கிறார்கள் என்பதனை பார்க்கும் போது நம்மால் உணரமுடிகிறது. அவ்வழியே, நம் முன்னோர்கள் கலைகளின் உணர்வுகளுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தினை நம்மால் அறியமுடிகிறதல்லவா ?

நீண்ட நெடிய வரலாறு கொண்ட இத்திருக்கோயிலின் உட்கட்டமைப்பா னது, ஐந்து சபைகளைக் கொண்ட தாகவும், அவைகள் முறையே, சித்சபை, கனகசபை, நிருத்தசபை, ராஜசபை, தேவசபை, ஆகியவையாகும். இவற்றில் சித்சபை என்பது ஆடல்வல்லான் ஆடல்புரியும் இடமான சிற்றம்பலம் இதைதான் சித்சபை என்றழைக்கப்படுகிறது. அதன் உள்ளே செல்வதற்கு 5 படிகள் உள்ளன. அவற்றிக்கு பஞ்சாராட்சப்படிகள் என்று பெயர். இப்படிகளின் இருபுறமும் யானை உருவங்கள் இருக்கின்றன. சித்சபையின் கட்டிட அமைப்பானது, மனித உடலில் அமைப்பையொற்றி எழுப்பப்பட்டுள்ளது.

சித்சபை மேல் 21,600 ஆயிரத்து பொன் ஓடுகள் பொருத்தி, அதில் 72,000 தங்க ஆணிகள் அடிக்கப்பட்டுள்ளன. ஒரு மனிதன் ஒரு நாள் முழுவதும் நிகழும் சுவாசத்தின் எண்ணிக்கையானது

21,600 ஆகும். மேலும், மனிதனது நாடி நரம்புகளின் எண்ணிக்கையானது 72000 ஆகும். இந்த சித்சபையின் மேலுள்ள 9 கலசங்கள் நவசக்திகளைக் குறிக்கிறது. இங்கு அமையப்பெற்றுள்ள 9 வெளி வாசல்களானது மனித உடலில் உள்ள 9 துவாரங்களைக் குறிக்கிறது. சிற்றம்பலத்திற்கு முன் உள்ளது பொன்னம்பலம் என்ற கனகசபை உள்ளது. இங்கிருந்துதான் தில்லை அம்பலத்தான் அனைத்து பக்தர்களுக்கும் ஆடல் வடிவான திருவுருவில் காட்சியளிக்கிறார். இது சபையில் உள்ள ஐந்து தளவரிசைக் கற்கள் பஞ்சபூதங்களின் தத்துவத்தைக் குறிக்கிறது.

நிருத்தசபையில் ஆடல்வல்லானின் ஊர்த்தவ தாண்டவத்தை நம்மால் காண முடியும். இந்த நிருத்தச்சபையின் சிறப்பே, தாண்டவ மூர்த்தி ஒரு காலை நிலத்தில் இறுத்தி மறுகாலை உயர்த்தி தனது காது குண்டலத்தை அணிவது போன்ற வடிவில் காட்சியளிக்கிறார். இந்தச் சபையின் அடிப்பாகத்தில் தேர்ச்சக்கரங்கள் செதுக்கப்பட்டு அவற்றின் மேல் இச்சபை அமைந்துள்ளது. மேலும் இங்குள்ள தூண்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களானது சுமார் ஒரு 'இன்ச்' அளவிற்கு மிகச் சிறிய சிற்பங்களாக செதுக்கப் பட்டுள்ளன. அவையனைத்தும் அச்சில் வார்த்தது போல் ஒன்று போல் உள்ளது. தேவசபையானது, இறைவன் பஞ்ச மூர்த்திகளுடன் (இறைவன் சோமாஸ்கந்தர், இறைவி சிவானந்த நாயகி, விநாயகப் பெருமான், முருகப் பெருமானுடனும், சண்டிகேஸ்வரர்) எழுந்தருளியுள்ளார். இத்திருக்கோயிலில் உள்ள ஆயிரம் கால் மண்டபமானது ராஜசபை என்றழைக்கப்படுகிறது.

இவ்வாலயம் முழுதும் கருவறை முதற்கொண்டு அனைத்துக் கட்டிட



அமைப்புகளிலும் கலைகளின் ஆனந்தத் தாண்டவமானது எங்கும் வியாபித்தி ருக்கிறது. கலைகள் மட்டுமின்றி மனித வாழ்க்கையின் வாழ்வியல் நெறிமுறை களின் தத்துவத்தை உணர்த்தும் வகையில் இத்திருக்கோயில் அமையப்பெற்றுள்ளது என்பதனையும் நம்மால் அறிய முடிகிறது. சிதம்பரம் நடராசன் கோயில் என்றவுடன் அனைவருக்கும் முதலில் ஞாபகம் வருவது சிதம்பர ரகசியம். சிதம்பர ரகசியத்தை அறிந்தவர் யார்? உண்மையில் சிதம்பர ரகசியம் என்ன என்ற வினாவிற்கு இன்றும் நம்மில் பலர் சரியான விடையைத் தேடிக்கொண்டிருக்கலாம். அதனை அறிய உளியின் மொழியினைத் தொடர்ந்து கேளுங்கள்.

உளியின் மொழி தொடரும்....

# சம்சாரி

வானத்தையும்
நிலத்தையும்
அசை போட்டபடியிருக்கும்
அசுரன் அவன்.

வானம் வஞ்சகம்
காட்டும் வேளையில்
நட்சத்திரங்களை
உதிர்த்து
சுழிக் காய்ச்சி
நிலவை அச்சுவெல்லமாய்
தொட்டுக் குடிப்பவன்

தோலை செருப்பாய்
அணிந்து
பூமித்தாயின்
சுருக்கங்களை நீவி விடும்
மருத்துவன்

அவன் கோவணத்தில் தான்
இங்கே ராஜ்ஜியம்
அவன் ராஜ்ஜியத்தில்
கோவணத்தைத் தவிர
ஒன்றுமில்லை.

**செ.புனிதஜோதி**



# அன்பின் நிமித்தம்



தற்போதுள்ள களநிலவரப்படி
அன்பை பிச்சையெடுப்பதில்லை
அன்பிற்கு ஏங்குவதில்லை
அன்பை வற்புறுத்துவதில்லை
அன்பிற்காக அலைவதில்லை
அன்பினை கேட்டுநிற்பதில்லை

அன்பு, அது அதுவாக வரும்வரை
காத்திருக்கமட்டுமே செய்கிறேன்
அன்பிற்காக எந்த பிரயத்தனமும்
செய்வதில்லை தற்சமயம்
அன்பினை அடைந்துகொள்ள
எந்த முன்னேற்பாடுகளும்
கைவசமில்லை
அன்பின் பொருட்டால் கொடுக்க
எந்தப் பரிசுப்பொருளும் கைககளில்லை
அன்பின் வழி நிற்க
கண்ணுக்கெட்டும்வரை
எந்த பாதைகளுமில்லை

அன்பு ஒன்றுதான் அநாதை என்பதுபோல
அன்பு மட்டும் தான் அதேநிலையில்
சிலரை அநாதையாகவும்
சிலபோது போதையாவும்
மாற்றிவிடுகிறது

அவ்வளவு அக்கறையொன்றுமில்லை
அலாதி பிரியமென்றுமில்லை
அவசரமாக அன்பு
செய்யப்படுவது தெரிகிறது
அநாவசியமாக அன்பு
மறுதலிக்கப்படுவதும் தெரிகிறது
அன்பின் மொத்தத்தையும் கடக்கவே
அத்தனையும் நடந்துவிடுகின்றன

அன்பின் மோட்சம் மட்டுமில்லையென்றால்
முன்புபோல வந்துசென்ற அன்பாலான
அனைத்தும் வெறும் வேடிக்கைகள்தான்
அன்பினையொத்த எல்லாவற்றுக்கும்
அன்பினாலேயே ஆறுதலமைகின்றன

அன்பிற்குள் அடங்கிப்போகாமல்
அன்பிற்குள் சுருங்கிக்கொள்ளாமல்
அன்பிற்குள் அடைபடாமல்
அன்பினை மேலோட்டமாக தொடரவே
மனம் விருப்பப்படுகிறது தற்போது

'கலைநேசன்' **முஷ்தாக் அஹ்மத்**
அக்குறணை

# நாலடியாரும் தன்முனை இயைபுக் கவிதைகளும்

**பாடல் : 1**

*கூர்ந்துநாய் கௌவிக் கொளக் கண்டும் தம்வாயாற்*
*பேர்த்து நாய் கௌவினார் ஈங்கில்லை - நீர்த்தன்றிக்*
*கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்லவோ*
*மேன்மக்கள் தம் வாயால் மீட்டு*
*(நாலடியார் பாடல் எண் : 70)*

**பொருள் :**

*நாய் வந்து நம்மைக் கடித்து விட்டதே என்பதற்காக, நாயை யாரும் திரும்பிக் கடிக்க மாட்டார்கள். அது போல கீழ் மக்கள் தகுதி பார்க்காது இழி சொல்பேசினாலும் சான்றோர் பதிலுக்கு மீண்டும் பழிச் சொல்லால் பேச மாட்டார்கள்.*

**தன்முனை இயைபுக் கவிதை**

***நாய்கள் மனிதரைக் கடித்திட்டால்,***
***மனிதர் நாயைக் கடிப்பாரோ?***
***பழிச் சொல் தூற்றித்திரி வோரை***
***நல்லோர் தூற்றித் திரிவாரோ?***

●●●

**பாடல் : 2**

*கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி,*
*இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்,*
*வடுபட்ட வைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்*
*கூறார்தம் வாயிற் சிதைந்து*
*(பாடல் எண் : 156)*

**பொருள் :**

*கரும்பைப் பல்லால் கடித்தாலும் சக்கரத் தில் வைத்துப் பிழிந்தாலும் இனிமையான சாற்றைத் தரும். அதுபோல சிறியர் திட்டினா லும் நல்லோர், தம் வாயால் திரும்பத்திட்டிப் பேச மாட்டார்.*

**தன்முனை இயைபுக் கவிதை**

**பிழிந்தாலும் பல்லால் கடித்தாலும்**
**கரும்பு தந்திடும் இனிமை**
**இழிசொல் சிறியோர் வீசினாலும்,**
**இகழாமை பெரியோர்க்கு மேன்மை**

●●●

**பாடல் : 3**

*உறைப்பருங்காலத்தும் ஊற்றுநீர்க்கேணி,*
*இறைத்துணினும் ஊராற்றும் என்பர் - கொடைக்கடனும்*
*சாஅயக் கண்ணும் பெரியார்போல் மற்றையார்*
*ஆஅயம் கண்ணும் அரிது. (பாடல் 184)*

**பொருள் :**

*மழையில்லாத காலத்திலும் ஊருக்கு நீர் அளித்து உதவும் கிணறு. அது போல சிறியோர்கள் செல்வம் இருந்தும் மறைப்பார்கள். பெரியோர்கள் வறுமையில் தளர்ந்தாலும் தன்னிடம் இருப்பதை அளித்து உதவுவார்கள்.*

**தன்முனை இயைபுக் கவிதை**

**மழை மறைந்த காலத்தும்,**
**நீர்க் கேணி சுரக்கும்**
**சிறியோர் கொடை மறைத்தாலும்,**
**பெரியோர் மனம் சுரக்கும்**

●●●

திருமதி.இரா. இராஜாமணி,
ஈரோடு

# தியாகத்தின் திறவுகோல்

“ஏய்யா... ஒனக்கு எத்தனை தடவ சொன்னாலும் புத்தி வராதா...?”

“ஏன்டி...? இப்படி கத்துற...? நான் என்னப் பண்ணினேன். உன்ன..?”

“என்னப் பண்ணியா...? யோவ் நேத்து என்ன நடந்துச்சுன்னே உனக்கு தெரியாதா...?”

“தங்கம், எதுவும் பிரச்சினையா..?”

“ஆமாய்யா...! நேத்து கடைவீதிக்கு போயிட்டு வர்றேன்னு போனீல...? நீ ரொம்ப நேரமா வர்றல. அந்தப் பக்கத்து வீட்டு பங்கஜம் பையன் கார்த்திக் தான் தூக்கிட்டு வந்து போட்டான்.”

“ஏய்யா, ஏற்கனவே நீ குடிச்சு குடிச்சு வீணாப் போயிட்ட, டாக்டர் இதுக்கு மேல குடிச்சா உன் உசுருக்கு ஆபத்துன்னு சொன்னார்ல...? அப்புறம் ஏய்யா...?‘ இது எனக்கு அசிங்கமாவே இருக்குயா...! நான் எங்க வீட்டுக்கே போயிடுறேன். நமக்குண்ணு ஐந்து வருசமா ஒரு குழந்தையுமே இல்ல... இதுவே எனக்கு பெரிய வருத்தம் தான்.”

“எனக்கும் அது தான் வருத்தம். இனிமேல் குடிக்க மாட்டேன், இது உன் மேல சத்தியம். தங்கம்.”

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது முத்துக்காளை திடீரென மயக்க நிலைக்கு சென்றான். ஐயோ என்று பதறியவள் அருகில் இருக்கக்கூடியவர்களை அழைத்து வந்து திருச்சி அரசாங்க மருத்துவமனைக்கு அவனை அழைத்துச் சென்றாள்.

என்ன ஒரு கைசேதம். மருத்துவர்கள் அவனைச் சோதித்து விட்டு, அவனுக்கான இரு சிறுநீரகங்களும் பழுதாகி விட்டன என்றுக் கூறி, உடனடியாக “ஒரு சிறுநீரகத்தையாவது யாரேனும் எட்டு மணி நேரத்திற்குள் தானமாக தர வேண்டும். இல்லையேல் முத்துக்காளையின் உயிர் உடனே பிரிந்து விடும்” என்று சொன்னார்கள்.

என்னதான் கணவன் குடிகாரனாக இருந்தாலும் தன் மனைவி தியாகத்தின் திறவுகோலாக தனது ஒரு சிறுநீரகத்தை அவனுக்கு தந்து காப்பாற்றியுள்ளாள். மனைவி என்பவள் மாணிக்கமே! பிறகு இவர்கள் ஒரு பெண் குழந்தையைத் தத்தெடுத்து தங்களது வாழ்வை வசந்தமாக்கிக் கொண்டனர்.

சா.நாகூர் பிச்சை

## நிறைவுற...

பூத்திருக்கு மிந்தநற் புத்தாண்டு எம்மிடம்
காத்திருக்கும் நீண்ட கனவுக ளெல்லாம்
இறைவ னருளால் இனியதா யென்றும்
நிறைவுற வேண்ட நினைத்து

கவியன்பன் கலாம்

## எழிலான எதிர்காலம் தேடி..

வேடிக்கை உலகமடா மனிதா
எங்கும் கேளிக்கை வாழ்க்கையடா
நம்பிக்கை வீழ்ந்ததடா மனிதா
எங்கும் வஞ்சகம் நிலைத்ததடா

காருண்யம் கலைந்ததடா மனிதா எங்கும்
அராஜகம் வாழ்க்கையடா
வருத்தங்கள் தொடர்ந்ததடா மனிதா எங்கும்
கொடுமையே நிலைத்ததடா

அறநெறிகள் அழிந்ததடா மனிதா எங்கும்
வன்முறையே வாழ்க்கையடா
திறனறிவோர் இல்லையடா மனிதா எங்கும்
அறியாமை நிலைத்ததடா

ஒற்றுமை மறைந்ததடா மனிதா எங்கும்
பிளவுகளில் வாழ்க்கையடா
வேற்றுமை வளர்ந்தடா மனிதா எங்கும்
வன்முறை கலந்ததடா

வேசமே வழக்கமடா மனிதா எங்கும்
குற்றமே குவியுதடா
மோசமே விளைந்ததடா மனிதா எங்கும்
பிழைகளே தெரியுதடா

தீவினை தொடருதடா மனிதா எங்கும்
பாவங்கள் மலிந்ததடா
நோவினை உயருதடா மனிதா எங்கும்
வலிகளே விரியுதடா

காயங்கள் நிகழ்ந்ததடா மனிதா எங்கும்
கண்ணீரே நிறைந்ததடா
மாயங்கள் ஏனடா மனிதா எங்கும்
அமைதியை நீ தூவடா

சாபங்கள் துரத்தடா மனிதா எங்கும்
சத்தியத்தை விதையடா
கோபங்கள் கொல்லடா மனிதா எங்கும்
உத்தமர்களாய் வாழடா

பேரவலங்கள் போதுமடா மனிதா எங்கும்
அன்பு நெறியினைச் சொல்லடா
கோரங்கள் நிறுத்தடா மனிதா எங்கும்
புன்னகையைப் போர்த்தடா

வா இணைவோம் மனிதா எங்கும்
வசந்தமே வளர்ப்போமடா
வாழ்வினிக்க மனிதா எங்கும்
நலப் பிரார்த்தனை செய்வோமடா.

- மக்கொனையூராள்

## மாயங்கள்

நிசப்தங்களின் அசரீரிகள்
உங்களுக்குக் கேட்குமா ?
இதோ
இந்தக் கனவுகள் அப்படித்தானே

ஆழ்ந்த உறக்கம்
அரை மரண நிலை
அமைதியானதோர் தளர்வு
சுற்றியெங்கும் நிசப்தம்
போதிலும் - கனவுகள் மட்டும்
கூச்சலிட்டு கொண்டிருக்கும்

நிஜத்தின் சாயலில்
கனவுகள் பயமுறுத்துகின்றனவா ?

அவை அமைதியைக் குடித்து
உள்ளுக்குள் முரண்டு பிடிப்பவை,
பார்வைகளைப் பறித்து
விழிகளுக்குள் நாடகமிடுபவை,
உணர்வுகளைச் சுருட்டி
அறிவில் மாயங்கள் தீட்டுபவை,
மெய்களைக் கொண்டு
மனத்தினில் பொய்கள் கோர்ப்பவை,
ஆழ்ந்த உறக்கத்திலும்
எங்கெங்கோ பிரயாணிப்பவை,
சிறு மரணத்திலும்
வாழ்வை பயமுறுத்துபவை

உங்களுக்குத் தெரியுமா ?
அவை நிஜமுமல்ல,
போலியும் அல்லாதவை என்று

அவை திடீரென உயிர்ப்பிக்கப்பட்டு
இடைநடுவே சபிக்கப்படுபவை

கனவுகள் என்பது
ஆழ்மனதின் அந்தரங்க நாடகம்
இன்னும்
வாழ்வின் நிஜங்களின்
மெருகூட்டிய பிரதிபலிப்பும் கூட.....

- முZஸ்னி முர்ஷிட்



# அத்துமீறல்கள்

அ.முத்துவிஜயன்

அந்தப்படகு தள்ளாடிக்கிட்டு இருந்துச்சு, அலைகள் ஆளுயரத்திற்கு எழுந்து பயமுறுத்திக்கிட்டு இருந்துச்சு காத்துவேற பலமா அடிச்சிக்கிட்டு இருந்துச்சு தூரத்துல மழை கடலோட கடலா எழுந்து நின்ன மாதிரி ஊத்திக்கிட்டு இருந்துச்சு அந்தப்படகுல மொத்தம் மூணுபேரு அகிலாவாகிய நான் என்னோட அக்கா மேகலா அப்புறம் ரெண்டு போலீஸ் காரங்க, எதுக்கு எங்களைப்பிடிச்சிக்கிட்டு போறாங்கன்னு தெரியல, எங்க எங்களைப் புடிச்சாங்கன்னும் தெரியல என்னா குற்றம் செஞ்சோம் அதுவும் தெரியல, எல்லாம் ஒரே கொழப்பமா இருந்துச்சு, கையில விலங்கு எதுவும் போடல ஏன்னா எப்புடி இந்தக்கடல்ல தப்பிச்சிப் போயிற முடியாதுன்னு விட்டுருப்பாங்க போல.

ஆனா நான் எப்புடியும் தப்பிச்சிறதுன்னு உறுதியா இருந்தேன் எப்புடியும் நான் ஜெயிலுக்குபோற ஐடியா இல்ல. ஒன்னு தப்பிக்கனும் இல்ல இந்தக்கடல்ல செத்தாலும் பரவாயில்ல ஆனா இவங்க கிட்ட இருந்து தப்பிச்சே ஆகனும், அதுக்கான சரியான நேரம் பாத்துக்கிட்டு இருந்தேன்.

ஆனா அந்தப் போலீஸ் காரங்க அவ்வளவு சாதாரணமான ஆளுகளா இல்ல. எங்கமேல தீவிரமான கண்காணிப்புல இருந்தாங்க நானும் எங்க அக்காவும்தான் துடுப்புப் போட்டு படக ஓட்டிக்கிட்டு இருந்தோம் படகு பயங்கரமா ஆடிக்கிட்டு இருந்துச்சு, ஒரு சரியான நேரத்துக்காகக் காத்திருந்தேன். தூரத்துல கரை தெரிஞ்சிச்சி எப்புடியும் ஒரு அரை மணி நேரத்துல கரைக்குப் படகு போயிரும் அதுக்குள்ள ஏதாவது செஞ்சாகனும் இல்ல தப்பிக்க முடியாது.

அப்ப தூரத்துல ரெண்டுபேர் மீனவங்க மாதிரி தெரிஞ்சது கட்டு மரத்துல வந்துக்கிட்டு இருந்தாங்க,அவங்க ரெண்டு பேரும் ஏதோ சொல்றாங்க ஆனா கடல் சத்தத்துல ஒன்னும் கேக்கல, ஆனா அவங்க ரெண்டுபேரும் கட்டுமரத்துல எங்களை நோக்கி வாராங்க அவங்க நோக்கத்தப்பாத்தா எங்களுக்கு ஒதவுற மாதிரி தெரியுது அதுனால நானும் படக அவங்களை நோக்கி ஓட்ட முயற்சி பண்ணுறேன் ஆனா காத்துனால அது முடியல அது எங்க கண்ட்ரோல்ல இல்ல. பயங்கரமாத் தள்ளாடி கரை நோக்கிப்போகுது இன்னும் கொஞ்ச நேரம் தான் கரை வந்துடும் எனக்கு கைகால் எல்லாம் நடுங்க ஆரம்பிச்சது,

அப்பப்பாத்து ஒரு போலீஸ்காரர் படகு ஆட்டத்துல தள்ளாடி தண்ணில விழுகுறார் விழுந்துட்டு ஹெல்ப் ஹெல்ப்னு கத்துறார், அவருக்கு நீச்சல் தெரியாது போல தண்ணில முங்கி முங்கி எந்திரிக்கிறார் ஆனா படகு அவரை விட்டு வெலகிப்போகுது, அப்ப அவரைக்காப்பாத்த கூட இருந்த இன்னொரு போலீசும் தண்ணில குதிச்சி அவரக்காப்பாத்த முயற்சி பண்ணுறார் ஆனா மொதல்ல குதிச்சவர் நல்லா தண்ணியக் குடிச்சிட்டாரு போல முங்கி

முங்கி எந்திரிக்கிறார் கொஞ்சநேரத்துல ஆளைக்காணோம்.

அப்ப சுதாரிச்சிக்கிட்ட இன்னொரு போலீஸ்காரர் திரும்பிப் பார்க்கும் போது படகு அவரை விட்டுத்தூரமா வெலகிப்போறதப்பாத்துட்டு வேகமா நீந்திப்படகநோக்கி வாரார் அப்ப எனக்கு கைகால் நடுங்க ஆரம்பிச்சு படக வேகமா துடுப்புப்போடுறேன் அக்கா வேற பயத்துல கத்துறார் சீக்கிரம் சீக்கிரம் அவன் பக்கத்துல வந்துட்டாண்டி வேகமா ஒட்டு ஒட்டுன்னு பதறுறா.

நான் வேகமா ஒட்டத்தான் முயற்சி பண்ணுறேன் ஆனா முடியல ரெண்டுகையும் ஒரே வலி தாங்க முடியல அதுக்குள்ள அந்த ரெண்டு மீனவங்களோட கட்டுமரம் எங்களுக்குப் பக்கம் வந்துருச்சு அப்ப அதுல ஒரு மீனவர் சொல்றார் அவன் மண்டையில ஒரு போடு போடும்மா அவன படகுல ஏறவிடாதன்னு கத்துறார்.

நான் யோசிக்கிறேன் அதுக்குள்ள அந்தப்போலீஸ்காரர் படகை எட்டிப் பிடிக்க முயற்சி பண்ணுறார் இப்ப அந்த மீனவர் சொல்றார் ஏம்மா யோசிக்கிற அவன் மண்டையில ஒரு போடு போடு இல்லைன்னா நீங்க தப்பிக்க முடியாதுன்னு கத்துறார் அக்காவும் கத்துறா எனக்கு அப்புடி ஒரு ஆவேசம் எப்புடி வந்துச்சுன்னு தெரியல கையில இருந்த துடுப்பால அந்தப்போலீஸ் காரர் மண்டையில ஒங்கி அடிக்கிறேன் அவர் தலையில இருந்து ரத்தம் கொட்டுது அவர் ஆ ஆன்னு கத்துறார் ஆனா நான் விடல திரும்பத்திரும்ப எந்திரிச்சி அடிக்கிறேன் அப்ப படகு தள்ளாடுது கொஞ்சநேரத்துல படகு மொத்தமாக் கவுந்திருச்சு.

நானும் அக்காவும் தண்ணில விழுந் துட்டோம் அப்ப அந்தப்போலீஸ் காரர் என்னோட தலைமுடியக் கொத்தாப் பிடிச்சிக்கிட்டே முங்குறார் தண்ணில. நான் விடுடா விடுடான்னு கத்துறேன் அவர் என் மொகத்துல மோதி முங்குறார் அப்ப மூச்சுத்திணறி கத்துறேன் விடுடா விடுடான்னு.

அப்பத்தான் திடீருண்ணு முழிப்பு வருது ஒடம்பெல்லாம் வேர்த்திருக்கு பக்கத்துல படுத்திருந்த அக்கா என்னடி ஆச்சு பயங்கரமாக் கத்துன வாய் ஒளறுச்சு ஒன்னும் புரியல ஒடம்பெல்லாம் வேர்த் திருக்கு ஏதாவது கெட்ட கனவான்னு கேட்டு கொஞ்சநேரம் கழிச்சித்தான் நெதானத்துக்கு வந்தேன் கண்டது கனவுன்னு.

அப்ப அக்கா கேட்டா என்ன கெட்ட கனவான்னு கேட்டா அப்ப நான் சொன்னேன் ஆமா அக்கா பயங்கரமான கனவு இப்ப நெனைச்சாலும் குப்புன்னு வேர்க்குது இன்னொரு விசயம் இதே கனவு எனக்கு அடிக்கடி வருது இதோட இந்தக் கனவு வாறது அஞ்சோ ஆறாவது தடவை யான்னு தெரியல ஆனா அடிக்கடி வருது பயமா இருக்கு போலீஸ்காரரை அடிச்சி கொலை பண்ணுறமாதிரி கனவு வந்தா பயமா இருக்காதா என்ன பண்ணுற துன்னு தெரியலன்னு சோகமா அக்கா கிட்டச் சொன்னேன்,

அதுக்கு அக்கா சொன்னா சரி போய் தண்ணியக் குடிச்சிட்டுத் தலைய மாத்திவைச்சிப் படு எல்லாம்

**கண்ணீர் பூக்கள்**

கனவைக் காண
கண்கள் இல்லை
மணந்த வாழ்வில்
மணமும் இல்லை
கணக்கு முடிவில்
விடையும் இல்லை
பிணமாய் நாளும்
வாழ்வது ஏனோ!

ஷிபானியா பௌசுல்
நேகம

சரியாப்போகும் காலையில பாத்துக்கலாம் போன்னு சொன்னா, நானும் போய் ரெண்டு டம்ளர் தண்ணியக் குடிச்சிட்டு பாத்ரூம்போயிட்டு வந்து துண்ட எடுத்து மொகமெல்லாம் தொடச்சிட்டு வந்து படுத்தேன் ஆனா தூக்கம் வரல போனது போனதுதான் பொறண்டு பொறண்டு படுத்தேன் தூக்கம் வரல.

எவ்வளவுநேரம் முழிச்சிருந்தேன்னு தெரியல முழிச்சிப்பாக்கும் போது மணி 8.00 காலையில அசந்து தூங்கிட்டேன் போல, அப்ப அக்கா வந்து கேட்டா ஏம்மா எந்திரிச்சிட்டயா போய்பல்லவெளக்கிட்டு வா ஒரு வாய் காபிகுடிக்கலாம் எல்லாம் சரியாப்போகும் அந்தக் கனவையே நெனச்சி கொழப்பிக்காத போனு சொன்னா.

நானும் போய் காலைக்கடன் முடிச்சிட்டு வந்து ஒக்காந்தேன் அவளும் காப்பி கொண்டாந்து சுடச்சுட ஃபில்டர் காபி வைச்சிருந்தா நானும் அதை எடுத்துக் குடிச்சிட்டு அடுத்து வேலைக்கிக் கௌம்பத்தயார் ஆனேன்.

அக்கா சுட்டுக்குடுத்த தோசைய அவசரமா முழுங்கிட்டு டிரஸ் பண்ணிக் கிட்டு வேலைக்கிக் கிளம்பினேன். ஆனா மனசே சரியில்ல அன்னிக்கி சனிக்கெழம வெற ஆபீஸ் போய்ட்டு வேலை ஆரம்பிச்சா ஒன்னும் ஓடலை தலைவேற வலிக்க ஆரம்பிச்சது.

எப்புடியோ மேனேஜர்கிட்டக் கெஞ்சிக் கூத்தாடி அரைநாள் லீவு வாங்கிட்டு திரும்ப வீட்டுக்கு வந்தேன் அக்கா கேட்டா ஏம்மா சீக்கிரமே வந்துட்டனு அதுக்கு நான் சொன்னேன் தலைவலிக்கா அதான் அரைநாள் லீவு போட்டுட்டு வந்துட்டேன் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கனும்னு சொல்லிட்டு ஒரு மாத்திரைய முழுங்கிட்டு போய் படுத்தேன் கொஞ்சநேரத்துல தூங்கிட்டேன்.

தூங்கிக்கொஞ்சநேரத்துல திரும்பக்கனவு அதே ரெண்டு போலீஸ் காரவங்களென்னயும்அக்காவையும்போலீஸ் ஸ்டேசனுக்குக் கூப்புட்டுபோறமாதிரி, திடுக்கிட்டு எந்திரிச்சேன் இப்பவும் ஒடம்பெல்லாம் வேர்த்திருந்துச்சு.

அப்ப உள்ளாற வந்த அக்கா நான் இருக்குற நெலவரத்தைப் பாத்துட்டுக் கேட்டா என்ன மறுபடியும் கனவா னு, அதுக்கு நான் சொன்னேன் ஆமாக்கா அந்தக்கனவு என்னத்தொறத்துது முடியல இதுக்கு ஏதாவது தீர்வு கண்டாகனும்னு சொன்னேன்.

அப்ப அவ சொன்னா இதுக்கு ஒரே வழி ஒரு மனநல மருத்துவரைப் பாக்குறதுதான், எனக்குத்தெரிஞ்ச ஒருத்தர் இருக்குறார் அவரைப்போய்ப்பாக்கலாம்னு சொன்னா. சரி 7.00 மணிக்கித்தான் அவர் வருவாரு நாம போய்ப்பாக்கலாம்னு சொன்னா நானும் அதுக்குத்தயார் ஆனேன். அக்காவும் கிளம்புனா அப்ப சொன்னா நான் அவங்ககிட்டப்பேசிட்டேன் வரச் சொன்னாங்கனு சொன்னா.

ஆறரை மணிக்கிக்குகிளம்பிப் போனோம் அங்க ஏற்கனவே ஒருத்தர் காத்திருந்தார் அவருக்கு அப்புறம் பாக்குறதா அவங்க சொன்னாங்க.

நானும் அக்காவும் என்னோட பெரியப்பாவீட்டுல வளந்தவங்க அம்மா வும் அப்பாவும் நாங்க சின்ன வயசா இருக்கையிலஒருஆக்சிடெண்ட்டுலபோய் சேந்துட்டாங்க. அப்ப திக்குத்தெரியாத வயசுல எங்க பெரியப்பாதான் எங்களைக் கூட்டிட்டு வந்து அவர் வீட்டுல வைச்சி வளத்தார். காசு பணம் பிரச்சனை

இல்ல ஏன்னா அப்பாவும் அம்மாவும் வேலைபாத்ததுனால காசுபணம் சேத்துருந் தாங்க அதுவும் போக இன்சூரன்ஸ் அப்புறம் வேலை பாத்த எடங்கள்ல இருந்து வந்த செட்டில்மெண்ட் பண மெல்லாம்நெறையவே இருந்துச்சு.

நாங்க ஜீனியரா இருந்ததுனால கேர் டேக்கரா பெரியப்பாதான் இருந்தாரு அவர் கண்ட்ரோல்லதான் எல்லாம் அவரை மீறி எதுவும் செய்யமுடியாது, அதுனால மேஜர் வயசு ஆகிறவரை அவர்தான் எல்லாம் பாத்துக்கிட்டாரு.

அதுக்கப்புறம் நாங்க ரெண்டுபேரும் வேலைகிடைச்சி வெளி யூருக்கு வந்துட்டோம், இப்ப ரெண்டுபேரும் தனியா வாடகை வீடு புடிச்சி குடி இருக்குறோம் அப்ப அப்ப பெரியப்பா வந்து பாத்துட்டுப்போவார் ஆனா என்னவோ தெரியல அவர் மேல பாசம் வரல அன்பும் வரல அவரைப்பாத்தா எரிச்சல் தான் வந்துச்சு, அதுவும்போக நாங்க மேஜர் ஆனவன்ன எல்லாச் சொத்தையும் எங்கபேருக்கு மாத்துறேன்னு சொல்லிக்கிட்டு இருந்தார் ஆனா செய்யல இழுத்துக்கிட்டே இருந்தார்.

அதுக்குள்ள உங்களை டாக்டரம்மா உள்ளாற கூப்புடுறாங்கன்னு அட்டெண் டர் வந்து சொன்னாங்க நானும் அக்காவும் உள்ளாற போனோம்.

அப்ப டாக்டரம்மா கேட்டாங்க என்ன விசயம் நு அப்ப நான் சொன்னேன் இதுமாதிரிக் கனவு அடிக்கடி வருது தூக்கம் போயிடுது அதுவும் போல ஒரு குறிப்பிட்ட கனவு அடிக்கடி வருதுன்னு சொல்லி அந்தக்கனவை அவங்ககிட்ட விவரிச்சேன். அவங்க அதைக்கேட்டுட்டு சரி பாக்க லாம்னு சொல்லி அக்காவ வெளிய அனுப்பிட்டு என்னைய அங்க இருந்த சாய்வு சீட்டுல படுக்கச்சொன்னாங்க. நானும் அதுல படுத்தேன் ஒரு டம்ளர்ல தண்ணிகுடுத்துக் குடிக்கச்சொன்னாங்க.

அதுக்கப்புறம் அவங்க என்ன உத்துப் பாத்து ஏதோ சொல்லிக்கிட்டு இருந்தாங்க அப்புறம் என்ன நடந்துச்சுன்னு தெரியல.

கொஞ்சநேரத்துல எனக்கு எனக்கு நெதானம்வந்துச்சு அப்பபக்கத்து அறையில டாக்டரும் அக்காவும் பேசிக்கிட்டு இருந்தாங்க. கொஞ்சநேரத்துல ரெண்டு பேரும் உள்ளாற வந்தாங்க. அப்ப டாக்டர் சொன்னார் உங்களுக்கு ஒன்னும் பிரச்சனை இல்ல.

இன்னிக்கி பல பெண்களுக்கு இருக்குற பிரச்சனைதான் சரி பண்ணிடலாம். சின்ன வயசுல பல பெண்கள் தங்களோட சொந்தக்காரங்களால பாலியல் தொல் லைக்கு ஆளாகுறாங்க அதை அவங்களால வெளிய சொல்ல முடியல, ஏன்னா யார் அவங்களக் காப்பாத்தனுமோ அவங்கதான் அதைச்செய்யிறாங்க. அதுனால அந்தப் பெண்களால அதை வெளிய சொல்ல முடியாம உள்ளுக் குள்ளயே வைச்சி புழுங்கி வேதனைப்படுறாங்க அது அவங்களோட ஆழ் மனசுல ஆழமாப் பதிஞ்சிருது.

உடம்பு வீக்காகும்போது அந்த நினைவுகள் கனவுகளா மாறி அழுத்துது உங்களுக்கும் அதேதான் நடந்திருக்கு. உங்க சின்ன வயசுல உங்களோட சொந்தக்காரவுங்க அதிலும் குறிப்பா உங்க பெரியப்பா அப்புறம் அவரோட நண்பர்களால நீங்க பாலியல் தொல்லை களுக்கு ஆளாகியிருக்குறீங்க. அதுதான் உங்களின் கனவு, இப்ப நீங்க எதுக்கும் கவலைப்படவேணாம் ஏன்னா நீங்க இப்ப அவங்களைச்சார்ந்து இல்ல நீங்க உங்களை பாதுகாத்துக்க முடியும் அதுவும்

போக அவர் உங்களுக்குச்சேர வேண்டிய சொத்தை தராம இழுத்தடிக்கிறார் அதுனால நீங்க அவர் மேல ஒரு வக்கீல் நோட்டீஸ் விட்டு அதைச்சரி பண்ணலாம். எதுக்கும்கவலைப்படாதீங்க.

உங்களுக்கு ஆழ்நிலை மனசுக்குள்ள இருந்த பயம் இனிமே வராது அதுக்கு என்னால முடிஞ்சதை நான் செஞ்சிருக்கேன். நீங்க இனிமே தைரியமா இருக்கனும். சட்டப்படி உங்களுக்குச் சேரவேண்டிய சொத்துக்களை முறையா அடைய ஆவன செய்யுங்கள். இதுல கொஞ்சம் மாத்திரைகள் எழுதி யிருக்கிறேன் அது எல்லாம் சத்து மாத்திரைகள் தான் தூக்கம்வரலன்னா இந்த மாத்திரை தனியாத் தாறேன் அதைப்போட்டுட்டு தூங்குங்க எல்லாம் சரியாகும்னு சொன்னாரு.

அப்பதான் சின்ன வயசுல நடந்த சம்பவங்கள் எனக்கு ஞாவகம் வந்துச்சு நான் சீண்டப்பட்டதும் அத்து மீறல்களும் நெனப்புக்கு வந்துச்சு அதை நெனச்சவன்ன கண்ணீர் கண்ணுல கசிஞ்ச்சிச்சு. கொஞ்சம் யோசிச்சிப்பாத்தா அந்த போலீஸ்காரவங்க ரெண்டு பேரு மொகமும் ரொம்பத்தெரிஞ்ச மொகங்களா இருந்துச்சு. இனிமே தைரியமா இருப்பேன்னு எனக்கு நானே சொல்லிக்கிட்டேன். ■

---

# புத்தாண்டுக் குரலே!

புலனக்குயிலே!
புலனக்குயிலே!
புத்தாண்டுக் குரலாய்ப் !
புறப்பட்ட மயிலே!

அலைபேசிப் பதிவில்
ஆயிரம் குயில்கள்!
விரல் தேய அழித்தேன்,
விடியும் வரையில்,

மூடி வைத்தேன்
முந்நூறு ஆனது,
அணைத்து வைக்க
ஆயிரமானது,

துடைத்து வைத்தேன்;
திரும்ப முளைத்தது.
தொடாமல் இருந்தேன்,
தொள்ளாயிரம் ஆனது,

திரும்பத் திரும்ப
தொல்லை கொடுத்தது
எல்லைமீறி
ஆட்டம் போட்டது,

எதைத் தொட்டாலும்
வெறுப்பாய் நிறைந்தது,
புத்தாண்டு வாழ்த்து
புளிப்பாய்ப் போனது !


ஒரு விரல்கூட
முடங்கிப்போனது,
பெருவிரல் எல்லாம்
விறைப்பாய் ஆனது

தெரிந்த பலரும்
தெரியாத எண்ணும்
துரத்தத் துரத்த
அலைபேசி அழுதது,

படித்துப் படித்துக்
கூவிடு குயிலே!
படிக்கவும் மாட்டார்,
சொல்லடி எழிலே!

வாழ்த்துகள் போதும்!
வந்தது போதும்!
வாழ்க! வளத்துடன் '
வந்தனை உனக்கே!

**ஈரோடு -**
**இராஜாமணி**




# ஒற்றைப் பனை

## நூல் மதிப்புரை

ஒவ்வொரு புத்தக வெளியீடும் ஒவ்வொரு பிரசவத்திற்குச் சமம். அதுவும் கன்னி மலர் வெளியீடு முதல்பிரசவம் எனவே கூறலாம்.

அந்தவகையில் திருமதி சுஸானா முனாஸ் அவர்களின் கன்னி நூலான 'ஒற்றைப்பனை' அருமையான சிறுகதை தொகுப்பு நூலாகும்

நூலாசிரியர் பற்றி சில வரிகள். 1980களில் ஆரம்பித்த இவரது இலக்கியப் பயணம் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள், வானொலி போன்ற ஊடகங்கள் மூலம் தொடர்ந்து வருகிறது. அவ்வப்பொழுது தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்தி வரும் இவர் இணையத்தளங்களில் எழுதிவரும் தொடர் கதைகள் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வருகின்றதென்பதும் இவர் எழுத்துக்களுக்கு ஒரு சான்றாகும்.

அவை விரைவில் புத்தக வடிவில் நம் கைகளில் தவழும் என்பது நிச்சயம்.

ஒற்றைப் பெண்களின் வாழ்வியல் துன்பங்களை கதைகளில் வெளிப்படுத்தி இருக்கிறார் நம்நூலாசிரியர். எண்பத்து எட்டுப் பக்கங்களில், பத்து தலைப்புகளில் அருமையான. கதைகளாக தந்திருக்கிறார். பெண்ணியம்.கூறும் வாழ்வியல் சோகங்கள் புத்தகம் முழுக்க விரவிக் காணப்படுகின்றன.

நம் எழுத்தாளர் ஒரு பெண் என்பதாலோ என்னவோ இதிலுள்ள கதைகள் அத்தனையுமே அவர்களின் உள்ளுணர்வுகளிலிருந்து எழுதப்பட்டிருப்பது தெளிவு. பெரும்பாலான பெண்களின் வாழ்க்கைக் கனவுகளை தொலைத்துவிட்ட ஏக்கங்கள், வீட்டுவேலைக்காக பெண்கள் சென்று படும் துயரங்கள் என்பனவற்றையும் இவர் கதைகளில் பதிவு செய்யத் தவறவில்லை. அன்றாட வாழ்வில் சாதாரணமாய் நிகழக்கூடிய வலிகளும் ரணங்களும் கூட இவர் பேனாவால் பேசப்பட்டிருக்கின்றது.

பெண்ணானவள் தனது இளமைக்காலத்தில் எடுத்த பிழையான முடிவினால் பிற்காலத்தில் கணவனை இழந்து சிறு பிள்ளைகளுடன் தனி மரமாக வாழ்வதும் எல்லா உறவுகள் இருந்தும் வெறுமையாக நிற்பதும் வாழ்வில் எவ்வளவு பெரிய கொடுமை என்பதை 'ஒற்றைப்பனை' கதைத்தொகுப்பு மூலம் உணர்த்தியிருப்பது சிறப்பு. யுத்தகாலத்தின் பின்னரான இடம் பெயர்வு, ஏழ்மை போன்ற அவலநிலையைக்கூட மிக அழகாக சித்தரித்திருக்கும் இவர், மதங்களை மறந்து வாழும் சகோதரத்துவத்தையும், இன ஒற்றுமையையும் சிறப்பாக பதிவு செய்திருக்கிறார்.

மனிதர்களின் அன்றாட வாழ்விலுள்ள வறுமை பந்த பாச உணர்வுகள் இவரின் கதாபாத்திரங்களின் வெளிப்பாட்டில் உயிரோட்டம் பெற்றிருப்பது உணர்வுபூர்வமாயுள்ளது.

பெரும்பாலான பெண்களின் திருமண வாழ்க்கை ஆரம்பத்தில் இனிமையாக இருந்தாலும் பின்னர் ஏக்கம், தவிப்பு, தனிமை அவர்களை ஆட்கொண்டு விடுகிறது. ஏழ்மையிலும் கற்பினைக் காத்திடும் பெண்மை பூமியைப்போன்று பொறுமை காத்து நிற்கின்றது என்பதை தனது 'ஒற்றைப் பனை' மூலம் மிக அழகாக பதிவு செய்திருக்கிறார் நம் நூலாசிரியர். அனைவரும் வாசித்து பயனடைய வேண்டிய அருமையான நூல். இந்நூல் கொண்டு எமது புத்தக அலுமாரிகள் அழகு பெறட்டுமே!

88 பக்கங்களுடன் 2023 ஒக்டோபர் மாதம் வெளியீடு கண்ட இந்நூலின் விலை 400/= (இலங்கை ரூபா) ஆகும். நூல் தேவைகளுக்கு : 0768815188 எனும் அலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

**சித்தி மிஸ்ரியா அமீன்**
*கிண்ணியா*

---

# புதிய விடியல்

## சூர்யா.பா



புதிய விடியலில் புதிதாய் பூத்த புத்தாண்டே வருக ..!
புதுமை பொங்க புத்துயிர் பரிசளிக்கும் புத்தாண்டே வருக ..!
கலக்கத்தை போற்றி நம்பிக்கை கொடுக்கும் புத்தாண்டே வருக ..!
மனிதம் துளிர வெற்றிகள் தழைக்க வந்த புத்தாண்டே வருக வருக..!

நித்தம் வசந்தம் உன்னை தேடி வர ..
வண்ண சோலை உன்னில் அசைந்து ஆட..
இதயம் மலர்ந்து அன்பு மணம் எங்கும் வீச..
இசையின் கதவுகள் திறந்து தெம்மாங்கு பாட..

ஆங்கில புத்தாண்டே வருக..! வருக..!
புத்தாண்டை வரவேற்க பூச்செண்டுகள் வேண்டாம்,
மாறாக உங்கள் புன்னகையே போதும்..!
புத்தாண்டை வரவேற்க பட்டாசுகள் வேண்டாம்

பண்பான உங்கள் வாழ்த்து மட்டுமே போதும்..!
ஆடம்பர பரிசுகளும் பகட்டான ஆடைகள் வேண்டாம்
மாசில்லா உங்களின் மட்டற்ற அன்பே போதும் ..!
பிறக்கும் புத்தாண்டு புதுமைகள் புரியட்டும்.!

புன்னகையில் பூமியும் புதுயுகம் படைக்கட்டும்.!
புதிய விடியலில் புரட்சிகள் நிகழ்த்தட்டும் .!
இன்பம் பொங்க வண்ணம் மிளிர்ந்து,
அளவில்லா வளங்கள் சேர்க்கட்டும்...!

வாழ்க்கை வளம் பெற ,வெற்றிகள் தொடர்ந்திட ..
இன்னிசை முழங்க,மகிழ்ச்சி நம்மில் நிறைந்திட ..
மாற்றங்கள் மலர்ந்து, ஏற்றங்கள் நிறைந்திட..
ஆங்கில புத்தாண்டே அசைந்தாடி வருக .! வருக .!

# அன்பு வழி

ஆ.லெ.முகம்மது இர்ஷாத்

அன்பை அடைகாக்கலாம்
அடைத்து வைக்க முடியுமா?
எந்தக் கதவினால்
நீ அடைப்பாய்?
எந்தச் சாவி கொண்டு நீ திறப்பாய்?

அன்பு வாழும் பள்ளிக்கூடம்
அங்கு ஆசான் அன்னை

ஊசிக் காதிலும் அன்பு
நூலாக நுழைந்து விடுகிறது
ஆண்டவனின் கோபத்தை
அன்பு மிகைத்து விடுகிறது

அன்பு மரம்
மின்னல் கிளை பரப்பி
நட்சத்திரக்கனி கொடுத்திடும்

காற்று நுழைய முடியாத
கோட்டைகளிலெல்லாம்
அன்புக்கொடிதான் பறக்கிறது

அன்புக் கடலில் மூழ்கி
எவரும் மாய்வதில்லை
மூழ்காமலும் முத்தெடுக்கும்
கலைதான் அன்பு

அவமானங்களை அன்பு
வெகுமானங்களாக்கித் தரும்
கல்லிலும் நீரூற்றாய்ப்
பொங்கி வரும்

தோல்வியுற்றுச் சோர்ந்தவர்க்கு
அன்புதான் நெம்புகோல்
வயோதிபம் வளையும்போது
அன்பு கைத்தடியாகிறது

இழந்தாலும் பெற முடிவது
அன்புதான்
அனாதை இல்லம்
முதியோர் இல்லம்
அன்பை இழந்தோர்க்கு
அன்பை வழங்கும்
இடமல்லவா அவை!

தெருவோடு போகும்போது
திருவோடு ஏந்தி நிற்போர்க்கு
நாணயமாய் நிறைவதும் அன்பு

ஏழையாய்ப் பிறந்தாலும்
கல்வி மாலையால்
அணி சூட்டுவது அன்பு


அன்பு
விடுதலையை
வேண்டுவதில்லை
காதலியிடம் காதலன்
சொன்னான்
‘அன்புக் கயிற்றைப் பற்றி
ஆயுள் கைதியாக
உன்னிடமே வந்து விட்டேன்
என்னை எப்போதும்
விடுதலை செய்து விடாதே!‘

சூரியனில் சுடர்வதும்
சந்திரனில் குளிர்வதும் அன்பு
கோப நெருப்பை அணைக்கின்ற
நீர்ப் புன்னகை அன்பு

அன்பினால் கட்டிய கோட்டை
எப்போதும் இடிவதில்லை
தாஜ்மஹால் என்ன
வெறும் கல்லா?
அதன் ஒவ்வொரு கல்லிலும்
பரிசுத்த அன்பு

கொடுப்பதால் குறையாத
செல்வம் அன்பு
நட்டமில்லா வியாபாரம்
அன்பு

அடைத்து வைக்காமல்
அன்புப் பாதைக்கு
வழி காட்டுவதே
மானிடப் பண்பு




2022 ஜீலை மாதம் முதல் பதிப்பாக 208 பக்கங்களில் வெளிவந்த இந்நூலின் விலை இலங்கை ரூபா 800/= ஆகும். நூல் தேவைகளுக்கு: 0094761687077 அலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்

# அக்கினிக் குஞ்சுகள்

## நூல் மதிப்புரை

சங்ககாலம் தொட்டே நாவல்கள் இலக்கியத்தில் இடம்பிடித்து கோலோச்சி வருவதை அவதானிக்கலாம்.

நாவல்களிலும் நாட்டுப்பற்று, மொழிப் பற்று, இனப்பற்று டன் கூடிய நாவல்களுக்கு தனி மதிப்புண்டு. அவ்வகையில் எழுத்தாளர் லதா உதயன் எழுதிய 'அக்கினிக் குஞ்சுகள்' நாவலும் இடம் பிடித்துள்ளது எனக் கூறலாம்.

யுத்தத்தினால் ஏற்பட்ட அவலங்களும் அழிவுகளும் கொஞ்சநஞ்சமல்ல. இழப்புகளிலேயே பேரிழப்பாகச் சொல்லக் கூடியது, அழுது புரண்டாலும் மீளப்பெற முடியாத இளமைக் காலமும், துள்ளித் திரிந்த சிறுபராயமும், நாம் இழந்த விலைமதிக்க முடியாத உயிர்களும் தான்.

இந்நாவலின் அத்தனை இண்டு இடுக்குகளிலும் பயணித்து, நாமும் கொஞ்சம் யுத்தக் காற்றைக் கொஞ்சம் சுவாசித்து, வலிகளில் புதையுண்டு, உணர்வுகளோடு சற்றுநேரம் உறவாடி வரலாம் வாருங்கள்!

கடலுக்குச் சென்ற மீனவர்களின் வருகைக்காக விடியலின் உதயத்தில் கரையில் காத்திருக்கும் உறவுகளின் எதிர் பார்ப்போடு நாவல் ஆரம்பிக்கிறது. ஆபத்தான கடல் வாழ் பிராணிகளை விட மனிதநேய மற்றோரின் செயல்களால், சடலங் ளாகக் கரையொதுங்கிய மீனவரின் சோகவரலாறு கடற்றொழிலின் ஆபத்துகளை பிரதிபலிக்கிறது. தம் வாழ்வாதாரத்துக்காக அவர்கள் அன்றாடம் உயிரைப் பணயம் வைத்து, வள்ளங்களில் மீன்பிடிக்கச் செல்வதும், அவர்களின் உறவுகள், உயிரைக் கையில் பிடித்து எதிர்பார்ப்புடன் காத்திருப்பதுமாய் கதை நகர்கிறது.

மனதில் மரணபயத்தை சுமந்தபடி வீடுகளிலும் பங்கர்களிலும் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் போராடும் மக்களும், நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையுமாக தாய் மண்ணுக்காகவும் தன்னினத்துக்காகவும், மொழிச் சுதந்திரத்துக்காகவும் ஆயுதமேந்தி, வீரமரபணுவில் விளைந்த வித்துக்கள் தாமென தமது இருப்பை உறுதிப்படுத்தும் போராளிகளுமாக அந்த போர்ச்சூழலை நினைக்கையில் மனம் பதைபதைக்கத் தான் செய்கிறது.

போரும், வீரச்சாவுகளும் சுதந்திரமாக துள்ளித் திரிந்த இளைஞர், யுவதிகளின் மனங்களில் தாக்கம் செலுத்தி, நாட்டுப் பற்றை விதைத்து ஆயுதமேந்தும் போராளிகளாக மாற்றியிருக்கின்றன என்பதற்கு பெரியதம்பி, ராசா போன்றவர்களே உதாரணம்.

ஒரு நாவலை எழுதுவதற்குரிய சூட்சுமங்கள் இந்நாவலில் கையாளப்பட்டிருக்கின்றன. அதிலும் யுத்தச்சூழலைப் பின்னணியாகக் கொண்ட கதையில் ஆங்காங்கே காதலையும், இயற்கை எழிலையும் விபரிக்கும் இடங்கள் நாவலுக்கு மெருகூட்ட, அவ்விடங்களில் எழுத்தாளரின் பேனை முனை தூரிகையாக மாறி, வாசகரின் கற்பனையில் அழகோவியங்களை வரைந்திருக்கிறது என்று சொல்லலாம்.

ஆர்த்தெழும் ராசாவின் நினைவுகளால் காவ்யா அனுபவிக்கும் துயர், அவள் ராசா மேல் கொண்டிருக்கும் எல்லையற்ற

காதலைப் பறைசாற்றி, அனல் மேல் புழுவான அவள் நிலைப்பாட்டை எடுத்துக் காட்டுகிறது.

இறுதிக்கட்டப் போரின் அவலஙக ளும் நந்திக்கடலை சாட்சியாக வைத்து முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட போரும் இந்நூலில் விரிவாகப் பேசப்படா விட்டா லும், அதன் மூர்க்கத்தையும் ரணங்களையும் மனதுள் உறைந்த வலிகளையும் மௌன மாகத் தொட்டுக் காட்டி உணர்த்திப் போயிருக்கிறதென சொல்வது மிகையாகாது.

யுத்தம் முடிவுற்றிருந்தாலும் அதன் வெப்பச் சலனங்கள் காற்றோடு கலந்திருக்க, மக்கள் மனங்களிலும் தீ கனன்று கொண்டிருப்பதை சொல்லாமல் சொல்லி நாவலை நிறைவு செய்கிறார் நூலாசிரியர் லதா உதயன்.

இந்நாவலை வாசிக்கையில், போரினால் ஏற்பட்ட ரணங்களின் வலிகளும், துயரும், நாடி நரம்புகளில் ஊடுருவி உணர்வுகளில் வியாபிப்பதை வார்த்தைகளால் விபரிக்க முடியாதுள்ளது. கந்தக நெடியும் காயப் பட்ட உணர்வுகளும் இன்னும் நம்மை ஆக்கிரமித்திருக்க, இதிலிருந்து இயல்பு நிலைக்கு மீள பல மணித்துளிகளோ, யுகங்களோ கூட தேவைப்படலாம்.

போரின் உக்கிரம் இயற்கை எழில் ததும்பும் பூமியை குருஷேத்திரமாக மாற்றி, உயிர்களைக் கொத்துக் கொத்தாய் காவு கொண்டதோடு, இலங்கை வரலாற்றில் ஒரு கரும்புள்ளியாய்,கறுப்புச் சரித்திரமாய் தடம் பதித்து விட்டது.

இந்நாவல் வரலாற்று ஆவணமாக இலக்கியப் பேழையை அலங்கரிக்கப் போவது திண்ணம்.

அக்கினிக்குஞ்சுகள் நீறுபூத்த நெருப்பி லிருந்து உயிர்த்தெழுந்து தமிழருக்குப் பெருமை சேர்க்கும்.

**வஃபீரா வஃபி**

# தன்முனை கவிதைகள்

தன் முழு உடலையும்
பரிசளிக்கும் பனை!
மரித்தபின் உடல்தானம்
செய்திட நினை!
.
அடுத்தவர் நிலத்தை
ஆக்கிரமித்தல் அடுக்குமோ?
அதைப் பொறுக்காமல்
மழைவெள்ளம் போர் தொடுக்குமோ?
.
ஈருளிப் பயணமென்றால்
தேவை ஒரு கவசம்!
அதைவெறுத்துப் பயணித்தால்
உனக்கும் வரும் திவசம்!
.
எத்தனையோ வீடுகட்டி
ஏரியிலே எசமானனாய் ஆனாய்!
பெருக்கெடுக்கும் வெள்ளத்திலே
ஏன் பரிதவித்துப் போனாய்!
.
ஓரவிழியில் கவிதை
சொன்னாள் காதலி
உன் வீட்டாரை மறந்து
விட்டு நீயும் காதலி...
.
எங்கெங்கோ தேடுகிறாய்
தெய்வம் யாரென்று
அறிந்திலையோ நோய் போக்கும்
மருத்துவர் தானென்று
.
பசியெடுத்தால்குழந்தை
ஏங்கும் பாலுக்கு
காற்றில் பரிதவிக்கும்
பட்டம் ஏங்கும் நூலுக்கு
.
மெல்லிய நூலில்
சரமாய்த் தொடுக்கிறாள் பூவை
தொடுத்து முடித்ததும்
சூடிக் கொள்வாள் பாவை!
.

**மன்மதன்**
ஒசூர் 635 109

# நேற்று இல்லாத மாற்றம்

நேற்று இல்லாத மாற்றம் இன்று வருமா ?
ஏற்றம் கொண்டு வாழ்ந்த எங்கள் இனம்
காற்றில் சிதைந்து ஏக்கத்ததோடு போனதே !.
ஆற்றுவார் ஆதரவின்றி நாட்கள் கழிந்ததே!

எண்ணற்ற சுமைகளை இதயத்தில் வாங்கி
இந்நாளில் இறந்தவரை மனதினில் தாங்கி
புண்பட்ட மனதோடு பொழுதெல்லாம் ஏங்கி
கண்ணீர் விட்டோம் இன்னும் மாற்றமில்லையே!

ஆண்டுகள் பதின்நான்கு இன்று நாம் கடந்தும்
எண்ணற்ற உறவுகளை நாமன்று  இழந்தும்
ஏதிலிகளாக நாம் உலகெங்கும் அலைந்தும்
எந்த மாற்றத்தையும்  நாம் காணவில்லையே!

**வி.அபிவர்ணா**
முல்லைத்தீவு (மூங்கிலாறு வடக்கு)



## புத்தாண்டே புன்னகையோடு வருக!



முதுமையை எட்டிப்பிடித்த
2023 ஆம் ஆண்டு விடை பெற
நித்திரை நீங்கி முத்திரை பதிக்க
இனிய புத்தாண்டுக் குழந்தை
2024 தவழ்ந்து வருகிறது!

பொங்கும் புதுவெள்ளமாக
புன்னகை தவழ்ந்து வர
திங்கள் போற்றும் புதுமலராக
புத்தாண்டு மலர்ந்து வருகிறது!

வானில் தவழ்ந்து வரும்
வெண்ணிலா ஆசையோடு

விண்மீன் கூட்டங்களுடன்
புத்தாண்டு குழந்தையை
மகிழ்வுடன் வரவேற்கிறாள்!

பூக்கும் புதுமலர்கள்
பூமியைத் தொடும் அருவிகள்
அமைதியாக ஓடும் நதிகள்
ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள்
ஆற்றில் துள்ளும் மீன்கள்
அன்புடன் வரவேற்கின்றன!

உருகி ஒளி பரப்பி நிற்கும்
வண்ண மெழுகுவர்த்திகள்
இசைபாடும் கருவிகள்

மாதாகோவில் மணியோசை
மகிழ்வோடு தவழும்
புத்தாண்டுக் குழந்தையை
வரவேற்கும் பொழுது...
தாய் உள்ளத்துடன் நாமும்
புன்னகையோடு தவழ்ந்து வரும்
புத்தாண்டுக் குழந்தையை
அன்புடன் வரவேற்று
அணைத்து மகிழ்வோம்!

**பொன்விலங்கு பூ. சுப்ரமணியன்,**
பள்ளிக்கரணை, சென்னை

# அழிவில்லாச் செல்வம் ஆகச்சிறந்த கல்வியே...

அகரத்தில் துவக்கம்
கற்றலின் அறிவே

ஆற்றலைத் தந்து
ஆளுமையை வளர்த்திடும்

வற்றாத நதியாய்
வாழ்வில் சிறக்கும்

வான்மழையாய் மனதில்
இனிமை சேர்த்திடும்

புவிதனில் கற்றோருக்குப்
புகழ் தந்திடும்

காலத்தால் அழியாது
தணலில் கலந்திடாது

கற்பித்தலில் ஏற்றம்
தந்து உயர்த்தும்

ஒற்றுமை உணர்வுதனை
உள்ளத்தில் நிறைத்திடும்

செல்லும் இடமெல்லாம்
சீரியப் புகழாகும்

ஞானம் பெற்றிடின்
ஞாலம் நமதாகும்

தன்னம்பிக்கை நாளும்
உள்ளத்தில் உருவாகும்

ஊரும் நாடும்
பெயரை உச்சரிக்கும்

இதயம் குளிர்ந்திடும்
இனிமை தவழ்ந்திடும்

உச்சத்தில் பயணம்
உறுதியான வாழ்க்கை

எண்ணங்கள் நேராகும்
வண்ணங்கள் பூத்திடும்

அழிவில்லாச் செல்வம்
ஆகச் சிறந்த கல்வியே

**பெ.வெங்கட லட்சுமி காந்தன்**
விருதுநகர்

அகவை கூடிய
புதிய ஆண்டு
மலர செய்வோம்
இனிமை உண்டு!

2022
2023
2024

எஸ்.சந்தனம்

# இறுக்கமனம்!

கல்லைப் போன்றே இறுக்கமுடன்
 கண்ணும் குருடாய்த் திரிந்திடுவார்!
முள்ளாய்க் குத்திக் கிழித்திட்டே
 மோகத் தீயை விதைத்திடுவார்!
பொல்லாச் செயலை ஈட்டிடுவார்
 பொய்மை வாழ்வில் மூழ்கிடுவார்!
எல்லாம் அழித்தே தொலைத்திடுவார்
 இளமை வாழ்வைக் கருக்கிடுவார்!

பெற்றோர் தன்னை மதியாமல்
 பிறந்தே உயிரை எடுத்திடுவார்!
கற்றோர் போற்றும் சபைதனிலே
 கழிந்தே தூற்றி உயிர்குடிப்பார்!
மற்றோர் மகிழ்வைக் குலைத்திட்டே
 மானம் கெட்டே அலைந்திடுவார்!
வற்றாத் தீமை தான்கொண்டு
 வாய்மை இழந்து திரிந்திடுவார்!

வல்ல இறைவன் அருளின்றி
 வாடி வதங்கித் துடித்திடுவார்!
சொல்லும் செயலும் சேராமல்
 சொர்க்க வாசல் மூடிடுவார்!
நல்ல நட்பை இழந்திட்டே
 நாளும் பொழுதும் அழுதிடுவார்!
அல்லும் பகலும் உழைப்பின்றி
 ஆழ்ந்தே உறங்கிக் கிடந்திடுவார்!!

பாவலர்மணி நிலவழகன்!.
ரஞ்சினி சந்திரமோகன்.



# கன்னத்தில் ஒண்ணே ஒண்ணு தா...

- நௌஷாத் கான். லி
அபுதாபி

என் பேரு பாவாடைச்சாமி இந்த பேரை கேட்கும் போதே உங்களுக்கு சிரிப்பு வரலாம் ஆனால் நீங்கள் சிந்தும் ஒவ்வொரு புன்னகையும் என்னை காயப்படுத்திதுன்னு நீங்கள் அறிய மாட்டீர்கள்.

எல்லாம் என் தலைவிதி எல்லா அவமானங் களையும் சுமந்து தானே ஆகணும் .பிள்ளையே இல்லாத வீட்டுக்கு தவமாய் தவமிருந்து பெற்ற பிள்ளை .குலச்சாமி பாவாடைச்சாமி அருளால் பிறந்ததால் அப்பாவும் - அம்மாவும் எனக்கு பாவாடைசாமின்னு பேரு வச்சாங்க.

குலச்சாமி அருளால் நான் நல்லா வரணும்னு தான் அப்பா அம்மா ஆசைப்பட்டாங்க ஆனா கூட இருக்கிற சில மூதேவிங்க நாடாச் சாமி, பாவாடை, ஜட்டின்னு கிண்டல் பண்ணுவாங்க இதனாலயே தெரியாதவங்க, புதுசா பார்க்குற வங்க யாராவது என் பேரு கேட்டா விஜய், கார்த்திக், ஷாம்ன்னு எனக்கு தோணுற, வாயில வர்ற பேரை சொல்லுவேன்.

ஆசை, ஆஸ்திகளை கூட விட்டு கொடுக்கலாம் ஆனா அடையாளத்தை விட்டு கொடுக்க கூடாதுன்னு சொல்வாங்க ஆனா சுத்தி இருக்கிறவங்க பண்ண கிண்டலாலே என் சொந்த அடையாளத்தை (பெயரை) இழந்து நின்றேன்.

சொந்த ஊர்ல பண்ண கிண்டலாலே எனக்கு பிடிக்காத சென்னை நகருக்கு வந்தேன். சென்னைக்கு ஒரு பிரத்யேகமான ஒரு குணம் உண்டு உங்களுக்கு பிடிச்சாலும், பிடிக்கலைன்னாலும் சென்னையை நம்பி வந்தா நிச்சயம் வேலையும் உண்டு, வாழ்க்கை யும் உண்டு.

சிலருக்கு வாழ்க்கைல விரும்புனது கிடைக்கலைன்னாலும் கிடைச்சது நல்ல தாக அமையும் அப்படிதான் பிடிக்காத நகரவாழ்க்கை நரகமா இல்லாம ஓரளவுக்கு குறை சொல்லாத விதத்துல இருந்ததால அந்த வாழ்க்கை ரொம்ப பிடிச்சு போச்சு.

கிராமம் மாதிரி புறம் பேசிக்கிட்டு, அடுத்தவன் கதையை பத்து வீட்டு திண்ணை யில உட்கார்ந்துக்கிட்டு குறை சொல்லி படம் ஓட்டுற கதையெல்லாம் இங்கில்லை. அவனவனுக்கு அவனவன் வாழ்க்கைய பார்க்கிறத இங்கே பெரும்பாடா இருந்தது.

பக்கத்து வீட்டுல என்ன நடந்தாலும் அவன வன் அவன் வேலைய மட்டும் பார்த்துக்கிட்டு போவான் ஏன்னா அவன் வேலையே தலைக்கு மேல இருக்கும் இதனால அடுத்தவன் வாழ்க்கைய பார்க்குறதுக்கு நேரம் இருக்காது அடுத்தவன் மீது அக்கறை படாத, குறை சொல்லாத நகர வாழ்க்கையில் நிறைய நல்லதும் இருக்கு, கெட்டதும் இருக்கு இருந்த போதிலும் இந்த வாழ்க்கை எனக்கு ரொம்ப பிடித்து போனது.

இந்த உலகத்தில் இந்த அற்புதமான காதல் யார் மீது எப்ப வரும்ன்னு யாராலயுமே சொல்ல முடியாது ஆனா அது வர வேண்டிய நேரத்துல கரெக்ட்டா வரும்.

எல்லா பெண்களும் தேவதையா என்பது எனக்கு தெரியாது ஆனால் என்னால் காதலிக்கப்படும் கனிகா என்னை பொறுத்த வரை தேவதைதான் .பொதுவாக காதலிக்க படுபவர்கள் எல்லாருமே தேவதைதான்.

அவளை பார்த்த முதல் தடவையிலேயே என்னுள் காதல் பூ பூத்தது அது ஏனென்று இதுவரை தெரியவில்லை. இந்த பாழாய் போன காதல் யார் மீது எப்ப வரும்ன்னு யாருக்குமே தெரியாது ஆனா இந்த காதல் வந்ததுக்கு அப்புறம் வாழும் வாழ்க்கை கூட ரொம்ப அழகா தெரியும்.

எத்தனையோ பெண்களை பார்த்திருக் கிறேன், சகஜமாய் பேசி இருக்கிறேன் ஆனா அவள பார்க்கும் போது மட்டும் அவ கண்ணை பார்த்து பேச முடியலை. அவளை பார்க்கும் போதெல்லாம் மனசுக்குள்ள ஆயிரம் பட்டாம்பூச்சி பறப்பது போல இருந்தது அவ என் பக்கத்துல இருந்தாலே என் இதயம் ரொம்ப படபடப்பா இருந்தது.

மனசுக்குள்ளயே இன்னும் எத்தனை வருஷத்துக்கு இந்த பொல்லாத காதலை பூட்டி வைப்பது??

காலம் தாழ்த்தி சொல்லும் காதல் காணாமல் போகவும் வாய்ப்புண்டு?

சொன்னால் தானே காதல்??

சொல்லாமல் எப்படி தெரியும் என் காதல்??

அவளை அடிக்கடி திங்குற மாதிரி அவ பார்க்காத போது பார்ப்பது, அவளை தவிர எல்லார்கிட்டயும் அவளை காதலிக்கிறதா சொல்லுறது எவ்வளவு பைத்தியக் காரத்தன மானது. இந்த பைத்தியக்காரத் தனத்தை தான் இதுவரைக்கும் வைத்தியம் போல எனக்குள்ளயே செஞ்சுக்கிட்டு இருக்கேன்.

நான் மாறணும்னா முதல்ல என் காதல்ல அவகிட்ட சொல்லணும்?

அவ என் வாழ்க்கையில வந்தா எல்லாமும் எனக்கு நல்லதாய் மாறும்னு அவளையே நினைச்சுக்கிட்டு அனத்துற, துடிச்சுக்கிட்டே இருக்குற அந்த இதயம் சுமக்குற நெஞ்சுக்குழி சொல்லிக்கிட்டே இருந்தது.

இப்படியே போனா என் வாழ்க்கையும், காதலும் கானலா தான் போகும்?

ஒரு வழியா என் காதல்ல அவகிட்ட சொல்லணும்னு முடிவு பண்ணேன் ஆனா பொய்யான பேரை சொல்லி அவளை ஏமாத்தி கல்யாணம் செய்ய விரும்பலை .பாவாடை சாமி என்கிற என் சொந்த அடையாள பெயரோட அவளை கல்யாணம் பண்ண விரும்புனேன்.

ஒருவேளை என் சொந்த பேரை சொன்னா என் காதலை அவள் ஏற்றுக்கொள்ளாமல் போவதற்கும் வாய்ப்புண்டு ஏனென்றால் மிஸ்ஸஸ் கனிகா பாவாடை சாமின்னு கல்யாணத்துக்கு அப்புறம் அவளை யாராவது கூப்பிட்டா அவ வருத்தப்படவும், அவமானப்படவும் வாய்ப்பிருக்கு .ஒரு படிச்ச பொண்ணு பல விஷயத்தை யோசிச்சு தான் முடிவு எடுப்பா.

கல்யாணத்துக்கு அப்புறம் என் பெயரால வர்ற பிரச்சனையை ஒரு நிமிஷம் அவ யோசிச்சா என் காதல் அந்த நிமிடமே காணாம போகவும் வாய்ப்பிருக்கு.

இப்படி எக்குத்தப்பா, கிறுக்கு தனமா என் மனசு ஆயிரம் சொன்னாலும் உண்மையா அவகிட்ட இருக்கணும்னு தோணுச்சு. ஒருவேளை உண்மையை அவகிட்ட சொல்லி என் காதல் தோத்து போனாலும் பரவாயில்லை என்னை பொறுத்தவரைக்கும் நூறு சதவீதம் அவகிட்ட உண்மையா இருக்கணும் அவ்வளவு தான்.

மனசை திடப்படுத்தி கொண்டு இதுவரை சொல்லாத காதலை அவளிடம் சொல்லிட முற்பட்டேன்.

ஒருநாள்

கனிகா உங்ககிட்ட தனியா பேசணும்??

என்ன பேசணும் இங்கேயே சொல்லுங்க...

ப்ளீஸ் வேலை முடிஞ்சு வெளியே வாங்க அப்புறம் சொல்லுறேன்.

அன்று மாலை

கனிகா நான் சொல்லப்போறது சரியா – தப்பா, உங்களுக்கு பிடிக்குமா – பிடிக்காதா என்பது எனக்கு தெரியாது ஆனா உங்களுக்கு காலம் முழுதும் நான் உண்மையுள்ளவனா இருக்கணும்ன்னு ஆசைப்படுறேன்.

What You Mean??

உங்களுக்கு இன்னமுமா புரியலை. நான் உங்களை சின்ஸியரா விரும்புறேன், உங்களையே கல்யாணம் பண்ணனும்னு நினைக்குறேன்.

Will You Marry Me?

(சிறு புன்னகைக்கு பிறகு)

நீங்க விரும்புறது எனக்கு முன்னாடியே தெரியும் நீங்க சைட் அடிக்குறது ஆபிஸ்ல வேலை பார்க்குறவங்களுக்கே தெரியும் போது சைட் அடிக்க படுற எனக்கு தெரியாதா என்ன?

பொண்ணுங்களை பத்தடி தூரத்துல இருந்து ஒரு ஆம்பளை பார்த்தாலும் கண்டு பிடிச்சிடுவாங்க. இயற்கையாவே பெண்களுக்கு உள்ளுணர்வு அதிகம். நீங்க பார்க்குறது, உருகி உருகி ஒன் சைடா லவ் பண்ணுறது முதல்ல பிடிக்கலைன்னாலும் நீங்க வருஷக்கணக்கா உண்மையா காத்திருந்து காதலிக்கிறதால உங்களை காலப்போக்குல எனக்கும் பிடிச்சு போச்சு. ஒருத்தர் இன்னொருத்தரை உருகி, உருகி காதலிக்கிறதே வரம் தானே.

நீங்களா காதல வந்து சொல்வீங்கண்ணு தான் இதுநாள் வரை காத்திருந்தேன்.

உங்களுக்கும் என்னை பிடிச்சிருக்கா??

ஆமாம்... அவன் மனது சந்தோஷப் பட்டாலும் உள்ளுக்குள் ஒரு சிறு தயக்கம் இருந்தது.

கனிகா உங்ககிட்ட ஒரு உண்மை சொல்லணும் , அந்த உண்மையை சொல்லும் போது உங்களுக்கு என்னை பிடிக்காம கூட போகலாம்.

பிடிச்சிருக்குன்னு சொன்ன உங்க உதடுகள் என்னை திட்டி விட்டு வெறுக்கவும் வாய்ப்பிருக்கு?

என்ன உண்மை அது??

அது வந்து... அது வந்து??

சீக்கிரம் சொல்லுங்க...

நீங்க நினைக்குற மாதிரி என் பேரு ஷாம் இல்லை பாவாடைச்சாமி, குலதெய்வம் அருளாலே பொறந்ததால எனக்கு அந்த பேரை வீட்ல வச்சுட்டாங்க.

அந்த பெயரை கேட்டதும் ஒரு சிறு புன்னகைக்கு பிறகு, இதுக்கு தான் ரொம்ப டென்ஷனானீங்களா மிஸ்டர் பாவாடைச்சாமி.

இந்த பேரு யாருக்கு பிடிக்குதோ பிடிக்கலையோ எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு அதை விட உண்மை பேசுற உங்க மனசை ரொம்ப, ரொம்ப பிடிச்சிருக்கு என்று சொல்லி அவன் கன்னத்தில் செல்லமாய் ஒரு முத்தமிட்டாள்.

உங்ககிட்ட நானும் ஒரு உண்மையை சொல்லணும், நீங்க நினைக்குற மாதிரி என் பேரு கனிகா இல்லை. உண்மையான பேரு முண்டக்கனி ஈஸ்வரி. குலதெய்வம் ஞாபகமா வீட்ல வச்சது.

இப்ப நீங்க சொல்லுங்க, இப்பவும் என்னை பழைய மாதிரி காதலிக்கிறீங்களா??

Do You Love Me Now??

Will you marry me?

அவள் அப்படி கேட்கவும் அவளை கட்டியணைத்து இதழோடு இதழ் வைத்து லவ் யூ சொன்னான் பாவாடைச்சாமி. ■

# சுவாசம் நிரம்பிய பூதி


என்
அகத்துள் ஆழமான
சமமற்ற புதைகுழி
ஒன்றைத் தோண்டியுள்ளேன்

கடந்த
ஆண்டுகளைப்போல்
இவ்வாண்டும்
சேகரித்த நேசங்களை
வண்ணப் பூதிகளுக்குள்
காற்றாய் நிரப்பி
அடைத்துக்கொண்டேன்

நான்
சந்திரனை பார்த்தபடி
கண்களை சரி செய்தேன்.
புல்வெளியின் முழு
அகலத்திற்கும் மேலாக
ஒரு விறுவிறுப்பான
உற்சாகத்துடன்
பயணிக்கிறேன்

என்
கடிவாளம் பூட்டிய
வெண்குதிரையை
நெருங்கியதும்
அது முன்னங்கால்களை
மடித்து அமரச்சொன்னது

அந்த
அகன்ற சாலைகளில்
எனக்கு மிகவும் பிடித்த
மிருதுவான தென்றலை
உடலில் உரசவிட்டபடி
குதிரையின் கால்குளம்பு
தனக்கேயான சத்தத்துடன்
கடும் ஓசையோடு
பதித்துப் பாய்ந்து சென்றது



ஆரத்தழுவிய
அன்பின்
சுவாச பூதிக்களை
அந்த புதைகுழியில்
ஆழப்புதைத்து
இரும்புப் பூட்டுக்களால்
இறுகப்பூட்டி
மீண்டும் அதே வெண்குதிரையில்
மின்வேகத்தில்
வீதி கடந்தேன்

எங்கிருந்தோ
எப்படியோ
அத்தனை வண்ணப்
பூதிகளும் புதைக்கப்பட்ட
புதைகுழிக்குள் நானுமோர்
வண்ணத்தோடு காற்றில்
தவழ்ந்தபடி

அந்த இனிமையான
இதமான கனவை
எவரோ திருடியதாய்
ஓர் உணர்வு
திடுக்கிட்டு விழித்தேன்
கனிவான நிலவொளி
கண்சிமிட்டி என்னை
கருணையோடு பார்த்தது

நீ!
துயரங்களை தூரம்
வைப்பதற்கு
பழகிக்கொள்
மகிழ்வை எப்போதும்
அருகே
அமரச்செய் என்றது
புரிந்துகொண்டேன்.

- ஏரா மகள் சுமித்ரா
பிரான்ஸ்.

# உலகம் உன் வசம்

வா...
வந்து விட்டோம்...
வாழ்ந்தோம் என்றே
பேர் வாங்கிச் சென்றிட ...
வாழ்ந்து காட்டுவோம்
உலகமே உன்னை நோக்கி
மூக்கில் விரல் வைத்து
வியந்து நோக்கிட...

வானவில்லுக்கு நிறங்கள் கூட்டுவோம்
வான் நிலா இல்லாத நாளில்
வெள்ளை அடித்து
வெளிச்சம் போடுவோம்...
கடலில் நடந்து மகிழ்வினை
கொள்ளை அடிப்போம்...
மூழ்கி மூழ்கி முத்தெடுத்து
மற்றோரின் மூச்சடைப்போம்
ஆச்சரியத்தால்...

ஆண்டாண்டு காலமும்
மாண்டே அழுதாலும் மீண்டெழுந்தே
இறந்தோர் இனி வருவாரோ
எனும் பேச்சை உடைத்து தீயில் போட்டு
உருவாக்குவோம் உயிர் மூச்சினை...

வந்து பிறந்து விட்டோம்...
இனி வாழத்தெரியவில்லை - எனும்
உணர்விற்கே இறக்கைகள் கட்டி
பறக்க விட்டு..
வெட்டிப் பேச்சும் கற்பனை கனவுகளும்
விலக்கி வைத்தே - கடின உழைப்பில்
மிடுக்குடன் கால்கள் நடனமிட
காலமெல்லாம் கனவுகள் மெய்ப்பட
வசந்தங்களை வாங்கி வந்து தொங்க
விடுவோம் நம் வீட்டு மாடத்திலே...

வாழ்வதோ ஒருமுறை
வித்தைகள் செய்வோம்
விண்ணையும் அளப்போம்..
செவ்வாய் கிரகம் சென்றே
தங்குமிடம் கட்டுவோம்...
எங்கும் எதுவும் முடியாதென...
விடியும் எனக்காத்திருக்காதே -
கிழக்கில் ஆகாயத்தைப் பிளந்து
உதயனையே அழைத்து வர,
மனதில் சங்கல்பம் கொண்டே -
மனதில் நீயும் தெளிவாக செயல்படு
நாளைய உலகம் என்ன...
என்றுமே உலகம் உன்வசம்





**கவிஞர் இரஜகை நிலவன்**
மும்பாய்

# சோபியா டீச்சர்

- நாகை ஆசைத்தம்பி

மொத்தமா இருபது வீடுதான் இருக்கும் அந்த இருபது வீட்லயும் மக்கள் தொகை கணக்கெடுத்தா ஒரு அம்பது பேரு வருமுன்னு நெனக்கிறேன் அந்த ஊருதான் கீழப்பிடாகை நாகப்பட்டினத்திலிருந்து திருத்துறைப்பூண்டி போற ரோட்ல திருப்பூண்டிக்கு பக்கத்தில மெயின் ரோட்டோரமா இருக்குற ஒரு குக்கிராமம் அங்கதான் பன்னண்டாம் வகுப்போடு படிப்பை பாதியில் நிறுத்திய சோபியா வேற வேல கெடைக்காம டியூசன் சொல்லிக் கொடுக்குறாங்க படிப்ப பாதியில நிறுத்தியதற்கு வேற காரணமும் இருக்கு ஒன்னு பணவசதி இல்ல, ரெண்டு சோபியா ஒரு மாற்றுத்திறனாளி லேசா கால் தாங்கி நடப்பாங்க அதனால வெளியூர் போய் காலேஜ் படிக்கவும் தோது இல்ல இப்பவும் ஒன்னும் கெட்டுப்போகல எப்படியும் தெனமும் ஒரு பத்து பசங்களாவது வருவாங்க அந்த ஊர்ல வீட்ல இருந்தப்படியே அவங்களுக்கு சொற்ப வருமானம் அந்த டியூசன் சொல்லித்தருவதால் கெடைக்குது அதுப்போதும் என்றே சோபியா ஆர்வமா சொல்லிக் கொடுக்குறாங்க

எல்லாரும் டீச்சரக்கா... டீச்சரக்கான்னு கூப்பிடும்போது மனசில பட்டாம்பூச்சி பறக்கும் கூடவே இளையராஜா மியூசிக் வேற தந்தன தந்தன தானனான்னு கேட்கும். டீச்சருன்னா ஏனோதானோ இல்ல... கண்டிப்பும் அதே நேரம் கருணையும் கூடவே என்னிடம் டியூசன் படிப்பவங்க யாரும் பெயிலாகக்கூடாதென்ற வைராக்கியம் வேற... ரெண்டுமணி நேரம்தான் டியூசன் என்றாலும் அதில் கால்மணிநேரம் கதை சொல்லும் நேரம்... அது பசங்களை சந்தோசப்படுவதற்காக... எல்லாரும் கரெக்டா காசு கொடுக்கமாட்டாங்க இழுத்தடிப்பாங்க... செலப்பேரு தவணை கேப்பாங்க... செலப் பேரு தவணமுறையில் கொடுப்பாங்க எல்லாத் துக்கும் புன்னகையோடு ஏற்றுக்கொள்ளும் பக்குவம் இந்த சின்ன வயசிலையே வந்தி ருந்தது சோபியாவுக்கு.

கதன்னா அப்படி ஒரு கத... எம்.ஜி.ராமசந்திரனைப் பற்றியும் சொல்லு வாங்க நிலாவுக்குப்போன சந்திராயனைப் பற்றியும் சொல்லுவாங்க கொஞ்சம் முன்னா டியே பொறந்திருந்தா பாக்யராஜுக்கே பாடம் எடுத்திருப்பாங்க கத சொல்லும்போது பசங்க வாயில ஈ போனாலும் தெரியாது ஜொல்லு ஒழுக ஒழுக கேப்பாங்க...

அப்படிதான் ஒரு நாளு இப்போ நான் ஒரு கத சொல்றேன் கவனமா கேக்கனும் சரியா பதில் சொன்னா சாக்லேட்



தருவேன்னு சொன்னங்க பசங்க குஷியாகி கோரஸா சரி டீச்சர் சரி டீச்சருன்னு கத்தினாங்க,,,

‘ஒங்களுக்கு ஏசப்பாவ தெரியுமா...?’

எல்லாரும் முழிக்க அதில ஒரு பொடியன் சொன்னான்.

‘ஏசப்பாவ தெரியாது டீச்சர் ஏசுவதான் தெரியும்’

‘ஏசப்பாவ தெரியாது ஏசுவதான் தெரியுமா,,, ஏசுவ எப்படி தெரியும் சொல்லு... சொல்லு...’

‘நாங்க வேளாங்கண்ணி மாதாக்கோவிலுக்கு போகும்போது அங்க ஒரு சிலுவையில ஆணி வச்சி அடிச்சி ரெத்தம் வடிய வடிய ஒருத்தர் இருந்தாரு எங்கம்மாகிட்ட இவரு யாருன்னு கேட்டேன் எங்கம்மாதான் சொன்னது இவருதான் ஏசுன்னு... சரியா டீச்சர்’

‘அவருதான் ஒலக மக்களின் ரட்சகர் மக்கள் என்ன பாவம் செய்தாலும் மன்னிப்பார்’

திடிரென்று ஒரு பையன் துடுக்கா எழுந்துக் கேட்டான்.

‘அப்போ நாம என்ன தப்பு பன்னினாலும் பிரச்சனை இல்லியா டீச்சர் ஏசப்பாதான் மன்னிப்பாரே‘

‘மன்னிப்பார்டா... நீ உன்னை அறியாமல் தவறு செய்தால் மன்னிப்பார் நீ ஏசுப்பா மன்னிப்பாருன்னு வேணுமுன்னே தப்பு செய்தால் எப்படி மன்னிப்பார்...? சொல்றத கேளுங்க பசங்களா அப்புறம் சந்தேகம் கேளுங்க. நடுவுல நடுவுல கேள்வி கேக்காதீங்க.’

‘ஏசப்பா முடவர்களை நடக்க வைத்தார், கண்ணு தெரியாவர்களுக்கு பார்வைக் கொடுத்தார், காது கேக்காதவர்களுக்கு காது கேட்க வைத்தார் நோயாளிகளை குணமாக்கினார் அவர் ஆசிர்வாதத்தால் அனைத்தும் குணமாகும்’

‘அப்புறம் ஏங்க டீச்சர் ஒங்கள குணமாக்கல’

‘நடுவுல பேச வேண்டாமுன்னு சொன்னேன் ஒனக்கு காதுல விழலியாடா... அவரு இருந்தப்போ நான் பொறந்துயிருந்தா குணமாக்கி இருப்பாரு என்னோட கெட்ட நேரம் இப்போ பொறந்திட்டேன் இன்னும் சொல்றேன் கேளுங்க பசங்களா...’

‘சொல்லுங்க... சொல்லுங்க’

‘ஒரு சமயம் ஏசப்பா சீடர்களோடு கடலுல போட்டுலப் போனாரு அப்போ பயங்கரமா மழையும் காத்தும் வந்து பெரிசா புயல் அடிக்குது... ஒங்களுக்குதான் புயலுன்னா தெரியுமே நம்ம ஊர்ல அடிக்கடி வருமே... அப்போ சீடர்கள் எல்லாரும் பயந்துட்டாங்க... ஒடனே ஏசப்பா சீடர்களைப் பாத்து யாரும் பயப்பட வேண்டாமுன்னு சொல்லிட்டு புயல் வரும் திசையை நோக்கி கையை காட்டி அமைதி அமைதின்னார் என்ன ஆச்சர்யம் புயலும், மழையும் நின்னிட்டு ஏசப்பாவின் அற்புதத்தை பாத்தீங்களா...’

‘ஏங்க டீச்சர் புயலையே கையை நீட்டி தடுத்து நிறுத்தி அற்புதம் செய்தவர் அவரை சிலுவையில் வைத்து ஆனி அடிக்கும்போது ஏன் தடுக்கல டீச்சர்’

‘டேய்... நடுவுல... நடுவுல பேச வேண்டாமுன்னு சொன்னேனே ஒங்களுக்கு கதயும் வேண்டாம் ஒன்னும் வேண்டாம் நேரமாச்சி வீட்டுக்குப் போங்க... நாளைக்கு பாக்கலாம்’

இந்தக் காலத்துப் பசங்கள சமாளிக்கிறது ரொம்பக் கஷ்டமுன்னு முனுமுனுத்தப்படி அவங்க எல்லாரும் புத்தகமூட்டையை சுமந்தப்படி செல்வதை பாத்துக்கொண்டு நின்னாங்க சோபியா டீச்சர் அதுல ஒருத்தன் மட்டும் டீச்சரை திரும்பிப்பாத்து ‘டீச்சர் அந்த சாக்லேட்’ன்னு கத்தினான் டீச்சர் புன்னகைத்தப்படியே சைகையால் கொன்னுப்புடுவேன்னு கையை உயர்த்திக் காட்டினாங்க.

## புதுமை படைக்கும் புத்தாண்டு

(2024)

புதிய ஆண்டடே வந்திடுவாய்!
புதுமை படைக்க வந்திடுவாய்!
மதியாய் ஒளிர்ந்து வந்திடுவாய்!
மனத்தில் மகிழ்வைத் தந்திடுவாய்!
உதிக்கும் விடியல் உன்னதமாய்
உலகில் பரவி ஒளிரட்டும்!
நிதமும் வளத்தை அளித்திடுவாய்!
நிறைவாய் மலர்க புத்தாண்டே!

உலகில் அமைதி நிலவட்டும்!
உயிர்கள் சுகமாய் வாழட்டும்!
துலங்கும் இயற்கை செழிக்கட்டும்!
தொடரும் பயணம் சிறக்கட்டும்!
நலமே எங்கும் நிறையட்டும்!
நல்லவை ஓங்கி வெல்லட்டும்!
மலர்கள் பூத்துக் குலுங்கட்டும்!
மழையால் புவியும் குளிரட்டும்!

கலைகள் வளர்ந்து பெருகட்டும்!
கருணை அன்பு பரவட்டும்!
நிலையாய்ச் சட்டம் திகழட்டும்!
நீதி நேர்மை விளங்கட்டும்!
உழைப்போர் நாளும் உயரட்டும்!
உலகம் வாழ்த்தி வரவேற்க
அழைப்போம் உன்னைக் கைதொழுதே!
அருமை ஆண்டடே மகிழ்விப்பாய்!

பாவலர்மணி ஓசூர்

**மணிமேகலை**



# எதற்கு?

பாலைவன வாழ்வில்
பட்டமரத் துளிராய்
மாலை நேரமெல்லாம்
மொட்டவிழ்ந்து நின்றாள்

அவளைக் காணவே - தினம்
அழகினை அள்ளவே
ஓடோடி போவேன்
ஓடை நீராய்

காட்டை வெட்டி - மரக்
கூட்டை உடைக்கும்
வேட்டை வெறியருக்கு
பட்டாம் பூச்சியின் சிறகு எதற்கு?

கட்டிடம் முளைத்த
கட்டாந்தரை அனைத்தும்
கண்ணீர் விட்டழுதும்
விட்டோடுறாங்களா இல்லையே

நவீனம் தானே வாயை மூடென
நளினம் கொண்ட
மலினச் சோம்பறிகளே
உலகம் அழியும் நிலைதான் தெரியுமோ

அரசியல் ஆட்டக் கதிரை அதோ
புழுத்து வழியும் நாற்றம் இதோ
துடைக்கவும் ஒருவருமில்லை-அதை
தொடங்கவும் ஆளில்லை

பச்சையம் திண்ணும் பேய்களை
பற்றும் தீயிலும் போடாதே
விறகு எங்கே என்று
சிறகு பூட்டி பறந்து விடுவர்

*தமிழ்மாள் அனுஷ்திக்கா*

# வெண்பா போட்டி (பயணம்) – 24

## காலம் 01 - 12 நவம்பர் 2023

## ஈற்றடி - ஆகச் சிறந்த அழகு

எவ்வளவு நாமும் இனிமையாகப் பேசுகின்றோம்
அவ்வளவும் நன்மையாகும் ஆமாமாம் - பவ்யமாக
வேகம் குறைத்து வெகுளா திருப்பதாம்
ஆகச் சிறந்த அழகு.

தென்றல் கவி

.

சாதனை செய்திட சாட்சியாக நின்றவர்கள்
வேதனையும் பட்டு வெளிநின்றார் - சோதனை
தாகத்தைக் கொண்டு தனியனாம் மாமனமே
ஆகச் சிறந்த அழகு.

வா.சண்முகம்.

.

எதுகையும் மோனையு மேற்றந் தரவே
புதுமை பலவும் புகுத்தி - விதுபோலத்
தேகமது தாங்கியிங்கு தேசு மிகைதமிழ்
ஆகச் சிறந்த அழகு

உடுவிலூர் கலா, இலங்கை

.

விது - நிலவு, இளம்பிறை

பார்த்த உடனேயே பற்றிவிடும் பேரழகாய்
வார்த்த சிலையெனவே வாய்த்ததென - ஈர்த்தாலும்
தேகத்தால் அல்லாமல் செய்கையால் பார்ப்பதே
ஆகச் சிறந்த அழகு

செ. இராசா

.

இயற்கையின் காவலாய் என்றென்றும் வாழும்
உயர்வெனப் போற்றும் உயிர்கள்! - இயல்பாகச்
சாகசம் செய்து சரித்திர மாக்குவதே
ஆகச் சிறந்த அழகு.

மாலதி திரு

.

எத்தனையோ தாய்மொழிகள் ஏராளம் இவ்வுலகில்
அத்தனையும் எந்தாய்போல் ஆகுமோசொல்? - சித்தர்கள்
ஏகமாய்ச் சேர்ந்தே எழில்சேர்த்த எந்தமிழ்தான்
ஆகச் சிறந்த அழகு!

முனைவர்.சுந்தரராசன் தயாளன், பெங்களூர்.

.

புல்லோ டுறவாடும் புள்ளினங்கள் சொக்கிட
நில்லாது பெய்யும் நெடும்பனியும் இல்லாத
மேகத்தின் மேன்மைக்கு மேலில்லை எங்கிலும்
ஆகச் சிறந்த அழகு.

எழுத்தாளர் நாகா

.

வானொழுகும் நீரருவி வாய்திறந்து கொட்டுதல்போல்
கானொழுகும் காந்தளின் வாசனைப்போல் - தேனொழுகும்
பாகு கலந்த குழந்தை சிரிப்புதான்
ஆகச் சிறந்த அழகு

ஞால ரவிச்சந்திரன்

.

தாக மெடுத்திடத் தண்ணீர்ப் பருகியவன்
போகம் விளைந்து புவியிலே - சோகமின்றி
மோகமுற்று வீட்டினில் முன்னாலே நின்றிருத்தல்
ஆகச் சிறந்த அழகு

கண்ணன் நடராசன்

.

தேகம் மெலிந்து தெளிவில்லாப் பார்வையும்
போக வலிகள் புகுந்திட - வேகமும்
ஏகமாய் வாடிடும் என்றனின் அன்னைதான்
ஆகச் சிறந்த அழகு .

சரஸ்வதி பாஸ்கரன்

.

வண்டமிழில் பாவடித்து வாசமலர் தேன்குழைத்து
தண்டலை ஆடும் தமிழணங்கே... வண்ணங்கள்
தோகையென கொண்டவளாம் தொல்தமிழ்...நீ மட்டுந்தான்
ஆகச் சிறந்த அழகு...!

தமிழ்ப்பேரொளி தென்பசியார்

.

அழகென்ப பார்ப்பவர்தம் ஆளும் விழியில்
வழமையாய் ஆகிவரும் வாழ்வில் - இழப்பினுக்கு
ஆகுவ தில்லை அழியாமல் உள்ளிருக்கும்
ஆகச் சிறந்த அழகு.

பக்ருதீன் இப்னு ஹம்துன்

.

மேகம் கருத்து மிகுமழை பெய்ததினால்
தாகம் தனித்திடவே தண்ணீரும்... வேகமுடன்
பாகம் பிரித்த பயன்நிலத்தில் பாய்ந்ததுவே
ஆகச் சிறந்த அழகு.

பாவலர் தாழை ந.இளவழகன், மணப்பாறை.

.

வேகமாய்ப் போகிற வெண்மேகக் கூட்டந்தான்
தேகஞ் சிலிர்க்கவைக்கும் தேன்மழையாய்ப் - போகவே
தாகத்தைத் தீர்க்கும் தருமழை தானிங்கே
ஆகச் சிறந்த அழகு...!!

மலர்மைந்தன்.....

.

புறத்தோற்றம் காட்டுவது பொய்யழகு மண்ணில்
அறத்துடன் வாழ்வாய் அகத்தில் - மறவாதே
மேகமென ஈந்திடும் மேன்மைக் குணமதுதான்
ஆகச் சிறந்த அழகு.

ஓசூர் மணிமேகலை

.

தேகத்தைக் கட்டமைத்துத் தேன்குழைத்துச் சொல்லெனும்
வேகத்தில் சிந்தை வெளியாக்கும் - யாகத்தை(ச்)
சாகசமாய் வைத்தானச் சங்கரனைச் சாற்றுதமிழ்
ஆகச் சிறந்த அழகு!

சுரேஜமீ

.

பொன்னாச்சி மேலன்பு பூண்டிருந்த மல்லனுக்கே
அன்றெம் பெருமானார் ஆதுரமாய்ச் - சொன்னபடி
நாகவணை மேற்றுயிலும் நாதன் விழிகளதே
ஆகச் சிறந்த அழகு!

சுந்தர ராசன்

.

அறம்பிறழ்ந் தென்றும் பொருள்வளஞ்சேர்க் காமை
பிறன்மனை நோக்காமை தீஞ்சொல் பிறருளம்
நோகுமாறு பேசாமை நேர்மையுளங் கொள்ளுதலே
ஆகச் சிறந்த அழகு!

வெ. நாதமணி

.

தண்ணீரில் சிக்கித்  தவித்தவரைத் தந்துணிவால்
கண்ணீரில் சிக்காமல்  காத்தவரை - எண்ணிடிலோ
வேகமுடன்சொல்லிடத்தான் வேண்டுமவர்போலெவர்தாம்
ஆகச் சிறந்த அழகு?.

ஜாய் சத்தியா

.

தளிர்ப்பாதம்  தூளியைத் தட்டிவழி கேட்டு
வெளிவந்(து)தெரியும்  விரல்கள் - களிக்கின்ற
தேக அழகெல்லாம் தேயும் இதுவொன்றே
ஆகச்சிறந்த அழகு

இரா அழகர்சாமி

.

மேகம் பொழிந்திட மீட்சியுறும் பூமியும்
தாகம் தணிந்து தழைப்பதுபோல் - ஈகத்தில்
தேகம் தனைவருத்திச் சேய்காக்கும் தாய்மையே
ஆகச் சிறந்த அழகு!

கோவை லிங்கா

.

வண்டுக்குப் பூக்கள்  வழிவிடும் காட்சியைக்
கண்டவர் நெஞ்சம்தான்  காதலால் - திண்டாட
மோகத்தை உள்ளத்தில் மூட்டிவிடும் எண்ணமே
ஆகச் சிறந்த அழகு

வே.செந்தில்குமரன்

.

குதிக்கும் குறும்பாய்க் குரலோ டுயர்த்தும்
துதிக்கை புழுதிமண் தூற்றும் - கதியெனப்
பாகனிடஞ் சேயாய்ப் பழகுமக் கன்றன்றோ
ஆகச் சிறந்த அழகு

ஆனந்த் சுந்தரராமன்

.

கண்ணன் கருப்பழகும் கந்தனவன் வேலழகும்
வண்ணமா வானவில் வார்ப்பழகும் - எண்ணமெல்லாம்
மோகம் கலைவிரியும் முத்தமிழாம் இவ்வுலகே
ஆகச் சிறந்த அழகு

நலம் பயக்கும் மன்னை மணிமாறன்

.

காடுமே டெல்லாம் கடுவெயி லோடலைஞ்சு
தேடி விறகெடுத்துத் தான்தகிக்க - ஓடிவந்து
தாகம் தணிக்கின்ற தாழைச் சுனைநீரே
ஆகச் சிறந்த அழகு

க சங்கரபாண்டியன்

.

சிந்தை நிறைந்து சிகரத்தில் நின்றிடுஞ்
சந்தம்  மணக்கின்ற தண்டபாணி - மந்திரமும்
போகரால் செய்திட்ட பூபாலன் அச்சிலையே
ஆகச் சிறந்த அழகு!

ஜனனி

.

அன்றலர்ந்த அல்லியிவள் ஆசையுடன் இங்கிருக்க
உன்மனத்தைக் கொய்தவர்யார் உண்மைசொல்  - என்னைவிட
மேகத்தி னூடே மிதக்கும் பிறைநிலவா
ஆகச் சிறந்த அழகு

கவிதா சீனிவாசன்

.

தேகம் முழுவதும் தெய்வத்தின் ஆற்றலே
சோகமதைத் தீர்க்குமே சொர்க்கமாய் - வேகமும்
தாகமும் கொண்டு தடைகளை நீக்குமந்த
ஆகச் சிறந்த அழகு

பாண்டிச்செல்வி கருப்பசாமி கோவை

.

பகைமையது முற்றியதால்  பாழ்படும் நெஞ்சில்
வகைமையுடன் ஒற்றுமையை  வார்த்து - புகைகின்ற
வேகம் கெடுக்கும்  விவேகத்து நல்லுணர்வே
ஆகச் சிறந்த  அழகு....!

ஜ.க.நாகப்பன்

.

மலையடி வாரம் மயக்கும் பசுமை
கலைநய ஆறு கரைமீ திலைவீடு
காகம் குருவி கரையு மிசைநாத
மாகச் சிறந்த அழகு

தன்ராஜ் பாப்பணன்

.

மூப்பினது ரேகைகள் முந்திவந்து சேதிசொல்ல
தோப்பாக சுற்றங்கள் தோள்கொடுக்கும் - காப்பாகப்
போகத்தில் உள்ளொளிரப் பூரிக்கும் மூதென்றும்
ஆகச் சிறந்த அழகு!

வானதி சந்திரசேகரன்

.

பூவழகோ? பொன்னழகோ? பூவையரின் கண்ணழகோ?
காவழகோ? பண்ணிசைக்கும் காற்றழகோ? - யாவதினும்
தாகமுற்ற தொண்டைக்குள் தண்ணீர் நனைத்திறங்கல்
ஆகச் சிறந்த அழகு

விசு. இம்மானுவேல், பெங்களூரு

.

எத்தனைத் துன்ப இயந்திர வாழ்க்கையிலே;
சித்தம் தெளிய சீர்மைபெறும் - புத்தன்தான்;
நோகப் பயணித்து நுண்மை தெளிதல்தான்,
ஆகச் சிறந்த அழகு

நெடுமுடி வேந்தன்

.

சின்ன மழலைச் சிரிப்பை உதிர்த்திட
மின்னலாய் வந்து மிளிர்ந்திடும் - பொன்னிறத்
தேகம் குலுங்க தெருவில் நடப்பதே
ஆகச் சிறந்த அழகு!

அ.முத்துசாமி, தாரமங்கலம்

.

தேகம் வறண்டு துவண்டிடும் வேளையில்
வேகத்தைக் கூட்ட விடையென ஆகுமே!
தாகத்தைத் தீர்த்திடும் தண்ணீரே வையகத்தில்
ஆகச் சிறந்த அழகு!

நா.பாண்டியராசா

.

முண்டி அடித்தபடி முந்திசெல்லும் நோக்கத்தில்
கண்டபடி ஓட்டாமல் காப்பாக - வண்டியின்
வேகம் குறைத்து விவேகமாய்ப் போவதே
ஆகச் சிறந்த அழகு.

ஆரூர் சுப்பு

.

தேகம் குளிர்விக்கும் தென்றலும் பூவிழியால்
மோகத் துளிரேற்றும் முத்தமும் - மேகத்தால்
தாகம் தணிக்குநறுந் தண்ணீரும் தண்டமிழும்
ஆகச் சிறந்த அழகு

வள்ளி முத்து

.

ஆண்டுகள் எத்தனைதாம் ஆனாலும் என்நெஞ்சை
ஆண்டுகொண்டி ருக்கின்ற ஆருயிராள் - காண்கின்ற
மேகத் திடைநிலவாய் மேன்மைமனை யாய்முகமே
ஆகச் சிறந்த அழகு!

பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்

.

காணும் இடங்கள் பசுமை நிறைந்திருக்க
காணுகின்றோர் நெஞ்சத்தை அள்ளிடும் - வானியற்கை
மேகத்தைப் பார்க்கையில் அத்தனை பேரெழிலும்
ஆகச் சிறந்த அழகு

ச. சத்தியபானு

.

நாற்று நடுகின்ற போதும் இருகால்கள்
சேற்றுநட மாடும் பசிதீரும் - ஆற்றிட
போக மகவமுதை தூட்ட வரும்தாயே
ஆகச் சிறந்த அழகு.

மு. மதனகோபால், சென்னை

.

வயல்காயத் தீவயிறும் காயக்கொல் கோடை
வெயில்காயத் தொண்டையும் காய - மயல்கொண்ட
தாகம் தணிக்கப் பொழியும் கருமுகிலே
ஆகச் சிறந்த அழகு.

மன்மதன்

.

தேகம் அழகன்று; தேடல் அழகன்று,
மோகம் அழகன்று, மண்ணுலகில் - நோகாமல்,
சாகா(து) உயிர்தாங்கும் தாய்மை, தரணிக்கே
ஆகச் சிறந்த அழகு !

திருமதி. இரா. இராஜாமணி, ஈரோடு

# வெண்பா போட்டி (பயணம்) - 25

## போட்டியின் கால அளவு : ஜனவரி 1 முதல் 12 வரை

.

வணக்கம் பாவலர்களே....

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்...

இம்மாத போட்டியின் விதிகள்....

ஒவ்வொரு புத்தாண்டு வரும்போதும் நேற்றுவரை தொடர்ந்து வந்த ஏதோ ஒரு பழக்கத்தை. ஆண்டின் துவக்கத்தில் இருந்து விலக்க நினைப்பீர்கள்...

அல்லது ஏதோ ஒரு பழக்கத்தை தொடர நினைப்பீர்கள்......

அவ்வாறு நீங்கள்... தொடர நினைக்கும்... அல்லது விலக்க நினைக்கும்... ஒரு பழக்கத்தை வெண்பாவாகச் சொல்வதே இம்மாதப் போட்டியின் விதி...

எழுதப் போகும் வெண்பாக்களை

**'இன்று முதல் நான்'** எனும் தலைப்பில் எழுதவும் நன்றி!

இதோ எ கா பாடல்.....

.

இன்று முதல் நான்

.

> வந்த விமர்சனத்தை வாரும் விமர்சனத்தை
> எந்தன் மனதிற்குள் ஏற்றாமல் - முந்திமுந்தி
> அல்லும் பகலும் அயரா(து) உழைத்தென்றன்
> எல்லைத் தொடுவேன் இனி.

.

பொதுவான விதிகள் :

நேரிசை வெண்பா மட்டுமே எழுதவேண்டும், பல வெண்பாக்கள் எழுதினாலும் அதில் ஒன்று மட்டுமே தேர்வு செய்யப் படும், முடிந்த அளவு ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம். வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே...அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.

என்றும் தமிழுடன்....

ஆசிரியர் தமிழ்நெஞ்சம் , மற்றும் ஆசிரியர் குழு.

# செக்கு மாடு

**கவிஞர் இரஜகை நிலவன்,**
மும்பாய்

அவசரமாக காபியைக் குடித்து விட்டு செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பிய போது ‘‘சாயங்காலம் வரும்போது கொஞ்சம் முட்டை வாங்கி வாருங்கள்’’ என்றாள் பத்மினி.

‘‘சரி, என் செல்போன எடு’’ என்று கடிகாரத்தைதை மாட்டிக்கொண்டான் சூர்யா.

செல்போனை சார்ஜரில் இருந்து கழற்றி சூர்யாவிடம் கொடுத்து விட்டு “ஆபிஸிலிருந்து இறங்கும் போது போன் பண்ணுங்கள் கோயிலுக்குப் போய்விட்டு வரலாம்.” என்றாள் பத்மினி.

‘‘சரி’’ என்றவாறு கதவைத் திறந்த போது “இப்படித்தான் சரி என்று சொல்லி விட்டுப் போவீர்கள். அப்புறம் நானும் நம் மகள் திவ்யாவும் உடுத்திக்கொண்டு ரெடியாக இருக்கும் போது ‘ஸாரி பத்மினி எனக்கு வேலையிருக்கு’ என்று போன் செய்து விட்டு ராத்திரி பதினோரு மணிக்கு வருவீர்கள்’’ என்றாள் பத்மினி சலித்துக் கொண்டு.


“அப்படீன்னா வேலைக்குப் போகாமல் இருந்து விடட்டுமா?’’ என்றான் சூர்யா. “சரி சரி நீங்கள் கிளம்புங்கள். சாயந்தரம் சீக்கிரம் வரப் பாருங்கள்’’ என்று சொன்ன பத்மினியிடம் “வீட்டிற்குள்ளே டெலிபோன் மணி அடிக்கிறது, யாரென்று பார்’’ என்றான்.

தொலைபேசியை எடுத்துப் பேசியவள் “உங்கள் அக்கா ஊரிலிருந்து கூப்பிடுகிறார்கள்’’ என்றாள்.

உள்ளே வந்து போனை வாங்கிக் கொண்டு ‘‘அக்கா எப்படியிருக்கீங்க’’ என்று கேட்டான்.

“தம்பி அடுத்த மாதம் உன் மருமகள் தமிழரசிக்கு திருமணம் நிச்சயம் பண்ணியிருக்கிறோம். அதற்கு ஒரு இருபத்தையாயிரம் தந்து உதவி செய்தால் நன்றாக இருக்கும்’’ என்றது எதிர்முனை.

முன்னால் நின்று கொண்டிருந்த மனைவி பத்மினியை பார்த்துக் கொண்டே இங்கே என்ன பணமாக காய்ச்சா



கெடக்குது என்று கத்த நினைத்தவன் “சரி, சரி பாக்கலாம்” என்றான்.

“அங்கே பம்பாயில இப்போது மழை எப்படி?” எதிர்முனையில் அக்கா.

‘‘நல்ல மழை. வெளியே மழை கொட்டிக்கொண்டிருக்கு ரெய்ன் கோர்ட் போட்டுக் கொண்டு கிளம்பும்போது உங்கள் போன்” என்றான்.

“நீ தமிழரசி கல்யாணத்துக்கு குடும்பத்தோடு கண்டிப்பாக வருவா யில்லையா?” என்றாள் அக்கா தொடர்ந்து “லீவு அதிகம் இல்லை திவ்யாவிற்கு பள்ளிக்கூடம் நடந்துகிட்டிருக்கு அதனால நான் மட்டுந்தான் வருவேன்.”

‘‘சர், உன் விருப்பம் போல செய்” என்றவாறு எதிர் முனை தொலைபேசி தொடர்பை துண்டித்துக் கொள்ள “என்ன உங்க அக்கா மகள் தமிழரசிக் கல்யாணத்திற்கு பணம்தானே கேட்டார் கள்” என்று இடுப்பில் கை வைத்துக் கொண்டே கேட்டாள் பத்மினி.

“அதெல்லாம் ஒன்றுமில்லை. எப்போது வருகிறீர்கள் என்றுதான் கேட்டார்கள். நான் தான் திவ்யாவிற்கு ஸ்கூல் இருக்கிறதாலே நான் மட்டும் வாரேன் என்று சொல்லியிருக்கேன்.”

“சும்மா சொல்லாதீங்க, உங்க அக்கா மக கல்யாணத்திற்கு எங்கேயாவது கடன் புறட்டியாவது கொடுத்து விடுவீர்கள். என் தம்பி காலேஜிக்கு பீஸ் கட்றதுக்கு பணம் கேட்டால் அப்ப மட்டும் பணம் இருக்காதே’’ என்றாள் கோபத்தோடு. “ஏம்மா பத்து உன் கூட சண்டை போட நேரமில்லை” என்றவன் மழை தொப்பியை எடுத்து மாட்டிக் கொண்டு படிகளில் இறங்கினான்.

மும்பை மழையையும் பொருட்படுத் தாது அலுவலகம் ஓடிக் கொண்டிருந்த வர்களோடு கலந்து ஆட்டோவில் ஏறி கல்யாண் ஸ்டேஷனுக்கு வந்து மும்பை சி.எஸ்.டிக்குப் போகும் பாஸ்ட் ரயில் தயாராக நிற்க அடித்துப் பிடித்துக் கொண்டு ஏறினான்.

செல்போன் பையிலிருந்து கிறு கிறுத்தது. கூட்டத்தில் நெருக்கியடித்து நின்று கொண்டிருந்ததால் கையைப் போட்டு செல்போனை எடுக்க மேனேஜர் சாக்ஸியின் போன் நம்பர் தெரிந்தது. “எஸ் சார்” என்றான்.

“சூர்யா, கொஞ்சம் ஏர் கார் கோ காம்ப்ளக்ஸ் போய் வருகிறீர்களா? அங்கே கஸ்டம்ஸ் கிளியரன்ஸில் ஏதோ பிராப்ளம் போல இருக்கிறது. உங்கள் உதவியாளன் குஞ்சால் போன் பண்ணியிருந்தான். நேராக போய் கஸ்டம்ஸ் ஆபிசரைப் பார்த்துக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து இன்றைக்குள் டெலிவரி எடுத்துக் கொண்டு வந்து விடுங்கள். இல்லையென்றால் பாக்டரி பந்த்தாகி விடும்.”

‘‘சரி சார். நான் காட்கோப்பரில் இறங்கி ஏர் போர்ட் போய் பார்த்து விட்டு உங்களுக்குப் போன் பண்ணுகிறேன்.” என்றான்.

“அப்படியே வரும்போது நம்முடைய கண்ணா என் கம்பெனியிலே ஒரு செக் பேமெண்டும் வாங்கிக் கொண்டும் வந்து விடுங்கள்.”

“அங்கே போனால் நேரத்தை இழுத் தடிப்பான் சார். வேண்டுமானால் அப்புற மாக உன்னியை அனுப்பி வாங்கிக் கொள்ளலாம் சார்.”

"இல்லையில்லை டிராஸ்ன்போர்ட்டருக்கு இன்றைக்கு பணம் கொடுத்தே ஆகனும் பிந்தினாலும் பரவாயில்லை. செக்கை வாங்கிக் கொண்டு வாருங்கள்." என்று போனைக் கட் பண்ணிவிட்டு வேகமாக வெளியே வந்து காட்கோப்பரில் முண்டியடித்துக் கொண்டு இறங்கி ஏர் கார்கோ போகும் பஸ் ஸ்டாப்பிற்கு வந்தான்.

வேலைகள் முடிந்து மனைவி பத்மாவிடமிருந்து போன் வர "ஸாரி பத்து கிளம்ப நேரமாகி விட்டது. நீ புறப்பட்டு ரெடியாக இருப்பாய். நீயும் திவ்யாவும் கோயிலுக்குப் போய் விட்டு வந்து விடுங்கள். நான் வர லேட்டாகும்" என்று எதிர் முனையில் மனைவியிடம் திட்டு விழுவதற்குள் போனை கட் பண்ணி விட்டு இறங்கி நடந்தான்.

மழை கொஞ்சம் விட்டுப் போயிருந்தது. வேகமாக நடந்து மும்பை சி.எஸ்.டியில் கல்யாண் போகக் கூடிய இரயிலுக்கு வந்து முண்டியடித்து ஏறி அமர்ந்தான். கல்யாணில் இறங்கியதும் மறவாமல் முட்டை வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தான்.

அடுத்த நாள் காலை "பத்மினி செல் போனை எடு " என்று சொல்லி விட்டு ரெயின் கோர்ட்டை மாட்டிக்கொண்ட போது டெலிபோன் ஒலித்தது.

''உங்கள் அக்கா போனாகத்தான் இருக்கும். போனை எடுங்கள்" என்றாள் காபியை ஆற்றியவாறு.

போனை எடுக்குமுன் இணைப்பு நின்று விட, மழைத் தொப்பியை எடுத்து மாட்டிக்கொண்ட போது பையில் செல் போன் ஒலித்தது.

மரபுக் கவிதை குறள்வெண்செந்துறை

## வதையில்லா வையம் வேண்டும்

அன்பும் அறனும்
அவனியில் ஒழிந்தே
வன்பும் வாதமும்
வரலாறு வரையுதே!

நீதியும் நேர்மையும்
நெருப்பிலே எரிந்தே
அநீதியும் அநியாயமும்
அரங்கிலே ஏறுதே!

சண்டையும் சாவும்
சரித்திரம் ஆகியே
அண்டை அயலெங்கும்
அனலது எரியுதே!

பொய்யும் புரட்டும்
பாரினில் அழித்தே
மெய்யும் மேன்மையும்
மேம்படச் செய்வோமே!

சிதைவுகள் அழிவுகள்
சீக்கிரம் நீக்கியே
வதையில்லா வையம்
விடியலில் காண்போமே!

**கவியரசர் விவேகவெளி தமிழேந்திரன்**
(சரவணமுத்து நவேந்திரன்)
கிழக்கு மாகாணம்,
இலங்கை.

# போராடுவதே உயர்ந்திடவோர் கரணியம்

பெண்ணவளின் எண்ணங்களே பின்னுக்கோர் கரணியம்
புகழ் மொழிக்கு மயங்கியே போனதோர் கரணியம்
எண்ணங்களில் மூடப்பழக்கம் எழுந்ததோர் கரணியம்
எழில்வார்த்தை நம்பிக்கையா ஏற்றதோர் கரணியம்
பெண்ணவளே பெண்ணினத்தைப் பிழைகூறுமோர் கரணியம்
பெருமைகளை சிறுமையாய்ப் பேசுவதோர் கரணியம்
பெணணவளே பலவீனத்தைப் பற்றியதோர் கரணியம்
புரிந்துள்ளம் உறுதியின்றிப்  போனதோர் கரணியம்

புல்லானாலும் புருசனாகப் பார்த்ததோர் கரணியம்
புவியினிலே புரியாத பேதமையோர் கரணியம்
கல்லானாலும் கணவனாகக் காண்பதோர் கரணியம்
கவலைகளை மனத்தடக்கிக் கழிப்பதோர் கரணியம்
உள்ளத்தினில் உணர்வடக்கி உலவுவதோர் கரணியம்
ஊமையாக உரைத்திடாமல் உள்ளதோர் கரணியம்
இல்லத்தினில் சுதந்திரமே இல்லாததோர் கரணியம்
இருக்கின்ற இன்னல்களை எண்ணாததோர் கரணியம்

ஆணாதிக்க அடிமையாக ஆனதோர் கரணியம்
ஆனமட்டு மல்லல்களில் அடங்கியதோர் கரணியம்
வீணான பழிசுமைகளிலே விளங்காததோர் கரணியம்
வீட்டடிமையாய் வாழ்வதுதான் விதியென்ற கரணியம்
கரணியத்திற்கு கோர்கரணியம் காண வேண்டுமோர் கரணியம்
கட்டுப்பாடாய் ஓர்புரட்சி கடமையோர் கரணியம்
ஊரறிந்திட புறப்படணும் உரிமையோர் கரணியம்
உறுதியோடு  போராடுவதே உயர்ந்திடவோர் கரணியம்

வில்லவன் மல்லி

# பாவைப் பிள்ளை

சம்மாந்துறை மஷூறா
இலங்கை.

நேரத்திற்கு எழும்பியிருந்தாலும் பாடசாலை செல்வதில் ஆர்வம் காட்டவில்லை சுஹூதா. உம்மாவின் கட்டளைகளை அலட்சியம் செய்து கொண்டிருந்தாள்.

சுஹூதா... நான் சொல்றது வெளங்கலியா... கைகால் முகம் கழுவிட்டு வந்து தேய்லயக் குடிச்சிற்று பள்ளிக்குடத்துக்கு வெளிக்கிடு...

உம்மா சத்தமிட்டும் எந்த பிரதிபலிப்புமின்றி இருந்தாள்.உம்மா எழுந்து வந்து முதுகில் ஒன்று வைத்தாள்.

நான் சொல்றன். காதில விழாதமாதிரி இருக்க நீ?

நான் பள்ளிக்கிப் போகமாட்டன்...

ஏன் போகமாட்ட.... என்ன பிரச்சின உனக்கு...

நீங்க வெளிநாடு போனாதான் நான் பள்ளிக்கிப் போவன்...

தூக்கிவாரிப் போட்டது உம்மாக்காரிக்கு. தங்கள் வறுமை நிலை பிள்ளையை இந்த அளவில் நிறுத்தியிருப்பது எண்ணி துவண்டு போனாள்.

சுஹூக்குட்டி... சொன்னா கேளுங்க. நான் வெளிநாடு போனா ஒங்கள பார்த்துக்க யாருமில்லயே...

என்ன மாமிட்ட உட்டுட்டு போங்க...

மாமி ஒங்கள திட்டுவா அடிப்பா... பரவாலயா

அவ அடிக்கமாட்டா

நமக்குனு யாருமில்ல சுஹூதா.நீங்க நல்லா படிக்கணுமெண்டுதான் கடையப் பம் சுட்டு அக்கம் பக்கம் பாத்திரபண்டம் கழுவி உழைக்கிறன்.

என்னத்த உழைக்கிறீங்க.

காலைல ஒரு நாளும் கென்ரீனுக்கு காசு தாறதே இல்ல. ஸ்கூலில ஒரயே கடலதான் தாற.நான் அத தின்னுறதுமில்ல. ஊட்ட வந்தாலும் ஒண்டுமில்ல.தேங்காய்பூவோடு சோறு எப்பிடிம்மா தின்னுற...?



என்ற தங்கம்.. பள்ளிக்கிப் போங்க. இன்றைக்கி நல்ல சாப்பாடு செஞ்சு வைக்கன்.

பொய் சொல்லாதீங்கம்மா. நல்ல சாப்பாடெண்டு முட்டையதான் பொரிச்சி வைப்பீங்க..

சுஹூதா சொன்னாக் கேக்கணும்.நீங்க படிச்சி டீச்சராகி உழைச்சிதான் எனக்கும் நல்ல சாப்பாடு தரணும்.

போங்கம்மா. நான் அதுக்கெடைல பசியால செத்துருவன்...

உம்மாவுக்கு நா எழவில்லை.கண்கள் பொங்கியது. மிகுந்த சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

மஸீஹாட உம்மா கட்டார்லயிருந்து மஸீஹாக்கு எவ்வளவு சாமான் அனுப்பி யிருக்கா. தெரியுமா

மஸீஹாட மாமி எப்பவும் மீனும் இறைச்சியும் புரியாணியும்தானாம் சமைக்கிற. அவங்க வாப்பா ஒவ்வொரு நாளும் கன்ரீனுக்கு நூறு ரூபா குடுக்க சொல்லி மாமி குடுப்பாங்களாம்..

அவ உம்மா. வெளில போனா அவகூட அவ வாப்பா இருக்காரு.உங்கள பார்த்துக்க யாருமே இல்ல தங்கம்...எப்பிடி உங்கள விட்டுப் போவன்.

றௌசானா மாமி ஊட்ல விட்டுட்டுப் போங்களன்மா

சும்மாவே றௌசானா மாமி உங்கள கரிச்சிக் கொட்டுவாங்க. நானில்லாட்டி கேக்கவே வாணாம்.

உம்மா கட்டாருக்கு போய் ஒரு மாசம் மட்டும் உழைச்சிற்று திரும்ப வாங்களேன்.

சுஹூதா... உனக்கு இப்ப என்னதான் வேணும்?

மஸீஹாட உம்மா மஸீஹாக்கு ஒரு பாவப்புள்ள அனுப்பியிருக்கா. அது நம்ம மௌளத்தான தம்பிப் பாப்பா மாதிரியே இருக்கு.அது மாதிரி எனக்கும் வேணும்மா. நீங்க போய் கொஞ்சம் உழைச்சிட்டு ஒரு பாவப்புள்ள வாங்கிட்டு வந்திருங்க...

சரி. முயற்சிப்பம்.இப்ப நீ ஸ்கூலுக்கு கௌம்பும்மா

உம்மா போவீங்கதானே..?

சரி போறன் நீ கௌம்பு.

சுஹூதாவை தற்காலிகமாக சமாளித்து பாடசாலைக்கு அனுப்பி விட்டாள் உம்மா.

சுஹூதாவின் வேண்டுகோளின்படி மஸீஹா பாடசாலைப் பைக்குள் பாவைப் பிள்ளையைக் கொண்டு வந்திருந்தாள். பாடசாலை தொடங்கமுன் இருவரும் மரநிழலில் பாவையோடு விளையாடினர். சந்தர்ப்பம் பார்த்து மஸீஹாவிற்குத் தெரியாமல் பாவைப்பிள்ளையை எடுத்து தனது புத்தகப் பைக்குள் வைத்துக் கொண்டாள் சுஹூதா. பாடசாலை. விட்டதும் அவசர அவசரமாக வீட்டுக்கு ஓடி.வந்து விட்டாள்.

உடுப்பை மாற்றி விட்டு புத்தகப் பையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள். அதை திறந்து வெளியே எடுக்க தைரியமில்லை. உம்மாவுக்கு என்ன சொல்வது என்ற பயம். இரண்டாந்தரம் படிக்கும் சுஹூதாவிற்கு தவறை நியாயப் படுத்தத் தெரியவில்லை.

புத்தகப் பையை அணைத்தவளாக தடுமாறிக் கொண்டிருந்தாள். இதை உம்மா அவதானித்து விட்டாள்.

சுஹறூதா புத்தகப் பையில என்ன இருக்கு

ஒ ண் ணு மி ல் ல ம் ம ா . புத்தகங்கள்தானிருக்கு.

இல்ல எதையோ மறைக்க. இஞ்ச கொண்டா புத்தப் பையை.

சுஹறூதாவின் கையிலிருந்து பையைப் பிடுங்கி திறந்தாள். பாவைப் பிள்ளை யிருந்தது.

இது என்ன சுஹறூதா..

பதில் சொல்லவில்லை சுஹறூதா... மிரண்டு போனாள்..

முதுகில் ஒன்று வைத்து உண்மைய சொல் என அதட்டினாள் உம்மா.

விளையாட எடுத்து வந்தன்.

மஸீஹாக்கு தெரியுமா?

இல்..ல..உம்மா.. நாளைக்கி குடுக்கிறன்.

இப்பவே குடுத்துட்டு வரலாம் வா.

உம்மா அவளை இழுத்துக் கொண்டு வெளியேறினாள்.

உம்மா பயமாயிருக்கும்மா

எடுத்தத குடுக்க மறந்திட்டதா சொல்லிரலாம் வா. இனிமே இப்படி தப்பு செஞ்சா உரிச்சி உப்பு தெறாவிருவன்.

இனிமே பண்ணமாட்டன்மா. மன்னிச்சிருங்க.

மஸீஹா வாசலில் வெயிலில் உட்கார்ந் திருந்து ஒப்பாரி வைத்துக் கொண்டி ருந்தாள்.கெண்டைக் காலில் பொசுங்கிய காயம் இருந்தது. பக்கத்தே அடுப்பில் நெல் அவித்து இறக்கிய பெருந்தணல் தகித்துக் கொண்டிருந்தது.

சுஹறூதாவையும் அவள் கையில் பாவைப் பிள்ளையையும் கண்ட மஸீஹா. இன்னும் சத்தமாக அழுதாள்.

மன்னிச்சிரு மஸீஹா. திருப்பித்தர மறந்து கொண்டு போய்ட்டன்.

நீதான் கொண்டு போயிருப்பாய்ண்டு நெனச்சன். வீட்டவந்து வாங்கிக்கலாம் எண்டு இருந்தன். பாவப்பிள்ளய தொலைச்சிட்டு வந்திட்டனென்டு மாமி சூடு வச்சிட்டா. கால்வெந்து எரியுது சுஹறூதாடம்மா. வாப்பாகிட்ட சொல் லுங்க. எங்க உம்மாவ வரசொல்லச் சொல்லி..

கதை சத்தம் கேட்டு மாமி. வெளியே வந்து பார்த்தாள்.

ஆ... நீங்களா... இந்த டைம்ல?

சுஹறூதா மஸீஹாட பாவப்புள்ளய திருப்பிக் குடுக்க மறந்து கொண்டு வந்திட்டா. குடுத்துட்டுப் போக வந்தம்...

எனக்கு பாவப்புள்ள வாணாம். அத தொலச்சதா. சூடு வாங்கிட்டன் தானே. எனக்கு வாணாம்.என்ன உங்க வீட்டுக்கு கூட்டிப் போங்க அன்ரி...

ஏய்.. வாய் மூடுடி. வாயில சூடு வச்சிருவன்.

என்ன பேசுறீங்க. அவ குழந்தைப் பிள்ளதானே. ஒங்கள நம்பிதானே விட்டுட்டுப் போனா. இப்பிடி கொடும செய்ய ஆகுமா?

நீ கொண்டு வச்சிரிந்தா அந்தக் கஸ்ட்டம் தெரியும். வந்திட்டா ஞாயம் கேக்க...

சுஹாதா பாவப்புள்ளயக் குடு. போவம்.

பாவைப்பிள்ளையை வாங்கி அடுப்புத் தணலுக்குள் வீசினாள் மஸீஹா.

எடியேய் ஏன்டி அடுப்புல போட்ட நீ... கழுத... எங்க உம்மாதானே வாங்கித்தந்த. இந்த பாவப்புள்ளயாலதானே நீங்க எனக்கி சூடுபோட்ட....

இருடி ஒன்னப் பொறகு கவனிச் சிக்கிறன். நீங்க கௌம்புங்க எனக்கி வேல கெடக்கு.

மஸீஹா நகர்ந்து வந்து சுஹாதாவின் தாயின் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

அன்ரி என்ன கூட்டிட்டுப் போங்க அன்ரி. நீங்க போனதுக்குப் பொறகு மாமி என்ன அடிச்சிச் சாக வச்சிருவாங்க அன்ரி.

இது உங்க உம்மாட வீடு நீ எதுக்கு வரணும். நீ தைரியமா இரு. நான் பொலீசுக்கு போய் சொல்றன்.

நானும் கூட வாறன் அன்ரி...

அடம்பிடித்த மஸீஹாவை வாரித் தூக்கிக் கொண்டாள் சுஹாதாவின் தாய். கண்கள் சிவந்து கலங்க அடக்க முடியாத சினத்துடன் வந்து நின்றான் மஸீஹாவின் வாப்பா.

வெள்ளி மட்டும்தான் எனக்கு கடைலீவு. வெள்ளி வந்து சனி சுபஹுக்கு திரும்ப கௌம்பிருவன். இன்டைக்கி முதலாளிட மச்சான் மௌத்து. கடைய மூடிட்டாங்க.நாள் தவறி. வந்ததால தான் எம்புள்ளைக்கி நடக்கிற கொடுமைய கண்ணால கண்டன். வேற யாரும் சொல்லியிருந்தாலும் நம்பியிருக்க மாட்டன்...

முதல்ல புள்ளட உம்மாவ திருப்பி எடுங்க...

அததான் செய்யப்போறன். இவள முதல்ல ஊட்ட உட்டு துரத்தணும். ஒண்ட வந்த பிடாரி ஊர் பிடாரிய விரட்டிச்சாம்..

மஸீஹா குட்டி நாங்க பெய்த்து வாறம் என்ன..

விடைபெற்று வெளியேறினர். சுஹாதா உம்மாவின் கையை இறுகப் பிடித்திருந்தாள். உம்மா புரிந்து கொண்டாள்.

சுஹாதா கைவலிக்குது.நான் உன்ன விட்டு ஓடிரமாட்டன்.

உம்மா....

என்ன...

நீங்க வெளிநாடு போய்ராதீங்கம்மா...

நீதானே போக சொன்ன...?

எனக்கு பாவப்புள்ளயெல்லாம் வாணாம்மா. நீங்கதான் வேணும்...

உம்மா சுஹாதாவை இறுக்கி அணைத்தபடி வேகமாக நடக்கலானாள். ■

## புத்தாண்டு

அழகாய்ப் பிறக்கிறது புதிய ஆண்டு
பல கனவுகளின் துவக்க ஆண்டு
தடைகளை அழித்திருக்க
பல வெற்றிகள் வந்து குவிந்திருக்க
நிம்மதி கிடைத்திருக்க
குடும்பங்கள் சேர்ந்திருக்க
நினைத்தாலே இனித்திருக்க
முயற்சியும் பயிற்சியும் எடுத்து இருக்க
அனுபவப் பாடங்கள்
கடந்த ஆண்டு பெற்றிருக்க
புதிதாய் வாழ்க்கை பிறந்திருக்க
வெற்றிப் பாதை திறந்திருக்க
வெல்ல வேண்டும் என்ற எண்ணம்
எனக்கு இருக்க
புத்தாண்டே நீ அழகாய்ப் பிறந்திருக்க

**கவிஞர் சேலம் சௌ.தாரா பி.ஏ**

## ஹைக்கூ

கடல் அலை
கரைக்கு வந்து திரும்பும்
முட்டையிடும் ஆமை!

பாலைவனம்
கடந்து செல்லக் கடினமாக உள்ளது
பெருமழை வெள்ளம்!

உயிரைக் கொடுத்து
நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துகிறான்
மதுப் பிரியன்!

பணிச்சுமை
அதிகரித்துக் கொண்டே இருக்கும்
ஆற்றுநீரில் கழிவு!

வழிவிடாமல் தடுக்கிறார்கள்
வருத்தத்துடன் தேங்கி நிற்கிறது
மழை நீர்!

கவிஞர் கவிதா அசோகன் திருச்சி

## மழை வெள்ளம்

பூமித்தாயின் மேனியில் கொப்புளமாய் கட்டிட காடுகள்.
மனிதனின் ஏப்பத்தில் ஏரிகள் எல்லாம் அஜீரணமாய்.
தண்ணீர் தேங்கும் தரை எல்லாம் வீடுகளின் முகவரிகள்.
குளங்களில் எல்லாம் அரசியல் கொள்கைகள் அம்மணமாய்.
ஆக்கிரமிப்பு என்னும் தமிழ் சொல் இங்கே தவறுகளாய்.
மழைநீர் வழித்தடங்கள் வெறும் காகித குப்பைகளாய்.
கோபங்கொண்ட வெள்ளத்தின் வேகத்தில்
மனிதகுலம் முகவரி தேடும் முகங்களாய்.
மனிதா இயற்கையை சீண்டாதே
இழப்புகள் உனக்கு மட்டுமே.



**ரா.பிரேம் சுரேஷ்**
கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்

## காதல் காதல் தான்

மின் வெட்டும் நேரம்
கண்கள் படபடக்கும்
காந்த அலைகள் எங்கும்
கரை சேரத் துடிக்கும்
குருதியின் வேக ஓட்டம்
மேனியெங்கும் பரவும்
நெஞ்சிலொரு படபடப்பு
வஞ்சியைக் கண்டதும்
கொஞ்சிப் பேசிட மனம்
கெஞ்சிடும் நிலை காதல்

வஞ்சிக்கும் இதே நிலை
நெஞ்சினில் மூண்ட தீ
அஞ்சியஞ்சி அடங்கும்
தஞ்சமடைய மேனி
துடியாய்த் துடிக்கும்
பஞ்சமான சொற்கள்
நாவிலே நடுக்கமாகும்
விழிகள் கீழிறங்கி
வெட்க நடனமிடும்
காதல் புனிதமாகும்

காதலுக்கு மரியாதை
சாதல்வரை தொடர்வதே
இதயக் கலப்பில் தான்
உதயமாகும் காதலது
அன்பில் நனைவதது
பண்பில் விளைவதது
இரண்டு மனங்களும்
இணையும் இணைப்பது
கொண்டாடுங்கள் காதலை
காதல் தினத்தில் இன்புறவே

கவிஞர் புல்லாங்குழலன்



## கலாபூஷணம்

# புசல்லாவை இஸ்மாலிஹா ராஜா

மலையகக் கவிஞர், எழுத்தாளர், முன்னாள் அதிபர், பெண் படைப்பாளி

நேர்காணல்

'மலையகத்தில் கற்றவர்கள் அதிகமாக காணப்படுவது பெருமைக்குரிய விடயமாகும்.'

**உங்களைப் பற்றிய ஒரு அறிமுகத்தை தாருங்கள்?**

பச்சை நிற தேயிலை தோட்டங்களும் மலைகளும் சூழ்ந்த இயற்கை அழகு நிறைந்த மலை நாட்டின் புசல்லாவையை பிறப்பிடமாகக் கொண்டவள். எனது தந்தை சேகு தாவூத் இந்தியாவில் உள்ள திருநெல்வேலியைச் சேர்ந்தவர். வியாபாரம் செய்வதற்காக இலங்கைக்கு வந்தவர். தாயார் சித்திரசீதா ரம்பொடையைச் சேர்ந்த முன்னாள் கிராம சேவகர் பீர் முகமதுவின் மகளாவார். புசல்லாவையில் உள்ள பெருமை பெற்ற பரிசுத்த திருத்துவக் கல்லூரியில் கல்வி கற்றேன். அங்கு எனக்கு தமிழ் ஆசானாக இருந்த இணுவிலை சேர்ந்த பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் எனக்கு தமிழ் பற்றையும் எழுதும் ஆர்வத்தையும் ஊக்குவித்தார் என்பதை இத்தருணத்தில் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**உங்கள் கல்வி வாழ்க்கை மற்றும் தொழில் வாழ்க்கை பற்றி கூறுங்கள்?**

புசல்லாவை பரிசுத்த திருத்துவ கல்லூரியில் உயர்தரம் கற்றபின் 1977 ஆம் வருடம் முதல் நியமனம் கிடைத்தது. மத்திய மாகாணத்தில் உள்ள ரொத் சைல்ட் தமிழ் வித்தியாலயம், கழுகல தமிழ் வித்தியாலயம், யோகலட்சுமி தமிழ் வித்தியாலயம் கலஹா ஆகிய அரசாங்க பாடசாலைகளில் 1977 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை கடமையாற்றிவிட்டு, ஓய்வு பெற்றேன். அதன் பின்னர் கண்டி கிரீன்ஹில் சர்வதேச பாடசாலையில் கடமை புரிந்த பின்பு தற்போது ஹாவட் மேத்தா சர்வதேச பாடசாலையில் கடமை ஆற்றுகிறேன்.

குழந்தைகளோடு இருப்பதும் அவர்களுக்கு கற்பிப்பதும் எனக்கு பிடித்தமான ஒன்று. இதை



கண்டி விவேகானந்தா கல்லூரியில் இடம்பெற்ற லங்காபுத்ர, தேசமான்ய, தேசபந்து வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் அவர்களின் 80ஆவது அகவை அமுத விழாவில் வைத்து கௌரவித்த போது.



மலையகத்தில் குழந்தைகளோடு

முழு மனதுடன் சேவையாகவே செய்கிறேன். கஷ்டப் பிரதேச அரசாங்க பாடசாலைகளிலே அதிக காலங்கள் கடமையாற்றினேன். அந்தப் பணியை நான் விருப்புடன் செய்தேன்.

**உங்கள் இலக்கிய பயணம் எங்கு, எப்படி ஆரம்பமானது?**

எனது இலக்கிய பயணம் பள்ளியில் படிக்கும் பொழுதே ஆரம்பமாகிவிட்டது எனலாம். இலக்கிய ஆர்வம் உள்ள மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கையெழுத்து பத்திரிகைகளை நடத்தினோம். அதற்கு

ஓய்வு பெற்ற பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் திரு. துரை மனோகரன் அவர்களுடன்





தனது கணவர் எஸ். விஸ்வநாத ராஜாவுடன் திருமணத்தின்போது

ஆசிரியர்களும் ஒத்துழைப்பு நல்கினார்கள். ஆனந்த விகடன், குமுதம், கல்கி, கல்கண்டு முதலிய பத்திரிகைகளும், வாசிகசாலையில் இருந்து கிடைத்த தமிழ் நூல்களும் எங்களை எழுத ஊக்குவித்தன. இயற்கையை இரசிக்கும் ஆசையும் மானிடர்களின் துயரங்களை உற்று நோக்கி அதற்கு தீர்வு காணும் வேகமும் என்னை எழுதத் தூண்டின எனலாம். ஆரம்ப காலத்தில் இலங்கை வானொலிக்கே நான் எழுதி வந்தேன். பூவும் பொட்டும், மங்கையர் மஞ்சரி, வாலிப வட்டம், இசையும் கதையும் போன்றவற்றை நான் எழுதியுள்ளேன். காங்கிரஸ் பத்திரிகையில் 'பயணம் முடியவில்லை' என்ற சிறுகதையே எனது முதல் சிறுகதை ஆகும். இதன் மூலம் பத்திரிகைகளில் எழுத ஆரம்பித்தேன். இலங்கையில் வெளிவந்த தினகரன், வீரகேசரி, தினபதி, நான், கொழுந்து, கொந்தளிப்பு, மலை குருவி, சிந்தாமணி, தீர்த்தக்கரை போன்ற பத்திரிகைகளிலும் இன்னும் பல பத்திரிகைகளிலும் அடிக்கடி எழுதி உள்ளேன். எனது எழுத்துக்கள் இலங்கையிலும் வெளிநாட்டு சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. பல கவிதைகள் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.

**மலையக மனிதர்களின் வாழ்வியல் வலிகளை சிறுகதைகள், கவிதைகள் மூலமாக சமூகத்தின் அவதானத்துக்கு ஏன் கொண்டு சென்றீர்கள்?**



ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான SRI LANKA PEN CLUB இன் வருடாந்த மாநாட்டில் கௌரவிக்கப்பட்டபோது

நான் மலையகத்தில் உள்ள புசல்லாவை என்ற ஊரில் வசித்தேன். அங்கே எனது தந்தை கடை நடத்தி வந்தார். அந்த கடைக்கு நிறைய மலையக மக்கள் பொருட்களை வாங்க வந்து போவார்கள். அந்த மக்களின் வறுமை நிலை என் மனதை வாட்டியது. கல்வி, பொருளாதாரம், வாழ்க்கை வசதி என்பவற்றில் பின் தங்கிய நிலையில் இருந்த அவர்களது நிலை என்னை சிந்திக்க வைத்தது. குடிக்கும் பழக்கம் காரணமாக அவர்கள் மட்டுமின்றி அவர்களது சந்ததியினரும் வீணாகி இருப்பதை கண்கூடாகக் கண்டேன். அந்தக் குழந்தைகள் தேயிலை மலைக்கு பேர் பதிந்து வேலைக்குப் போவதையும் வேறு இடங்களில் வேலை செய்வதையும் காணும் போது மிகவும் துயரம் அடைந்தேன். இந்த சந்தர்ப்பத்திலேயே மலையக பாடசாலைகளில் எனக்கு நியமனம் கிடைத்தது. சிறிது காலம் ஆசிரியராகவும் பின்பு தொடர்ச்சியாக அதிபராகவும் பதவி வகித்தபோது மலையக மக்களோடு மிகவும் நெருங்கி பழகும் சந்தர்ப்பமும் அந்த குழந்தைகளின் நிலைப்பாடும், எந்தவிதமான முன்னேற்றமும் இன்றி அவர்களது வாழ்க்கை வீணே புழுதியில் கிடப்பதையும் நேரில் கண்டேன். எனக்கு அவர்களைப் பற்றி எழுத வேண்டும் என்ற உத்வேகம் எழுந்தது.

என்னால் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமானால் கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதுடன் அவர்களைப் பற்றிய செய்திகளை வெளி உலகுக்கும் கொண்டுவர வேண்டும் என்ற ஆதங்கத்திலே நான் எழுத ஆரம்பித்தேன். எழுத்து எனக்கு இந்த வகையில் கைகொடுத்தது எனலாம்.

**இரு தசாப்தங்களுக்கு மேலாக கற்பித்தல் துறையிலும் அதிபர் சேவையிலும் கடமையாற்றிய நீங்கள் 'மாணவர்களின் மனப்பாங்கு' குறித்து புரிந்து வைத்திருப்பது என்ன?**

மாணவப் பருவம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இனிமை சேர்க்கும் காலமாகும். இக்காலகட்டத்தில் சுறுசுறுப்பும், எதையும் கற்றுக் கொள்ளும் ஆர்வமும், விளையாட்டில் விருப்பமும், தேடி அறியும் ஆசையும் அவர்களிடம் இயல்பாகவே அமைந்திருக்கும். அனைத்தையும் கற்றுக் கொள்ளும் ஆர்வத்துடன் மாணவர்கள் பள்ளிக்கு வருகிறார்கள். என்னை பொருத்தவரை இத்தருணத்தில் மாணவர்களுக்கு வழிகாட்டுவது ஆசிரியர்களின் கடமையாகும். மாணவர்களை சுயமாக சிந்திக்கவும், அவர்களது தனித்தன்மைகளை மதிக்கவும், நல்ல விருப்பங்களுக்கு ஆதரவளிக்கவும் முயல வேண்டும். சதா தடைசொல்லவும், குறைகூறவும், அவர்களிடம் நம்பிக்கை இன்மையை ஏற்படுத்தவும் முனைந்தால் அவர்களுடைய வளர்ச்சி தடைப்படும். அவர்களது பாதைகள் வேறுபடும் என்பது உண்மை. எனவே வீட்டிலும் சரி பாடசாலையிலும் சரி அவர்களுக்கு சரியான வழிநடத்தல் இருந்தால் இப்போது நமது நாட்டில் காணப்படும் பல குறைபாடுகள் இல்லாமல் போகும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. எனவே, நல்ல விதைகளை மாணவர்களுக்கு விதைத்து நல்ல பயிர்களை அறுவடை செய்ய உதவுவோம்.

**உங்களது ஆக்கங்கள் வெளிவந்த நூல்கள் பற்றி கூறுங்கள்?**

கண்டிப்பிரதேச சாஹித்திய விழாவில் கவிதை பாடி கௌரவிக்கப்பட்டபோது



1. 1992 இல் 'ஒரே மண்' என்ற சிறுகதை பிரான்ஸ் நாட்டில் இருந்து வெளிவந்த பாரிஸ் முரசு என்ற பத்திரிகையில் வெளிவந்தது.

2. 1994இல் 'துறவி' பதிப்பகத்தாரின் 'உழைக்கப் பிறந்தவர்கள்' என்ற தொகுப்பில் 'அப்பாவுக்கு கல்யாணம்' என்ற சிறுகதை வெளிவந்தது. (இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன பரிசு பெற்ற சிறுகதை ஆகும்)

3. அந்தணி ஜீவாவின் 25 இலங்கை பெண் எழுத்தாளர்களின் சிறுகதை தொகுப்பில் 'காயாம் பூவும் வாழை மரமும்' என்ற எனது சிறுகதை இடம் பெற்றுள்ளது.

4. சுவீஸ் நாட்டின் ஊடறு வெளியீட்டின் 'மை' என்ற கவிதை தொகுதியில் 2005 ஆம் ஆண்டு எனது கவிதை இடம்பெற்றுள்ளது.

5. கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கமும் 'மாவத்த' சஞ்சிகை வெளியீட்டாளரும் கூட்டாக வெளியிட்ட சிங்கள கவிஞர் பராக்கிரம கொடி துவக்குவினால் மொழிபெயர்க்கப்பட்ட 'இந்து சா லங்கா' 'பிபி தென பெய' ஆகிய நூல்களிலும் எனது கவிதைகள் சிங்களத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. (இக் கவிதைகள் தமிழில் 'விழிப்பு' என்ற சஞ்சிகையில் வெளிவந்ததாகும்.)



6. 'FOR THE DAWING OF THE NEW', 'DREAM BOAT' ஆங்கிலத்தில் எனது கவிதைகள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.

7. ஹிஸ்புல்லா பவுண்டேஷன் ஏற்பாட்டில் காத்தான்குடியில் வெளியிடப்பட்ட 'நதியை பாடும் நந்தவனங்கள்' என்ற நூலிலும் எனது கவிதை இடம்பெற்றதோடு, அங்கே பொற்கிழி வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டேன்.

8. பல்வேறு கவியரங்கங்களிலும் நான் கவிதை பாடியுள்ளேன்.

**உங்கள் கலை இலக்கிய பயணத்தில் நீங்கள் சாதித்த சாதனைகள், மற்றும் பரிசுகள் குறித்து கூறுங்கள்.**

பரிசுகள் பாராட்டுக்கள் இவற்றை விரும்பி இலக்கிய சேவை செய்யவில்லை என்றாலும் பிற்காலத்தில் கிடைத்த பொழுது மனநிறைவடைந்தேன்.

1. 1996 இல் கலைஞர் விருது.
2. 1996-2019இல் இரத்தின தீப விருது.
3. 2012 இல் 25 வருட இலக்கிய சேவைக்காக தினகரன் விருது.
4. 2014 ஹிஸ்புல்லா பவுண்டேஷன் பொற்கிழியும் விருதும்.
5. 1997 - இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் நடத்திய சிறுகதைப் போட்டிக்கான பரிசு.
6. ரோட்டரி கிளப் நடத்திய கண்டி சுற்றாடல் மேம்பாடு தொடர்பான போட்டியில் முதல் பரிசு.
7. 2020-2021.11.03 அன்று வழங்கப்பட்ட கலாபூஷணம் விருது.
8. 2021-சுட்டு விரல் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் கவிதைகள் நூல் வெளியீட்டு விழாவில் கிடைத்த விருது. (இந்நூலில் எனது கவிதையும் இடம் பெற்றுள்ளது.)
9. 2023 - கண்டி ரத்ன தீபம் அமைப்பினால் வழங்கப்பட்ட 'சித்திலெப்பை'

ஞாபகார்த்த விருது.

10. ஸ்ரீலங்கா பெண் கிளப் அமைப்பினால் கலாபூஷணம் பெற்றமையை கௌரவித்து 2021-12-24 வழங்கப் பட்ட விருது.

11. 1977 தொடக்கம் 2011 வரை அதிபர் சேவையை செய்தமைக்காக சேவைகள் நலன் பாராட்டு விழாவில் கம்பளை வலய தமிழ் அதிபர்கள் ஒன்றியம் 3-7-2012 எனக்கு வழங்கிய கௌரவ விருது.

12. இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'சாமிலாவின் இதய ராகம்' எனும் படத்திற்கு பாடல்கள் எழுதியுள்ளேன்.

**'சமகால இலங்கையின் இலக்கிய வரலாற்றில் மலையக இலக்கியவாதிகளின் பங்களிப்பு தனித்துவமானது' என்பது பற்றிய உங்களது விடயவதானங்களை தெரியப்படுத்துங்கள்?**

அன்று தொடக்கம் இன்று வரை ஒவ்வொரு காலகட்டத்திலும் மலையக மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்துள்ளார்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் முக்கியம் பெற்றுள்ள பிரச்சினைகள் அந்தந்த காலகட்டத்தில் எழுதப்பட்டு வந்துள்ளன. இவ்வாறு மலையக இலக்கியவாதிகள் பலரும் மக்களின் பிரச்சினைகளை பலவாறு சித்தரித்து காட்டியுள்ளனர் எனலாம். இவ்வாறு பார்க்கும் போது மலையக இலக்கியவாதிகளின் பங்களிப்பு தனித்துவமானது. மலையக எழுத்தாளர்களான தெளிவத்தை ஜோசப், சி.வேலுப்பிள்ளை, குறிஞ்சித் தென்னவன், குறிஞ்சிநாடன், மல்லிகை சி.குமார், வெள்ளைச்சாமி, முரளிதரன் போன்றவர்களோடு வேறு இடங்களைச் சேர்ந்த பலரும் இக்பால் அலி, ஞானசேகரன் ஐயர் போன்றவர்களும் எழுதியுள்ளார்கள். வேறு மதங்களை சேர்ந்தவர்களும் மலையகம் பற்றி எழுதியுள்ளார்கள்.

மலை நாட்டில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. இதற்கு எழுத்தாளர்களே முக்கிய காரணம் எனலாம். இப்போது மத்திய வர்க்கத்தைச் சார்ந்தவர்களாக அநேக மலையக மக்கள் மாறிவருகின்றனர். மலைநாட்டை விட்டு வெளியேறி இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் தொழில் செய்கின்றனர். அது மட்டுமின்றி, நன்றாக கற்று ஆசிரியர்களாக, வைத்தியர்களாக, வழக்கறிஞர்களாக, அரசியல்வாதிகளாக பல்வேறு உயர் தரத்தை அடைந்து இருக்கிறார்கள். பல்கலைக்கழகம் செல்வோர் தொகை அதிகரித்து வருகிறது. மலையகத்தில் கற்றவர்கள் அதிகமாக காணப்படுவது பெருமைக்குரிய விடயமாகும். எனவே, இவ்வாறான ஒரு சிறந்த மாற்றத்திற்கு மலையக இலக்கியவாதிகளின் பங்களிப்பு அதிகமாக உதவி இருக்கின்றன என்றே கூறவேண்டும். அந்த வகையிலே நாம் எழுத்தாளர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம் .

**'தமிழ்நெஞ்சம்' சஞ்சிகை குறித்தும் அதன் அண்மைக்கால செயற்பாடுகள் தொடர்பாக நீங்கள் அவதானித்தவை பற்றி ஏதாவது?**

தமிழ்நெஞ்சம் சஞ்சிகையின் நிர்வாகக் குழு மிகச் சிறப்பாக இயங்குகின்றது. அதுமட்டுமின்றி அண்மைய சஞ்சிகையை பார்வையிட்டேன். மிகச்சிறப்பாக ஆக்கங்கள் காணப்பட்டன. சமூகத்துக்கு தேவையான அறிவுசார்ந்த பல கவிதைகளையும் கட்டுரைகளையும் விடயங்களையும் நான் கண்டேன். இந்த காலகட்டத்தில் ஒரு சஞ்சிகையை தரமாக வெளிக்கொணர்வது மிகப்பெரிய சாதனை தான். சஞ்சிகை தொடர்ந்து வெளிவர வேண்டும். சமூகத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டும் என்று கூறி எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**நேர்காணல்: முஷ்தாக் அஹ்மத்**



# அருவெறுப்பு

**கவிமுகில் சுரேஷ்**
தருமபுரி

வாழ்வு சில நேரங்களில் மானுட வாழ்வில் வரும் சிக்கல்களையும் பிரச்சனை களையும் தீர்க்கிறது சிலவற்றை தீர்க்கா மலும் கடக்கிறது.

சில பிரச்சினைகள் சிறிதாக இருக்கலாம் ஆனாலும் அது தீர்க்க முடியாத தீர்வாய் இருக்கும் ஒரு சில பிரச்சினைகள் பெரிதாக இருக்கலாம் அவைகள் தீர்க்கப்பட கூடியதாக இருக்கும்.

ஆக பிரச்சனைகள் இல்லாமல் எந்த மனிதனும் வாழ்க்கையின் கடலை கடக்க இயலாது என்பது நிதர்சனம்.

கடலில் விழுந்த மனிதன் ஒன்று எழும்ப வேண்டும் இல்லாவிட்டால் நீந்தி கரையை கடக்க வேண்டும்.

வாழ்வு என்பது அப்படித்தான் நாம் நினைத்து அல்ல நினையாமலே பிறந்து விட்டோம் வாழ்வுபெருங்கடலில் நீந்தி கடக்க வேண்டிய கட்டாயத்திலோ நிர்பந்தத்திலோ இருக்கும்படி செய்து விட்டது காலம்.

இந்த பூமியில் பிறக்க வேண்டும் என்று யாரும் பிறக்கவில்லை பிறந்ததினால் வாழ்ந்தாக வேண்டியது அவசியமாகிறது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான வாழ்க்கை இங்கே நியமிக்கப் பட்டிருக்கிறது எனலாம். அல்லது ஏற் படுத்திக் கொண்டோம் எனவும் சொல்லலாம்.

ஒரு கையில் ஐந்து விரல்கள் எப்படி ஒன்றுக்கொன்று மாறுபட்டு எதிரும் புதிரு மாகி இருக்கிறதோ அதேபோல்தான் வாழ்க்கையில் பல மனிதர்களின் எண்ணங் களும் முகங்களும் வேறுபட்டு இந்த மண்ணில் பயணிக்கிறது.

மனிதர்கள் எண்ணங்களால் செயல் களால் அடிக்கடி மாறுபட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

ஒருவரை அதிகம் பிடிக்கிறது என்று அவரோடு சிரித்து மகிழ்ந்து பேசி நேரத்தை செலவழிக்கிறோம் அடுத்த நேரத்தில் அவரை நமக்கு பிடிக்காமல் போகிறது ஏன் எதற்கு என்று நம்மால் விளங்கிக் கொள்ளவும் இயலாது.

மனிதர்கள் அடிக்கடி மாறுகின்ற நிலையை உடையவர்களாக இருக்கிறார் கள் சூழ்நிலைகள் அவர்களை மாற்றுகிறதா அல்லது உணர்ச்சிகள் அவர்களை வேறுபடுத்தி காட்டுகிறதா சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவர்களை வெவ்வேறு முகங்களாய் காட்டுகிறதா என பல்வேறு விதமான யோசிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது என பல்வேறு விதமாக வாழ்வின் கூறுகளை யோசித்துக் கொண்டி ருந்தான் முனுசாமி.

இந்த முனுசாமிக்கு எந்த தெருவில் யார் யார் வீடு இருக்கிறது? எந்தெந்த மனிதர்கள் எப்படி பேசுவார்கள்? யார் யாரெல்லாம் உண்மையான அன்பு செலுத்துவார்கள்

யாரெல்லாம் போலி முகத்தில் சிரிப்பை காட்டி தன் வேலைகளை சாதித்துக் கொள்வார்கள் என்பதெல்லாம் அவனுக்கு அத்துபடி.

காரணம் இருபத்தி ஐந்து வருடங்களாக ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு வீடுகளிலும் எந்தெந்த அறை எப்படி இருக்கிறது என்பதெல்லாம் அவனுக்கு பரிச்சயம்.

இந்த முனுசாமியை தெரியாதவர்கள் அங்கே யாரும் கிடையாது இந்த முனுசாமி தருமபுரி முனிசிபாலிடியில் துப்புரவு தொழிலாளியாக பணியாற்றி வருகிறான்.

இந்த வேலை எல்லோரும் மதிக்கத்தக்க கௌரவமான வேலை அல்ல அதே நேரத்தில் அவன் செய்கிற இந்த வேலையை விட்டு விட்டால் ஊரே நாறிவிடும்.

வீடுகள் நாற்றம் எடுத்துவிடும் எந்த மனிதனும் சுத்தமாய் இருக்க முடியாது நகரத்தையும் வீட்டையும் சுத்தமாய் வைக்கின்ற அப்படிப்பட்ட தான ஓர் அற்புதமான பணியை செய்கிறவன் தான் அந்த முனுசாமி.

ஆனால் மக்களுக்கு அவன் சேவை தேவைப்பட்டதே ஒழிய மக்களால் அவன் மதிக்கப்படவில்லை மக்களால் அவன் ஒதுக்கப்பட்டிருந்தான் மக்கள் அவனைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

அவனின்வாழ்க்கையின்கனவுகளையும் எதிர்காலத்தின் மேம்பாடுகளையும் குறித்து அவனை பயன்படுத்திக் கொள்ளும் மக்கள் அக்கறையற்றவர்களாகவே இருந்தார்கள்.

படித்தவர்கள் பல பணக்காரர்கள் எல்லோருமே தனக்கானதை மட்டுமே இங்கு யோசித்துக் கொள்கிறார்கள் பிறருக்கானவைகளையும், எளியவர்களுக்கு உதவுவதையும் அவர்கள் யோசிப்பதில்லை.

அவர்களின் வாழ்விற்கு தேவையான வைகளை மட்டுமே சிந்திக்கின்ற சுயநல பட்சிகளாய் இருந்து வந்தார்கள் சிலர் இரக்கமற்ற அரக்கர்களாகத் தங்களை காட்டிக் கொண்டார்கள்.

முனுசாமி அவைகளை எல்லாம் கண்டும் அனுபவித்தும் வாழ்ந்து வந்தான் அவைகளை எல்லாம் இப்பொழுது தனியாய் உட்கார்ந்த அசை போட்டுக் கொண்டிருந்தான்.

தன்னை எல்லோரும் பயன்படுத்திக் கொள்கிறார்கள் தங்களுக்கு வேலையாக வேண்டும் என்றால் பழம் நழுவி பாலில் விழுவதைப் போல பேசுகிறார்கள்.

காரியம் ஆக பச்சோந்திகளாய் மாறும் மானுட கூட்டத்திற்குள் தன்னை நிறுத்திக் கொள்வது அவனுக்கு கடினமாய் காணப்பட்டது.

தலையை சொரிந்து ஐயா ஒரு இருபத்தி ஐந்து ரூபாய் சேர்த்து கொடுங்கள் என்று கேட்கின்ற அவல நிலையிலிருந்து விடுபடுவது எப்படி என அடிக்கடி அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

‘‘இதெல்லாம் உனக்கு இதுவே அதிகம் என்று சொல்லி கொடூரமாய் கோபத்தோடு முறைத்து போ,,, போ,,, நிறைய வேலை இருக்கிறது’’ என விரட்டி விடும் கூட்டங்களை நிமிர்ந்து பேசுவதற்கு திராணியற்றவனாய் கூனிக்குறுகி காலத்தை கடத்திக் கொண்டிருந்தான்.

இங்கே நிறைய பணக்காரர்களுக்கு பணம் இருக்கிறது பணத்தை பல வழிகளில்

சம்பாதிக்கிறார்கள் அவர்கள் உழைப்பை விட மற்றவர்களின் உழைப்பை உறிஞ்சு கிற அப்படிப்பட்ட தந்திரங்களை தெரிந்த முதலாளித்துவ மக்கள் மத்தியில் இந்த முனுசாமி பணியாற்றி வருகிறான்.

ஒரு சிலர் தவிற அவன் மீது இரக்கம் இங்கே எவரும் கொள்ளவில்லை.

பண உறிஞ்சிகள் பணம் வைத்திருந் தார்கள் அவர்கள் மனதளவில் மற்றவர் களுக்கு கொடுப்பதில் உதவுவதில் பிச்சைக்காரர்களாக இருந்தார்கள்.

ஆக பணம் வைத்திருக்கிறவன் எல்லாம் பணக்காரன் அல்ல மற்றவர்களுக்கு உதவும் குணம் உடையவனே பணக்காரன் என்பதனை முனுசாமி தனக்குள்ளாய் பேசிக்கொண்டான்.

இந்த முனுசாமி டாக்டர் வீட்டுக்கும், வக்கீல் வீட்டுக்கும் அவசியம், எல்லார் வீட்டுக்கும் அவசியம்.

தெருவில் சில நேரங்களில் வீடுகளில் வாட்டர் டேங்க் கிளீன் செய்ய செப்டிக் டேங்க் கிளீனிங் செய்ய இந்த முனுசாமி தேவைப்படுகிறான்.

தெருக்களை சுத்தப்படுத்துவதிலும் முனுசாமி எல்லோருக்கும் அவசியப் பட்டான் எல்லோரும் அவனை யூஸ் அண்ட்துரோமாதிரிபயன்படுத்தினார்கள்.

தீபாவளி பொங்கல் புத்தாண்டுகளில் சிலர் தின்பண்டம், டிரஸ் கொடுப்பார்கள் பலர் கொடுக்க மாட்டார்கள்.

காலமெல்லாம் நம்முடைய வீடுகளில் கூப்பிட்ட நேரத்திற்கு வந்து சுத்தம் செய்து தருகிறான் என மனசாட்சி உறுத்தப்பட்டு முனுசாமியை தாஜா பண்ணி வைத்துக் கொள்ள வேண்டும் என நூறு, இருநூறு கொடுப்பவர்களும் உண்டு.

முனுசாமியால் மனுஷ ஆசாமிகளின் உள்ளங்களை வரையறுப்பதில் தடுமாற்றம் இருக்கத்தான் செய்தது யாரையும் கணிக்க முடியவில்லை.

யார் உண்மையாய் பேசுகிறார்கள் யார் பொய்யாய் பழகுகிறார்கள் யாரிடம் மனித நேயம் இருக்கிறது என பல கேள்வி அடுக்குகள் அவனுக்குள் கட்டப் பட்டிருந்தன.

இப்படி பல்வேறு மனிதர்கள் பல்வேறு பாடங்களை முனுசாமிக்குள் அவர்களின் வாழ்க்கையின் மூலம் திணித்திருந்தார்கள் தனக்குள் ஒரு முடிவு கொண்டிருந்தான்.

எப்பொழுதும் எந்த மனிதனையும் நம்ப வேண்டிய அவசியம் இல்லை நம்பாமல் இருக்கவும் வேண்டிய அவசிய மும் இல்லை.

ஆகவே மனித பயல்கள் எப்பொழுதும் எப்படியும் மாறலாம் இருக்கலாம் நாம் ஏற்றுக் கொண்டு நம் பயணத்தை தொடர்வது சிறந்தது.

மனிதன் ஒருநாள் தூற்றுவான் ஒரு நாள் போற்றுவான் அவனுக்கு வேலையாக வேண்டும் என்றால் எப்படி வேண்டுமானாலும் இளகிப் பேசுவான் அதனை எல்லாம் ஏற்றுக் கொள்கிற மனப்பக்குவத்திற்குள் அவன் தன் வேலையில் தன்னை அர்ப்பணித்திருந்தான்.

இத்தனை நாட்கள் அவன் எல்லோரி டமும் அவர்களின் பேச்சுக்கள் ஏச்சுக்கள் எல்லாவற்றையும் தாங்கி அவன் காலத்தை ஓட்டிக்கொண்டு இருக்க இருந்தான்.

அவன் கண் முன்னே அவன் இருக்கும் ஏரியாவில் இருக்கும் அரசியல்வாதிகளின் உண்மையற்ற தன்மைகள் பார்த்தான் அவர்களின் தீய சிந்தனைகளையும் செயல்களையும் நினைத்து மனசுக்குள் புழுங்கினான் வெளியே காட்டிக் கொள்ள இயலவில்லை.

எலக்ஷன் நேரத்தில் பணம் கொடுத்து ஓட்டு வாங்குகின்ற அவர்களை எல்லாம் அவன் பார்த்து “சீ,,, ” என யாரும் பார்க்காத போது காரி உமிழ்ந்தான்.

இந்த மானங்கெட்ட பொழப்புக்கு போய் தூக்கு மாட்டி சாகலாம் அவனுங்க கொடுக்கிற பணத்தை வாங்குறானுங்க.

பணம் கொடுக்கிறவன் முடிச்சவிக்கி அதை வாங்குகிறவன் மொள்ளமாறி அப்புறம் எப்படி இந்த நாடு உருப்படும் என யாரும் ஏற்றுக் கொள்ளாத வேதாந்தத்தை தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

அவன் வசிக்கும் தெருவில் இருக்கும் கவுன்சிலர் ‘‘முனுசாமி இந்த தடவை எலக்ஷன்ல நிற்கிறேன் உனக்கு என்ன வேணும் சொல்லு இந்தா ஆயிரம் ரூபாய்” என்றார்.

முனுசாமி “வேண்டாம் அய்யா” என பிடிவாதமாக மறுத்ததை ஆச்சரியத்தோடு பார்த்தார் அந்த கவுன்சிலர்.

காரணம் அவர் கொடுக்கின்ற ஆயிரம் ரூபாயை அந்த பகுதியில் வசிக்கும் எல்லா பணக்காரர்களும் வாங்கிக் கொண்டார்கள் ஓட்டுக்கு ஆயிரம் என ஆனால் முனுசாமி வேண்டாம் என்று சொன்னது அவருக்கு அதிர்ச்சியை கொடுத்தது.

“ஏன் முனுசாமி உனக்கு இந்த பணம் உதவாதா” என்றார்.

“இல்ல வேண்டாங்க அய்யா” என மறுத்து தன் வேலை செய்ய அந்த இடத்தை விட்டு புறப்பட்டான்.

கவுன்சிலர் கொடுக்க நினைத்த அந்த பணம் வாங்குவதற்கு முனுசாமிக்கு அருவருப்பாக இருந்தது.

இப்பொழுது முனுசாமி தன் வேலையை மும்முறமாய் பயபக்தியோடு செய்து கொண்டிருந்தான் அவன் செய்யும் தோட்டி வேலை அவனுக்கு அருவருப்பை ஊட்டவில்லை.

---


## தமிழ்நெஞ்சம்

# இதழில் எழுதுபவர்கள் கவனத்திற்கு...

பிரதிமாதமும் மாதத்தின் முதல் வாரத்தில் இதழ் வெளிவரும். அதற்கேற்றார் போல 20 தேதிக்கு முன்பாக ஆக்கங்களை அனுப்புதல் நல்லது. அதற்குமேல் வரும் ஆக்கங்கள் அடுத்த இதழில் சேர்க்கப்படும். முந்திக்கொள்வது நல்லதல்லவா?

தவிர, ஆக்கங்களை எழுதிவிட்டு அவசர, அவசரமாக ஆக்கத்திற்கான தலைப்பு, மற்றும் எழுதியவர் பெயர்கூட எழுதாமல் அனுப்பிவிடுகிறீர்கள். அப்படி யானவைகள் நிச்சயமாக இதழில் இடம் பெறச்செய்ய முடியாது.

இயன்றவரை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்கிறோம். முகநூல் உள்பெட்டி, வாட்ஸ் அப் போன்ற தொடர்பில் ஆக்கங்களை அனுப்புவதைத் தவிர்க்கவும்.

மின்னஞ்சல் : editor@tamilnenjam.com

# ஆணவக்கொலை

**கவித்தென்றல் சௌ.நாகநாதன்**

மாலை பள்ளி விட்டு வந்த மருதாணி ஆடிப்பாடியபடி வந்தாள்.

வீட்டின் வாசலில் சாய்வு கட்டிலில் அமர்ந்திருந்த பெரியபண்ணை வீட்டிற்குள் நுழைந்த மருதாணியை நிறுத்தி...

"இங்கா வா"

"என்னங்க அப்பா?"

"எங்க போயிட்டு வர்ற?"

"பள்ளிக்கூடத்திற்குத்தான் பா"

"பொய் சொல்லாத"

"நான் ஏன்பா பொய் சொல்லணும் வேணும்னா என் தோழி சுகந்திகிட்ட கேளுங்க."

"யாரு அந்த சேரிப்பொண்ணு தானே?"

"ஏன்பா அப்படி சொல்றீங்க அவ என் வகுப்புத் தோழி பா"

"நீ வாயை மூடு எத்தனைவாட்டி சொல்லுவேன் சேரி பசங்ககூட சேராதனு.."

"நான் பேசுவேன்"

அதைக்கேட்டுக்கொண்டிருந்த மருதாணியின் தாய் மரகதம் ஓடிவந்து... "அப்பாருகிட்ட என்னடி வாய்க்குவாய் அடிக்கிற உள்ள போ" என்று கண்ணைக் காட்ட.. ஓங்கிப் பளார்னு ஒரு அறைவிட்டார்.

"என்னடி தாயும் பிள்ளையுமா நடிக்கி றீங்களா?"

"அவ என்ன பண்றா ஏது பண்றா தெரியல. இப்படி ஊர்ல என் மானத்தைக் குழிதோண்டிப் புதைச்சிட்டு நிக்கிறா... நீ அவளுக்கு ஒத்து ஊதுறியா?'

'அவ என்னங்க பண்ணிட்டா கூடப் படிக்கிற பொண்ணுகூட பேசுறதும் பழகு றதும் என்ன தப்பு?"

"இங்க பாருடி அந்த சனத்துக்கும் நமக்கும் செட்டாகாது. ஆனால் போகட்டும் சனியன்னு விட்டுருவேன். ஆனா அந்த கீழ்சாதியில போயி வாக்கப்படணும்னு நினைக்கிறாடி உன் பொண்ணு."

"என்னங்க சொல்றீங்க?"

"நம்ம பொண்ணு அப்படி பட்டவ இல்லை யாரோ தப்பா சொல்லியிருக்காங்க"

"மருதாணி, அப்பா என்னடி சொல் றாங்க?"

"அம்மா, எனக்கு எதுவும் தெரியாதுமா"

"பொய் சொல்றா பாரு கையும் களவுமாக மாட்டிக்கிட்டே என்னமா நடிக்கிறா பாரு"

“ஐயோ குழப்பாதீங்க, அவ பொய் சொல்லமாட்டாங்க.”

“நீயே கேளு எங்க சுத்திட்டு வர்றானு”

“இல்லமா நான் பள்ளிக்கூடம் விட்டதும் சுகந்திகூடத்தான் வந்தேன்.”

“பொய் சொல்றா பள்ளிக்கூடம் விட்டது இரண்டு மணிக்கு இப்போ நேரத்தைப் பாரு ஆறுமணி.”

‘‘குழந்தைகளோடு விளையாடிட்டு வந்திருப்பாங்க. அதான் அந்த பொண்ணுகூட வந்தேன் சொல்றாளே’’

‘‘இல்லடி அவ நம்ம தோட்டத்துல வேலை பாக்குறான்ல மாயாண்டி அவன் மகன் சின்னையனோட மந்தோப்புல தனியா இருந்ததா எனக்கு செய்தி வந்துடுச்சு. உண்மையா பொய்யானு கேளு‘

‘‘சத்தியமா சொல்றேன்மா அப்பா பொய் சொல்றாங்கமா.’’

“அந்த அண்ணாகூட நான் பேசியதே இல்லை, யாரோ வேணும்னே பொய் சொல்லியிருக்காங்க. நான் ஏன்மா அங்க போறேன்’’

“சரி நீ மாந்தோப்பு போனியா?’’

“ஆமாமா நானும் சுகந்தியும் போனோம்”

“ஆமா எதுக்கு போனீங்க?’’

“அதுவந்து... வந்து... நான் தனியா சொல்றேன்மா’’

“பாத்தியா அவ போனாளாம் ஆனா தப்பு பண்ணலையாம், கேட்கிறவன் கேனையனு நினைச்சிட்டாடி உன் பொண்ணு’’

‘‘ஒரே பொண்ணுனு செல்லம் கொடுத்து கெடுத்துவிட்டாச்சு’’

“அதா அப்பா கேட்கிறாருல இங்கேயே சொல்லு’’

‘‘அம்மா புரிஞ்சுக்கோ நான் தப்பு பண்ணல அதையெப்படி அப்பாகிட்ட சொல்றது?’’

“நீ இப்ப தப்புப்பண்ணலனு அவருக்கு நிரூபிச்சுத்தான் ஆகணும் இல்லனா அவரு சொன்னது உண்மையினுதான ஆகும்?’’

‘‘அம்மா அவளுக்கு இரத்தப்போக்கு வந்துடுச்சு வர்ற வழியில அவளால் நடக்க முடியல அங்க பக்கத்துல இருந்த வீட்டுக்கு அழைச்சிட்டு போய் அவளுக்கு எல்லாம் துணிமணி மாத்தி அவளைக் கொண்டு போய்விட்டுவர இவ்வளவு நேரம் போதுமா?’’

‘‘நல்லா கதை சொல்றாடி உன் பொண்ணு’’

‘‘என்னங்க என்பொண்ணு என் பொண்ணுனு தலையில தூக்கிவச்சு ஆடுற நீங்க இப்போ உன் பொண்ணு உன்பொண்ணுனு சொல்றீங்க?’’

“என் பொண்ணா இருந்தா இப்படி கேடு கெட்ட வேலைபார்த்துட்டு வந்திருப்பாளா?”

“ம்க்கூம் அவதான் இவ்வளவு சொல் றாளே இன்னுமா நம்பல’’

“நீஉள்ளபோடி அம்மா நான் நம்பறேன்’’ என்று அவளை அழைத்துப்போனாள் செல்லம்மா.

“உனக்கு நான் சொல்றது இப்ப புரியாது பின்ன ஐயோ அம்மானு புலம்பப்போறவ நீதான்’’ என்று எழுந்து

வெளியே போனார்.

xxx

‘‘வாங்க பெரிய பண்ணை நான் சொன்னது சரிதானே உங்க பொண்ணு நேரத்துக்கு வந்திருக்காதே.’’ என்று சாராயக் கடையில் அமர்ந்திருந்த லிங்கு சாமி சொல்ல ..

“கோபம் தலைக்கேறி யோவ் நீமூடிட்டு ஒருபாட்டில் கொண்டுவா” என்றார்.

“எதுக்கு இப்ப கோபப்படுறீங்க?”

“நம்ம சாதிப்பொண்ணு அந்த கீழ்சாதி நாயிங்ககூட கூட்டு வச்சிக்கிட்டா நாளை நம்ம மானம்போவதோடு நம்ம சாதியும் சாக்கடை ஆகிடுமேனு சொல்றேன்”

“அதுவும் ஊருக்கே நியாயம் சொல்ற பெரியபண்ணை வீட்டுல இப்படின்னு யாராவது சொல்றதுக்குள்ள முந்திக் கணுமேனு சொன்னேன்” என்று தூபம் போட்டான் சாராய வியாபாரி லிங்குசாமி.

ஏற்கனவே கோபத்தில் இருந்த பெரிய பண்ணை ‘‘ஒருவேளை உண்மையாக இருக்குமோ? ஆனால் அவ்வளவு தீர்மான மாக சொல்றாளே மருதாணி அவனுக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லைனு”.

“இவன் சொல்றதிலும் நியாயம் இருக்கி றது நாளை நம்ம குடும்பத்திலிருந்து ஒருத்தி ஓடிப்போனா ஊரே காரித்துப்பும் அதன்பின் நாம் இவ்வளவு கெத்தா எப்படி நடப்பது?”

“இதுக்கு ஒரு முடிவு கட்டியாகணும்” என்று நினைத்தவர் சாராயப் பாட்டிலை எடுத்து கடகடவெனக் குடித்துவிட்டு நேராகக் களத்துமேட்டில் இருந்த கணவனை இழந்த சேரிப்பெண் அருக்காணி வீட்டுக்கு வந்தார்.

அப்போதுதான் தூங்கப் போயிருந்த அருக்காணி கதவை யாரோ தட்டுவது கேட்டு “யாரு” என்று கேட்டாள்.

‘‘நான் தான்டி பெரியபண்ணை கதவைத்தொற” என்று கத்த...

## புனிதப் புத்தகம்

பசித்த மழலைக்கு
பாலின் சாயல்

தூங்கும் மகனுக்கு
தொட்டிலின் சாயல்

விளையாட்டுப் பிள்ளைக்கு
மைதானத்தின் சாயல்

பள்ளிச் சிறுமிக்கு
ஆசிரியையின் சாயல்

பருவப் பெண்ணுக்கு
பாதுகாவலரின் சாயல்

மணமாகிய மகளுக்கு
தோழியின் சாயல்

குழந்தைப் பெற்றவளுக்கு
தாதியின் சாயல்

நோய்வாய்ப்பட்ட கணவனுக்கு
மருத்துவச்சியின் சாயல்

பேத்தியின் பார்வையில்
ஆயாவின் சாயல்

எந்தப் பக்கத்தை
யார் தேடினாலும்
அதே பக்கமாய்
கண நேரத்தில் மாறிவிடும்
புனிதப் புத்தகம்
அம்மா...

**ஐ.தர்மசிங்**
நாகர்கோவில்

இந்த நேரத்தில் இவர் ஏன் வந்தார் என்று தெரியாமல் கதவைத் திறந்தவள்...

''என்னங்க ஐயா இந்த நேரத்தில்? ஏதாவது வேணுமா?''

''நீதான் வேணும்'' என்று அவளை கட்டியணைக்க...

''ஐயோ தப்புங்க ஐயா... விடுங்க'' என்று உதறித்தள்ள...

கீழே விழுந்த பெரிய பண்ணை ''அடியே என்ன கொழுப்பு இருந்தா என்னையே கீழே தள்ளுவது உன்னை என்னை செய்றேன் பாரு''என்று அவளை வலுக்கட்டாயமாக இறுக்கி அணைத்து அவளைக் கட்டிலில் தள்ளினார்.

''ஐயா நான் கஞ்சிக்கு இல்லாட்டியும் இப்படி தப்பு பண்ணி பொழப்பு நடத்த மாட்டேன் என்ன விட்டுருங்க''

''வீட்டுல மகாலட்சுமி மாதிரி அம்மா இருக்காங்க அவங்களைக் கொஞ்சம் நினைச்சுப்பாருங்க, தயவுசெஞ்சு விட்டு ருங்க ஐயா''

''என்னடி ஓவரா சீன்போடுற, எனக்கே அறிவுரை சொல்றியா? ஒழுங்கா வந்துபடு ஒரு பத்து நிமிடம்; வேலையை முடிச்சிட்டுப் போறேன்''

''வேணாங்கய்யா தப்பு''

''இப்ப என்னடி, நீயா வர்றியா இல்ல?''

''தயவு செஞ்சு வெளிய போங்க'' என்று கத்தினாள்.

''என்னடி... நீ சரிப்பட்டு வரமாட்ட'' என்று ஓங்கி அறைவிட அருக்காணி அப்படியே மல்லாந்தாள்.

குடிபோதையில் ஆத்திரமும் கொண்ட பெரியபண்ணை தான் வந்த காரியத்தைச் செயல்படுத்தப் பிணம்போலக் கிடந்தாள் அருக்காணி.

வியர்க்க விறுவிறுக்க அவளைக் கெடுத்து விட்டு எழ போதை தெளிந் திருந்தது. அவிழ்ந்த வேட்டியை எடுத்துக் கட்டிக்கொண்டு சட்டைப்பையில் இருந்த ரூபாய் நோட்டுக்களை அவள்மீது வீசி யெறிந்துவிட்டு நடையைக் கட்டினார் பெரியபண்ணை.

அருக்காணி காட்டுமிருகத்தின் தாக்குதலில் சிக்குண்ட மானைப்போல நிலைகுத்திய விழிகளில் அப்படியே ஆடை கலைந்து கிடப்பதைக்கூட சரிசெய்யத் தோன்றாமல் அப்படியே படுத்திருந்தாள்.

இரவு நடுநிசியில் வந்து கதவைத்தட்டிய பெரிய பண்ணைக்கு மனைவி மரகதம் கதவைத் திறந்துவிட..

அரைபோதையில் வந்த கணவனிடம் எதையும் கேட்க வேண்டாமென அமைதி யாக உள்ளே போனாள்.

''ஏய் சாப்பிட்டியானு கேட்டியாடி நீ பாட்டுக்கு போற?''

''மணி இப்ப என்ன? ஒன்றரை மணி இப்போ வந்துட்டு சாப்பிட்டியானு கேட்கலனு என்கிட்ட கேட்குறீங்க?''

''வேலைக்குப்போற மனுசன்கிட்ட கேட் கலாம் நீங்கதான் குடிக்க போனவருதானே அங்க சாப்பிடாமயா வந்துருப்பீங்கனு கேட்கல''

''என்னடி வரவர எதிர்த்துப்பேசற''

''நான் எங்கங்க எதிர்த்து பேசறேன்? உண்மையைத்தானே சொல்றேன்.

வயசுப்புள்ள இருக்கிற வீடுங்கறதையே மறந்துட்டு இப்படி கண்ட இடங்களுக்குப் போயிட்டு இராவுல வந்து சண்டை வளர்க்குறீங்க''

"நான் ஆம்பளைடி நாலு இடத்துக்குப் போய்ட்டு வருவேன் அதுக்காக நீ கேள்வி கேட்பியா?"

''ஐயோ சாமி ஆளவிடுங்க நான் கேள்வியே கேட்கல; நீங்க தான் போன வளைக் கூப்பிட்டு பேசுறீங்க"

"இப்ப என்ன சொல்ற, சோறு இருக்கா இல்லையா?"

''நீங்க வரலைன்னு இப்பத்தான் தண்ணி ஊத்தி வச்சேன்"

''ஏதோ முதல்ல கொண்டுவா பசி வயித்தைக்கிள்ளுது"

"வெறும்வயித்துல சாராயத்தைக் குடிச்சா பின்ன என்னபண்ணும்?"

"சரிதான் போடி எடுத்துவா முதலில்" என்று அப்படியே உட்கார ...

"கையைக்கழுவுங்க" என்று தண்ணீரைக் கொடுக்க இருந்த இடத்திலேயே கையைக் கழுவிவிட்டு அப்பிடியே குண்டானில் கையைவிட்டுக் கரைத்து ஒரேமூச்சில் குடித்து முடிக்க ...

"என்னங்க அவசரம், அதைப்பொறுமையா குடிச்சா என்ன?" என்று மரகதம் கேட்டதுகூட காதில் வாங்காமல் அப்படியே அதே இடத்தில் சாய்ந்தார்.

இந்த மனுசனை எழுப்ப முடியாது காலைல போதைதெளிந்து எழும்பட்டு மெனப் பாத்திரத்தை எடுத்து ஓரமாக வைத்துவிட்டுப் படுக்கப்போனாள்.

xxx

பெரியபண்ணை விடிந்தது கூட தெரியாமல் தூங்க ...

வேலைக்காரன் மணி ஓடிவந்து களத்துமேட்டில் அருக்காணி தூக்குப் போட்டுக் கொண்டாள் என்று செய்தி சொல்ல பதறிவிழித்த பெரிய பண்ணை ''அட கூறுகெட்டவ இப்ப என்ன நடந்துடுச்சுனு இப்படி போயிட்டா, சனியன் தொலையட்டும்"

"போகும்போது எதுவும் பிரச்சினையைக் கிளப்பாம போனாளா இல்லை?" என்று நினைத்தமாத்திரத்தில்... எழுந்து சட்டையை மாற்றிக்கொண்டு தனது புல்லட்டை எடுத்துக்கொண்டு விரைந்தார்.

அங்கே ஏற்கனவே நூறு பேருக்கு மேல் குவிந்திருக்கப் பிணத்தை இறக்குவதற்குத் தயங்கிக்கொண்டு நின்றவர்களை விலக்கி உள்ளே போனார்.

"என்னய்யா பாத்துட்டு இருக்கீங்க? முதல்ல பொணத்தை இறக்குங்க"

''இல்லைங்க ஐயா போலீஸ்ல பின்னாடி பிரச்சினை வரும்னு.." என்று ஒருவர் இழுக்க..

"நல்ல ஆளுய்யா அதுக்கு அவங்க வரும்வரை தொங்க விடுவீர்களா? அவங்க வந்தா நான் பேசிக்கறேன் முதல்ல இறக்குங்க'' என்று சொல்ல இருவர் கட்டிலைப்போட்டு ஏறி அவளை இறக்கிக் கட்டிலில் கிடத்த இரவு வரும்போது மறந்துவிட்டு போன விலையுயர்ந்த தனது கடிகாரம் கீழே கிடப்பதைப்பார்த்து அதிர்ச்சியானார்.

அதனைக் குனிவதைப்போல தோளில்

கிடந்த துண்டால் மூடி எடுக்கவும் போலீஸ் வரவும் சரியாக இருந்தது.

"வணக்கம் சார் வாங்க ஏன் இவ்வளவு நேரம்?"

"ஏன் சார் அங்கிருந்து வரவேணாமா ரோட்டு மேலயா இருக்கு?" "வயல்காட்டுல இருக்க வீட்டுக்கு வந்து சேர வேண்டாமா?"

''சரி எங்க பிணம்? தூக்குல தொங்குதுனு சொன்னாங்க இங்கே எதுவும் காணோம்.''

"சார் அங்க பாருங்க கீழ கிடத்தி வச்சிருக்கோம்"

"என்ன சார் நீங்க பிணத்தை நாங்க வராம ஏன் இறக்குனீங்க?"

"நல்லா இருக்கே, என்ன சொல்றீங்க நீங்க" "ஊருக்குள் ஒரு சாவு விழுந்திருக்கு அதை அப்படியே போட்டுட்டு இருப் பாங்களா ?"

''இல்லை சார் இந்த பொண்ணு தற்கொலை பண்ணிக்கிச்சா இல்லை - யாராவது கொலை பண்ணிட்டாங்களானு போஸ்ட் மார்ட்டம் பண்ணுறதுக்கு முன்னாடி மத்தவங்க எப்படி தொடலாம்?"

"என்னது போஸ்ட்மார்ட்டமா?"

"என்ன சார் நீங்க அந்த சிறுக்கிமவ புருசன் செத்த துக்கத்துல தூக்குப்போட்டு செத்துருக்கா"

"அவகிட்ட என்ன சொத்து இருக்குனு இவளை கொலை செய்யப்போறாங்க.?"

"நீங்க வேற சார் நம்ம கிராமத்துல போலீஸ் கேசுனு யாரு போயிருக்கா? எல்லாம் பஞ்சாயத்துல முடிவு பண்றது தானே.."

"ஏதோ புருசனைப் பறிக்கொடுத்தானு களத்துமேட்டுல இடம் கொடுத்து தங்க வச்சோம், இங்க உள்ள வேலை பாத்துட்டு இருந்தா இப்படி அநியாயமா தூக்கு போட்டுட்டா... இவளை யாருங்க கொல்லப்போறா..."

"அப்படியில்லை சார்... சின்ன வயசு பொண்ணா தனியா வேற இருந்திருக்கா யாராவது தப்பா நடந்து யாராவது தூக்கிவிட்டுருந்தா"

''ச்சீ ச்சீ இந்த சேரிக்காரியை எவன் தொடுவான் இங்க இருக்கவன் சாதிக்காரனுக, அவ்வளவு கேவலமா போகமாட்டானுக..

"நீங்க ஒன்னும் கவலைப்பட வேண்டாம். நாங்களே அடக்கம் பண்ணிடுறோம்"

''இல்லை அது வந்து... யாராவது மேலிடத்துக்கு தகவல் கொடுத்தா....?"

"இங்கு யாரும் தகவல் கொடுக்குறவங்க இல்லை"

"ஏப்பா யாராவது தகவல் கொடுக்க ணும்னு நினைக்கிறீங்களா"

"தாராளமாக சொல்லுங்கப்பா... அருக் காணியைக் கீறிகிழிச்சு தரச்சொல்றேன்"

எல்லோரும் ஒருசேர ''வேண்டாங் கய்யா மகராசி யாருகிட்டயும் நிமிர்ந்து பேசமாட்டா... அவளை அப்படி பண்ணிடா தீங்க' என்று சேரிப்பொண்ணு ஒருத்தி சொல்ல...

"இங்க பாருங்க சார் பாவம் அவளே மனவுளைச்சல்ல போயிருக்கா அவளை மறுபடி கஷ்டப் படுத்தணுமா?"

“சரி ஊரே சொல்றதால என்ன செய்ய முடியும்? சரி சார் நீங்களே அடக்கம் பண்ணிடுங்க”

“ஒரு கையெழுத்து மட்டும் போட்டு ருங்க‘ என்று போலீசார் வாங்கிக்கொண்டு கிளம்ப அப்பாடா என்று பெருமூச்சுவிட்டார் பெரியபண்ணை.

தான் நினைச்ச மாதிரி எந்த பிரச்சனையும் நடக்காததால் அவளைச் சுடுகாட்டுக்கு கைப்பாடையாகத் தூக்கி வைத்து கொண்டு போய் எரித்துவிட்டு சாராயக் கடைக்குப்போய் உட்கார்ந்தார்.

xxxxx

“என்ன பெரியபண்ணை இன்னிக்கு அந்த களத்துமேட்டில் தனியா இருந்த அருக்காணியை எவனோ தூக்கி விட்டுட் டான்போல போலீசுலாம் வந்துச்சாமே..?”

“ஆமா லிங்கு அந்த கூறுகெட்டவ இப்படி பண்ணியிருக்கா. ஆமா எவனோ தூக்கிவிட்டுட்டான்னு எப்படி சொல்ற?”

“பின்ன என்ன பெரியபண்ணை இந்த வயசுலயும் தளதளன்னு இருந்தாள்ல. எவனோ கைவச்சிருப்பான். அதான் தூக்குல தொங்கியிருப்பா... இதுக்கு சிஐடியா வைக்க...”

“அவன் நல்ல நேரம் நீங்க தலை யிட்டு அவனைக் காப்பாத்திட்டீங்க. மாட்டியிருக்கணும் நானே செருப்பால் அடிச்சிருப்பேன்”

‘சரி சரி இப்போ அந்தக்கதை எதுக்கு நீ போய் ஒருபாட்டில் கொண்டுவா நேரங்காலத்துல வீட்டுக்குப்போக..‘.என்று அவசரப்படுத்த...

“என்ன இன்னிக்கு அவசரம்?”

“காலையிலேயே கிளம்பி வந்தது அதான்” என்று இழுக்க...

“நான் சொன்னது ஞாபகம் இருக்கா?” நம்ம பொண்ணும் நாளைக்கு எவன் கிட்டயாவது போயிட்டு வந்தா நாமதான் தூக்குல தொங்கணும் கொஞ்சம் கண்டிச்சு வையுங்க சொல்லிப்புட்டேன்” என்று உரு ஏற்ற..

பெரியபண்ணைக்கு அருக்காணி தூக்கில் தொங்கிய காட்சி தன்மகள் மருதாணியாகத் தெரிய.. வெறியேறியது

பாதிகுடித்தும் குடிக்காமலும் வைத்தி ருந்த சாராயப்பாட்டிலை தூக்கிப் போட்டு உடைத்துவிட்டு நேராக வீட்டுக்கு வந்தார் பெரியபண்ணை.

அவருக்காக வாசலில் நின்றுகொண்டி ருந்த மரகதம் “என்ன எல்லா வேலையும் நல்லபடியா முடிஞ்சதா?” என்று கேட்டாள்.

‘‘நான் என்ன கல்யாணத்துக்கு போனேன் கருமாதிக்குத்தானே போனேன்” என்றார்

“தெரியும் தெரியும்” என்று முனகிக் கொண்டே சமையலறைக்குள்ளே நுழைந்தாள்.

ஏற்கனவே லிங்குச்சாமி குழப்பிவிட மரகதம் வேறு கேள்வி கேட்க.. சூடான பெரியபண்ணை சாப்பிடாமல் போய்ப்படுத்தார்.

இரவு பன்னிரண்டு மணி

தூக்கம் வராமல் எழுந்து தண்ணிக் குடிக்க போனவர் நடுஹாலில் படுத்துக் கொண்டிருந்த மருதாணியைப் பார்க்க அச்சு அசலாக அருக்காணியைப்போல தெரிய... கண்களைக் கசக்கிப்பார்த்தார்.

இப்போது மருதாணி அருக்காணியைப் போல இடைவிடாது சிரிக்க...

லிங்குசாமி சொன்னதுபோல் நடந்து விடுமோ? என்று நினைத்து தலையணையை எடுத்து மருதாணியைக் கொலைசெய்ய ஆரம்பித்தார்.

மருதாணியின் அலறல் சத்தங்கேட்டுத் திடுக்கிட்டு விழித்த மரகதம் ஓடிவந்து ''என்னங்க பண்றீங்க அவளை?'' எதுக்குங்க கொல்லப்பார்க்குறீங்க?

''நீ சும்மாஇரு சாதிகெட்ட அந்த சேரிப்பையனோடு சேர்ந்து சுத்துற இவ இருந்தா நம்ம மானம்தான் போகும் இவளை இன்னிக்கே முடிச்சிடுறேன்'' என்று தலையணையை முகத்தில் வைத்து அழுத்தினார்.

''விட்டுருங்க அவ எந்த தப்பும் பண்ணல, யாரோ சொல்றதைக் கேட்டு நம்ம பொண்ணைக் கொன்னுடாதீங்க'' என்று கெஞ்சினாள்.

பெரியபண்ணை மரகதத்தைத் தள்ளி விட அவள் சுவற்றில் மோதி மண்டை உடைந்து இரத்தம் வழிய ஆரம்பித்தது

மீண்டும் எழுந்துவந்து கெஞ்சினாள் அவர் விடுவதாக இல்லை மருதாணியின் கால் துடித்து அடங்கப்போவதைக் கண்ட மரகதம் அருகில் இருந்த இரவு விளக்கை எடுத்து பெரியபண்ணையையின் மண்டையில் ஒரே அடியாக அடிக்க அப்படியே கவிழ்ந்து விழுந்தார் பெரிய பண்ணை.

மருதாணி எழுந்து மரகதத்தின் பின்னால் வந்து நின்றுகொண்டாள்.

''என்னடா சாதிசாதினு தூக்கிவச்சு ஆடுற?''

"என்பொண்ணு படிக்கிற பிள்ளைகூட பேசினா தப்பு, பழகினா தப்புன்னு சொல்ற நாயி நீ, உன் உடம்புப்பசிக்கு எந்த சாதி கீழ்சாதினு சொல்லுறியோ அவளைக் கெடுத்து அவ சாவுக்குக் காரணமாயிட்டு உன் சாதியைத் தூக்கிப்பிடிக்க போறியா?"


"என்னடா இவளுக்கு எப்படி தெரியும்னு பாக்குறியா?'' நேத்து உன் முதுகுல நகக்கீறல்கள் இருக்கும்போதே கொஞ்சம் சந்தேகம் இருந்தது"

"காலைல வேலைக்காரன் சொன்னதும் விழுந்தடிச்சுப் போகும்போதே நினைச்சேன் அவ சாவுக்கும் உனக்கும் ஏதோ தொடர்புனு அது இப்போ நிரூபணம் ஆயிடுச்சு."

"ஆட்டைக்கடிச்சு மாட்டைக்கடிச்சு மனிதனைக்கடிச்ச கதையா எந்தத் தப்பும் செய்யாத எம்பொண்ணுமேல கைவைக்கத் துணிஞ்சிட்ட''

"உன்னை மாதிரி மிருகம், இருக்கறதுக்கு இல்லாமலே இருக்கலாம் இந்த சமூகம் நல்லா இருக்கும்.'' என்று அவர் கண்முன்னே தாலியைக்கழற்றி வைத்துவிட்டு ஓங்கி ஒருஅடி போட்டாள் பெரியபண்ணை அப்படியே இரத்தம் கொட்டக்கொட்ட மூச்சை விட்டுக்கொண்டு இருந்தார்.

ஆணவத்தால் கொலை செய்யத் துணிந்த பெரியபண்ணையை ஆணவக் கொலை செய்து பாரதிப் பெண்ணாய் நிமிர்ந்து நின்றாள் மரகதம்.



# எனை ஆட்கொண்ட தமிழே!

தாய்மொழித் தமிழ் என்பேன்…
என் வாய்மொழி முத்தென்பேன்…
தாய்மொழித் தமிழ் என்பேன்…
என் வாய்மொழி முத்தென்பேன்…
வார்த்தைகளைக் கருத்தரித்து…
கவியாகப் பிரசவித்து…
எனைக் காட்டிய தமிழே…

உன் பெருமை நான் சொல்ல…
உன்னிடமே சொல்லெடுத்து…
கவி வடித்தேன் அற்புதமே!

உயிர் மெய் சொல்லெடுத்து
மொத்தமாகக் கொட்டினாலும்
திருப்தி காணாது மனசு…
தமிழே நீ அழகு…
உன் சொல்லழகு…
உச்சரிப்போ பேரழகு…

உயிரும் மெய்யும் உயிர் மெய்யும்
எடுத்து வந்தாய்…
வல்லினம் மெல்லினம்
இடையினம் சுமந்து வந்தாய்…
நெடிலோடு குறிலாக…
இலக்கண இலக்கியம்
கற்றுத் தந்தாய்…
உவமானம் உவமேயம்
சொல்லித் தந்தாய்…

கற்றேன் எல்லாம்
ஆனாலும்!
பெறவில்லை முழுமை…
காணவில்லை திருப்தி உன்னில் நான்…
கற்றது கையளவு…
பாதி மறந்தும் மீதி மறக்காமலும்…
ஏதோ கொஞ்சம் நினைவில் நிற்க…

எழுதுகின்றேன் ஏதோ…
எழுதுகின்றேன் ஏதேதோ…
வடிக்கின்றேன் கவி என்று…
கற்க வேண்டும் நிறைய
இன்னும் இன்னும் உன்னால் நான்….

பெறவில்லை புலமை…
அடையவில்லை பெருமை…
நேசிக்கும் தமிழே…
மன்னிப்பாயா எனை…
பிழையெதும் உன்னில்
காணவில்லை நான்…
பிழை வரலாம் என்னிடமோ…

முழுதாய்க் கற்றவர்
யாருமில்லை இங்கு…
சொல்கின்றேன் அதனாலேயே…
ஏற்றுக்கொள் என் தமிழே…
சொல்லித்தா பிழையிருந்தால்…
நான் ஏற்பேன் பக்குவமாய்…

உச்சரிக்கின்றேன் நித்தம் உன்னை…
நேசிக்கின்றேன் மூச்சாய் உன்னை…

கவியாய் கதையாய் கட்டுரையாய்
பல பரிணாமங்களில் உன்னை
வலம் வர செய்கின்றேன்…
அதில் நான் வளம் பெறுகின்றேன் …
எனை ஆட்கொண்ட தமிழே நீ…

றிஸ்வானா ஜெய்னுலாப்தீன்
கண்டி, இலங்கை

# அவர்கள் அப்படித்தான்...!

**– மரீனா இல்யாஸ் ஷாபீ**

அவள் வீட்டுக்கு முதன்முறையாகச் செல்கிறேன். எனக்கு அவளை அவ்வளவாகத் தெரியாது. ஒருநாள் 'கவுண்டன்' சூப்பர்மார்கெட்டில் 'ஷாப்பிங்' செய்து கொண்டிருக்கும் போது, யாரோ தமிழில் பேசும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன் .

"நியூ ஸிலாந்தில் ஒரு டாலர் என்றால்... நம்ம ஊரில் எவ்வளவு...?" என்று அவள் தன் கணவரிடம் விசாரித்துக் கொண்டிருக்கும் போதே புரிந்தது - அவள் புதிதாக இங்கு வைத்திருப்பவள் என்று.

பக்கத்தில் நான்கு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன். நான் திரும்பிப் பார்த்தபோது, முதலில் சங்கடப் பட்டாள். பின்னர் சமாளித்துக்கொண்டு பக்கத்தில் வந்து, நீங்களும் தமிழ் நாடா என்று கேட்கிறாள்.

"இலங்கை ..." என்றேன்.

"நீங்கள் பேசுங்க ; நான் 'லிஸ்ட்'டைப் பார்த்து சாமான்களை வாங்கிறேன்..." என்று புன்னகைத்தவாறே தன் மகனின் கையைப் பிடித்துக்கொண்டு கடந்து செல்கிறார் அவளது கணவன்.

நாங்கள் இருவரும் சில நிமிடங்கள் பேசினோம். அவள் இருக்கும் தெருவுக்கு அடுத்த தெருவில் தான் என் வீடு இருக்கிறது என்றதும், சட்டென்று நெருக்கமாகி விட்டாள். உடனேயே தொலை பேசி இலக்கத்தையும் தந்தாள். எனது இலக்கத்தையும் கேட்டு வாங்கிக் கொண்டாள். அவளது பெயர் காவியா.

அதன் பிறகு பல தடவைகள் இதே 'கவுண்டன் சூப்பர்மார்கெட்'டில் எதேச்சையாகச் சந்தித்துப் பேசிக் கொண்டோம். நேரம் கிடைக்கும் போது வீட்டுக்கு வாருங்கள் என்று ஒவ்வொரு முறையும் நான் சொல்வேன். பதிலுக்கு ஒருநாள் கூட அவள் என்னை அழைத்ததில்லை. ஆனால், இடைக்கிடை தொலைபேசியில் நலம் விசாரித்துக் கொள்வோம்.

ஐந்து வருடப் பழக்கத்தில், இன்றுதான் முதன் முதலாக அவள் வீட்டுக் கதவைத் தட்டுகிறேன். இரண்டு வாரத்துக்கும் மேலாக சுகயீனமுற்று இருப்பதாக அவள் செய்தி அனுப்பி இருந்தாள். அதனால், வீட்டில் கொஞ்சம் சாப்பாடு சமைத்து கொடுத்துவிட்டு வரச் சென்றேன்...

கதவைத் திறந்த காவியாவைப் பார்க்க அதிர்ச்சியாக இருந்தது. அவள் உடம்பு இளைத்துப் போயிருந்தது. முகம் வெளிறி, வாடியிருந்தது.

வற்புறுத்தி உள்ளே அழைத்தாள். உள்ளே போன எனக்கு சங்கடமாக இருந்தது. கூடத்தில் யாரோ தலைமுதல் கால்வரை போர்த்திக் கொண்டு படுத்திருந்தார். அதனால், அவள் என்னை அறைக்குள் அழைத்துப் போய் கட்டிலில் அமரச் செய்தாள்...

உடம்புக்கு என்ன என்று விசாரித்தேன். கண்களில் சட்டென்று கண்ணீர்.

வாஞ்சையுடன் அவள் கைகளைப்பற்றிக் கொள்கிறேன்... அந்தக் கைகள் கரடு முரடாக இருந்தன. நான் கேள்விக் குறியுடன் அவளைப் பார்க்கிறேன். அவள் தன் பாதங்களை உயர்த்தி என்னிடம் காட்டுகிறாள். இரண்டு பாதங்களும் வீங்கி இருந்தன... ஏன் இப்படி என்று கேட்பதற்குத் தயக்கமாக இருந்தது.

அவளே சொல்ல ஆரம்பித்தாள்... "காலையில் ஒரு 'பேக்டரி'யில் வேலைக்குப் போகிறேன்; எட்டு மணித்தியாலங்கள் நின்றுகொண்டே தான் இருக்க வேண்டும்; இரவில் 'கிளீனிங் ஜாப்' செய்கிறேன். வேலைத் தளங்கள் மூடப்பட்டதன் பின்பு, அங்கே சென்று தளபாடங்களை தூசி தட்டி 'கார்பெட்' டை 'வெக்கியூம்' பண்ணி, மலசலகூடங்களையும் கழுவ வேண்டும். வீட்டுக்கு வந்தால் ஆறு பேருக்கு சமைத்துப் போடவேண்டும்... முதுகு வலி தாங்க முடியவில்லை என்றாள்.

நான் சட்டென்று இடைமறித்தேன். "நீங்கள், கணவர், மகன் என்று மூன்று பேர் தானே இருக்கிறீர்கள்...? ஆறு பேருக்கு ஏன் சமைக்கிறீங்க?"

அடுக்குமாடித் தொடர் ஒன்றின் கீழ் பகுதியில் தான் அவள் வசிக்கிறாள். அவள் வீட்டில் இரண்டு அறைகள். ஒரு சிறிய குடும்பத்துக்கு அளவான வீடுதான். ஆனால், ஆளை விழுங்கும் வாடகை. இந்த நாட்டில் மாத வாடகை இல்லை. வாரா வாரம் வீட்டுக் கூலி கட்ட வேண்டும்.

"எங்க நாட்டு (Sri lanka) க் காசுப்படி பார்த்தா ஒரு வாரம் அம்பதாயிரம் வாடகை; ஒரு மாசத்துக்கு ரெண்டு லட்சம்... கரண்டு பில்லு, தண்ணி பில்லு, இன்டர்நெட் பில்லு... இன்னும் எவ்வளவு செலவு இருக்கு...?"அவள் தொடர்கிறாள்.

# நோக்கும் திசையெல்லாம்

## இராம சு சிவகுமரன்

நோக்கும் இடமெல்லாம் நூதன வளர்ச்சி
நொறுங்கிப் போனது மனித உணர்ச்சி
வெந்து தணியட்டும் விஞ்ஞான நீட்சி இந்த
விபரீத வேடிக்கை கற்பனையின் சூழ்ச்சி

விண்வெளி எல்லாம் வென்று முடித்தான்
நுண்கிருமி கண்டு பயந்து தவித்தான்
காணும் இடமெல்லாம் கதிர் வீச்சு
கஞ்சி தருகின்ற கதிருக்கு என்னாச்சு

அந்தம் அறிந்திட முடியாது ஆதியின நிலையும்
அப்படித்தான் தேடும் அறிவைத்
தடுத்து நிறுத்து இல்லை உன்
அறிவே உன்னை தீயிட்டுக் கொளுத்தும் .

அளவிற்கு மீறினால் அமுதமும் நஞ்சு
அறிவுக்கும் அச்சொல் அழகாய்ப் பொருந்தும்
நிலவிற்குப் போகும் பயணங்கள் எதற்கு
நிலத்தை முறையாய் பயன்படுத்து அதற்கு

மண்ணையும் நீரையும் காத்திட வேண்டும்
மனங்களில் எல்லாம் கருத்திட வேண்டும்
எண்ணங்களில் எல்லாம் அமைதி விதையை
என்றும் என்றும் விதைத்திட வேண்டும்

வயிற்றுக்கு மீறி உண்ணவும் வேண்டாம்
வாழ்க்கைக்கு மீறி எண்ணவும் வேண்டாம்
இரண்டும் மனிதனை அழித்து விடும்
இயற்கை உணர்வுகளைத் தழைக்க விடு

இறப்பிற்குப்பின் என்னவென்று
எதற்கு செய்யனும் ஆராய்ச்சி
இருக்கும் வாழ்வை வாழ
மறந்து எதையோ தேடுது நம்புத்தி

வாழ்தல் இனிது என்பதை உணர்ந்தால்
வழிகள் எல்லாம் வசந்த மயம்
ஆழ்ந்து இரசித்திட கற்றுக் கொண்டால்
அனைத்தும் இங்கே அழகு மையம்

பார்த்து இரசித்திட பனித் துளியும்
பருகி இரசித்திட தேன் துளியும்
இறைவன் கொடுத்தான் தனித்தனியே
இதுதான் வாழ்வை உணர்த்தும் வழி வகையே

நோக்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்த
காக்கும் சக்தி கடவுளென உணர்ந்தால்
ஆக்கம் என்பது அதுவாய் நடக்கும்
அனைத்து உலகிலும் அமைதி தழைக்கும்...

இரண்டு அறைகள் கொண்ட ஒரு சிறிய வீட்டில் கணவன், மனைவி, மகன் மூவரும் ஒரே அறையில் தூங்குகிறார்கள்.

## முளைத்துவிடு மண்ணிலே மீண்டும்

விருட்சமாய் நீயும்
வீதியிலே நின்றிருந்தாய்
விதி செய்த சதியாலே
விறகாகிப் போனாயோ

இரைதேடிச் சென்ற பறவை
இடையில் திரும்பினால்
வசிக்க இடமில்லாமல்
வாடித்தான் நிற்குமே

கத்திரிக்காய் மாங்காய்
கடை வைக்கும் பாட்டி
கலங்கித்தான் போவாளே
கனத்த இதயமாய்

உழைத்த களைப்பிலே
உறங்க வந்திடுவோர்
உன் நிழலைக் காணாது
உள்ளம் சோர்ந்திடுவர்

மழையைத் தருவித்த உன்னை
மண்ணில் வெட்டி சாய்த்தனரே
மன்னித்துவிடு மனிதர்களை
முளைத்துவிடு மண்ணிலே மீண்டும்.

**ஜனனிகுமார்**

அடுத்த அறையில் வாடகைக்கு இரண்டு நபர்களை வைத்திருந்தாள். சின்னதாய் ஒரு 'ஹோல்'. அதிலும் ஒரு கட்டில்... குறைந்த வாடகைக்கு கூடத்திலும் ஒருவர் குடி இருப்பதாக கூறுகிறாள். அவர்கள் தரும் வாடகைப் பணத்தைச் சேர்த்து ஊருக்கு அனுப்புவதாகச் சொன்னாள்.

நேரத்துக்கு சாப்பிடவும் நிம்மதியாகத் தூங்கவும் முடியாமல் எதற்கு இப்படி ஒரு வாழ்க்கை தெரியுமா? ஊரில் கல்யாணத்துக்கு இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள். தாயின் இருதய மாற்றுச் சிகிச்சைக்கு பணம் அனுப்ப வேண்டும். தன் கல்யாணத்துக்காக தந்தை பட்ட கடனை அடைக்க வேண்டும்; தம்பிக்கு ஓர் மோட்டார் சைக்கிள் வாங்கப் பணம் அனுப்ப வேண்டும்...

கணவரின் குடும்பத்தில் அண்ணன் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காக காத்திருக்கிறார். விதவையான அக்காவும், அவளது மகளும் கணவரின் பொறுப்பில் தான் இருக்கிறார்கள்; மூட்டுவாதத்தில் அவதிப்படும் அம்மாவின் வைத்தியத்துக்கு தொடர்ந்தும் பணம் அனுப்ப வேண்டும். அவளின் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது...

இடையில் அவளுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது. 'தம்பி தான் 'லைன்'ல இருக்கான். பேசலாமா ?' என்பது போல அவள் என்னைப் பார்க்கிறாள்.

"நீங்க பேசுங்க..." என்று கூறிவிட்டு எழுந்து நின்ற என் தோள்களை அழுத்தி மீண்டும் உட்கார வைத்துவிட்டுப் பேசுகிறாள். மறுமுனையில் அவள் தம்பி பேசுவது எனக்கும் துல்லியமாகக் கேட்டது.

"அக்கா... எனக்கு 'பைக்' வேண்டாம். நாம கார் வாங்கினா, அப்பாக்கும் வசதியா

இருக்கும். 'ஹார்ட் சா ஜெரி' பண்ணினா அவருக்கு 'செக் அப் பண்ண காரிலேயே கூட்டிப் போலாம்; அக்காமாருக்கும் பெரிய எடத்துல மாப்புள பாக்கலாம்...' அவன் தன் கனவுகளை அடுக்கிக் கொண்டே போனான்...

அவன் கனவுகளைக் கலைக்க மனமின்றி அவள் மௌனமாகப் புன்னகைத்து விட்டு, பிறகு பேசுவதாகத் தொலைபேசியைத் துண்டித்தாள். எனக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

'வெளிநாட்டு வாழ்க்கை என்பது சொர்க்கம் போன்றது; சொகுசு வாழ்க்கை, சொல்லில் வடிக்க முடியாத இன்பம், கைநிறையக் காசு, கஷ்டம், கவலை, துன்பம், துயரம் என்ற சொற்களுக்கு அப்பாற்பட்ட அனுபவங்கள்...' உள்நாட்டில் வாழும் பலரின் கற்பனை இப்படித் தான் இருக்கிறது வெளிநாட்டு வாழ்க்கையை பற்றி...! நாங்கள் இருட்டில் வாழும் வாழ்க்கை பற்றி பலருக்கு தெரியாது. தெரிந்து கொள்ள அக்கறை காட்டுவதும் இல்லை.

"டீ சாப்பிடுறீங்களா ...?"அவள் என் மௌனத்தைக் கலைக்கிறாள்.

"நேரமில்லை" என்று நான் அவசரமாக எழுந்து நிற்கிறேன்.

''டீச்சருக்கு 'நைட்டு'ல என்ன வேலை...?" அவள் குறும்புடன் புன்னகைக் கிறாள் .

நானும் இரவு நேர 'டியூசன்' வகுப்பு நடத்துகிறேன் என்று சொன்னபோது அவள் புன்னகை மறைந்து கண்கள் விரிகின்றன. முப்பது வருட வெளிநாட்டு வாழ்க்கையில் உங்களுக்கும் இன்னும் பொறுப்புகள் முடியவில்லையா? என்று அவள் கண்கள் கேட்பது புரிந்தது...

## அசைவுகளின் இசைவு

எழுபது எண்பதுகளிலெல்லாம்
காலைப் பொழுதில்
பள்ளிக்குச் செல்கையிலோ
அல்லது
மாலையில் வீடு திரும்புகையிலோ
திடீரென மழை வந்துவிட்டால்
அருகிலிருக்கும் தோட்டத்தில்
அடைக்கலமாகிவிடுவோம்

ஆனாலும்,
சொல்லிக் கொள்ளும்படியாக
தோட்டங்கள் அப்படியொன்றும்
அருகருகே இல்லைதான்

அந்நேரங்களில்... புத்தகப் பையை
நெஞ்சோடு அணைத்துப் பிடித்தபடி
குனிந்துகொண்டே
ஓட்டமும் நடையுமாக
மழையில் நனையாமல்
புத்தகங்களைப்
பொத்திப் பாதுகாப்போம்

அப்படியாக அன்றென்னால்
பாதுகாக்கப்பட்ட வார்த்தைகள்தான்
இன்றென் ஆறாம் விரல்
அசைகையிலெல்லாம்
கவி வரிகளுக்குள்
கருத்தாய் வந்தமைகின்றன

நீங்கள் உங்களின்
ஆறாம்விரலினை உபயோகதினின்று
விலக்கி வைத்திருந்தீர்களானால்
சற்றும் தாமதிக்காமல்
இப்போதே அசைத்துப் பாருங்கள்

அங்கே...
சில பல வார்த்தைகள்
உங்களது அசைவுகளுக்காக
இசைவுடன்
காத்திருக்கக் கூடும்

இப்புதிய வருடத்தில்
ஒரு புதிய அவதாரம்
உங்களுக்குள் ஊற்றெடுக்கக் கூடும்

- வானதி சந்திரசேகரன்

அவள் தோளில் தட்டிவிட்டு மெளன மாக வெளியேறுகிறேன். இன்னும் மூன்று வாரத்துக்குள் பள்ளித் தோழியின் மகளின் திருமணத்துக்கு பத்து லட்சம் அனுப்ப வேண்டும் என்று மனம் கணக்குப் போட ஆரம்பித்தது.

தோழி பரீதாவின் கணவன் விபத்தொன்றில் சிக்கி, வேலைக்குச் செல்ல முடியாத நிலையில் இருப்பதாகவும், அவளின் வருமானத்தை மட்டும் நம்பி மகளின் திருமணத்தை நடத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் சொல்லி அவள் தொலைபேசியில் பல தடவை அழுதிருக்கிறாள். பரீதாவுக்கு உதவும் நோக்கிலேயே மேலதிக வகுப்புக்கள் நடாத்தி, கொஞ்சம் கூடுதலாகக் காசு உழைக்க வேண்டிய நிலை .

யோசித்தவாறே கால்கள் வேகமாக நடந்தன... வீட்டை நெருங்கும்போது, பழுதடைந்த நிலையில் நிறுத்தி வைக்கப் பட்ட கணவரின் கார் கண்ணில் பட்டது.

அதைத்திருத்துவதற்கென்று ஒவ்வொரு முறை பணம் சேர்க்கும் போதும், ஏதாவது ஒரு விண்ணப்பம் வந்து சேரும். அதனால், திருத்த வேலைகள் பின்தள்ளப்படும்.

பல மாதங்களாக அவர் பஸ்ஸில்தான் வேலைக்குப் போய் வருகிறார்... பொதுப் போக்குவரத்துச் சேவைகள் இங்கு குறைவாக இருப்பதால், அவர் மிகவும் தாமதித்தே வீடு வந்து சேர்கிறார். அண்மையில் முட்டுக்காலில் சத்திர சிகிச்சை செய்துகொண்ட அவருக்கு பஸ் பயணம் சிரமமாகத்தான் இருக்கிறது. ஆனால், ஊருக்கும் உறவுகளுக்கும் அதைச் சொல்லிப் புரிய வைக்க முடியாது...

பெருமூச்சுடன் வீட்டுக்குள் நுழைய முற் படும்போது, 'ஸாலிஹா...' என்று பலவீனமான ஒரு குரல் அவள் முதுகுக்குப் பின்னால் இருந்து ஒலித்தது. கணவர் ஷிஹார் நிலை குலைந்து விழப்போன நிலையில், ஓடிப்போய் அவரைத் தாங்கிப் பிடித்து வீட்டுக்குள் உட்காரவைத்து விட்டு, சீனி கொஞ்சம் எடுத்து அவர் வாயில் ஊட்டுகிறேன். சர்க்கரை வியாதிக்ககாரரான அவருக்கு, சர்க்கரை குறையும் போது இப்படி மயக்கம் வருவது எனக்கு நன்றாகத் தெரியும்.

"பகல் சாப்பிடல்லையா...?" அவரது சாப்பாட்டுப் பெட்டியைத் திறந்து பார்த்துவிட்டுக் கேட்கிறேன்.

''கொஞ்சம் பிசியா இருந்தேன்...'' அவர் புன்னகைக்க முயன்று தோற்றுப் போகிறார். சமைத்து வைத்திருந்த உணவை 'மைக்ரோவேவ்' வில் சுடவைத்து அவருக்குப் பரிமாறி முடிக்கையில், எனது கைத்தொலைபேசி சிணுங்கி, மாலை வகுப்பு ஆரம்பமாவதை நினைவு படுத்தியது.

களைப்பை மறைப்பதற்கு முகம், கை கால் கழுவி, 'கம்ப்யூட்டர்' முன்பு உட்காரும்போது 'ஜூம்' வகுப்புக்கு நேரம் சரியாக இருந்தது...

வகுப்பு நடாத்தும் போது, தூரத்து உறவுக்காரர் ஒருவர் தொலைபேசியில் அழைக்க, அதை நான் துண்டித்து விட்டேன். மீண்டும் மீண்டும் அவர் அழைப்பெடுத்து தொந்தரவு செய்தபோது, தொலைபேசியை மூடி ஓரமாக வைத்து விட்டு, வகுப்பைத் தொடர்கிறேன்.

வகுப்பு முடிந்ததும் உறவுக்காரரிடம் திட்டு வாங்குவதற்கு என் மனம் தன்னைத் தானே தயார் படுத்திக்க கொண்டது. அவர்கள் அப்படித்தான்...!

# நான் மகிழ்ந்த கிராமியம்

(எண்சீர் விருத்தம்)

நீரோடும் வாய்க்காலில் நீர்க்குமிழி பிறக்கும்
    நிரையடித்தே மீனினங்கள் நீர்க்கரையில் ஒதுங்கும்
காரோடு வாடைவந்து வெம்மையினை வழிக்கும்
    கைநிறையப் புதுமைகளை அள்ளியள்ளித் தெளிக்கும்
போராடக் காடையொன்று சத்தமிட்டே போகும்
    புரிந்துவிட்ட குருவிகளோ பயத்தினிலே பதுங்கும்
ஊரோடே உயிர்த்துநிற்கும் கிராமியத்தின் அழகோ
    உள்ளத்தில் அழகான வர்ணங்கள் தீட்டும்

பூவுறையும் தேன்மாந்திப் புள்ளினங்கள் கிறங்கும்
    பூங்கொன்றை இலைகளிலே பொன்வண்டு உறங்கும்
மேவுபொழில் வழியெங்கும் மலர்க்கொடிகள் தூங்கும்
    மேலுயர்ந்த கொம்பருமோ நறவினையே தாங்கும்
தாவுகின்ற மந்திகளோ குளிர்காற்று வாங்கும்
    தத்திவரும் அணிற்பிள்ளை திசையெங்கும் செல்லும்
வேவுபார்க்க நச்சரவம் வளர்கொம்பில் ஏறும்
    விடுவிடென்று சிறுகுருவி சேதியினை உரைக்கும்

பூங்குருவி புளியமரக் கிளைகளிலே கூடும்
    பொன்னொச்சி மரங்களையே பிளினிகளும் தேடும்
மாங்குயிலின் குரலினிலே காதலங்கே தேங்கும்
    மணிப்புறாவோ தனிமையிலே துணையெண்ணி ஏங்கும்
தூங்கிசையில் ஆலாக்கள் மீன்தேடி அலையும்
    தொடுவானில் நீர்க்காகம் கூட்டாகப் போகும்
ஆங்காங்கு வெளிகளிலே ஆக்காட்டி திரியும்
    அழகாகக் காலுயர்த்தி வித்தைகளும் புரியும்

பொன்னாவ ரசுஅங்கே பூக்காடாய்ச் சொரியும்
    புன்னைமரம் மடலவிழ புல்வெளிகள் சிரிக்கும்
மின்மினிகள் விளக்கேந்தும் தூக்கணத்தின் கூடு
    மேலான அறிவியலின் படைப்பென்றே கூறு
நன்னீரைத் தேடிவரும் நிலக்கிளிகள் கூட்டம்
    நடைபாதை ஓரத்தை நெருங்கிவரும் நாட்டம்
தென்மேற்கு பருவமழை தேசத்தை நிறைக்க
    தேனாக இனித்திடுமே கிராமியத்தின் வாழ்வு

மண்ணளைந்தே உருவான மண்கறையான் புற்று
    மறைவாகப் பாம்புகளும் மகிழ்ந்திருக்கும் சற்று
தண்பொழிலின் கூட்டினிலே தலைநீட்டும் குஞ்சு
    தாயிரையை ஊட்டுவதில் ததும்பிடுமே அன்பு
விண்ணதிரும் மரமசைய யானைகளும் பிளிறும்
    வியப்போடு கன்றுகளும் வாயசைத்து நிற்கும்
கண்களிலே பயத்தோடு தாவுகின்ற கலைகள்
    காட்சிபல கொண்டமைந்த கிராமியத்தின் வாழ்வு



சுகந்தி மார்க்கண்டு,
கனடா



# ஆசைப் படிமம்..

ஆசையின் விதைப்பில்
ஆதாரம் அசைந்தது
ஆகார ஆசை..

காதுக்கு இனிப்பு
கவனச் சிதைவு
கருத்து மறுப்பு..

கண்ணுக்குள் ஈர்ப்பு
கனிரச வனப்பு
கவன ஈர்ப்பு..

நாவுக்குள் ஊற்று
நகரம் விருப்பு
நல்லறம் மறுப்பு..

பொய்மை காட்சி
கைகளின் நீட்சி
கட்டளை மீறல்...

பறிப்பதற்கு முன்
யோசித்திருந்தால்
பாவக்கனியாகி இருக்காது..

தொங்கலின் வனப்பில்
தோரணமான இச்சை
எப்படித் தப்பும்..

ஆகாரப் பசியில்லை
ஆதாம் மறுக்கவில்லை
எச்சில் ருசியறிந்ததால்..

ஏவாள் ஏமாந்தாள்
ஏவாள் ஏமாற்றினாள்
ஏவாள் ஏகபோகியாக..

பழியும் அவளில்
பாவமும் அவளில்
வலியோடு ஏவாள்..

நிம்மதியின் ஆணிவேர்
நிரந்தரப் படிமாங்களில்
நிரம்பிய ஆதிரகசியம்..!

மைக்கேல்ராஜ்



# கிழக்கிலங்கையில் உதித்த தாரகை இலக்கிய வானிலும் சாதனை

***உங்களைப் பற்றிய சிறு அறிமுகத்தை எமது வாசக நெஞ்சங்களுக்காக அறியத் தாருங்கள்!***

மட்டக்களப்புமாவட்டம், ஏறாவூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட நான் கடந்த 15 வருடங்களாக வைத்திய அதிகாரியாகக் கடமை புரிந்து வருகிறேன். தற்போது ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் பணி புரிகிறேன். தேசிய இரத்தப் பரிமாற்ற சேவையில் ஐந்து வருடங்கள் சேவை அனுபவம் உண்டு. சுமார் ஐந்து வருடங்களாக இலக்கியத் துறையில் பயணித்து வருகிறேன்.

***உங்கள் தொழில் சார்ந்த விடயங்கள் எவை?***

கல்வியில் தேர்ச்சி பெற்று வைத்தியத் துறையில்பிரவேசித்ததும்பணியாற்றுவதும் கல்வி ரீதியான அடைவாகும். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. முதற்கண் இறைவனுக்கும் அடுத்து என் பெற்றவர் களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

களனி மருத்துவ பீடத்தில் மருத்துவக் கற்கையை மேற்கொண்டேன்.

தொழில்ரீதியாக மருத்துவராக சேவை செய்யும் மருத்துவர் ஜலீலா முஸம்மில், பன்முகத் திறமைகளோடு இலக்கிய வானிலும் ஆளுமை செய்கிறவர். சுறுசுறுப்பில் தேனீயாக தமிழுலகில் திக்குகள் எட்டிலும் வலம் வருகிறார்ர்.

நேர்காணல் :
தமிழ்நெஞ்சம் அமின்



தற்போது ஏறாவூர் ஆதார வைத்திய சாலையில் பணி புரிகிறேன். தேசிய இரத்தப் பரிமாற்ற சேவையில் ஐந்து வருடங்கள் சேவை அனுபவம் உண்டு.

**இலக்கியத்தின் மீதான ஆர்வம் ஏற்பட தூண்டுகோலாக இருந்தது எது? (யார்)**

சிறு பராயம் முதலே வாசிப்பிலே ஆர்வம். தமிழ் மொழியில் அப்படியொரு பற்று. வாசிப்போடு உறவு கொண்டிருந்ததாலேயே தமிழிலே விருப்பு வந்தது என்றால் அது மிகையாகாது. எனது தந்தை ஹயாத்து முஹம்மது அவர்கள் கணித ஆசிரியராக இருந்தபோதிலும் தமிழ் மொழியிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார்கள். மரபுக் கவிதை புதுக்கவிதை போன்றவற்றை இயற்றக் கூடியவர்களாகவும் இருந்தார் கள். செய்யுள்களையும் காவியங்களையும் கதைகளையும் தமிழ் ஊற தமிழ் சொட்டச் சொல்லித்தருவதில் மிகவும் கெட்டிக்காரராக இருந்தார்கள். இலக்கியத்தில் ஆர்வம் ஏற்பட தூண்டுகோலாக இருந்தவர் தந்தை என்று தெரிவிப்பதில் பெரும்மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்ப்பாடத்தைச் சுவை படக் கற்பித்த தமிழ் ஆசான்களும் எனது தமிழ் வளரக் காரணமானவர்கள்தாம். இவ்விடத்தில் அவர்களை நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன்.

**ஒரு அரசாங்க உத்தியோகத்தராகவும் இருந்து கொண்டு, எழுத்துத் துறையிலும் பிரகாசித்து வருகிறீர்கள். இது எப்படி சாத்தியப்படுகிறது? உங்கள் நேரத்தை எப்படி முகாமைத்துவப் படுத்துகிறீர்கள்?**

ஒவ்வொரு பெண்ணிற்கும் வாழ்க்கை எனும் நாடகத்தில் நிறைய வேடங்கள் உண்டு. மகளாக, சகோதரியாக, மனைவியாக, தாயாக இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். கல்வியிலே தேர்ந்து வேலை ஒன்றைப் பெற்றுக் கொள்வது அவளது




'ஏறாவூர் படுகொலைகள் வரலாறும் பிண்ணனியும்' நூல் வெளியீட்டு நிகழ்வில்

முதல் வெற்றி என்று சொல்லலாம். திருமணம் என்ற ஒன்றில் அவள் காலடி எடுத்து வைக்கும் போது அவளின் பொறுப்புக்களும் சுமைகளும் இரண்டு மடங்காகி விடுகின்றன என்பதே உண்மை. சிறந்த குடும்பத் தலைவி என்பவள் குடும்பத்தையும் வீட்டையும் மிகவும் சாமர்த்தியத்துடன் நிர்வகிப்பவளே. அவளது நிர்வாகம் ஒரே சீராகச் செல்ல வேண்டும். சூழ்நிலைக்கேற்ப வேகமாகவும் புத்திசாலித்தனமாகவும் ஒரே ஓட்டத்தில் செல்ல வேண்டும். வைத்திய தொழில் என்பது மிகவும் பொறுப்பு மிக்கதும் வேலைப்பளு மிக்கதுமான ஒரு தொழிலாகும். மிக அவதானத்துடனும் நோயாளர் நலனில் அக்கறை கொண்டும் செய்யக்கூடிய சமூக சேவையாக அது இருக்கிறது. ஒரு பெண் என்ற ரீதியில் வேலைக்கு செல்லுதலும் குடும்ப பொறுப்புகளும் இரட்டைச் சுமையாக அழுத்தினாலும் அதைத் திறம்பட செய்வதில் மிகவும் கவனம் எடுக்கிறேன். இவ்விடத்தில் நேர முகாமைத்துவம் என்பது மிக அத்தியாவசியமாகிறது. நேரத்தைச் சிக்கனப்படுத்தி செலவழிப்பதில் பெண்களின் பங்கு மகத்தானது. அந்த வகையில் எனக்கு மிகவும் பிடித்தமான எழுத்துத் துறையில் செலவழிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறேன். கரும்பு தின்னக் கூலியா வேண்டும்? தமிழ் என்பது எனக்கு ஒரு போதையாக




சிறகு முளைத்த மீன் நூல் வெளியீடு - 2022

இருக்கிறது. எனது வேலைப்பழுவைத் துரத்தி உற்சாகம் தருவிக்கும் அமுதாக இருக்கிறது. அதைத் தருவதிலும் சுகிப்பதிலும் ஆவலுடன் இருக்கிறேன். எனது எல்லா வகையான முயற்சிகளுக்கும் வெற்றிகளுக்கும் உறுதுணையாக இருக்கும் எனது அன்புக் கணவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். முற்கூட்டியே திட்டமிட்டு ஒவ்வொரு வேலையும் செய்யும் பழக்கமே இலக்கியத்திலும் தொழிலிலும் சமாந்தரமாகப் பயணிப்பதற்கு உதவுகிறது. இவ்வாறான திட்டமிடல்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர் எனது தந்தையே. இவ்விடத்தில் இதைத் குறிப்பிடுவதில் பேரானந்தம் அடைகிறேன். நேர முகாமைத்துவமே எல்லா வகையான வெற்றிகளுக்கும் அடிப்படை என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

**இதுவரை நீங்கள் எழுதிய புத்தகங்கள் குறித்து?**

எனது கன்னி வெளியீடு சிறகு முளைத்த மீன்- புதுக்கவிதை நூல் கடந்த வருடம் 2022 சென்னைப் புத்தகக் கண்காட்சியில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

இரண்டாவது சுய வெளியீடு தூரிகை வரையும் மின்மினிகள் ஹைக்கூ கவிதை நூல் இவ்வருடம் இலங்கையில் வெளியீடு செய்யப்பட்டது.

**முகநூல் குழுமங்கள் தவிர்த்து வேறு எங்கெல்லாம் உங்கள் எழுத்தாற்றலை வெளிப்படுத்துகிறீர்கள்?**

சுமார் 40க்கும் அதிகமான உள்நாட்டு, வெளிநாட்டு இதழ்களில் எனது கவிதைகள் கட்டுரைகள் ஊக்கப் பதிவுகள் வெளிவந்துள்ளன.

சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிற்றேடுகள், மின்னிதழ்கள் மற்றும் முகநூல், வாட்ஸ்அப் குழுமங்களில் கவிதைகள், கட்டுரைகள், மருத்துவக் குறிப்புகள், மருத்துவக் கட்டுரைகள், ஊக்கப்பதிவுகள், சிறுகதைகள் எழுதி வருகிறேன். புலன இலக்கியக் குழுமங்களிலும் இலக்கியப் பயணம் செய்கிறேன்.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி, தமிழன், வேட்டை, அக்கினிச்சிறகுகள், முத்தமிழ்க் கலசம், படிகள், விடிவெள்ளி, மெட்ரோ நியூஸ், வெண்ணிலா, மணிக்கூ மகுடம், அவரி, எழுத்தொளி, சிகரம், முத்திதழ், சுபீட்சம், முரசு போன்ற உள்நாட்டு சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் துணிந்தெழு, தமிழ்நெஞ்சம், வளரி, காற்றுவெளி இதழ், ஹைக்கூத் திண்ணை, கவிச்சூரியன்,

தூரிகை வரையும் மின்மினிகள்
நூல் வெளியீட்டு நிகழ்வில்



அகரமுதல, கவிமாடம், ஹெல்த்கேர், வானம் வசப்படும், தாய்த்தமிழ் பட்டிமன்றக்குழு, முத்தமிழ் நேசன், திறவுகோல், ஆதிரை, கவிதைப்பெட்டி, ஐக்கூச்சாரல், சந்திரோதயம் மதிமலர், புக் டே (book day) போன்ற வெளிநாட்டுச் சஞ்சிகைகளிலும் எனது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

கவிதை இலக்கியம், (புதுக்கவிதை மரபுக் கவிதை தன்முனை, ஹைக்கூ), சிறுகதை, பாடலாக்கம், கட்டுரை (ஊக்கப்பதிவு, மருத்துவக் கட்டுரை, பொதுவான கட்டுரைகள்), வலையொளிப் பதிவேற்றங்கள், பேச்சு, விவாதம், பத்திரிகைத்துறை, நூல் விமர்சனம் போன்ற துறைகளில் எழுதி வருகிறேன்.

கவிதைத்தொகுப்பு நூல்கள் பலவற்றில் எனது கவிதைகள் இடம்பிடித்துள்ளன. இந்தியாவிலும் இலங்கையிலும் சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட தொகுப்பு நூல்களில் எனது கவிதைகள் வெளியாகியுள்ளன.

இலக்கியப் போட்டிகளில் கலந்து கொள்வதிலும் பேரார்வம். வெற்றிகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. நேரடி, இணைய வழிக் கவியரங்கங்களில் பங்கேற் றும் தலைமையாகவும் இருந்துள்ளேன். பதியப் பட்ட இலக்கிய மன்றங்களில் நிர்வாகக் குழுவில் முக்கிய பொறுப்புகளில் இயங்கி வருகிறேன். எமது ஆக்கங்கள் வலையொளியிலும் வானொலி நிகழ்ச்சிகளிலும் பதிவேற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. பல்வேறு இலக்கியப் போட்டிகளில் நடுவராகவும் கடமை புரிந்துள்ளேன்.

**கிழக்கு மாகாண எழுத்தாளர்களுக்காக அரசாங்கம் வழங்கும் வரப்பிரசாதங்கள் அதிகமென பலர் சொல்லக் கேள்விப் பட்டுள்ளேன். இதுபற்றிய உங்கள் கருத்து?**

ஆமாம். நிச்சயமாக.. இதை ஆமோதிக்கிறேன். பிரதேச ரீதியாகவும் மாகாண ரீதியாகவும் பல்வேறுபட்ட இலக்கியப் போட்டிகள், விருதுத் தேர்வுகள், நூல் கொள்வனவு, சிறப்பு நூல் விருது போன்றவை வருடந்தோறும் இடம் பெறுவது அரசாங்கத்தின் மிகச் சிறப்பான முன்னெடுப்பாகும். இது எழுத்தாளர்களை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல் பண்பட்ட ஆளுமைகளையும் திறமையான இலக்கியவாதிகளையும் சமூகத்திற்கு இனங்காட்டுகிறது என்பது எல்லோரும் அறிந்த விடயம். மிகவும் ஆக்கபூர்வமான இலக்கிய வெளியீடுகளையும் அது சமூகத்திற்கு தந்து செல்கிறது என்பது ஒரு வளமான விடயமாகும்.

இவ்வாறான இலக்கியப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியும் ஈட்டியுள்ளேன் என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறேன். அத்துடன் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் 2023ஆம் ஆண்டு இளம் கலைஞர் விருதுக்கும் இம்முறை தேர்வாகியுள்ளமை பெருமிதமாக இருக்கிறது.

**ஒரு எழுத்தாளனால் சமூகத்துக்கு செய்யக்கூடிய சேவைகளாக எவற்றைச் சொல்லலாம்?**

தூங்கிக் கொண்டிருக்கும் சமுதாயத்தைத் தட்டி எழுப்பும் விரல்கள் எழுத்தாளனுடையவை.

சமூகத்தின் நன்மைக்காகவும் ஆரோக்கியத்துக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் தங்களை அர்ப்பணித்து, பாமர மக்களின் ஆசாபாசங்கள், வாழ்க்கை முறைகள், அநுபவங்கள் எல்லா வற்றையும் கோடிட்டுக் காட்டுபவனே எழுத்தாளன்.பேனா முனை

ஆயுதமுனையை விடக் கூர்மை யானது. வீரம் கொண்டது.

அடிமட்டத்து வேதனையிலிருந்து அனைவரது பிரச்சினைகளையும் அடிக் கோடிட்டு வெளியுலகத்துக்குக் காண்பிப் பதன் மூலம் அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்குரிய ஒரு கருவியாக எழுத்தாளன் செயற்படுவது பாரியதோர் சேவை தானே.

**பல குழுமங்களில் நிறைய ஹைக்கூ எழுதி வருகிறீர்கள். சில தினங்களுக்கு முன்பு உங்கள் ஹைக்கூ நூலையும் கோலாகலமாக வெளியிட்டுள்ளீர்கள். ஹைக்கூ பற்றிய புரிந்துணர்வு பலருக்கு இன்னும் குறை வாகவே உள்ளது. அதன் இலக்கணங்கள் பற்றிய சர்ச்சையும் குறைந்த பாடாக இல்லையே! இன்றுவரை பல கருத்து வேறுபாடுகள் நிலவும் இக்கவிதை வடிவம் பற்றிய உங்கள் கருத்தும், நிலைப்பாடும் என்ன?**

ஹைக்கூ என்றால் என்ன, அதை விளங்கிக் கொண்டு அதன் விதிமுறைகள் பற்றி அறிந்து அதன்படி எழுத எல்லோரும் முனைகின்றார்களா என்பது கேள்விக்குறியே. சிலர் இலக்கண விதிமுறைக்கேற்ப ஹைக்கூ கவிதைகளை எழுதுகின்றனர். ஆனாலும் சிலர் இலக்கண விதிகளைக் கொஞ்சம் மீறிப் புதுமையாக, வித்தியாசமாக எழுதுபவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறான கவிதைகள் வரவேற்கத்தக்கதாகவும் புதிய சிந்தனைகள் புதிய பாணிகளைக் கொண்டதாகவும் காணப்படுவது புதுமை செய்வதாகவே இருக்கிறது. அடிப்படை ரீதியாக ஹைக்கூ கவிதைகளுக்குப் பல வரைமுறைகள், இலக்கண விதிகள் இருந்தாலும் பெரும் பாலும் ஆரம்ப இலக்கணங்கள் மாறாத வாறு சற்று வித்தியாசமாக புதுமை செய்தலையும் இலக்கிய உலகம் வர வேற்றுக் கொண்டே இருக்கிறது. இலக்கியம் புதுமையை, முரண்களை விரும்புவது இயல்பு தானே. மாற்றம் என்ற ஒன்றே உலகில் மாறாதது. ஹைக்கூ விடயத்திலும் அப்படித்தான் என்று நினைக்கிறேன்.



ஏறாவூர் பொது நூலகத்தின் முற்றத்து மல்லிகை நிகழ்வில்





**ஆகச் சிறந்த ஒரு ஹைக்கூ எப்படி அமைய வேண்டும்?**

ஹைக்கூ என்பது மூன்று வரிகளுக்குள் முழுப் பிரபஞ்சத்தையும் அடக்கக் கூடியது. சிறு துளி ஒன்று பெரியதொரு காட்சியை தனக்குள் உள்ளடக்குவது போல மூன்றே வரிகளில் சமூக அவலங்களைப் படம் பிடித்துக் காட்டக் கூடியதும், படிப்பினைகளைச் சொல்லக் கூடியதுமாக அமைகிறது. தூரத்து நிலாவைக் கைகளுக் குள் கொண்டு வரும் வித்தைகள் தெரிந்தது. மூன்று வரிகளுக்குள் எண்ணற்ற தத்துவங்களைச் சொல்லக்கூடியது என்றே கூறலாம்.

பருவநிலை மாற்றங்களை வாழ்வியல் உண்மைகளோடு ஒட்டி வைத்து எழுது வதே ஹைக்கூ. காட்சிகளைப் படிமம் ஆக்குவதில் தேர்ந்து காணும் எதையும் புகைப்படம் எடுப்பது போல அழகாகச் சொல்லெனும் தூரிகைக் கொண்டு வரையும் ஓவியமே ஹைக்கூ.

ஹைக்கூ கவிதை ஆனது பொருட் செறிவும் இனிமையும் ஆழமும் கொண்டது. வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டி எங்கெல்லாமோ அழைத்துச் செல்லும் வலிமை கொண்டது. ஹைக்கூ கவிதைகளில் மயங்காதவர்கள் இல்லை எனலாம். சிறு வரிகளில் தன்னடக்கத்தோடு பாரிய அர்த்தத்தை உள்வாங்கி தன்னகத்தே கொண்டு இருக்கின்றன ஹைக்கூ கவிதை கள். ஒவ்வொரு வாசகனையும் ஒவ்வொரு விதமாக சிந்திக்கச் செய்து புதுமை செய்கிறது. போதை தருகிறது என்றே சொல்லலாம்.

அதாவது மூன்று வரிகள்.. ஏழு சொற்கள்.. ஆனால் அது கொண்டு வரும் படிப்பினை ஆனது பக்கம் பக்கமாக விளக்கங்களை எழுதக்கூடிய வகையில் இருக்கும். ஆகச்சிறந்த ஹைக்கூ என்பது சொற் சிக்கனத்துடன் ஹைக்கூ இலக்கணத்துடன் மூன்றாவது வரியில் அனைவரையும் திகைக்க வைத்து பெரிய தத்துவம் ஒன்றை மனதில் விரிய வைத்துச் செல்வது தான்.




கலைத்தாரகை விருது 2022

**ஹைக்கூவில் குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டுவது போல ஒருசில பாடுபொருள் களை மையமாக வைத்தே ஹைக்கூக்கள் உருவாக்கப் படுகின்றனவே! இதனால் ஒருவருடையதைப் போலவே இன்னொரு வருடைய ஹைக்கூவும் சாயலாக அமைவது ஏற்புடையதா?**

ஒரு ஹைக்கூவால் ஈர்க்கப்பட்டு அதை உள்வாங்கி அதன் சாயலில் அவ்வாறு பல கவிஞர்கள் எழுதக்கூடும். அதை கவிஞர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு கவிஞரின் கருப்பொருளை எடுத்து அதே மாதிரி தாமும் எழுதுவது தவறென நினைக்கிறேன். ஆனால் கருப்பொருளை மாற்றம் செய்து அதே சூழலில் எழுதுவது பிழை இல்லை. ஒவ்வொரு கவிஞனும் தான் காணுகின்ற அனுபவிக்கின்ற ரசிக்கின்ற அழுகின்ற பாதிக்கின்ற விடயங்களையும் கவிதைக்குள் கருவாகக் கொண்டு வருகிறான்.

வாழ்வியலில் எண்ணற்ற விடயங்கள் கொட்டி கிடக்கின்றன. அதேபோன்று



2022 கலைத்தாரகை விருது

இயற்கை, சிற்றுயிர் நேசம், பருவ கால மாற்றங்கள், சமூக அவலங்கள் போன்ற விடயங்களும் அவ்வாறு தான்.

எனவே கவிஞர்கள் ஒரே விடயத்திற்குள் நின்று யோசிக்காமல் அவர்களுடைய வாசிப்பையும் தேடலையும் அதிகமாக்கிக் கொண்டு ஹைக்கூ கவிதைகளில் புதுமையும் அழகையும் வித்தியாசங்களையும் பல்வேறுபட்ட கோணங்களையும் கொண்டு வர வேண்டும் என்பதே எனது அவா.

**இதுவரை நீங்கள் பெற்ற விருதுகள்?**

1. இலங்கை - தேனீ கலை இலக்கிய மன்றத்தில் மூன்றாம் ஆண்டு விழாவில் (26/03/2021) கவித்தேன் விருது.

2. சிறீலங்கா பென்கிளப் எனப்படும் முஸ்லிம் பெண்கள் எழுத்தாளர் அமைப்பின் முதலாவது மாநாட்டில் (18/12/2021) இலக்கியச் சேவைக்கான விருது

3. தமிழ்நாடு கோவை ஊலளழ இலக்கியக் குழுமம் ஐந்தாண்டு விழா (23/01/ 2022) கவிச்சூரியன் விருது.

4. ஏறாவூர் தமிழ்ச் சாரல் கலை இலக்கிய வட்டத்தால் (இலங்கை) (17/03/2022) மகளிர் தின விழாவில் கவிச்சாரல் விருது.

5. தமிழ்நாடு மதுரமொழிக் கவிச் சங்கத்தினால் இலுப்பை அறக் கட்டளை அனுசரணையுடன் நடாத்தப்பட்ட முப்பெரும் விழாவில் 'தமிழ் வேள்' விருது (29/05/2022).

6. திண்டுக்கல் மாவட்ட பசுமை வாசல் பவுண்டேஷன், குமரி மாவட்ட தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம், கன்னியாகுமரி மாவட்ட காமராஜர் இளைஞர் வளர்ச்சி பேரவை, சேலம் மாவட்ட ஆத்தூர் ஸ்ரீ சக்ஸஸ் அகடமி & பவுண் டேஷன் ஆகிய அமைப்புகள் இணைந்து மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் பெருந்தலைவர் காமராசரின் பிறந்த நாளான ஜூலை - 15 ஆம் திகதியை முன்னிட்டு நடாத்திய பல்துறை சாதனையாளர்களுக்கான 'பெருந்தலைவர் காமராசரின் மாமணி விருதுகள் - 2022' வழங்கும் நிகழ்வில் இலக்கியத்துறையில் ஆற்றிவரும் சிறந்த பங்களிப்புக்காக 'செம்மொழிக் கவிமாமணி' விருது (15/07/2022)

கவிஞர் கலாபூஷணம் அப்துல் றகுமான் அவர்களின் மரணித்த சூரியன் நூல் வெளியீட்டு விழாவில்



7. ஏறாவூர் தமிழ்ச் சாரல் கலை இலக்கிய வட்டத்தால் (இலங்கை) கவி முகில் விருது (01/10/2022)

8. இலங்கைக் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து ஏறாவூர் நகர பிரதேச செயலகம் நடாத்திய பிரதேசக் கலை இலக்கிய விழா மற்றும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் (29/11/2022) கவிதை இலக்கியத்துக்காக 'கலைத்தாரகை விருது'.

9. சிறீலங்கா பென்கிளப் எனப்படும் முஸ்லிம் பெண் எழுத்தாளர் அமைப்பின் இரண்டாவது மாநாட்டில் (24/12/2022) அவிழ்தம் மருத்துவ சஞ்சிகை நிகழ்ச்சிக்கான விருது மற்றும் இலக்கியச் சேவைக்கான இரு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள்.

10. தமிழ்நாடு கோவை ஊலஎழ இலக்கியக் குழுமம் ஆறாம் ஆண்டு விழா (21/01/2023) பூகரச் சிற்பி விருது.

11. சிறீலங்கா பென்கிளப் எனப்படும் முஸ்லிம் பெண். எழுத்தாளர் அமைப்பின் மூன்றாவது மாநாட்டில் (21/10/2023) அவிழ்தம் மருத்துவ சஞ்சிகை நிகழ்ச்சிக்கான விருது மற்றும் அவரி சஞ்சிகை தொகுப்பாசிரியர் இரு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள்.

**எழுத்துத் துறையில் உங்கள் எதிர்காலத் திட்டங்கள், கனவுகள் பற்றி?**

தமிழ் தொண்டன் பைந்தமிழ் சங்கம் நிகழ்த்தும் 'பத்தாயிரம் கவிதைகள் ஒரு நூல் தொகுப்பு உலக சாதனை நூலிற்கு' எனது நூறு கவிதைகளும் தேர்வாகி 'நோபல் உலக சாதனையில்' பதிவாகி உள்ளது. 'துயில் நதிப் பூக்கள்' எனும் தலைப்பிலான எனது புதுக்கவிதை நூல் கவித்தேனருவி பத்தாயிரம் கவிதைகள் கொண்ட கவிதை நூலில் எனது நூறு



பெயர் பதிக்கும் தகைகள் நூல் வெளியீட்டில் நினைவுச்சின்னம் வழங்கப்பட்டபோது

கவிதைகள் இடம் பிடித்திருக்கின்றன. (நூறு கவிஞர்கள் பத்தாயிரம் கவிதைகள் தொகுப்பு நூல்).

மேற்குறிப்பிட்ட துயில் நதிப்பூக்கள் எனும் கவிதை நூலுடன் கீழ் குறிப்பிடப்படும் இரு நூல்களும் எதிர்காலத்தில் வெளியீடு காணவிருக்கின்றன

- மருத்துவக் கட்டுரைகளின் தொகுப்பு
- தன்முனைக் கவிதை நூல்

மேற்குறிப்பிட்டவை சுய படைப்புகள்

- வலிமை மிகு எண்ணங்கள் - தன்னம்பிக்கை கட்டுரைத் தொகுப்பு நூல்
- ஹைக்கூ பேரிகை கவிதை




2021-கவித்தேன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது

தொகுப்பு நூல் கண்ணன் சேகர் தமிழ்நாடு

- வளரி 500 (500 கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு நூல் - வளரி பன்னாட்டுக் கவிஞர்கள் பெருமன்றம்)
- 1001 கவிதைகள் - நுட்பம் குழுமம் இலங்கை
- தமிழ்நாடு கவிஞர்கள் கலை இலக்கிய சங்கம் - தமிழ் மொழி வாழ்த்து உலக சாதனை கவிதைத் தொகுப்பு நூல்
- நூருல் ஐன் நஜ்முன் ஹுசைன் தொகுக்கவிருக்கும் மின்னும் தாரகைகள்-2 நூலிலும் எனது பதிவுகள் இடம்பெறவுள்ளது.
- தன்முனை இயைபுக் கவிதை தொகுப்பு நூல் - கவிஞர் அன்புச் செல்வி சுப்புராஜ் தமிழ்நாடு
- ஹய்புன் கவிதை தொகுப்புநூல் கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜ் தமிழ்நாடு

அன்புத்தந்தையுடன்



- மழைச்சாலையில் நிலாப்பூக்கள் - பெண்கள் ஹைக்கூ தொகுப்பு நூல் - கவிஞர் கன்னிக்கோவில் ராஜா தமிழ்நாடு
- பாசிக்குளத்தைத் துயில் எழுப்பும் தவளை - ஹைக்கூ கவிதை தொகுப்பு நூல் கவிஞர் கன்னிக் கோவில் ராஜா தமிழ்நாடு.
- திருக்குறள் பொருட்பால் தொகுப்பு நூல் - நெல்லை ஆனந்தி, கவிஞர் கன்னிக்கோவில் ராஜா தமிழ்நாடு.
- கல்வெட்டுத் தமிழ் மொழியில் தன்முனைக்கவிதைகள் தொகுப்பு நூல்-கவிச்சுடர் கல்யாண சுந்தரம் ஐயா, கவிஞர் கன்னிக்கோவில் ராஜா தமிழ்நாடு.
- சிறுகதை தொகுப்பு நூல்

இவை எல்லாம் தொகுக்கப்பட்டு எதிர்காலத்தில் வெளிவர இருக்கின்றன.

**மருத்துவக் கட்டுரைகள் பலவற்றை எழுதி சமூகத்துக்கு ஒரு விழிப்புணர்வை வழங்கி வருவது பாராட்டுக்குரியது. இலங்கையில் பால்ய வயது பாலியல் துஷ்பிரயோகங்கள் இவ்வருடம் பாரிய அளவில் அதிகரித்திருப்பதாகத் தரவுகள் சொல்கின்றன. இவற்றுக்கு என்ன காரணம்? இதைத் தடுக்கவும், மக்கள் மத்தியில், குறிப்பாக இளவயது பெண்பிள்ளைகள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உங்கள் ஆலோசனை என்ன?**

இன்றைய உலகு பலவிதமான புதிய பிரச்சினைகளை நாளுக்கு நாள் சந்தித்துக் கொண்டேயிருக்கிறது. உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் ஒரு மாபாதகச் செயலாக "பால்யவயது பாலியல் துஷ்பிர யோகத்தைக்" குறிப்பிடலாம். பாலியல் ரீதியில் சிறுபெண்பிள்ளைகளைத் துன் புறுத்தும் செயலே இது.

இது தொடர்பாக ஊடகங்களில் நாளுக்கு நாள் செய்திகள் ஒளிபரப்பப் பட்டாலும் குற்றவாளிகள் கைது செய்யப் பட்டாலும் அவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனையினாலோ அல்லது கைது நடவடிக்கையினாலோ இந்த குற்றங்கள் குறைவதாகத் தெரியவில்லை. இந்தக் குற்றத்திற்கு அடிப்படையாக பல்வேறு பட்ட காரணங்களைக் குறிப்பிடலாம். சிறுவர்களின் பாதுகாப்பற்ற நிலைமை, பெற்றோர்களின் கவனக் குறைவு, பொருளா தாரத்தில் பலவீனம், சிறுவர்களின் அறிவீனம், பெற்றோர்களின் விவாகரத்து மற்றும் குடும்பப்பிரச்சினைகள், தாய் தந்தையரின் வெளிநாட்டுப் பயணம், பெற்றோர் களின் கல்வி அறிவின்மை, கையடக்க தொலைபேசிகள் மற்றும் இணையத் தளங்கள், மதுபானம் மற்றும் போதை வஸ்து உபயோகம், தனிமைப் படுத்தப்பட்டிருத்தல், சிறிய சூழலில் நிறையப்பேர் வாழ்தல் இப்படி பல்வேறு காரணங் களினால் சிறுவர்கள்/ பெண் பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்றனர்.

ஒரு வைத்தியர் என்ற ரீதியில் நான் கூறும் ஆலோசனையானது இவ்வாறான சந்தர்ப்பங்களில் குடும்பத்தில் உள்ள புத்திஜீவிகள், அறிவாளிகள், மூத்தவர்கள் பிள்ளைகளுக்கான பிரச்சினைகளைக் கண்டறிந்து அவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை முற்கூட்டியே மேற் கொள்வதுதான். இன்னும் சிறுவர் களுக்கான உரிமைகள் பற்றிய தெளிவான விளக்கங்கள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அத்தோடு பெற்றோர்களுக்கும் இதைப் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை செய்ய வேண்டும். சிறுவர்களுக்கான நல்ல நடத்தைகளை கற்றுக் கொடுத்தல், அவர்களுக்கு தொடுகைகள் பற்றிய அறிவுறுத்தல்களும் பாடசாலைகளில் மேம்படுத்தப்படுதல் வேண்டும். அரசாங்க ரீதியாகவும் இதற்கான பல்வேறுபட்ட செயல்திட்டங்கள் சமூகத்தின் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.எனவே முதலில் காரணங்களைக் கண்டுபிடித்து அதற்கான தீர்வுகளையும் முன்கூட்டிய ஆலோசனைகளையும் சமூகத்துக்கு வழங்குவது இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது.

**நமது தமிழ்நெஞ்சம் பற்றிய உங்கள் கருத்து?**

**தமிழ்நெஞ்சம்** இதழ், தமிழை வளர்க்கும் பணியை செவ்வனே செய்து வருகிறது. அதிக பக்கங்களுடன் அனேக கவிஞர்களுக்கு, அநேக எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதே இதன் சிறப்பு அம்சமாகும். எனது முதலாவது படைப்பு வெளிவந்த இதழ் **தமிழ்நெஞ்சம்** என்பதை இவ்விடத்தில் கூறிக் கொள்வதில் மிகவும் பெருமிதமும் புளகாங்கிதமும் அடைகிறேன். எனது படைப்புகளும் இவ்விதழில் தொடர்ந்து மாதாமாதம் வெளி வருவது எனக்கு மிகவும் பெருமை அளிக்கிறது. இதழாசிரியர் தமிழ்நெஞ்சம் அமின் ஐயா அவர்கள் தமிழிலும் இதழ்ப் பணியிலும் மிகவும் கை தேர்ந்தவர். சளைக்காமல் பலதசாப்தங்களுக்கு மேலாக தமிழ்ப்பணியை செய்து வருபவர் என்றால் அவருடைய தமிழ்ப்பற்றை மெச்சாது, பாராட்டாது இருக்க முடியுமா? அவருக்கு (உங்களுக்கு) என் அன்பான அகநிறை நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். எனது இரண்டாவது நூலான தூரிகை வரையும் மின்மினிகளை அழகுற வடிவமைத்துத் தந்தவர் என்பதிலும் நான் பெருமை அடைகிறேன்.

இந்த நேர்காணலுக்கு வாய்ப்பு தந்த (உங்களுக்கு) தமிழ்நெஞ்சம் அமின் ஐயா அவர்களுக்கு மீண்டும் நனி நன்றிகள் கூறி விடைபெறுகிறேன். நன்றி.

## காதல்..

கோதையிவள் அழகினிலே,
கொஞ்சும் தமிழ் தவழும்..!!
கொடியிடையாள் பார்வையிலே
கோடியின்பம் துயிலும்..

மங்கையிவள் கூந்தலிலே
மல்லிகையும் மணக்கும்.,
மலர்ந்த இதழிலே
வண்டினங்கள் மொய்க்கும்..

குற்றால அருவியில்
குலவி வரும் தென்றல் - அங்கே
கோதையிவள் புன்னகையில்
கொஞ்சம் அஞ்சி மறையும்..

பேதை உனை கண்டவுடன்
பெண் மயிலும் அகவும்
பெண்ணே அதன்
நடனத்தை சிறு
நொடியில் மறக்கும்..

கட்டிளங் காளை கூட
கண்ணசைவில் விழுவான்,
கனிவான உன் இதயத்தில்
களிப்புடனே இடம் பெறுவான்...

மங்கை உனை காதலித்ததால்
மடுவும் சிறுகடுகாம்.,
மறந்தும் கூட மறுத்திடாதே
மனமுடைந்து அழுவான்..

சின்னஞ் சிறு புன்னகை கூட
சிதறாமல் ஏற்பான் - சில
நொடிகள் உனைக் காணாமல்
சிதைந்து மனம் தவிப்பான்..

மங்கை உனை கண்டுவிட்டால்
முகமலர சிரிப்பான்
மாசில்லா மனதோடு மகிழ்ந்து
குலவி ரசிப்பான்..

சின்னச் சின்ன நிகழ்வு கூட
சிந்தையில் இருக்கும் - நின்
சிங்கார மொழிகூட
தேனெனவே இனிக்கும்..

பாவை உந்தன் பார்வை பட்டால்
பட்டாம்பூச்சி பறக்கும்
பார்த்தவுடன் சிரித்து விட்டால்
பல நொடிகள் சிறக்கும்..

மனதிலே நினைத்து விட்டால்
மயங்கி கிறங்கி திரிவான்
மங்கை உனை காதலிக்க
மாவீரனானாலும் மண்டியிட்டு
அழுவான்..

வெண்ணிலவே வெட்கப்பட
விந்தையவன் கவியில் இருக்கும்
விளக்கமுடியா தமிழ் கூட
விரும்பி வந்து படிக்கும்..

எண்ணற்ற இதயங்களை
இக்காதல் மயக்கும் - இதனாலே
ஏட்டினிலே ஏராளமான
காவியங்கள் பிறக்கும்..

ஆனந்த் கந்தசாமி
சேலம்...

---

## சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா

நிர்மலா சிவராசசிங்கம்

தரவு
நினைவெல்லாம் நிறைந்தெனக்கு நிம்மதியைத் தருவதால்
பனிபொழியும் குளிர்காற்றும் பரவசத்தில் அணைக்கிறது
மனமெல்லாம் களிப்படைய மறக்கின்றேன் எனைநானே
இன்னும் கேள்
கவிதைகளால் புகழ்கின்றாய் கணப்பொழுதில் களிக்கின்றேன்
அவனியிலே அருகிருந்தால் அனைத்திலுமே சிறப்படைவேன்
அறிவாயோ
பொழுதெல்லாம் மனத்திலுன்னைப் புகழ்பாடி மகிழ்வேனே
முழுமதியில் உன்னழகு முகத்தினையும் காண்கின்றேன்
மற்றொருநாள்
தனிமையிலே இருக்கையிலே தளிர்முகமும் களைத்துவிடும்
கனிவுடனே பேசுகின்ற கவின்முகத்தின் இழப்பாலே
ஆதலால்
மனத்தில் உன்னை வடித்து நிற்கிறேன்
வனப்பில் இல்லை மயக்கம்
தினமும் என்னைத் தேற்று வாயே

# மெல்லத் தமிழினி...

மரபுக்கவிதை - எண்சீர் விருத்தம் - (காய் காய் மா தேமா)

செவ்வாயில் உச்சரித்தால் ஆயுள் நீளும்
  செம்மொழியாய் உலகரங்கை தமிழே ஆளும்
செவ்வானின் செவ்வாயில் தமிழின் நீட்சி
  செழிப்பாக நின்றிடுமே செங்கோல் ஒட்சி
எவ்விதத்தில் குறைந்ததடா மொழியின் ஆற்றல்
  எங்கேயும் உரைத்திடுவோம் உயிர்ப்பின் பாய்ச்சல்
செவ்விலக்கியம் கணக்கில்தான் எல்லை இல்லை
  செம்மாந்து சுவைக்கின்றோம் அழகின் சொல்லை!

அங்காடிப் பெயரெல்லாம் தமிழாய் ஆக்கி
  ஆங்கிலத்தின் மோகத்தை மெதுவாய்ப் போக்கித்
தங்கமானச் சொற்களினால் பலகை வைப்போம்
  தண்டமிழைப் பட்டியலில் எழுதிக் காப்போம்
தங்குகின்ற குடிலுக்கும் பெயரை வைத்து
  தாளாத தமிழுணர்வை மனத்தில் தைத்து
மங்காத வாழ்விற்கு மாண்பைச் செய்வோம்
  மாற்றத்தின் வேராகி உயர்வை உய்வோம்

தானியங்கி பின்புறத்தில் குறள்கள் வார்ப்போம்
  தகுந்தசட்டம் பிறப்பிக்க வழிகள் பார்ப்போம்
வானிடத்துக் கதிரவனாய் ஒளியைக் கூட்ட
  வாய்ப்புகளைப் பெருக்கிடத்தான் திறத்தை நாட்ட
தேனினத்தின் சுவையாகத் தமிழை ஓதி
  தேற்றுகின்ற செயல்பாட்டில் வேண்டும் நீதி
ஏனின்னும் தயக்கங்கள் உடனே ஓடு
  ஏணிபோல ஏற்றிவிடும் தமிழின் நாடு!

தொழில்நுட்பத் துறைகளிலும் துலங்க வேண்டும்
  தொன்மையானச் சிறப்புகளோ விளங்க வேண்டும்
எழில்மிக்க கணினியிலும் மகுடம் சூட்டும்
  ஏற்றத்தின் படிகளிலும் பொலிவை ஊட்டும்
விழிப்புணர்வு கொண்டிங்கே காலம் வெல்லும்
  விடியலுக்கு விடையென்று ஞாலம் சொல்லும்
பழித்திடுவோர் மொழியெல்லாம் பொய்தான் என்று
  பாரினிலே நிலைத்திடுமே நின்று வென்று!

பொறியியலும் பொழிந்திடுமே தமிழை அள்ளி
  பொல்லாங்கு சொல்வதனை வைப்போம் தள்ளி
அறிவியலும் ஆழ்ந்திடுமே சொற்கள் கொண்டு
  அறவியலும் தோய்ந்திடுமே வளத்தைக் கண்டு
நெறியெல்லாம் கற்பிக்கும் குறளின் மாட்சி
  நேயத்தை செயல்படுத்தும் மனிதம் சாட்சி
செறிவனைத்தும் கொண்டதனால் தமிழின் ஆட்சி
  சேர்ந்திடுமே எண்திசையும் புகழின் காட்சி!

மோகமென ஆங்கிலத்தைக் கொண்ட தாலே
  மொழிஅருமை யாருக்கும் தெரிய வில்லை
தாகமெனக் கொண்டிங்கு தமிழை வாசி
  தரமான மொழியென்று புரியும் உண்மை
வேகமான வளர்ச்சிக்கு தமிழ்தான் வேதம்
  வெற்றியென்றே முழங்கிடுவோம் சங்கின் நாதம்
ஆகமொத்தம் தரணிக்குத் தமிழே ஏணி
  அறிவார்ந்த சிந்தனையால் காப்போம் பேணி !

கவிஞர் மு.வா.பாலாஜி
ஓசூர் - 635 109.



# மலைக்க வைக்கும் மலேசியா

பகுதி – 8



மருத்துவர்.க.கலைவேந்தன்

அரசு மருத்துவமனையில் இருந்து விழா நடைபெறும் இடத்திற்கு வந்து சேர்வதற்குள் அந்த தமிழ் ஓட்டுநர் பேசிய விவரங்களை பற்றியும் மற்றும் உலகப் புகழ் பெற்ற புத்தர் கோயிலை பற்றியும் விரிவாக பார்த்தோம்... மருத்துவமனையில் புகையிலையில்லா சமுதாய இயக்க ஆராய்ச்சி பணிகளை முடித்துக்கொண்டு மனதிருப்தியோடு இப்போ மாநகரத்தில் அமைந்திருக்கின்ற மிகச் சிறந்த பிரம்மாண்டமான கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற இசைத்தமிழ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்து சேர்ந்த போது மிகவும் சிறப்பான மிக மகிழ்ச்சியான ஒரு விழாவாக பல முக்கிய ஆளுமைகள் கலந்து கொண்ட ஒரு நிகழ்வாக அது அமைந்திருந்தது..

குறிப்பாக தமிழர்கள் அதிகம் வசிக்கக்கூடிய பகுதியில் இருந்து நிறைய தமிழர்கள் வந்தது மனதிற்கு நிறைவாக இருந்தது...

மலேசியாவில்இப்போமாநகரத்தில்மிக அருமையான ஒரு மிகப் பிரமாண்டமான ஹோட்டலில் விழாவுக்கு ஏற்பாடு

தண்ணீர் மலை முருகன் கோவில் அடிவாரம்



செய்யப்பட்டிருந்தது... அந்த விழாவில் முத்தமிழ் முரசு என்ற விருதுக்காக நான் அழைக்கப்பட்டிருந்தேன்... மிகச் சிறந்த பிரபலங்கள் திரையுலக பிரமுகர்கள் அரசியல் பிரபலங்கள் தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டு ஒரு மிகப் பெரிய நிகழ்வாக அது இருந்தது... அந்த நிகழ்வின் தொடக்கத்திலேயே மிகச் சிறப்பாக உரையாற்றிய அந்த மாகாணத்தின் முதலமைச்சர் தமிழ் மொழியின் பெருமையை பற்றி எல்லாம் விரிவாக பேசினார்... மலேசியாவின் தேசிய கீதம் அந்த மலேசியாவுடைய தேசிய கீதம் என்பது கூட மலேசியாவில் இருக்கின்ற அந்த தமிழ் மக்களுக்காக ஒரு தனிப்பட்ட முறையில் ஒரு தேசிய கீதம் ஒரு மிகச் சிறப்பான ஒரு தேசிய கீதமாக இருந்தது... அதன் தொடர்ச்சியாக விழா நிகழ்வுகள் இனிதே நடைபெற்றன முத்தமிழ் முரசு எனக்கு வழங்கப்பட்ட பொழுது நான் பேசிய போது பல்வேறு விஷயங்களை குறிப்பிட்டேன் அதன் சுருக்கத்தை இங்கே பகிர்கிறேன்... இந்த உலகத்தில் எத்தனையோ மொழிகள் இருந்தாலும் தமிழ்தான் மிக சிறந்த ஒரு மொழியாக இருக்கின்றது.. பல்வேறு மொழிகளைக் கொண்டிருக்கின்ற இந்த உலகத்தில் பல்வேறு விதமான மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அதில் 90 சதவீதம் மக்களுக்கு தெரியாத ஒரு மொழி தமிழ் ஆனால் உலகமெங்கும் வாழும் அத்தனை மக்களுக்கும் அறத்தையும் அன்பையும் அருளையும் பண்பையும் மற்றும் வாழ்விற்கு தேவையான அத்தனை விஷயங்களையும் போதிப்பது 90 சதவீத தமிழ் இலக்கியங்கள் தான்.. எனவே தமிழை நம் உயிராக மதிக்க வேண்டும்... அதைப் போற்றி பாதுகாக்க வேண்டும்... தமிழர்கள் பரவாத இடமில்லை இதே மலேசிய மண்ணில் கடாரம் கொண்டான் என்ற இடத்தில் தான் நமது ராஜேந்திர சோழன் கால் பதித்தான். அப்படிப்பட்ட மாண்புமிக்க இந்த மலேசியா மண்ணில் என்னுடைய உரையை வழங்கி முத்தமிழ்முரசு பெறுவதில் பெருமை கொள்கின்றேன் என்று நான் குறிப்பிட்டேன்...

அந்த வகையில் ஒரு மிகச்சிறந்த ஒரு மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்தது மாநாட்டில் மிகச் சிறப்பான தமிழ் ஆளுமைகள் அவர்களுடைய தமிழ் உரைகளை கொடுத்தார்கள் அனைவருடைய நோக்கமும் தமிழ் மொழியின் பரவலை உலகமெங்கும் ஆக்க வேண்டும்... தமிழ் மொழியின் வீரியத்தை அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்பதாக இருந்தது அந்த மாநாட்டின் போது பல நாடுகளில் இருந்தும் கலந்து கொண்ட பல ஆளுமைகளை சந்திக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது... குறிப்பாக அந்த மாநாட்டில் மிகச்சிறந்த ஆளுமைகளாக இருந்த ஒரு சில நல்ல ஆளுமைகளை அந்த இடத்தில் சந்திக்க கூடிய வாய்ப்பு கிடைத்தது அவர்களுடன் பழகுவதற்கான ஒரு வாய்ப்பு கிடைத்தது... ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல முழுக்க முழுக்க தமிழ் மொழியால் ஆன ஒரு தேசிய நாட்காட்டியை அங்கு வாங்கும் இடம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது ....



கோவிலின் முகப்பு

மிக சிறப்பாக அத்தனை ஆளுமை




லங்காவி நுழைவாயில்

களுடனும் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு மாநாட்டில் இருந்து விடை பெற்று மீண்டும் அனைவரும் ஹோட்டலுக்கு திரும்பினோம்.. அன்று இரவு இப்போ நகரில் உள்ள மிக முக்கியமான மிக சிறந்த ஹோட்டலில் ஓய்வு எடுத்தோம்...

மறுநாள் காலை பினாங்கு செல்ல வேண்டும்.. பினாங்கு ஒரு மிகச் சிறந்த நகரம், அந்த காலத்தில் மலேசியா என்றாலே பினாங்கு என்று நினைக்கக் கூடிய அளவிற்கு மலேசியாவும் பினாங்கும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஒரு நகரம் அதற்கு தயாராக அன்று இரவே ஓய்வெடுத்து விட்டு மறுநாள் காலை பினாங்கிற்குச் செல்லத் தயாரானோம்... அதற்கு முன்பாக மலேசியா ரூபாய்க்கு ஈடாக நமது இந்திய ரூபாயில் மாற்றிக் கொள்வதற்கு அங்கு பல மையங்கள் இருக்கின்றன அங்கேச் சென்றதும் நமக்குத் தேவையான அளவிற்கு நம்முடைய நாட்டின் பணத்திற்கு தேவையான மதிப்பிற்கு மலேசியா ரிங்கிட்டாக மாற்றி கொள்ளலாம். அப்படி தேவையான அளவுக்கு பணத்தை மாற்றிக்கொண்டு பினாங்கிற்குப் புறப்பட்டோம். பினாங்கு செல்லும் வழி எல்லாம் வெறும் ரப்பர் தோட்டங்களை நான் முன்பே சொன்னது போல மலேசியா என்பது குறிப்பாக பாமாயில் என்று சொல்லப்படுகின்ற பனை மரத்தில் வருகின்ற எண்ணெயையும் ரப்பர் தோட்டங்களை மட்டுமே அதிகமாக கொண்டுள்ள ஒரு நாடு .. எனவே பினாங்கு மாநகரத்திற்கு இப்போ இருந்து செல்லும் வழி எங்கும் ரப்பர் தோட்டங்களும் பனை மரங்களும் காட்சியளித்தன...

இடையில் ஒரு இடத்தில் பெட்ரோலுக்காக வாகனத்தை நிறுத்திய பொழுது அங்கு தனித்தனியாக கழிவறைகள் இருந்தது கண்டு வியப்படைந்தேன்... சுத்தத்தை பேணி பாதுகாக்கின்ற வகையிலும் ஒவ்வொருவருக்கும் தனியாக வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது...

மறுநாள் பினாங்கு சுற்றி பார்க்க வேண்டியதாக திட்டம் போடப்பட்டிருந்தது அந்த வகையில் மாநாடு முடிந்து விட்டு இரவு ஹோட்டலுக்கு திரும்பி விட்டு தோட்டப்பள்ளி மிக மிக சிறப்பான ஒரு தோட்டப்பள்ளியாக இருந்தது ஏற்கனவே சென்ற பகுதிகளில் அதைப் பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன். அங்கிருந்து ஒரு மிகச் சிறந்த புத்தர் கோயில் மிகப்பெரிய ஒரு பழமை வாய்ந்த ஒரு புத்தர் கோயிலாக இருந்தது புத்தர் கோயிலையும் தோட்டப்பள்ளியும் பார்த்து

தண்ணீர் மலை முருகன் கோவில் உச்சி



விட்டு மிக சிறப்பான ஒரு இடமாக இருக்கக்கூடிய தண்ணீர் மலை முருகனை அன்று சந்தித்தோம்...

இதற்கு இடையில் குலதெய்வ வழி பாட்டை இன்றும் மலேசிய மக்கள் கடைபிடிக்கிறார்கள்...

தமிழகத்தில் உள்ளது போன்று முனீஸ்வரன் கோவிலை அங்கு பார்த்து வியந்தேன்... அங்கு நமது தமிழ் ஞானிகளின் சிலைகள் குறிப்பாக நமது திருவள்ளுவர் ஔவையார் போன்ற மிகச்சிறந்த ஞானிகள் உடைய புகைப்படங்களும் சிலைகளும் மிக அழகாக வடிவமைக்கப்பட்டிருந்தன... நமது இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் வணங்கப் படுகின்ற முனீஸ்வரன், நம் தமிழர்களால் மலேசியா மண்ணிலும் தொடர்ச்சியாக வணங்கி வருகின்றார்கள். தமிழகத்தில் நடப்பது போலவே குலதெய்வ கோயி லுக்கு பொங்கல் வைத்து வழிபாடு நடத்துகின்ற வழக்கமும் இருந்தது அந்த வகையில் அந்த கோயிலை தரிசித்து விட்டு அன்று மதிய உணவை கோவிலிலேயே நாங்கள் முடித்துக் கொண்டோம்... இந்திய பாரம்பரிய முறைப்படி இந்திய வகையில் அருமையான ஒரு உணவை உண்ணக்கூடிய ஒரு அற்புதமான வாய்ப்பு கிடைத்தது... அதன் தொடர்ச்சியாக தண்ணீர் மலை முருகனை சந்திப்பதற்காக அனைவரும் புறப்பட்டோம்....

தமிழ்நாட்டில் எப்படி முருகனுக்கு அறுபடை வீடுகள் உள்ளதோ அதுபோல மலேசியாவில் பத்துமலை, கல்லுமலை, தண்ணீர்மலை முருகன் கோவில்கள் சிறப்புற்று விளங்குகின்றன. பத்துமலை முருகன் கோவில் பற்றி எல்லோருக்கும் தெரிந்திருக்கும். மிக உயர்ந்த சிலையுடன் உள்ள அந்த முருகனை பற்றி தெரியாதோர் இருக்க முடியாது.

## மழை பெய்யுது

மழையினிலே நனைந்திடலாம் ஓடி வாருங்க
குழந்தைகளே மகிழ்வுடனே விரைந்து வாருங்க
கப்பல் விட்டு மகிழ்ந்திடலாம் காகிதத்திலே
தண்ணீரிலே காலை நனைத்து ஆடிடலாமே
தாயார் தரும் உணவினையும் ருசித்திடலாமே
தந்தை சொல்லும் அறிவுரையை கேட்டிடலாமே
வீட்டுக்குள்ளும் விளையாட்டுக்கள் ஆடி மகிழுவோம்
தொலைக்காட்சி பார்ப்பதை நாம் தவிர்த்திடலாமே

கவித்தென்றல்
**பாலக்கிருட்டிணன் வண்ணமுத்து**
நெல்லை

## லிமரைக்கூ கவிதைகள்

நந்தவனப் பூக்களின் வண்ணம்
பார்த்ததும் வியப்பைத் தந்து கொண்டிருக்க
பறிக்கத் தூண்டுதே எண்ணம்.

வாங்கிய கடன் அன்று
ஞாபகத்தை தூண்டி கொண்டு இருக்கிறதே
சம்பள நாளாம் இன்று

வரவு செலவுத் திட்டம்
தனக்கு ஏற்றவாறு போட்டுக் கொள்ளும்
நிதி அமைச்சரின் சட்டம்

வீதிக்கு வந்த போராட்டம்
விரைவாக கலைந்து செல்வதற்கு காரணம்
பொலிசாரின் தண்ணீர்ப் பிரயோகம்

அதிகரித்துச் செல்லும் விலைவாசி
எத்தனை நாள் தான் தாங்குவது
ஆட்சியை மாற்ற யோசி



சோ. ஸ்ரீதரன்
LK இலங்கை




ஈப்போ விழா நடைபெற்ற இடத்தின் அருகில் உள்ள கடைத்தெருவில்

ஆனால் மலேசியாவில் உள்ள தண்ணீர் மலை முருகன் என்ற இந்த முருகனை பற்றி அறிந்தவர் குறைவு. மலேசியாவில் 13 மாநிலங்களில் ஒரு மாநிலம் பினாங்கு தீவு. இதன் தலைநகரம் ஜார்ஜ் டவுன் இந்த நகரத்தில்தான் இந்த முருகன் கோவில் உள்ளது. கிபி 1810ல் இங்கு நிதி நிறுவனங்கள் நடத்தி வந்த நகரத்தார்கள் தண்ணீர்மலை அடிவாரத்தில் இருந்த வேலை எடுத்து சென்று மலைமேல் கோவில் எழுப்பி வழிபாடு செய்தனர்.

அந்த மாநிலத்தில் உள்ள ஆறுமுகம் பிள்ளை என்ற செல்வந்தர் இந்த கோவி லுக்கு அதிகம் திருப்பணிகள் செய்து கோவில் வளர்ச்சிக்கு உதவியுள்ளார்.

1991ம் ஆண்டிற்கு பிறகே இக்கோவில் வெளியுலகிற்கு அதிகம் தெரிய வந்தது.

உலகப்புகழ் பெற்ற லங்காவி கழுகுசிலை




இப்பகுதியில் வசித்து வந்த குவனராஜூ, டத்தோ ராஜசிங்கம் மற்றும் இந்து அறப்பணி வாரியமும் சேர்ந்து புதிய கோவில் எழுப்ப முயற்சி எடுக்கப்பட்டு மலையின் இடையில் இருந்த ஆலயம் மலையுச்சியில் கட்டப்பட்டு மிகப்பெரிய ராஜகோபுரத்துடன் 512 படிகள் ஏறிச் சென்று முருகனை தரிசிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு திருச்செந்தூர் முருகன் போல மிக அழகாக முருகன் காட்சி தருகிறார்.

பத்துமலை முருகன் போலவே இங்கும் சீனர்கள் அதிகம் வந்து வழிபடுகின்றனர். மலேசியா சென்றால் கண்டிப்பாக இந்த கோவில் பார்க்க வேண்டிய கோவில் ஆகும்.

தண்ணீர் மலை முருகன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு கோயில் தண்ணீர் மலை முருகன் கோயிலில் சென்று அங்கு இருந்துவிட்டு இரவு உணவு முடித்துக்கொண்டு மீண்டும் ஓட்டலுக்கு திரும்பினோம்..

தண்ணீர் மலை முருகன் கோயில் நமது பழனி மலை போலவே கிட்டத்தட்ட ஒரு 300 படிக்கட்டுகளைக் கொண்ட ஒரு கோவில் மாலை வேலையில் மழைத் தூறலோடு அங்கு நடந்து சென்றது அற்புதமான அனுபவமாக இருந்தது... அந்த கோயிலின் படிக்கட்டுகளில் இரு புறங்களும் மிகச் சிறப்பான தத்துவங்கள் அழகாக செதுக்கப்பட்டிருந்தன.. இடை யிடையே முருகப்பெருமானின் வரலாற்றை சொல்லும் பல்வேறு விதமான கதைகளும் காவியங்களும் அழகாக ஓவியமாக தீட்டப் பட்டிருந்தன தண்ணீர் மலை முருகன் கோவில் மிகச்சிறந்த முறையில் வடி வமைக்கப்பட்டிருந்தது.. உச்சியில் சென்று தண்ணீர் மலை முருகன் கோவிலில் இருந்து பினாங்கு மாநகரத்தை பார்ப்பது

என்பது ஒரு சுகமான அனுபவம் ...ஒரு மிகச்சிறந்த ஒரு காட்சியாக ஒட்டுமொத்த ஊரையும் ஒரு இடத்திலிருந்து பார்க்கக் கூடிய ஒரு அனுபவம் ஒரு அற்புதமான அனுபவமாக இருந்தது... நாங்கள் தண்ணீர் மலைமுருகன் கோவிலில் இருந்து இறங்கும் பொழுது ஏறக்குறைய இரவு நெருங்கி விட்டதால் அப்பொழுது விளக்கு ஒளி வெளிச்சத்தில் பினாங்கு மாநகரமே வண்ணக் கோலமாக காட்சி யளித்தது... கீழே திரும்பி வருகின்ற வழியில் மலை அடிவாரத்தில் ஒரு அருங்காட்சியகத்தை பார்க்க கூடிய வாய்ப்பு இருந்தது... ஆனால் நேரம் ஆகிவிட்டதால் அது பூட்டப்பட்டிருந்தது ஆனாலும் அங்கு தமிழ் பாரம்பரிய முறைப்படி செய்து வைக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு பொருட்கள் வெளியிலேயே காட்சிப்படுத்தப்பட்டிருந்தன... அங்கேயே இரவு உணவை முடித்துக் கொண்டு மீண்டும் ஹோட்டலுக்கு திரும்பினோம் மறுநாள் காலை மிக முக்கியமான ஒரு இடமாக லங்காவி என்ற ஒரு தீவுக்கு செல்ல வேண்டிய திட்டம் இருந்ததால் அதைப்பற்றி சிந்தித்துக் கொண்டு அளவளாவிக்கொண்டே ஓட்டலை வந்தடைந்தேன்... இரவு உறங்கு வதற்கு முன் லங்காவி செல்வதற்காக முன்னேற்பாடுகள் செய்துக் கொண்டோம்.



மலேசிய புத்தர் கோவிலில் கண்ட விசித்திரமான தெய்வ சிலை

லங்காவித் தீவு என்பது ஒரு மிகச் சிறந்த தீவு... உலகத்தின் ஆகச்சிறந்த சுற்றுலாத்தலங்களில் மிக முக்கியமான ஒரு சுற்றுலாத்தலமாக அந்த லங்காவி தீவு இருக்கிறது... மலேசியா நாட்டின் ஆளுகைக்கு உட்பட்டு இருக்கின்றது... லங்காவி தீவிற்கு செல்ல வேண்டுமென்றால் அதற்கான முன் அனுமதியை பெற வேண்டும் ... பயணம் செய்யும் கப்பலுக்கு முன்பதிவு செய்ய வேண்டும்...

லங்காவி அல்லது லங்காவி மாவட்டம் என்பது மலேசியா, கெடா மாநிலத்தில் அமைந்துள்ள ஒரு தீவுக் குழுமம் ஆகும். லங்காவி என்பது ஒரு தீவு; ஒரு நகரம்; ஒரு மாவட்டம் ஆகும். மலேசியப் பெருநிலத்தில் இருந்து 30 கி.மீ. அப்பால் அந்தமான் கடலும் மலாக்கா நீரிணையும் இணைகின்ற பகுதியில் இருக்கின்றது.

லங்காவி கழுகு சதுக்கம் லங்காவியின் ஒரு முக்கியமான சுற்றுலா தலம்.

இந்தத் தீவுக் குழுமத்தில் 104 தீவுகள்

## கடவுள் எங்கே

சாலையோரம் பசியில்
மயங்கிக் கிடந்தவருக்குச்
சோறுட்டுபவரின் நிறமே
கடவுளின் நிறமாக இருக்கலாம்.

அருவருப்பு இல்லாமல்
அடுத்தவர் கழிவைச்
சுத்தம் செய்யும்
துப்புரவு தொழிலாளியின்
முகம் போலத்தான்
இருக்க வேண்டும்
கடவுளின் முகம்.

கனிவோடு நோயாளிகளைக்
கவனித்துக் கொள்ளும்
செவிலியரின் நிறத்தில்
கடவுள் இருக்கலாம்

ஆதரவற்றோர்
இல்லத்தில்
அத்தனை பேரை
அரவணைத்துக்
காக்கும் காப்பாளரும்
கடவுளும் ஏறக்குறைய
ஒரே உயரமாக இருக்கலாம்.

அடுத்தவருக்கு ஆபத்து
உதவி தேவை
என்றவுடன் உடனே
ஓடுபவன் கிட்டத்தட்ட
கடவுளின் சாயலே தான்

கருணையோடு
உலகைக் காணும்
ஒவ்வொருவருமே
கடவுளாகவே
இருக்கக் கூடும்

**அ.ஈடித் ரேனா**

உள்ளன. அதில் லங்காவி தீவு என்பது ஆகப் பெரிய தீவு ஆகும். இந்தத் தீவைக் கெடாவின் பொன் கலன் (Jewel of Kedah மலாய் Langkawi Permata Kedah) என்றும் அழைப்பார்கள்.

இந்தத் தீவுக் குழும மாவட்டம், வடமேற்கு மலேசியாவின் கடற்கரையில் இருந்து சுமார் 30 கி.மீ. தொலைவிலும்; தாய்லாந்து எல்லையை ஒட்டி உள்ள கோ தருடா (Ko Tarutao) எனும் தீவிற்கு சில கிலோமீட்டர் தெற்கிலும் அமைந்துள்ளது..

லங்காவி தீவு கெடாவின் நிர்வாக மாவட்டங்களில் ஒன்றாகும். குவா அதன் பெரிய நகரமாக உள்ளது. லங்காவிக்கு அருகாமையில் அமைந்து இருக்கும் பந்தாய் செனாங் (Pantai Cenang) தீவு, மிகவும் பிரபலமான கடற்கரை மற்றும் சுற்றுலாப் பகுதியாகும்.

இந்தத் தீவுகள் கெடா மாநிலத்தின் ஒரு பகுதியாகும். லங்காவி தீவு தாய்லாந்து எல்லைக்கு அருகில் உள்ளது. இதன் மக்கள் தொகை 64,792. லங்காவி தீவிற்கு அருகாமையில் உள்ள தூபா தீவில் மட்டுமே மக்கள் வாழ்கின்றனர்.

மற்றத் தீவுகளில் மனிதக் குடியேற்றம் இல்லை. லங்காவித் தீவில் பெரிய பட்டணம் துவா ஆகும். லங்காவி தீவு ஒரு தீர்வையற்றச் சுற்றுலா மையமாகத் திகழ்கின்றது...

மலேசியாவின்மிக அருகில் உள்ள அந்த லங்காவி தீவு மிகச் சிறந்த ஒரு சொர்க்கபுரி... அந்த இகலோக சொர்க்கத்தில் கிடைத்த சுவையான அனுபவங்களை அடுத்த பகுதியில் பகிர்கிறேன்....!!!

தொடரும்...

# இப்படித் தான் கடந்து செல்கின்றேன்

நெஞ்சம் முழுதும் அத்தனை வலிகள்
என் சிந்தனைகள் அனைத்தும் மாறிப்போயின
என் எண்ணங்கள் எல்லாம் மறைந்தன
நோக்கம் எல்லாம் காணாமல் போனது
ஓடும் வாழ்க்கையில் எதோ ஒரு திசையில்
நானும் பயணித்துக் கொண்டு தான் இருக்கின்றேன்
ஆம். இப்படித்தான் கடந்து செல்கின்றேன்....
இதற்கெல்லாம் காரணம் என்னவென்று
கேட்டால் உன்னையும் என்னையும் சேர்த்து
உருவாக்கிச் சென்ற வாழ்க்கைதான் அந்த
வாழ்க்கை காணாமல் போனது தான்
இல்லாது போன அந்த வாழ்க்கையில் நீயும்
நானும் ஒன்றாய்ப் பயணித்த நினைவுகள்
எல்லாம் என் நெஞ்சத்தை உருக்குலைக்கிறது.
ஆம்... இப்படித்தான் கடந்து செல்கின்றேன்....
யாரிடமும் பேச பிடிக்கவில்லை. என்னை
பிறரிடம் இருந்து விலக்கிக் கொள்கிறேன்
என்னை தனிமை படுத்தி கொள்கிறேன்
என் தனிமை எப்படி இருக்கிறது தெரியுமா.
உன்னுடைய சிரிப்பு, குரல் சத்தம் மட்டும்
என்னைச் சிதறடித்து கொண்டிருக்கிறது
புன்னகைத்த உன் முகம் கண்களை கலங்கடித்து
கொண்டிருக்கிறது மனம் முழுதும் உந்தன்
நினைவுகள் என்னில் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது
இவ்வாறு தான் அந்த தனிமை என்னை
சித்திரவதை செய்து கொண்டிருக்கும். இருப்பினும்
அந்த தனிமையை தான் தேடுகிறேன்
ஆம். இப்படித்தான் கடந்து செல்கின்றேன்..
உனது பிரிவு என்னை மொத்தமாக மாற்றிப்
போட்டு விட்டது. சுக்கு நூறாக உடைத்து விட்டது
எனக்கென இருப்பதை தவிர்த்து என்னை
சார்ந்தவர்களுக்காகவே இருப்பது போல் உணர்கின்றேன்
இப்பூவுலகில் எவர் வாழ்க்கையிலும் அனைத்தும்
நிறைந்திருப்ப தில்லை. நீ இருந்திருந்தால்
என்னுடைய வாழ்க்கையில் அனைத்தும் என்றும்
நிறைந்திருக்கும். மனம் முழுதும் அத்தனை வலிகள்
இந்த வலிகளோடு மட்டுமே எனது வாழ்க்கை பயணம்
ஆம்... இப்படித்தான் கடந்து செல்கின்றேன்....

பா. மயில்சங்கர், எம்.இ.,
எட்டயபுரம், தூத்துக்குடி - 628 902

# யார் சொல்வார் ஆறுதல்...

கவிதையில் முடியாத கண்ணீர்
கடல் பிளந்து ஓடும் செந்நீர்...

சுதந்திர தாகம்
தேகங்கள் எரிந்த பின்னும்
புன்னகைத்தே சாய்கிறது...

மண்டைக்குள் அதிரும்
வெடிகுண்டின் சத்தம்
எப்படி வருகிறதோ
பச்சைக் குழந்தைக்கும்
கலிமாவின் மொத்தம்...?

மேகங்கள் கூட அழுதன
சிசுக்களின் சிதறல் கண்டு
ஈனப் பிறவியிவன்
மழையென விசுறுகிறான்
செல்களைக் கொண்டு...

பூங்கொத்தாய் சிரிக்கும் மழலைகளை
கொத்து கொத்தாக கொன்று விட
எப்படித்தான் முடிகிறதோ...?

உங்கள் அநியாயம் கண்டு
அழுவதற்கே
ஒரு ஆத்மா போதவில்லை.
இத்தனை உயிர்களை அழித்தவர்க்கு
ஏது விமோசனம்...?

உலகத்தின் வெறுப்பு
உங்களை காறி உமிழ்கிறது
நரகத்தின் நெருப்பும்
உங்களுக்காகத்தானே...?

நிலத்தை வென்றவன் மனிதனென
எவன் சொன்னான்
உள்ளங்களை வென்றவனைத்தானே
உலகமே கொண்டாடுகிறது...

இன்னா செய்தவனுக்கும் நன்மையெனில்
இஸ்ரேலுக்கு என்ன
செய்யலாம்...?

எழுத முடியாமல்
அழுகிறது வார்த்தைகள்
பரிதவிக்கும் பாலஸ்தீனுக்கு
யார் தருவார் ஆறுதல்...?

**மாத்தளை ஜெஸீமா ஹமீட்**

---

## புத்தாண்டு பிறப்பு

ஆண்டது போனது அல்லலும் தந்தளித்தே
மீண்டெழுந்து வந்தோமே மீண்டுமிங்கே – வேண்டி
வருகிற ஆண்டில் வலிகளைப் போக்கி
அருள்வாய் இறையே அணைத்து.

இன்பம் பெருக இனிதான புத்தாண்டே
துன்ப மகற்றத் துணையாவாய் – என்றுமே
வாழ்வில் மகிழ்வை வழங்கிட வந்துதித்துத்
தாழ்வினை நீக்கியே தா

பொன்னான புத்தாண்டே பொங்கி வருகவே
நன்மைகள் யாவர்க்கும் நல்கவே – நன்றே
சுகந்தரும் இன்பத்தால் சூழ்நிலை மாற்றி
அகத்திற் கினிமை யளி

## பொங்கல்

வான்மழை வந்து வயல்வள மோங்கிட
ஆன்மடி பால்பொழிய ஆனந்தம் – யான்பெற
கோன்சிறக்க நாட்டிலினில் குற்றங்கள் நீங்கிடத்
தான்பிறப்பாய் தங்கமெனத் தை!

பொன்னி நதியால் பொலிவாய் விளைந்திட
நன்மை பெருக நலம்பயக்கும் – பொன்னாக
பொற்காலந் தோன்றிடப் பொங்கலும் வைத்துநாம்
பெற்றிடு மின்பம் பெரிது

வேளாண் குடியினர் வேண்டுவ தெல்லாமே
மீளாத் துயரிடை மீண்டெழும் – தாளாது
நன்செய் நிலத்திலே நன்றாகப் பாடுபட்டே
இன்பமாய்ப் பொங்கிடுவ ரிங்கு

**மலர்மைந்தன்**
கல்பாக்கம்

# எட்டயபுரத்து சுப்பிரமணியன்

பாரதி என்றொரு புலவன் வந்தான்
    பைந்தமிழ் அன்று தழைத்தது
வேரதில் தண்ணிய வெள்ளம் பாய்ந்து
    வெண்டமிழ் புதிதாய் முளைத்தது

புத்தம் புதிய சீரும் சிறப்பும்
    பூத்துக் காய்த்துக் கனிந்தது
நித்தம் நித்தம் நிறைதமிழ் கணக்கில்
    நீள்தமிழ்க் கவிதை கிடைத்தது

பழமை பாடிய வழமை மாற்றி
    புதுமை பாடிய பூமகன்
அழலை பாய்ந்த ஆருயிர்க் கெல்லாம்
    ஆற்றல் தந்த நாமகன்

பெண்மையைப் போற்றி பெருமைகள் போற்றி
    நன்மைகள் ஊட்டிய நாயகன்
உண்மையப் பேசி உரிமைகள் கேட்டு
    உரக்கவே முழங்கிய வாயவன்

அக்கினிக் குஞ்சை அருந்தமிழ் மொழியில்
    அடைத்துப் பதுக்கிக் காத்தவன்
மக்களின் நெஞ்சில் விடுதலை நெருப்பை
    மணித்தமிழ் தறியில் யாத்தவன்

சாதிகள் இல்லை சமயங்கள் இல்லை
    சழக்குகள் பலவும் மாய்த்தவன்
நீதியில் ஒற்றைச் சமத்துவம் வேண்டி
    நிறைதமிழ் மொழியில் ஆர்த்தவன்

பத்துடன் நான்கு வயதிலே அரிய
    பாரதி என்னும் பட்டம்
முத்திரைத் தமிழில் மூப்பெதும் இன்றி
    முழங்குது அவனது சட்டம்

காண்பதில் எல்லாம் கவிதையைக் கண்டான்
    காற்றும் மலையும் சிரித்தன
வான்முகி லோடு பறவைகள் குருவிகள்
    வலம்வந்து தமிழை விரித்தன

எட்டய புரத்தில் எரிமலை இல்லை
    எப்படி புதிதாய்ப் பிறந்தது
தொட்டிடத் தோட்டாப் பறக்குது என்று
    வெள்ளையர் ஆட்சி பயந்தது

ஆண்மை வீரம் ஆற்றல் இரக்கம்
    அனைத்தும் வாய்ந்த புலவன்
கேண்மை சூழக் கவிதை புனைந்து
    காவிய மான தலைவன்

சுப்பிர மணியன் பாரதி ஆனான்
    சூரியன் மண்ணில் பிறந்தது
அப்புற மென்ன ஆயிரம் சிறப்புகள்
    அருந்தமிழ் வானில் ஒளிர்ந்தது

பாரதி என்னும் பாட்டனை நமது
    பாட்டுத் தலைவனைப் பாடுவோம்
சீரது தளையது சிறந்திட அந்தச்
    சீலனைப் பாடி ஆடுவோம்





கவிச்சிங்கம் சித்தார்த் பாண்டியன்

# மகாகவி பாரதி வாழ்க!

பன்மொழி பயின்றும் பைந்தமிழ் சுவையே
பாரதி நாவினில் இனிக்க
தன்மொழி தமிழே சிறப்பென மொழிந்து
தமிழ்ப்பணி சுகமெனச் செய்தான்!
மின்னிடும் எழுத்தால் தீப்பொறிச் சொல்லால்
மேதினில் புரட்சிகள் விதைத்தான்
தென்னகப் புலவன் ஒற்றுமை உணர்த்த
சீருடை உடுத்தியே மகிழ்ந்தான்!

எட்டைய புரத்து புதுக்கவி வித்து
இசையினில் புதுமைகள் வடித்தான்
அட்டையாய் ஒட்டிக் குருதியைக் குடிக்கும்
அவனியில் சாதியை வெறுத்தான்!
கொட்டிடும் மழையாய் தேன்கவி சிந்து
கோமகன் பாடியே தந்தான்!
தட்டியே எழுப்பும் நெஞ்சுரப் பாட்டால்
சக்தியை மனத்தினில் கொடுத்தான்!

அண்டமே அதிரும் வீறுடை சொல்லும்
அக்கினிப் பார்வையும் கொண்டான்!
பெண்களைப் பெரிதும் போற்றியே பாடி
பெண்ணறம் பேணிட வைத்தான்!
கண்ணிலே வண்ணக் கற்பனைக் கூட்டி
காட்சிகள் எழுத்தினில் வரைந்தான்
மண்ணகம் போற்றும் விண்ணகம் போற்றும்
மகாகவி பாரதி வாழ்க!


செ.நிறைமதி
மதுரை.




# வீரியமிக்க வரிகளால் தாய்த் தமிழாய் உயர்ந்தவன்..

முண்டாசு கவி பாரதி
இவன்
கண்ணம்மாவின்
காதலன்...

காணி நிலம்
கேட்டவன்...

நாணி நின்ற
பெண்களை..
தலை நிமிரச்
சொன்னவன்...

அவனுள்ளும்
அலையோடிய
ஆணாதிக்கத்தை
அடியோடு அழித்தவர்
நிவேதிதா என்ற
ஒரு மாது...

அதன் பின் தான்

புதுமைப் பெண்ணை
புரட்சி செய்ய
அழைத்தான்..

கண்கள் மூடும்
வரை..
கவிதைக்காக
உழைத்தான்...

இவன்
குயில் பாட்டின்
குரலானான்..
புது கவிதைக்கு
விரலானான்...

காதல் காதல் காதல்
காதல் போயின்
சாதல் சாதல் சாதல்
என்றான்
ஷெல்லியின் தாசன்

காளியை பாடினான்
கன்னியையும்
கண்ணனையும்
கூட பாடினான்

பாஞ்சாலி சபதத்தையும்
பண்ணாய் பாடினான்

விடுதலைக்கு
கவிதை வாள்
கொண்டு வந்தவன்

இப்படியாக எண்ணிலா
எழுச்சிக்கு
வித்தானவன்
எம் பாட்டன்
இந்த எட்டயபுரத்து
சுப்பிரமணி


லெட்சுமி விசாகன்
தேனி




## எட்டயபுரத்து சுப்பிரமணியன்...

ஞாலம் வியந்திடும் கவிஞன்
நாளும் தமிழ் வளர்த்த தமிழன்!
சிந்தையில் இவனோ சித்தன்
சிகரம் தொட்ட கவிபித்தன்!.
காக்கை குருவி கழுதையையும்
காதலித்த மகா புத்தன்!.

முண்டாசு கட்டி வந்த
புதுக்கவியின் மூத்தபிள்ளை!
இவர் முன்னாடி வந்தாலே
இவர் பாட்டு எடுத்து முன்னாலே வந்தாலே!
தெறித்து ஓடியது வெள்ளையர் கூட்டம்!
தெருவெல்லாம் தமிழ் மணக்க வைத்த
தேசியக் கவி இவர்தானே!.



புரட்சிக்கு எல்லாம்
பெரும் புரட்சிக்காரன்
என் பாட்டன் நீ!.
யுகங்கள் ஆனாலும்
தமிழின் அகமாய் வாழும்
அழிவில்லாத தமிழ் சீரஞ்சீவி!.

உப்பில் பிறந்தவன்
உக்கிரம் நிறைந்தவன்!
இவர் வரிகள் வெறும் வார்த்தை
அல்ல!!...
வேங்கையின் சீற்றம்!.

இவரை படித்தால்
தேன் ஊறும்.
பார்த்தால் கண்ணை பார்த்தால்
வீரம் தெறிக்கும்
நெருப்பு குழம்பு வெடிக்கும்
நரம்பு புடைக்கும்
புரட்சி பிறக்கும்
பூமியில் தமிழ் சிறக்கும்.

காசுக்கு பாட்டெழுதி காணாமல் போன
கவிஞர்கள் கூட்டம் பல!.
ஆகா ஓகோ என்று
அள்ளி விட்டு பரிசு பெற்று போன கூட்டமும் பல!
காய்ந்து போனாலும்
பசியால் காய்ந்து போனாலும்
யாருக்கும் சாய்ந்து போகாத கவி
அதனால் நீ மகாகவி!.

கேட்பதிலும்
பேராசை இல்லாத மனிதர்
காணி நிலம் கேட்டார்!
ரசிப்பதிலோ பேராசைக்காரர்
இயற்கை ரசிப்பதிலும்
தமிழை சுவாசிப்பதிலும்
பெரும் பேராசைக்காரர்!

ஆடத் தோன்றினால் ஆடுவார்
பாடத் தோன்றினால் பாடுவார்
ரசிக்க தோன்றினால் ரசிப்பார்
நேசிக்க தோன்றினால் நேசிப்பார்
மீசை முறுக்க தோன்றினால்
முறுக்குவார்!– எவருக்கும் அஞ்சாமல்
யாருக்கும் பணியாமல்
அவருக்கு என்ன தோன்றியதோ
அப்படியே வாழ்ந்து சென்ற
மாமனிதர்– இனி எவர் வரும்
இவர் போல!.

இவரை காதலிக்காத
எவரும் தமிழர் இல்லை!
இவர் காற்று படாத யாரும்
இந்த மண்ணில் கவிஞர் இல்லை!.
முறுக்கு மீசை
தமிழ் செருக்கு கொண்ட முறுக்கு மீசை!
யார் யார் என்று கேட்டாலும்
பார் பார் என்று பார் போற்றும்
எங்கள் பாரதியார் இவர்!.
எட்டையபுரத்து சுப்ரமணிய பாரதி இவர்!.


**முனைவர் சா. சே.ராஜா**
மதுரை




•

தினமொரு விதை
ஈரத்திற்கு கொஞ்சம் தண்ணீர்
சுவரில்லாத பகையொன்று
வளர்வது நிச்சயம்

•

மையம் பிடித்து செக்கினை
சுற்றுகிறது மாடு
பணத்திற்காக உடன் சுற்றுகிறது
வாலில்லாத ஆறாம் அறிவு

•

அவன் யோசிக்க
தொடங்கியப்பின்
எனக்குள் எழுகிறது
அவனை மறித்த கவிதை

•

ஒரிரு பக்கம்
எனக்கு போதுமானது
புத்தகத்தை மூடியதும்
இறுதியாக கூறவும் கவிதை

•

வெள்ளம் வந்ததென்றுதான்
படகில் சென்றேன்
உள்ளம் நிறைந்தவர்
இன்றும் நடைபாதையில்

•

ஆழ்ந்து வேண்டியவளுக்கு
அளவுமீறி அருள் வந்தது
மலடியென்ற சொல் கேட்க
மலையேறியது அம்மன்

•

பெருங்காட்டாற்றுள் அமைதி
பேரலையில் சிறு மீன்
படகுகளுக்கு மட்டும்
உறவுகளாய் கயிறும் கரையும்

•

மரங்கொத்தியின் அடைக்கலத்தில்
கருநாகத்தின் தஞ்சம்
குஞ்சுகளை பெற்றெடுக்க ஏனோ
அஞ்சுகிறது பறவை

•

ஒரு பூவை பறிக்க
விதை விதைக்க வேண்டும்
வாசனையை பிடித்துவைக்க
தயாராகிறது உலகம்

•

ஆத்திரமாக பேசுபவன்
எதிரே அமைதியாக ஒருவன்
யோசனைகள் மட்டும்
பேசிக்கொள்கிறது விழிகளால்

•

பெருவெளியில் நிச்சயம்
ஓர் வெண்ணிலவு
அருகில் இருப்பவளை
எப்படி வான் சேர்ப்பது

•

என்னிடம் பணமில்லை
எழுத்துக்கள் உண்டு
மாதாமாதம் மீண்டும்
எழுதுகிறேன் வறுமை கவிதை

•

மார்கழி மாதமென்றதும்
பீடையென்கிறார்கள் முன்னோர்
முப்பது நாட்களும் பூக்கிறது
முற்றத்தில் பரங்கிப் பூவொன்று

•

அணிந்தவன் ஆடைக்குள்
அந்தரங்கம் என்பது
இருட்டில் விழுந்ததோர்
மின்னல் வெட்டாகதானிருக்கும்

•

நான் காமம் எழுதினேன்
அவர் காதல் எழுதினார்
இரண்டிலும் பற்றிக் கொண்டது
இரட்டை மொழி தீ

•

இரண்டு அறைகளுக்கு
இடையில் சுவருள்ளது
சாய்ந்த மனங்களுக்கோ
சுவர் ஆறுதலாகிறது

•

தெய்வங்களை வரிசைப்படுத்தி
வாயிலில் நிற்கிறேன்
இன்றும் கையேந்தி நிற்கிறான்
கோபுரம் தாங்கிய ஒருவன்

•

சுமை பழுத்த தோள்களுக்கு
அப்பாவின் சாயல்
இன்றுவரை மின்னுகிறார்
மகனின் சாயலில் அப்பா

•

அவர் பார்த்துவிடுவார்
இவர் கேட்டுவிடுவார்
இருளை தின்றுவிட
ஒளிக்கும் திறனுண்டு

•

சாளரங்களில் இடம் விட்டு
மழையை வரவழைக்கிறேன்
உடல் நனைத்து
உள்ளம் நனைக்கிறது துளி

•

அவதாரங்கள் பல எடுத்தும்
பசியை மட்டும் போக்கவில்லை
எவராக பார்க்கிறோமோ
அவராகவே காட்சிதரும் கடவுள்

## வெந்து தணிந்தது காடு! (அம்மானை)

### கவித்திலகம் வெற்றிப்பேரொளி

ஞானத் திருவிளக்காய் நல்லொளி சிந்துகின்ற
மோனப் பெருவடிவாம் முன்னவர்யார் அம்மானை?
மோனப் பெருவடிவாம் முன்னவர் மாற்றார்தம்
கூனை நிமிர்த்துகின்ற கூரறிவர் அம்மானை!
கோனைநம் பாரதியைப் பாடேலோர் அம்மானை!

'வெந்து தணிந்தது காடென' உள்முகம்
முந்தி யுரைத்ததும் யார்மொழிதான் அம்மானை?
சிந்து கவியெல்லாம் சீர்நதியாய் பாய்கின்ற
சந்தமொழி பாரதியார் சாற்றியதாம் அம்மானை!
தந்தப்பல் லக்கேற்றிப் பாடேலோர் அம்மானை!

காணா விடுதலையைக் கண்டுரைத்தே ஆடிமகிழ்ப்
பூணாரம் கொண்டாரைச் சொல்லாயோ அம்மானை?
•மாணாராம் ஆங்கிலேயர் மாமருட்சிக் கொண்டோட்டி
வாணாள் முடிந்திடினும் வாழ்கின்றார் அம்மானை!
தூணாம் பாரதியைப் பாடேலோர் அம்மானை!

ஜெயபே ரிகைகொட்டத் தீயாய் எழுந்த
புயற்கவிப் போர்முரசம் பேர்யாதோ அம்மானை?
புயற்கவிப் போர்முரசம் எட்டையபு ரத்தான்!
மயக்கொழித்த நல்மருந்து மாக்கவிஅம் மானை!
பயமறியாப் பாரதியைப் பாடேலோர் அம்மானை!

ஆணுக்குப் பெண்சம மென்றிங்கே சங்கல்பம்
பூணுதற்குச் சங்கொலித் தார்யார்தான் அம்மானை!
நாணுதற்கு இல்லையவள் நானிலத்தில் பெண்ணுரிமை
காணுதற் கென்ற கவியரிமா அம்மானை!
மாணும் பாரதியைப் பாடேலோர் அம்மானை!

'வெந்து தணிந்த'தந்த தத்துவத்தைப் பாடிவைத்த
மந்திரப் பாவலனும் யார்கூறாய் அம்மானை?
அந்தமிலா வாழ்வுடையோன்! அக்கினிக் குஞ்சுகண்டோன்!
துந்துபி பாரதி தூய்தவத்தோன் அம்மானை!
சந்திர சூரியனைப் பாடேலோர் அம்மானை!

தத்த ரிகிடதித் தோமெனும் தாண்டவத்தோன்
முத்தன் புதுச்சித்தன் மூலவன்யார் அம்மானை?
அத்தனோர் அக்கினிக் குஞ்சுகண்ட ஆதித்தீ!
சித்தமதைத் தானெரித்த சீர்புலவன் அம்மானை!
குத்துங்கூர் மீசையனைப் பாடேலோர் அம்மானை!

தேசமும் தெய்வமும் தேசுமிகு கண்களெனும்
நேசமும் நெஞ்சமும் நேர்ந்தோன்யார் அம்மானை?
மாசறுசெல் லம்மாள் மனங்கொள் மணவாளன்!
தாசனாய் சுப்புரத்தி னம்கொண்டோன் அம்மானை!
சாசனமாய் பாரதியைப் பாடேலோர் அம்மானை!

(• மாணார் = பகைவர்)

## துளிப்பாக்கள்

நீர் தெளித்தான்
மலர் எடை கூடின
வியாபாரியின் யுக்தி

காய்ந்த சருகுகள்
அவ்வப்போது இடம்பெயர்வு
சூறாவளி உபயம்

சாலையோரத்தில்
அன்றாட இசைக்கச்சேரி
விழிகளற்றோர் நடத்துகிறார்கள்

புத்தக அலமாரி
மெல்ல அரித்துகொண்டிருக்கிறது
கறையான்.

வீட்டின் கூரைமேல்
பற்றிப் படர்த்திடும் வாசத்துடன்
மல்லிகை கொடி.

தாவியது குரங்கு
மரத்திலிருந்து தரையில்
விழுந்தது கனிகள்

விடியல் தேநீர்
சட்டென எழுந்திருக்கிறான்
தேர்வு நெருங்கும் வேளை.

புற்கள் மீதான
பனித்துளிகளெல்லாம் மாயம்
ஆதவன் உதயம்

அறுசுவை உணவு
தினந்தோறும் உண்டு மகிழ்ந்தோம்
செட்டிநாடு உணவகம்.

இரவு பத்துமணி
கடற்கரையில் கூட்டம் நிரம்பியபடி
சுட்டெரித்த கத்திரி வெயில்.

R.S.பாலகுமார்.M.A.,
CHENNAI

# அம்மாவின் காதலன்

ஓசை மனோ

கொஞ்ச நாட்களாக அம்மாவில் சில மாறுதல்களை அவதானிக்கத் தொடங்கினேன். அந்த அவதானிப்பு என்னையும் மீறி வளர்ந்துகொண்டே போனது. அம்மா இப்போ இடையிடையே தன்பாட்டில் சிரிக்கிறார். தனது அலங்காரங்களில் அதிக அக்கறை செலுத்துகிறார். முன்பெல்லாம் நான் நினைவூட்டி நெருக்கும்போதுதான் தலைக்கு சாயம் தீட்டுவார். இப்போது மாதம் இரண்டு தடவை, சிலவேளைகளில் மூன்றுதடவையும் கூட நடக்கிறது. தொலைபேசி சத்தம் கேட்டால் அம்மா பரபரப்பாக ஓடுகிறார். கையில் என்ன வேலையாக இருந்தாலும் அதை அப்படியே போட்டுவிட்டு ஓடிவிடுகிறார். இரண்டு தடவைகள், சமைத்துக் கொண்டிருக்கும்போதும் இப்படி நடந்தது. சட்டி அடிப்பிடித்தது மட்டுமல்ல வீடெல்லாம் பெரும் புகை. பெரும் ஆபத்தில்கூட முடிந்திருக்கலாம்.

''அய்யய்யோ.. ஏன் பிள்ளை நீ கொஞ்சம் பாத்திருக்கலாமல்லே...''

நான் என்னத்தைப் பாக்கிறது. நான் அம்மாவையே பார்த்துக்கொண்டு நின்றேன். அம்மா தன் உதட்டுக்குள் ஒரு புன்னகையோடு கறிச்சட்டியை சரியை செய்யும் வேலையில் மூழ்கியிருந்தார். இந்த அமளியிலும் கூட அம்மாவின் மூளை எங்கெங்கோ அலைந்து திரிந்ததை என்னால் அவதானிக்கமுடிந்தது.

பேரப்பிள்ளைகளுடன்கூட செலவழிக்கும் அம்மாவின் நேரம் குறைந்து விட்டது. சிலவேளைகளில் சினந்து விழுகிறார். அல்லது தூக்கிவைத்து அளவுக்கதிகமாக செல்லம் பொழிகிறார்

அம்மாவின் இந்த மாற்றத்தை என்னுடைய கணவருடன் பகிர்ந்து கொண்டபோது அவர் என்னை முறைத்தார். எதுவும் பேசவில்லை. எனக்குப் பயமாக இருந்தது. அக்காவுடன் தொலைபேசியில் பேசினேன். அக்கா ஏற்கனவே தன் குடும்பத்தகராறில் மூழ்கிக்கிடப்பவள்.

''போடி விசரி'' என்று என்னைத் திட்டினாள். அண்ணாவுடன் நான் எதையும் பேசமுடியாது. அவன் என் வயசையும் பார்க்காது சிலவேளை எனக்கு கைநீட்டியும் விடுவான். அம்மாவுடன் பேசலாம் என்றால், எப்படிப் பேசுவது? அது சிலவேளை அம்மாவை காயப்படுத்தியும் விடலாம்.

எனக்கு மூன்று வயதாக இருக்கும்போது அப்பா இறந்துவிட்டார். அப்போது அம்மாவுக்கு வயது முப்பத்தியெட்டு. தனியாளாக நின்று எங்களை ஆளாக்க எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார். சந்தோசம் என்றாலே என்ன என்று

தெரியாத அளவுக்கு அம்மாவின் காலம் கடந்திருக்கும். நாங்கள் திருமணமாகி ஒரு நிலைக்கு வந்தபின்னர்தான் அம்மாவின் முகத்தில் புன்னகை பூத்திருக்கும். பேரப் பிள்ளைகள் அம்மாவுக்குப் பெரும் வரம்.

கடந்த ஆண்டு, அம்மாவின் பாட சாலை பழையமாணவர் ஒன்றுகூடலுக்கு அம்மாவையும் அழைத்தார்கள். அம்மா நெடுகிலும் மாட்டேன் என்றே அடம் பிடித்தார். அங்க போனால் தேவையில்லாத கதைகள் வரும். தேவையில்லாத கதைகள் கிளறுப்படும். எல்லாரும் குடும்பமாக வர நான் தனியப்போறது அவ்வளவு நல்லா இருக்காது என்று காரணங்களை அடுக்கிக்கொண்டே போனார்.

நான் விடாப்பிடியாக நின்றேன். "பாடசாலைக் காலங்கள் எவ்வளவு இனிமையானவை. ஏன் அதை மீட்டிப் பார்க்கக்கூடாது. அறுபது வயது என்ன வயதா? இனிதான் வாழவேண்டிய வயது. வாழப்போகும் ஒவ்வொரு மணித்துளி களையும் மகிழ்ச்சியாக கழிக்கவேணும். நீங்கள் சந்தோசமாக போயிற்று வாங்கோ" என்று நாங்கள் காரில் கொண்டுபோய் இறக்கிவிட்டு வந்தோம். திரும்பி வரும் போது அம்மா தன் நண்பரின் காரில் வந்திறங்கினார்.

அதன் பிற்பாடு அம்மா தொலைபேசி யில் மூழ்கிக்கிடந்தார்.

தன்னுடைய நண்பர்கள் பற்றி அம்மா சிலாகிக்கும்போது சிவகலா என்பவர் பற்றிய சிலாகிப்பு சற்று மிகையாகவே இருந்தது. மெது மெதுவாக தன் பளளிக் கதைகளை தன்னையறியாமலே அம்மா என்னிடம் கசியவிட்டார். அதிலிருந்து ஒரு முக்கிய புள்ளியை ஊகிப்பது எனக்கு அவ்வளவு சிரமமாக இருக்கவில்லை. பள்ளிக்காதல் படலை வரை மட்டுமென்று ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் என்னுடைய அப்பம்மா சொன்னது நினைவில் வந்து போனது.

எனக்குப் புதினம் அறியும் ஆவல் அதிகரித்தது. நான் "பிறகு...பிறகு...பேந்து.." என்று சிரித்துச் சிரித்துக் கேட்டேன். அம்மா வெட்கப்பட்டார்.

"சும்மா போடி" என்று என்னைச் செல்லமாக இடித்தார்.

வெட்கத்தைப்பார். ஓ! இந்த வயதிலும் வெட்கம் வருமா? எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அம்மா கவிதைகள் எழுதத் தொடங்கி னார். அவை கன்னா பின்னா என்றிருந்தன. ஆனாலும் மகிழ்வூட்டும் பல சொற்கள் கவிதைகளில் தெறித்தன.

அம்மா சந்தோசமாக இருப்பது எனக்கு மகிழ்வாய் இருந்தாலும், எங்கேயோ ஏதோ என் மனதுக்குள் இடறிக் கொண்டேயிருந்தது.



ஒருநாள் அம்மா தன் நண்பரை வீட்டுக்கு அழைத்திருந்தார். வந்தவரை சிவகலா மாமா என்று எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர் தலையில் முடியேதும் இருக்கவில்லை. ஆனாலும் வாட்டசாட்டமாக இருந்தார். அவர் எல்லோருடனும் அதிகம்பேசும் பேர்வழி யாக இருக்கவில்லை. என்னிடம் பழகு வதற்குகூட சற்று கூச்சப்பட்டதை அவதானிக்கமுடிந்தது. விலை உயர்ந்த கார் வைத்திருந்தார். வரும்போது பெரிய பூங்கொத்துடனும், ஒரு பெரிய சொக்லேற் பெட்டியுடனும் வந்தார்.

பின்னர் அடிக்கடி வீட்டுக்கு வந்து போனார். என்னுடைய கணவருக்கு இது அவ்வளாகப் பிடிக்கவில்லை. நான் ஒரு ஐரோப்பியப் பெண்ணாக இருந்திருந்தால் இலகுவாகக் கடந்திருப்பேன். அம்மா வின் மகிழ்சியை எண்ணிப் பூரிப்டைந் திருப்பேன். இன்னும் அடுத்தவர்கள் என்ன நினைப்பார்கள்! என்ன சொல்வார்கள்! என்று குழம்பியிருக்க மாட்டேன். இப்போது அடுத்தவர் பற்றிய வீணான எண்ணங்கள் என் மூளையை நிரப்புகின்றன. சரி, நான் என்னைச் சரி செய்து கொள்ள முயற்சிக்கலாம். முயற்சித்தாலும் என் கணவரை நினைக்க பயம் என்னை இறுகப்பற்றிக் கொண்டே வந்தது. அவரும் ஐரோப்பிய நாடொன்றில் வாழ்ந் தாலும் என் அளவிற்குகூட அவரால் மாறமுடியவில்லை. அவர் இன்னும் அதிகமாக எங்கள் பிள்ளைகளின் எதிர் காலம் பற்றிப் பயந்தார்.

என்னுடைய பிறந்த நாளுக்கு சிவகலா மாமா மடிக்கணினி ஒன்றைப் பரிசளித்தார். அது எனக்கு தேவையில்லாத ஒன்றாகவே பட்டது. என் கணவர் அதை ஒரு அருவருப்பான தீண்டத்தகாத பொருளாகவே பார்த்தார். அது வீட்டின் ஒரு மூலையில் அனாதரவாகக் கிடந்தது.

அம்மாவின் கணினி வைரஸ் பிரச்சினை யால் இடறுப்பட்டது. அது பாவிக்கச் சிரமமானதும் பழையதுமான ஒன்று. இனி, அதைத் திருத்திக் கொடுக்குமாறு என் கணவரிடம் கேட்கவும் தயக்கமாக இருந்தது. சிவகலா மாமா தந்த கணினியை அம்மாவிடம் கொடுத்தேன். அம்மா மிக ஆவலோடு வாங்கி பாவிக்கத் தொடங்கினார். அந்தக்கணினி அம்மா வுக்கு பல புதியபுதிய விசயங்களை கற்பித்தது. அம்மாவும் ஆர்வமாய்க் கற்றுக் கொண்டிருந்தார்.

எதிர்பாராத ஒரு மாலைப்பொழுது. சிவகலா மாமா வீட்டுக்கு வந்தார். அம்மா சிரித்த முகத்தோடு "வாங்கோ" என்றார். என் கணவர் என்னை "வாரும் வெளியே போவம்" என்றார். எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. இருந்தாலும், நான் சற்றுத் தாமதமாக்கிக் கிளம்பினேன். அம்மா என்னை ஒரு மாதிரிப் பார்த்தார். நான் சிரித்துச் சமாளித்தேன். போகும் போது என் கணவர் கதவை அடித்துச் சாத்தினார். நான் திடுக்கிட்டேன். நிலைமையைச் சமாளிக்க நான் கதவைத் திரும்பத் திறந்து சாத்தினேன். சாத்தும்போது, "வெளியில சரியான காத்து" என்று இல்லாத காற்றை வரவழைத்தேன். அம்மா சிரித்தார். அப்பாடா! என்றிருந்தது.

நடக்கும்போது "என்னப்பா கொஞ்ச மும் 'மனேஸ்' இல்லாமல் நடந்து கொள்றியள்" என்றேன். அப்போதும் அவர் முறைத்தார். நிலைமையை உணர்ந்து நான் மௌனமானேன்.

"வேற வீடு பாக்கிறன்"; என்றார்.

நான் எதுவும் பேசவில்லை.

“கிட்டவாத்தான் பாக்கிறன். இந்த ஏரியா சரியான விலையா இருக்கு” என்றார்.

“அப்ப அம்மா?”

“இது அவான்ர வீடு. அவ என்னவும் செய்யட்டும்”

“வயசான நேரத்தில என்னண்டு... தனிய விட்டிட்டு...” நான் இழுத்தேன்.

“அவ வயசு போன மாதிரியே நடந்து கொள்றா?” கடுமையானார்.

நாங்கள் அருகிலுள்ள பார்க்கில் போய் அமர்ந்தோம்.

பூமரத்து இலைகள் வாடிக்கிடந்தன. வாடிக் கருகிக்கிடக்கும் இலைகளுக்குள் ளும் ஒரு துளிர் மட்டும் எப்படி?

“கொஞ்சம் தள்ளிப்போகலாம். பிறகு வேலைதூரம். பிள்ளைகளுக்கு பள்ளி கூடமும் சிக்கலாப்போகும்'' என்று மௌனத்தை அவரே உடைத்தார்.

“கொஞ்சம் அமைதியாகுங்கோப்பா. இப்ப என்ன அவசரம்?”

அவர் அமைதியாகினார்.

“அம்மாவின்ர முடிவு, அது அவவின்ர சுதந்திரம்.” இப்போ குரலை அமைதியாக்கி ஆனால் அழுத்தினார்.

“இப்ப அவ என்ன முடிவு எடுத்துப் போட்டா? ஒரு ஆணும் பெண்ணும் நட்பாய் இருக்கிறது தப்பா?”

“ஒரு தப்பும் இல்லை. எல்லை தாண்டாமல் இருக்கிறது முக்கியம்”

“எது எல்லை?”

‘‘வயதுகள் தாண்டின பிறகும்கூட சபலம் ஏற்படுறது இயல்புதான். ஆனால், அடுத்தவைக்கு பாதிப்பில்லாமல் நடந்து கொள்ளவேணும்.”

“இப்ப ஆருக்கு பாதிப்பு? ஊருலகம் என்னவும் கதைக்கட்டும். அதைப்பற்றி நான் கவலைப்படேல்லை”

“உமக்குத் தெரியுமா? சிவகலாவின்ர குடும்பத்துக்க என்ன நடக்குது என்று”

உண்மையிலேயே எனக்கு எதுவும் தெரியவில்லை.

---

# விழிகளின் மொழிகள்

மௌனமாய் மறைத்த சொற்களை
உன்னையே கடந்து வெளிப்படும் விழிகள்
மயங்கிய விழிகள்.. நிறைந்த பேரழகும்
வியக்கும் வண்ணம்.. மூங்கில் தோள்களும்
பெண்மை பண்பும்.. பேரன்பு பேரிகை
புன்முறுவல் தோற்றத்தில் புதைந்து
அரும்புக்குள் அடங்கும் மணம்போல் கலந்து
அழகிய புன்னகையில் அடங்கிய குறிப்பில்
என்னவள் கரங்களில் அணிந்த சப்த ஒலி
வளையல்கள் – எனக்கென்று சலசலக்க
யானே அறிந்து.. கவலை மறந்து
அளவற்ற அன்பினால் ஆரத்தழுவி
அதன்பின் பிரிவதில் மனதில்
இருவிழிகள் விரிசல் செய்யும் குறிப்பில்
குளிர்ந்த நீர் தன்னகத்தே–தன் காதலன்
கூடிப்பிரிவதை முன்னரே அறிந்த வளையல்கள்

**கவிஞர். இரா.மணிகண்டராசு**
**சென்னை**



“என்னப்பா அங்க என்ன நடக்குது?” பதகளிப்பட்டேன்.

“சிவகலாவின்ர மனிசி ஒரு ஒரு அப்பாவி. அழுது வடிக்குது. ரெலிபோனில எடுத்து எனக்கு முறைப்பாடு வைக்குது”

“என்ன? உங்களோட கதைச்சவவோ?”

“ஓ! என்னோடதான். எனக்குச் சீ எண்டு போச்சு. பிள்ளையள் சிவகலாவோட கதைக்கிறேல்ல”

இதற்கு மேல் எனக்கு எதுவும் கதைக்கத் தோன்றவில்லை. கதைக்க முடியவுமில்லை.

...

நாங்கள் வீடுதிரும்பியபோது சிவகலாவும் வீட்டிலிருக்கவில்லை. அம்மா உற்சாகமாக கணினியில் ஏதோ செய்து கொண்டிருந்தார்.

இரவு என்னால் சரியாக சாப்பிடவும் முடியவில்லை. நித்திரையும் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தேன்.

அம்மாவிடம் இதை எப்படி நான் வெளிப்படையாகப் பேசுவது? வீடு பார்க்கிறோம் என்று தெரிந்தாலே அம்மா உடைந்து போய்விடுவார். எப்படியோ சொல்லித்தானே ஆகவேண்டும். சிவகலா மாமாவின் தொடர்பை துண்டித்து விடும்படி கேட்கலாம்!

ஏன் கேட்கக்கூடாது?

ஏன் கேட்க வேண்டும்?

இன்னொரு குடும்பம் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தை முன்வைத்துக் கேட்கலாம்!

அது கூட இன்னொருவர் வாழ்க்கைக்குள் அத்துமீறி தலையிடுவது போல் ஆகிவிடாதா?

சனிக்கிழமைக்காகக் காத்திருந்தேன்.

வீடு பார்க்கப் போகிறோம் என்று அம்மாவின் முகத்தைப் பார்த்துச் சொல்லும் தைரியம் எனக்கில்லாதிருந்தது.

“அம்மா, வெளியில போறம் பிள்ளயள ஒருக்கா வெளிக்கிடுத்தி விடுங்கோ” என்றேன்.

இப்படி ஒரு வழமை எங்களிடம் இருந்தபடியால் அம்மா ஆர்வமாக வெளிக்கிடுத்த தயாரானார். பிள்ளைகள் மகிழ்ச்சியில் “அம்மா எங்க போறம்?” என்றார்கள்.

“புது வீடு பாக்க..” என்றேன்.

“யாருக்கு, எங்களுக்கா?” என்றார்கள் ஆச்சரியத்தோடு.

“ஓம்” என்று தலையசைத்தேன்.

“அ..ய்...எங்களுக்கு புதுவீடு” என்று அவர்கள் துள்ளிக் குதித்தார்கள்.

“அப்ப இந்த வீடு..?” என்றார் அம்மா ஏக்கத்தோடு.

“இது உங்கட வீடு. நீங்கள் இதில இருங்கோ. நாங்கள் கிட்டத்தான். ஆபத்து அவசரம் என்றால் ஓடிவருவம்” என்றேன்.

அம்மாவின் உதடுகள் துடித்தன. வார்த்தைகள் வரத்தயங்கின. கண்களிலிருந்து மட்டும் ஒரு துளி சொட்டியது. ■

# கடைத்தேற்றாய் பரம்பொருளே

தோளுடையான் திருவுடையான் தூயமலர்
நெஞ்சுடையான் தொழுவார் தம்மை
ஆளுடையான் அறிதுயிலான் அரவுமெத்தை
தானுடையான் அறிய வொண்ணாத்
தாளுடையான் தூண்துரும்பும் தானுடையான்
எட்டெழுத்தான் தருமமென்னும்
வாளுடையான் நான்மறையான்
வானோர்க்கும் கீழோர்க்கும் வரமீ வானே.

எழில்கண்டேன் இன்பங் கண்டேன்
எங்குங் கோவிந்தா வென்னும்
பொழில்கண்டேன் பொறுப்புக் கண்டேன்
பொல்லாத வினையறுக்கும்
தொழில்கண்டேன் பொழிவான் கண்டேன்
தூது நடந்தவன் மொழிந்த
மொழிகண்டேன் கண்ணீர் சிந்தி
மொழுகினேன் திருத்தாள் தானே.

மறையானாய் மாந்தர் தூவும்
மலரானாய் மக்கட் கெல்லாம்
உறையானாய் உயிர்கட் கெல்லாம்
உயிரானாய் உணர்ந்தார் நெஞ்சில்
சிறையானாய் திருமலையின்
திருவானாய் திகழ்வான் தோன்றும்
பிறையோனாய் பெரியோர் பாட்டின்
பேரின்பப் பொருள்நீ தானே.

அலைகடல் படுக்கை யாக
அரவமே மெத்தை யாகக்
கலைமகள் விசிறி வீசக்
கானவர் போற்றிசெய்ய
மலைமகள் அண்ணன் றானும்
மகிழ்துயில் செய்யா நிற்ப
மலையென வந்த துன்பம்
மறைபனி யாகக் கண்டேன்.

மாயனை வெண்ணை யுண்ணும்
மன்னனை மாந்தர்க் கெல்லாம்
நேயனைக் கோதை தம்மின்
நெஞ்சனை யசோதை யார்க்குச்
சேயனைப் பாண்டவர்க்குச்
சென்னியைக் குழலை மீட்டும்
ஆயனை அரவு போர்த்த
அண்ணலை அண்டாய் நெஞ்சே

ஊழியின் முதல்வன் றன்னை
உருவம்பல வெடுத்தான் றன்னை
ஆழியின் துயில்வான் றன்னை
அலர்மங்கை மணாளன் றன்னைப்
பாழியின் றோளன் றன்னைப்
பச்சமா மலையன் றன்னை
வாழியின் புற்று வாழ்த்தி
மலர்மார்பஞ் சேர்வீர் தாமே.

ஞாலத்தி னொளிவிளக்கே
நாரணனே திருமலையென்
சீலத்தின் மேலிலங்கும்
திருவுறையும் மார்பினனே
சேலத்தே காபுரத்தேன்
சிறுமையேன் நின்னடியேன்
காலத்தின் வாய்ப்பட்டேன்
கடைத்தேற்றாய் பரம்பொருளே.

ஏகாபுரம் வெங்கடேசு
சேலம்...





## கவலை

நரித்தனங்கள் செய்திட
நாலாப்புறமும் அலையும்
சிரித்த முகமாய்
சலனத்தைக் கொடுக்கும்
விரித்திடும் வலையை
விழுங்கத் துடிக்கும்
கரிமுக உருவமாய்
கனத்தைக் கொடுக்கும்

செ. இலட்சுமணக்குமார்
ஈரோடு

# வாழ்ந்திருப்போம் கூடி

படுக்கைக்குச் செல்லும் போது மறு நாள் விடியலில் எழுவது முதல் எதிர்காலத் திட்டங்கள் வரை பல சிந்தனைகள் மூளையை நிறைத்து நிற்கும். மறுநாள் விடியும் போது அஞ்சு தானே ஆவுது, இன்னொரு அஞ்சு நிமிசம் தூங்கிக்கலாம் என்றே தொடங்குது பலரின் ஒவ்வொரு நாள் விடியலும்.

மூளை விரட்டிக் கொண்டே இருந்தாலும், புத்தி சற்று மந்தமாகத்தான் இயங்கத் தொடங்குகிறது...

பொருளாதார நெருக்கடி மிகுந்த இன்றைய வாழ்வியலில், நேரமோ, பொருள் சேர்க்கையோ திட்டமிடல் இன்றி சாத்தியமாகாது என்று நம்ப வைக்கப் பட்டுவிட்டது.

பொறுப்புகள், கடமைகள் ஒரு புறம் இருக்கட்டும்... அந்தந்த நொடியில் எப்போது வாழத் தொடங்குவது...

நாளை கடனுக்கு என்ன பதில் சொல்வது என்று விசனம் அரிக்கும் போதே, தெருவில் விளையாடும் குழந்தைகளின் குறும்புகளை ரசித்து விட வேண்டும்...

ஒரு பார்வையில்,
ஒரு பயணத்தில்,
பகிர்தலில்,
பகர்தலில்,
சிரிப்பில்,
அணைப்பில்,
எதுவும் மாறிப் போகலாம்.....

விழி இமைக்கும் இடைவெளியில் வானவில் தோன்றிடலாம்...
மேகம் கலைந்திடலாம்....

கவலைக் கிணறுகள் வற்றுவதே இல்லே...அதில் மகிழ்ச்சிப் பந்தை மிதக்க விட்டு ரசித்திருப்பதே நிம்மதியின் எல்லை...

இந்த ரகசியத்தைப் புரிந்து கொண்டோர் எந்த ஒரு கணத்தையும் தவறவிடுவதில்லை...

மன அழுத்தம் கூடி, நோய்களை நாடி, மனமாச்சர்யங்களைத் தொலைத்து வாழும் வாழ்வென்ன வாழ்வு....

குழிபறிக்கும் நோக்கின்றி, விழி விரித்து, இயற்கையைப் போற்றி மகிழ்ந்திருப்போம் கூடி.

**தேவி பாலா**

---

## புத்தாண்டே வருக
## புகழனைத்தும் தருக!

நித்திரையும் எமக்கு(எம்மக்களுக்கு)
நிம்மதியாய் அருள்க!

வந்தாரை வாழவைக்கும் தமிழ்நாடு
இயற்கை சீற்றத்தாலே
அழித்ததனால் பெரும்பாடு!
அத்தனையும் மீட்டெடுக்க
ஆயுளொன்று போதாது!
நிந்தனைகள் போதுமடி
நிம்மதி தா தமிழ்த்தாயே!!
வளமான பொங்கல் திருநாள்
வரும் நாளைக் காத்திருக்கோம்!
வளமாக்கித் தந்திடுவாய்!
வாட்டத்தைநீ போக்கிடுவாய்!
இனியிருக்கும் வாழ்நாளை
இனிதாகக் கழித்திடவே
இயற்கை ஒன்றே போதுமம்மா
இழப்பேதும் / சீற்றமேதும்
வேண்டாமம்மா!
சனவரிதான் தொடங்கட்டுமே!
சனங்களுமே மகிழட்டுமே!
தைத்திருநாள் மலரட்டுமே!
சங்கடங்கள் தொலையட்டுமே!

**ஆர்.எம்.சாகிதா** MA.BEd,
கூடலூர். நீலகிரி

## என்னுயிர் நீயன்றோ

எண்ணங்கள் பூச்சூடும்
இதயத்தின் சாளரத்தில்
வெண்ணிலா நீயானால்
விடியல்கள் வேண்டாமே

மேகத்தின் தீண்டலை
மின்னலின் ஆற்றலை
தேகத்தில் கொண்டாயே
தென்றலின் தோழியே

கசந்திடும் தனிமையிலும்
கற்பனையாய் விரிகின்றாய்
வசமிழந்த நினைவுகளில்
வசந்தமாய்ச் சிரிக்கின்றாய்

தொடுவானம் பிரசவிக்கத்
தோன்றிடும் கதிரானாய்
நெடும்பாதை பயணத்தில்
நெஞ்சோடு துணையானாய்

முள்முனைக் காயங்களை
முத்தமிட்டு ஆற்றுகிறாய்
கள்ளூறும் பூத்தொடுத்துக்
கார்கூந்தல் சூட்டுகிறாய்

பார்க்கும் திசையெங்கும்
பரவிடும் ஒளியானாய்
ஈர்ப்பற்ற எல்லையிலும்
இமையாலே இழுக்கின்றாய்

மதியெனும் முகந்தனை
மறைத்திடும் முகிலென
நதியலை நெளிவுடன்
நறுமுகைக் கூந்தலை

ஒதுக்கிய விரல்களின்
ஒவ்வொரு நகக்கண்ணும்
செதுக்கிடும் பார்வையில்
செங்கதிர் சேர்த்திடும்

விழிகளும் விரிகையில்
விளக்கொளி கார்த்திகை
பொழிபனி மார்கழி
பொன்மகள் தீண்டலில்

மலராடும் கொடியினில்
மங்கையின் சாயல்கள்
புலர்கின்ற பொழுதெலாம்
புன்னகைத் தூவல்கள்

புதிதான பார்வையில்
புன்னகை தீபங்கள்
நதியோரம் வளைந்தாடும்
நாணலாய் நாணங்கள்

அதிகாலைக் காற்றின்
அரவமற்ற தீண்டல்கள்
எதிலும் நிறைந்தவளே
என்னுயிர் நீயன்றோ?

- ஆனந்த் சுந்தரராமன்



**கலாபூஷணம்**
**புசல்லாவை**
**இஸ்மாலிஹா ராஜா**

நேர்காணல்

Page 48

## புத்தாண்டு வாழ்த்து

(வெண்பாக்கள்)

புத்தாண்டு நல்வாழ்த்துப் பூத்தூவி வாழ்த்துகிறேன்
வித்தூன்றி நட்பை விதைத்திடுவோம் – முத்தாய்
உறவுகளை முன்னெடுத்து ஊக்குவிப்போம் சீர்மையுடன்
பிறக்கும் வருடப் பிறப்பு

உந்துசக்தி ஏது உருண்டோடும் காலமதற்
கெந்திரமு மில்லை யிதையிழுக்க – இந்நாளே
பந்துருண்டை சுற்றலைப்போல் பாடுபடு எந்நாளும்
சந்தமுடன் வாழ்வமையும் சால்பு

அன்பைப் பரிமாறு அன்னம்போ லெவ்வுயிரும்
வன்மம் விலகி வசமாகும் – தன்மையும்
மாறாமல் தாரணியில் வாழத் தலைசிறக்கும்
நூறாண்டு காலம் நுழை

**தனராஜ் பாப்பணன்**
கோவை

நுழை – நுட்பம்

# கவிப்பேரிகை


(ஹைக்கூ தொகுப்பு நூல்)
தொகுப்பாசிரியர் கவிஞர் கண்ணன் சேகர்
வெளியீடு மலர்க்கண்ணன் பதிப்பகம்
முதல் பதிப்பு செப்டம்பர் 2023
பக்கம் 116 விலை ரூ 250

இதிகாசங்களும் இலக்கியத்தின் நீள்வசனங்களும் எழுதிச் சென்ற கவிதைகளின் மொழி நடையிலும் வர்ணனை அழகிலும் கட்டுண்டு உலகின் நகர்வை உணர்ந்த வாசக நிலையிலிருந்து விரைவின் நுகர்வுக் கலாச்சாரத்தில் நுழைந்து விட்ட இன்றைய கால கட்டத்தில் வாசிப்பின் நிலைகளும் மாறிப் போகின்றன.

ரசனைகளை உள்வாங்கி வாசிப்பின் வழியே தன்னையே எழுத்தின் பின்னே ஒப்படைத்து அனுபவிக்கும் வாசிப்புத்தன்மை இன்று குறைந்து வருகிறது.

இன்றைய சூழலில் தன் எண்ணங்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வடிவங்களுக்குள் தங்களை புகுத்திக் கொள்ளும் கவிஞர்கள் துளிப்பா வடிவத்தை தமக்கு உகந்ததாக கைக்கொள்கி றார்கள்.

அத்தகு நிலையில் காணும் புறக்காட்சிகளை சமூக அவலங்களை பண்பாட்டுச் சிக்கல்களை அழகியல் நிலைகளை மூன்று வரிகளுக்குள் அடக்கி வாசிப்போரின் மனதில் உடனடித் தாக்கத்தை ஏற்படுத்துவதில் இளைய தலைமுறையினர் துளிப்பாவில் இளைப்பாறு




கின்றனர்.

வறுமையின் கொடுமையை, வாழ்வாதாரத்தை சிறப்பாக்க முயலும் எளியோரின் போராட்டத்தை, இயற்கையை ரசிக்கும் மனநிலையை, சமூகத்தை முன்நகர்த்தி ஏற்றத் தாழ்வுகளைக் களைய முற்படும் வைராக்கிய குணத்தை என சகல தளங்களிலும் பயணித்து அவரவர் சிந்தனைகளை நமக்குள் வழங்கியிருக்கிறது கவிப் பேரிகை நூல்.

ஹைக்கூ எனப்படும் துளிப் பாக்களை மட்டுமே வெளியிடும் இணைய மாத இதழான கவிச்சூரியன் இதழின் ஆசிரியரான கவிஞர் கண்ணன் சேகர் தொகுத்திருக்கும் இந்நூலில் 52 கவிஞர்களின் பத்துப் பத்து துளிப்பாக்கள் இடம்பெற்றுள்ளன. நாடுகள் கடந்து வசிக்கும் கவிஞர்களை தமிழால் இணைத்து இந்நூல் தொகுப்பானது வெளிவந்து அனைவரையும் வாசிக்கத் தூண்டுகிறது.

500க்கும் மேற்பட்ட துளிப்பாக்கள் அணிவகுக்கும் நூலில் மனதிற்கு வெகு நெருக்கமான சிலவற்றை கோடிட்டுக் காட்ட விழைகிறேன். இவற்றின் வழியே இன்றைய சமூகத்தின் நிலையையும் காட்சிகளைக் காணும் எண்ணங்களின் எழுச்சியையும் ஒருசேர உணர முடிகிறது.

வயதாகியும் போராடுகிறார்
சுதந்திரத் தியாகி
ஓய்வூதியம் வாங்க.
அபிராமி சுரேஷ்

அட்சயப் பாத்திரம்
சுரந்து கொண்டேயிருக்கிறது
வயிற்றில் பசி
கௌந்தி

கொத்தடிமையாக
வைத்தது யார்
ஹிஷாலி

வற்றும் நீர்
நன்றாகத் தெரிகிறது
கரையில் நீர்க்கோடு
பிச்சிப்பூ

அவசர மின்வெட்டு
விரைவாக வந்துவிடும்
வெக்கையும் வியர்வையும்
ஜலீலா முஸம்மில்

யாருமற்ற வீட்டில்
சண்டைப் போடுகிறார்கள்
அம்மாவும் தனிமையும்
ஹரணி

கையில் தொலைபேசி மட்டும்
தொடர்பில் இல்லை
உறவுகள்
ராஜாமணி

இன்னும் காத்திருக்கிறேன்
இறக்கி வையுங்கள்
சுமைதாங்கிக் கல்
கல்யாணசுந்தரம்

மீன்கள் துள்ளுகின்றன
பிடிக்க முடியவில்லை
சேலை
பரஞ்சோதி

சமத்துவம்
நாயும் நானும்
எச்சிலை உணவு
கொழுப்பலூர் பாபு

ஆடம்பரச் செலவால்
வந்தது பற்றாக்குறை
அவசிய செலவிற்கு.
இரா.இரவி

மழை வரவில்லையே
கண்ணீர் விட்டான்
குடை வியாபாரி
இமாஜான்

புண்பட்டு நலிவது புகையாகும்
பூரண ஆரோக்கிய நலம் கெட்டு
பூமியே உனக்கு பகையாகும்
ஜெய ஷரண்

கூரை வீட்டில்
ஊஞ்சலாடுகிறது
வலை பின்னும் சிலந்தி
பாரியன்பன் நாகராஜன்

வாழ்வின் அர்த்தம் சொல்ல
பருத்தி ஆடையில் வருகிறார்
சொகுசு காரில் துறவி
பாரதிராஜா

இலவச வேட்டி சேலை
பறிபோனது
ஒருநாள் கூலி
உதயக்குமரன்

விழுந்து கிடக்கிறான் குடிமகன்
எழுந்து நிற்கிறது
அரசாங்கம்
செஞ்சோலை

வருவதையும் போவதையும்
வேடிக்கை பார்த்தேன்
போய்க் கொண்டிருந்தது காலம்
இரமேஷ்

இரவெல்லாம் பெய்த மழை
நிரம்பி வழிகிறது
கொட்டாங்குச்சியில் வானம்
ராஜ்குமார்

நீரில்லா ஆறு
பயணித்துக் கொண்டே
இருக்கிறது
நிலா
வலம்புரி லேனா

வாகனப் பயன்பாடு
குறைந்து போனது
நடையும் நலமும்
கிறிஸ்து ஞான வள்ளுவன்

தங்கத் துகள்கள்
கையில் ஒட்டியது
வண்ணத்துப்பூச்சி பிடிக்கையில்
முருகன்

அமர்ந்து பறந்த குருவி
சட்டென நகர்த்துகிறது
நகர்ந்து செல்லும் காற்றை.
கிபாண்டியராஜ்

ஒற்றையடிப் பாதை
பட்டாம்பூச்சிக்கு வழிவிட்டன
பிஞ்சுப் பாதங்கள்
கோபிநாத்

பொதுச்சுவர்
விரிசலை நிரப்புகிறது
எறும்புகளின் வரிசை
புளியங்குடி
மஞ்சரி பழனிவேல்

விடுதலைக்கு முன்பே
பாடியவர் பாரதி
நதிநீர் இணைப்பை.
முத்துசாமி

அச்சிட்ட எழுத்தின் மதிப்பு
பணத்தில் அளவுள்ளது
புத்தகத்தில் அளவற்றது
பெ.கலியன்

அடகு வைத்தவைகளை
மீட்டு வருகிறது
அறுவடைக் காலம்
செந்தூர்குமார்

சாதியை விட்டுவிட்டு
பிணத்தை மட்டுமே
உண்கிறது புழு
பாணால் சாயிராம்

***கடுகு சிறுத்தாலும் காரம் குறையாதல்லவா.குண்டின் வெடிப்பு ஒரு நொடி என்றாலும் வீரியத்தின் விளைவை கணக்கிட இயலாதல்லவா. இதைப்போலவே துளிப்பாக்களின் சிந்தனைகளும் வாசிப்போரின் மனதில் புதுப்புது எண்ண அலைகளை உருவாக்கி விடும் வல்லமை வாய்ந்தவை என்பதை இந்நூலின் மூலம் அறிய முடிகிறது.***

***கவிப்பேரிகை எல்லோரது சிந்தையிலும் கவி முரசு எழுப்பிவிடும் என்பதை கவிதைகள் எடுத்தியம்புகின்றன***

***இந்நூலினை அழகாகவும்*** அருமையாகவும் தொகுத்த கவிஞர் கண்ணன் சேகர் அவர்களின் இடைவிடாத முயற்சிக்கும் உழைப்புக்கும் பாராட்டுகள்.

**புத்தக மதிப்புரை**

**இளையவன் சிவா**
நரசிங்காபுரம்

# பூமாக்கிழவி –21

ரிஸ்வான்

தேநீர் நேரக்கதை

யாரும்மா.. ஊட்டுல...

கொஞ்சம் நேரம் கழிச்சி யசோதா... கொத்தா தலைமுடியை அள்ளி செருகி கொண்டையை முடிஞ்சிகிட்டே வெளியே வந்துச்சி..

எதுக்கால போலீஸ்காரன் மாதிரி நின்னு கிட்டு இருந்திச்சி..

யசோதாவுக்கு பக்குன்னு யாரோ நெஞ்சுல குத்துனாப் போல இருந்துச்சி..



பூமாக்கிழவி எனும் ராக்காச்சி

தொடர் நாவல்

ஏம்மா எருமையாட்டம் கத்துறேனே காதுல விழல...

நான் கூட மாடுதான் பக்கத்து குடிசை கூரையில ஒராசிக்கிட்டு நிக்குதுன்னு நெனைச்சிக் கிட்டேன் சார.. யாரு சார் நீ

நான் போலீஸ் ஸ்டேஷன் ல இருந்து வறேன்.. இங்க பூமாக்கிழவி யாரு..

ஐயோ நான் இல்லை சார்...

கிராமத்து குசும்பா இல்ல குத்தா....

இல்லை சாரு.. குழந்தைக்கு பால் கொடுத்துக்கிட்டு இருந்தேன்.. பூமாக் கிழவி பக்கத்து குடிசை...

யசோதாவுக்கு வாய் குழறிச்சி..

பூமாக்கிழவி யாருமா..

பக்கத்து குடிசை சார்..

ஏன் சார் ஏதாச்சும் வில்லங்கமா..

சும்மாதாம்மா சின்ன கிளாரிபிகேசன்..

இன்னாது கௌறி பாக்குறியா...

ரொம்ப பேசாதே.. கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்லு..

– ரிஸ்வான்



இன்னா சார்.. என் ஊட்டு முன்னால வந்து நின்னுகிட்டு என்னை மெரட்டுற சொல்லனா என்னப் பண்ணுவே..

ஸ்ஸ்ஸ்...வெயிலுமா.. தாளல மன்னிச்சுக்க..

இந்தா இந்த போட்டோவுல இருக்குற வங்களான்னு பார்த்து சொல்லு..

மஞ்சள் கலர்ல உப்பு பூத்துப் போன பழைய போட்டோ வை நீட்டினார்..

எனக்கு சரியா தெரியாது சார்.. போட்டோ ரொம்ப பழசா இருக்கு.. நானு இந்த ஊருக்கு வாக்கப் பட்டு வந்து கொஞ்ச காலம்தான் ஆகுது. இந்த மாதிரி சாடையில இந்த ஊருல யாருமில்லை.. சார்

சரியா பார்த்து சொல்லுமா..

யசோதா குடிசை பக்கம் திரும்பி..

தே... இங்கிட்டு வா.. போலீசு வந்திருக்கு..

இந்த போட்டோவைப்பாரு... யாரு இதுன்னு கேக்காங்க...

யசோதா புருஷன் சுப்பிரமணி போட்டோவை வாங்கி ஆறு வித்தியாசம் கண்டு பிடிக்கிறா போல உத்து உத்து பார்த்தான்..

இது.. நம்ம ஆத்தா... பூமாக்கிழவி.. நடுக்கால வயசுப் போட்டோ. நம்ம ஊருக்கு வரும்போது இப்படித்தான் இருந்துச்சி.. நல்லா பவுசா இருந்துச்சி ஆத்தா.

இப்ப அந்தம்மா எங்கே..

கூனிப்பாளையம் போயிருக்கு..

மத்தியானத்துக்கு மேலத்தான் திரும்புவேன்னு சொல்லிட்டு போச்சு...

சரிம்மா.. நான் அப்புறமா வறேன்.. அந்தம்மா வந்துச்சுன்னா ஊட்டுலேயே இருக்க சொல்லு.. நான் போன் பண்ணிட்டு வறேன்... இங்க போனு எங்க இருக்கு...

இந்த ஊருல அதெல்லாம் கெடயாது. எதுவானாலும் எல்லாம் மூஞ்சிக்கு மூஞ்சி நேர்ல பார்த்து பேசிக்கிற சனங்க..சார்

ஏம்மா அதிகமா பேசி மண்டையில கஞ்சி காய்ச்சற..

போன் பேசனும்னா தின்னனூருக்கு தான் போவனும்..

சரி நான் பொறவு வறேன்.. அந்தம்மா வந்தா இங்கனயே இருக்க சொல்லு..

இந்தாம்மா இந்தா இதுல கையெழுத்துப் போடு..

இன்னா சார் இது..

ஒண்ணுமில்லை நான் இங்க வந்து விசாரிச்சுட்டுப் போனதுக்கு அத்தாச்சி...

எங்க ரெண்டு பேருக்கும் எழுத படிக்க தெரியாதே.. சார்..

பரவாயில்லை.. கைநாட்டு வை.. வற்புறுத்தி கைநாட்டு வாங்கி கிட்டு போலீசாகாரர் மோட்டார் சைக்கிளில் ஏறி விர்ருன்னு போயிட்டார்...

யசோதாவுக்கும் சுப்பிரமணிக்கும் ஒன்னும் புரியல.. காயித்துல கையெழுத்து போட்டது நெனைச்சு மனசுல ஒதைப்பா இருந்துச்சி..

ஏன்யா கெழவி வரலைன்னா நம்பள கூட்டிப் போவாங்களா.. செயில்ல போடு வாங்களா.. வயத்தை கலக்குது.. யா.

நீ வேற சும்மா இருடி.. எனக்கே ஒதைப்பா இருக்கு மனசுல. ஒன்னும் வெளங்கல

ஏன்யாகிழவியை தேடி போலீசெல்லாம் வந்து விசாரிக்குது...கெழவி தப்பு தண்டா ஏதாச்சும் செஞ்சிருக்குமோ... கெழவி ரவுடி கெழவிதான்.. அது பண்ற ராவடிய பார்த்தாலே தெரியல...எல்லாரு கிட்டயும் என்னா சிலுப்பு சிலுப்புது..

நீ வேற சும்மா இருடி.. போலீஸ் காரன் பொஞ்சாதி யாருக்காச்சும் பிரசவம் பாக்கறதுக்காக இருக்கும்...

போயா லூசு.. கெழவியோட பழைய போட்டோவை காட்டி அடையாளம் கேக்காங்க.. உனக்குத்தான் ஒன்னும் புரியல.. சரியான மாக்கான்..

கெழவி வரட்டும்... நோண்டி நொங்கு எடுத்துடுறேன்..

வேணாமடி... ஆத்தா உன்னை குழித் தோண்டி பொதைச்சிடும்.. ஆத்தாவை அப்படியெல்லாம் வெசாரிக்கிறது மருவாதை இல்லை.. அது சாமி டீ..

தொடரும்...



# நெஞ்சத்து காதல்

ஏ! நெஞ்சமே! அவருடன் நின்றும்
என் நெஞ்சம் என்னுடன் இல்லாதது போல
அன்பில்லா காதலரைக கண்டபோது
பொறுக்கமாட்டாள் என எண்ணி
என் மனமே! அவரிடம் சொல்கிறது
என்ன மாயமோ? மந்திரமோ இது?
காதலரை பெறாதபோதும் அஞ்சும்
பெற்றதும்.. பிரிவாரோ? என அஞ்சும்
தீரா துயரமே மிஞ்சும்
தனிமையில் என்னை தாக்கிய போது
என்னவரை நினைத்தபோது
என் இதயம் எனக்கு துணையில்லாது
என்னை நானே உண்பது போலிருக்க
துன்பம் மட்டுமே துளிர்ப்பட்டுயிருக்க
அதனை மறக்க முடியுமோ?
மறக்காமல் நினைத்தேன்..
நாணத்தை மறந்தேன் !

✍ ம.ராஜேஸ்வரி
சென்னை

# புத்தாண்டு வாழ்த்துக்கள்

.

கட்டமே காலந் தன்னைக்
    கணித்திடும் என்ற எண்ணம்
விட்டுடன் ஓடிப் போக
    விரைந்தினி வாவா ஆண்டே
தொட்டிடின் தீண்டார் என்ற
    துயர்தரும் எண்ணத் தோடு
சட்டென சாதி பேதம்
    சரித்திட வாவா ஆண்டே

.

கல்வியை உயர்த்தும் ஆட்சி
    கடமையை மதிக்கும் மக்கள்
சொல்லெலாந் தமிழின் ஓசை
    சோர்வற உழைக்கும் வேகம்
இல்லெலாம் சிரிப்பும் அன்பும்
    இமையெலாம் துடிப்பும் தீயும்
வல்லிய வேகத் தோடு
    வளர்த்திட வாவா ஆண்டே

.

எட்டொடு எட்டுஞ் சேர்ந்த
    இணையறு செல்வங் கூடி
மட்டிலா இன்பத் தோடு
    மனமெலாம் நிறைவைத் தந்து
எட்டியே பிடிக்கும் தூரம்
    எல்லையைக் கண்முன் காட்டி
சிட்டென பறந்து வந்து
    சிறப்புற வாவா ஆண்டே

.

- ஏடி வரதராசன்





# விடியல் தொலைவில் இல்லை

**- பிருந்தா இராஜகோபாலன்**

தன் தாயகத்தை விட்டும், உறவுகளையும் உடமைகளையும்; ஏன் உணர்வுகளையும் கூட பொருட் படுத்தாமல் இன்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தேசம் கடந்து இலங்கைக்குள் ஒப்பந்த கூலிகளாக பிரித்தானியர்களால் அழைத்துவரப்பட்ட மக்கள் கூட்டத்தின் கதையிது. இலங்கை வரலாற்றில் தமக்கும் 200ஆண்டுகள் வரலாறு உண்டென்றாலும், ஏனைய சமூகங்களை விட கல்வி, சுகாதாரம் முதலான அடிப்படை வசதிகளிலும் தொழில்வாய்ப்புகளிலும் பின்னடைவை சந்தித்திருப்பதற்கான காரணம் என்ன? ஒடுக்கப்படுகிறோம், அழிக்கப்படுகிறோம் என்றறியாமலேயே வாழும் மலையக மக்களின் வரலாறு என்ன? நாடற்றவர்களின் கதை வீடற்றவர்களின் கதையாகவும் ஆனது எப்படி? இப்படி பல கோணங்களில் எண்ணற்ற கேள்விகளோடு மலையக வரலாற்றை சற்றே பின்னோக்கி சென்று ஆராய வேண்டியுள்ளது.

மலையக மக்களின் சோகக்கதையின் ஆரம்ப புள்ளி திருச்சிராபள்ளியில் ஆரம்பமாகிறது. அங்கிருந்து நடைபயணமாக சேலம், கும்பகோணம், தஞ்சாவூர், திண்டுக்கல், புதுக்கோட்டை, மதுரை, காரைக்குடி, இராமநாதபுரம், இராமேஸ்வரம், ஊடாக தனுஸ்கோடி வரைக்கும் அவர்களின் நடைப்பயணம் தொடர்ந்தது. பின்னர் பாக்கு நீரிணையூடாக படகு வழியாக இலங்கையை வந்தடைகிறார்கள். இதற்குள் பல கோரவிபத்து சம்பவங்களும் நடந்தேறியது உதாரணமாக ஆதிலக்ஷ்மி படகு விபத்து பல நூறு உயிர்களை காவுக்கொண்டதை நினைவுக்கூறவேண்டும்.

புதுமையானவாழ்க்கை, புதிய தொழில், புதிய நிலம், என புத்துயிர் பெற்ற வாழ்க்கை கிடைக்கப்போகிறது என்ற பெரும் கனவோடு இலங்கைக்குள் கால்வைத்த இம்மக்களுக்கு உயிரைக் குடிக்கும் பெரும் ஆச்சரியங்கள் காத்திருந்தன. வீடுகள் அற்ற அடந்த காட்டுப்பகுதிகள் இவர்களின் உழைப்பை சூறையாடக்காத்திருந்தது. உழைத்து உழைத்து உழைப்புக்கே பழகிப்போன அவர்களின் உடம்பு இவற்றை யெல்லாம் பெரிதாய் கண்டுக் கொள்ளவில்லை. காடுகளையும் மலைகளையும் கற்பாறைகளை பிளந்து இவர்கள் ரயில் பாதைகள் அமைத்து இலங்கையின் போக்குவரத்து துறைக்கு தன் உழைப்பையே பரிசாய் தந்தார்கள்.

அத்துடன் இலங்கையின் பெருந்தோட்டத்தின்பெரும்வளர்ச்சிக்கும்இம்மக்களின் பங்கு அளப்பரியது!! 1838ஆம் ஆண்டு காலப்பகுதியில் 14 குடும்பங்களின் மலையக தொழிலாளர்களை வைத்து சிங்கப்பிட்டிய என்ற இடத்தில் சிறிய அளவில் பயிரிடப்பட்ட கோப்பி பயிர் செய்கையானது 1846 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐநூறு ஏக்கராக அதிகரித்ததை நினைவில் கொள்தல் வேண்டும்.

1867 ஆண்டு ஜேம்ஸ் ரெய்லர் தேயிலை பயிர்ச்செய்கையினை இலங்கையில் ஆரம்பித்தார். இதன் பின்னர் மலையகத்திற்கு அழைத்துவரப்பட்ட மலையக மக்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தது. 1867 ஆம் ஆண்டு ஆயிரம் ஏக்கராக பயிரிடப்பட்ட தேயிலை தோட்டமானது 1920 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 397,000 ஏக்கர் நிலப்பரப்பாக அதிகரித்து. தேயிலைப் பயிர்செய்கை.

பயிரிடப்பட்ட நிலப்பரப்புக்கு ஏற்ற வகையில் தென் தமிழகத்தில் இருந்து அடிக்கடி ஆட்களும் அழைத்து வரப் பட்டுள்ளனர்.

இவர்களின் கடும் உழைப்பால் பெருந்தோட்டத்துறை எதிர்பார்க்காத அளவு வளர்ச்சி கண்டதே தவிர இவர்களின் வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படவேயில்லை என்பது நிதர்சனமான உண்மை. இதிலும் கடும் சோகமான விடயம் என்ன வென்றால் 1841ஆம் ஆண்டு தொடக்கம் 1846 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 90 ஆயிரம் மக்கள் கடுமையான உழைப்பால் இறந்துப்போனார்கள் என்பதுதான்.

இன்றளவும் கூட இலங்கை வரலாற்றில் மறைக்கப்பட்ட மறுப்பக்கமாகவே மலையக மக்களின் வாழ்க்கை பார்க்கப் படுகின்றது. இதற்கான அடித்தளம் 1948ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி குடியுரிமை சட்டமாக அரங்கேறியது. இந்த சட்டத்தின் அடிப் படையில் ஏழு இலட்சம் மலையக மக்களை நாடற்றவர்கள் என்று பிரகடனம் செய்தார்கள்.

மலையக மக்களின் வரலாற்று புத்தகத்தை திருப்பி பார்க்கும் போது பிரஜாவுரிமையைப் பெறுவதற்கான பல்வேறு போராட்டங்களை நினைவுக்கூராமல் நகர்ந்து செல்லமுடியாது. இப்படி பல போராட்டங்களுக்கு மத்தியில் 1978 ஆம் முதல் ஆண்டு முதல் மலையக தமிழர்களுக்கு சிறுகச் சிறுக பிரஜாவுரிமை மீளவும் கிடைக்கப்பெற்றது. இந்த பின்னணியில் பாராளுமன்ற தேர்தல் மாகாணசபை தேர்தல்; பிரதேசசபை தேர்தல். மற்றும் உள்ளுராட்சி மன்ற தேர்தல்களிலும் மலையக மக்கள் பிரவேசிப்பதற்கு ஏதுவாக அமைந்தது.

இலங்கையில் நுவரெலியாவிலேயே அதிகமான மலையக மக்கள் வாழ்கிறார்கள். அதற்கு அடுத்தப்படியாக பதுளை மாவட்டத்திலேயே அதிகூடிய மக்கள் தொகையினர் வாழ்வதாக புள்ளி விபரங்கள் கூறுகிறது. இப்படி மூன்று மாகாணங்களுக்கு உட்பட்ட ஏழு மாவட்டங்கள் மலையக பிரதேசங்களாக அடையாளம் காணப்படுகின்றன.

1972 ஆம் ஆண்டு பெருந்தோட்டத் துறையினை அரசாங்கம் பொறுப்பேற்றாலும் அதே பழமையான அடக்குமுறை

## தீர்வு

மூலப்புற்றுப் பாம்பை
முடுக்கி விட்டிட
உச்சிக்குச் சென்று
சுழன்று வருமே
தவமாய் தவமிருந்து
தனித்திரு விழித்திரு
சீவனுள் இருக்கும்
சிவனை உயிர்த்திடு
மனமும் இலகுவாகும்
தினமும் மகிழ்வாகும்

செ. இலட்சுமணக்குமார்
ஈரோடு

யான வாழ்க்கை முறையே அங்கு காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக களுத்துறை, மாத்தளை, இரத்தினப்புரி போன்ற இடங்களில் தங்களின் இருப்புக் கான அச்சுறுத்தல்களும் நாள் தோறும் நடந்தேறிக்கொண்டேயிருப்பது வருந்தத்தக்க விடயமாக இருக்கின்றது. மலையக மக்களுக்குரிய வீட்டு வசதிகள், சுகாதாரத் திட்டம் போன்றன தேசிய அபிவிருத்தித் திட்டமாக் இன்றள வும் கிடைக்கப்பெறவில்லை என்பது சுட்டிக் காட்டத்தக்க விடயம்.

இவற்றினை தாண்டி இன்று இம் மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பது இயற்கையின் சீற்றங்களே மண்சரிவு, வெள்ளப்பெருக்கு, கடும்மழை, பனிமூட்டம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் காரண மாக பல உயிரிழப்புக்களும் வருடா வருடம் நடந்துக்கொண்டேயிருக்கிறன. குறிப்பாக மீரியபெத்த மண்சரிவில் இம் மக்கள் இழந்த பேரிழப்பினை சொல்லில் அடக்கிவிடமுடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நிலஅழிப்புக்களும் இம்மக்க ளுக்கு பெரும்சுமையினை தந்துவிடுகிறது. அதில் ஒன்றுதான் கொத்மலை திட்டத்தால் ஏற்பட்ட விளைவுகள்.

பொதுவாக மலையகம் என்றாலே தேயிலைத் தோட்டங்களையும் இறப்பர் தோட்டங்களையும் கோப்பித் தோட்டங் களை பற்றியே பேசிக்கொண்டேயிருக்கி றோம் ஆனால் இவற்றை யெல்லாம் தாண்டி அங்கு அன்றாடம் கூலித்தொழில் செய்யக்கூடியவர்களும் காணப்படுகிறார்கள் பொதுவாக நாளாந்த வாழ்க்கை செலவுக்காக மரக்கறி தோட்டத்தில் வேலைசெய்து ஒருசாராரின் எந்த இடத்திலும் பேசப் படுவதே இல்லை. இராகலை, நுவரெலியா, ஹாவெலிய, பொறலந்த, கந்தப்பளை உடப்புஸ்ஸல்லாவ போன்ற இடங்களில் இவ்வாறு தொழில் புரியக்கூடிய மக்கள் அதிகமாக காணப் படுகின்றார்கள்.

மலையக மக்கள் தென் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த 1823 ஆம் ஆண்டுகாலகட்டம் தொடங்கி இப்போது வரைக்கு அவர்கள் மோசமான வாழ்க்கையினை வாழ்ந்துவருவதாக ஐக்கிய நாடுகள் சபை தகவல் வெளியிட்டிருந்ததை நாம் அறிவோம். இந்தியாவில் இருந்து பிரித்தானியர்கள் இலங்கைக்கு மட்டும் அன்றி பிஜித்தீவுகள், மொரிசியஸ். போன்ற நாடுகளுக்கும் தமிழ் மக்களை அழைத்துச்சென்றார்கள். ஆனால் அவர்கள் அளவு வலுவான உரிமைகளோடு இலங்கை மலையகத் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள் எனக் கூற முடியாதுள்ளது.

பொதுவாக மலையகத்தினுடைய விடுதலையென்னும் போது நடேச ஐயர் அவரையும் அவரின் மனைவி மீனாட்சியம்மாவின் செயற்பாடுகளை நாம் மறந்துவிட முடியாது. ஊர்விட்டு ஊர் போக முடியாத அளவுக்கு அடக்குமுறை நிலவிய காலத்திலும் ‘பொட்டணி’ வியாபாரிகள் போன்று ஒவ்வொரு ஊர்களுக்கும் சென்று விடுதலை உணர்வினை விதைத்தவர்கள் இவர்கள். இதில் குறிப்பாக நடேச ஐயர் மலையக தொழிற்சங்கங்க உருவாக் கத்தின் முதன்மைத் தலைவராகவும் செயற்பட்டார் என்பதும் குறிப்பிட வேண்டிய விடயமாகிறது.

ஆரம்பத்தில் இருந்தே இலங்கையின் மத்திய பிரதேச மக்களின் பிள்ளைகளின் கல்வியென்பது எட்டாக்கனியாகவே இருந்தது. ஒரு சமூகத்தினுடைய வளர்ச்சி கல்வியில் தங்கியுள்ளது என்பார்கள் ஆனால் ‘பிள்ளைங்காம்பரா’ வடிவிலான பாடசாலைகளில் கல்விக்கற்கும் நிலையா ருக்கும்வரக்கூடாது. இந்தபாடசாலைகளே பின்னாளில் தோட்டப்புறப் பாடசாலை களாக மாறியது. காலம் காலத்துக்கும் இதே நிலை நிலவுமானால் தங்களின்

பிள்ளைகளின் கல்வி தொடர்ந்து பின்னடைவை சந்திக்கும் என்று விளங்கிக் கொண்ட அங்குள்ளவர்கள் தொடர்போராட்டங்களில் இறங்கிய மையால் கொஞ்சம் கொஞ்சமாக பாட சாலைகளை நவீனமயப்படுத்தி இன்று பல பாடசாலைகள் தேசியப் பாடசாலை களாகவும் காணப்படுகின்றது!

ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி யின் வருகையும் அதன் மூலமாக நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் மலை யகத்தில் உருவானார்கள் என்பதும் மலையக மாணவர்களுக்கு கிடைத்த பெரும்கொடை என்றுதான் சொல்ல வேண்டும்.

அதைத்தாண்டி நாட்டின் அனைத்து பல்கலைகழகத்திலும் இப்போது மலையக மாணவர்கள் கல்விபயின்று வருகிறார்கள். குறிப்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தற்போது 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விபயில்வதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

மலையக தோட்ட தொழிலாளர்கள் தங்களதுஉழைப்பைமட்டும்இங்குகொண்டு வரவில்லை. தமது பாரம்பரிய கலைகளையும் இங்கு கொண்டு வந்தனர். மலையக மக்களினுடைய இலக்கியங்களுக்கென தனியான இலக்கியசுவையும் காணப் படுகின்றது. இந்நாட்டாரியற் கூறுகளான தாலாட்டுப்பாடல்கள், தொழிற்பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள், விடுகதைகள், பழ மொழிகள், கரகம், காவடி, கும்மியாட்டம், கோலாட்டம் என நீண்டு செல்கின்றன. மலையக நாட்டாரியல் இலக்கியச்செழுமை, மண்வாசனை கமழும் பண்புகளைக் கொண்டன. மலையக இலங்கியங்களே ஏனைய மலையகத்தை சமூகங்களுக்கு எடுத்துரைக்கும் தகவல் பெட்டகங்கள் எனலாம்.

சமீப காலம் வரை இக்கலைகள் எம்மக்களின்வாழ்வோடுபின்னிப்பிணைந் திருந்தன. அவர்களால் பேணிப் பாது காக்கப்பட்டன. காலை தப்பு' அதன் பின்னர் வேலைத்தளத்திற்கு செல்வதற்கு 'பிரட்டுத்தப்பு'. வேலை முடிந்து வீடு செல்வதற்கு மாற்று ஓசையுடன் கூடிய தப்பு. காவடியாட்டம், கரகாட்டம், திருவிழாக்கள், சமயக்கிரியைகள், சடங்கு கள் போன்றவற்றிற்கு வெவ்வேறு சுருதி கொண்ட தப்பு. இப்படியாக பதினாறு வகையான தப்பிசைகளுக்கு சொந்தக்காரர்கள் மலையக தமிழர்கள் எனலாம்.

இவற்றோடு சிலம்பாட்டம், கோலாட்டம், கும்மி, கரகாட்டம், காவடி, பொய்க்கால் குதிரை, ஒயிலாட்டம், என்பன முறைப்படி அரங்கேறும் இடமாக மலையக பூமியே காணப்படுகின்றது. இவற்றுக்கான இசைவாத்தியங்களாக பறை, தப்பு, முரசு, என்பன பயன்பட்டன.

மலையகத்தின் பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் கூத்துக்களாக காமன் கூத்து, பொன்னர் சங்கர், அருச்சுனன்தபசு, இராமர் கூத்து, மதுரைவீரன் போன்றவை காணப்படுகின்றன. இதில்பொன்னர்சங்கர் கூத்து முதன் முதலின் திம்புல்ல பத்தன என்ற இடத்தில் அரங்கேற்றப்பட்டது இந்த கூத்தினை முதன் முதலில் அரங்கேற்றியவர் அழகர் என்பவர் ஆவார். குறிப்பாக அண்ணன்மார் கதை அல்லது, அல்லது அண்ணன்மார் வரலாறு என்று கூறப்படும் இந்தகூத்தினை 16 வகையாக ஆடுவார்கள் மலையக தமிழர்கள்!!

அதேபோல காமன்கூத்தும் மலைய சமயசடங்கினை வெளிப்படுத்தும் வகையில் இரவுமுழுவமும் நிகழ்த்தப் படுகின்றது சிவன் தக்கணது தவத்தினை அழித்தபிறகு பெரும் கோபம்கொண்டு தவம் இருந்ததாகவும் அதன்பின்னர்

மன்மதனால் தவம் அழிக்கப் பட்டமை யால். மதனையும் கொன்று விடும் சிவன் பின்னர் ரதிக்கு மட்டும் தெரியும் வண்ணம் உயர்ப்பிக்கிறார். இந்தக் கதையினை கூத்துவடிவில் நிகழ்த்துவதே காமன்கூத்து. அத்துடன் மலையகத்தில் அர்சுனர் தபசும் அதிகமான இடங் களில் நிகழ்த்தப்படுகின்றது! மலையகத்தினு டைய டன்சினன் தோட்டம் மற்றும் வலப்பனை பிரதேசத்திற்கு உற்பட்ட ஹபொரஸ்ட் தோட்டம், மஸ்கெலியா, வட்டக்கொடத்தோட்டம் போன்ற இடங் களில் ஒவ்வொரு வருடமும் நிகழ்த்தப் படுவது சிறப்பம்சமாகும்.

மலையக மக்களை பொறுத்தவரை பல இன்னல்கள் இருந்தாலும் வறுமைகோட் டிற்குள் வாழ்ந்தாலும் எல்லாதுறைகளிலும் வளங்கள் குறைந்துக் காணப்பட்டாலும் அங்குள்ள இளைஞர்கள் அவர்களின் திறமைகளை வளர்த்துக்கொண்டார்கள் என்பது நிஜம். விளையாட்டு, கல்வி, கலை, போன்ற அனைத்து துறைகளிலும் ஏனைய சமூகங்களுக்கும் ஈடுக்கொடுக்கும் வகையில் அவர்கள் திறமைசாலிகளாக வளர்ந்து நிற்கிறார்கள் உதாரணமாக இராகலைக்கு அருகாமையில் இருக்கும் சென். லேனாட்ஸ் தோட்டத்தில் பதினொரு வீடுகளில் மொத்தமாக பதினொரு ஆசிரியர்களும் ஒரு சட்டத் தரணியும் உருவாகியிருப்பது மலையகத் தின் பெரும்வளர்ச்சி என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அத்தோடு 2021 ஆண்டு யாழ்ப்பாணம் பல்கலைகழகத்தின் ஊடகத்துறையில் முதல் நிலை மாணவியாக தெரிவாகி அங்கேயே துணைவிரிவுரையாளராக கடமை யாற்றும் மாத்தளையை சேர்ந்த துலாபரணி அவர்களையும் மற்றும் யாழ்பாணப் பல்கலைகழத்தின் நாடகமும் அரங்கியலும் பாடத்தின் விரிவுரையாளராக கடமையாற்றும் கந்தப்பளை பாக்குத் தோட்டத்தை மெய்யநாதன் கேதீஸ்வரன் என்பவரையும் இன்னும் பல திறமைமிக்க இளைஞர்களையும் பெருமைக்கூர்ந்து உதாரணமாகக் கொள்ளலாம்.

அத்துடன் கலைத்துறையிலும் குறிப் பாக இசை நாடகம் வானொலி தொலைக் காட்சி என எல்லாத் துறைகளிலும் தன்னுடைய திறமையை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள் மலையக இளம் சமூகம் இன்னும் இப்போது சமூக ஊடகங்களில் பரவலாக புகழ்ந்துப் பேசப்படும் அசானியும் மலையகம் இரு நூறில் இன்னுமொரு சாதனைதான். ஆனாலும் இந்திய ஊடகங்களில் அசானி யின் திறமையை போற்றாமல் வறுமையை தூக்கிக் காட்டுவது வருத்தத்துக்குரியதே.

இல்லை இல்லை என்பதை விட இருப்பதைக்கொண்டு முன்னேறும் மலை யகம் குறித்த பார்வை அவசியம். முன்னேற நினைக்கும் உள்ளங்களைக் கொண்டே மலையகம் இப்போது இருப்பதைவிட இன்னும் அதிகமாய் மேலே செல்லும்.

வெளியில் நின்று பார்ப்போருக்கு லயக்காம்பராக்களும் வடிந்தோடும் அழுக்கு நீரும் குழிகள் நிறைந்த பாதை களும் அன்னமற்ற வெற்றுப்பானைகளும், இளவயதுதிருமணமானஇளையவர்களின் சீரழிந்த வாழ்க்கை நிலையும், என நிர்க்கதியற்ற மலையகம் மட்டுமே தென் படுகிறது. மலையகத்தவர்களுக்காய் கரிசனைக்காட்டுவதை விட அவர்களையும் மனிதர்களாக மதித்தாலே போதுமானது.

மலையகம் இயற்கையின் தலைமை யகம், கலைகளின் கலையகம், சுற்றுத்தளங் களின் நூலகம், முன்னேற துடிப்போரின் எழுச்சிக் காவியமே அந்த மக்களின் ஜீவியம். மலையகத்தின் விடியல் வெகு தொலைவில் இல்லை.

■

## விண்மீன்களும் வெள்ளிநிலவும்

மந்திரம் முழங்கிய
மணநாள் அன்று!
சங்கமம் ஆனதே
இதயங்கள் ஒன்று!

உன்னைச் சுற்றிய
தோழியர் கூட்டம்!
கண்டதும் எண்ணத்தில்
கற்பனை ஓட்டம்!

தீபங்கள் ஒளியினில்
தங்கத் தேராட்டம்
விண்மீன்கள் நடுவில்
வெள்ளிநிலா தோற்றம்!

கவிதைக்குக் கருவினை
தந்ததே ஊக்கம்!
இரவினில் கலைந்தது
இமைகளில் உறக்கம்!

மண்ணில் தோன்றிய
அழகிய காட்சி!
இன்னும் நெஞ்சிலே
நினைவுகள் சாட்சி!

அக்கோலத்தை வரையக்
கனவினை அழைத்தேன்!
வர்ணம் பூசவே
வானவில் வளைத்தேன்!

காணிக்கையாய் வந்த
மாணிக்க வீணை!
என்மீது தொடுத்தது
அன்பினது சேனை!

காதல் கைகூட
உள்ளம் திறந்தது!
இனிய உறவினில்
உலகம் சிறந்தது!

வீ.லியாகத்அலி





## கரை சேர்க்கும் கல்வி

அறியாமை இருள் அடியோடு அகன்றிட
இல்லா நிலையிலும் கல்வி பயின்றிடு
புத்தகமும் புத்தகப்பையும் சுமையென நினைத்தால்
உன் வாழ்க்கை சுமையாகும் நினைவில் கொள்
இன்று நீ தூக்கி சுமந்தால்
நாளை உனை தூக்கி சிம்மாசனத்தில் அமர்த்தும்

தேர்வு கண்டு பயம் கொள்ளாதே
அதுவே உன் தரம் உயர்த்தும்
அறிவுக்கதவை திறந்து வைத்து
நாளைய விடியலுக்கான கனவு காண்
தலைகுனிந்து நீ எழுதிய
பேனாவின் மைத்துளிகள்
உன்னை தலை நிமிர வைக்கும்

நூற்றாண்டு கடந்தும் கரைசேர இயலாத
உன் சந்ததியை கரைசேர்க்க கற்றிடு
தடைகளைத் தகர்த்து சரித்திரம் படைத்திடு!!!...

திருமதி.தா.உமா
பூம்புகார்

# நோக்கும் திசையெல்லாம்

ஆக்கும் செயல்களில் அன்புக் கரங்களில்
அன்னை சக்தியைக் காணலாம் - அவள்
பூக்கும் மலர்களில் பொன்னின் அழகினில்
பூத்துச் சிரிப்பதைப் பார்க்கலாம்
வாக்கில் நேர்மையாய் வல்ல பாக்களாய்
வந்து மனத்தினை ஆட்டுவாள் - அவள்
நோக்கும் திசையெலாம் காக்கும் கடவுளாய்
நொந்த மனங்களைத் தேற்றுவாள்

உண்ணும் உணவிலும் உருகும் உயிரிலும்
உள்ளத் தெளிவிலும் சக்தியே - நம்
மண்ணும் நிலைபெற மக்கள் பயனுற
மார்க்கம் தருவதும் சக்தியே
வண்ணக் கனவிலும் கன்னக் கதுப்பிலும்
வன்மம் மறைப்பதும் சக்தியே - நம்
எண்ணச் சிதறலில் ஏட்டுப் படிப்பினில்
எங்கும் நிறைபவள் சக்தியே!

ஓடும் மானிலும் பாடும் குயிலிலும்
ஒண்டும் ஆட்டிலும் சக்தியே - தமை
நாடும் மனிதரின் நன்மை கூடவே
நாளும் அருள்வதும் சக்தியே
வீடும் நலம்பெறும் நாடும் வளம்பெறும்
வெல்லும் வழிகளும் பெருகுமே - நாம்
நீடு புகழ்பெற நெஞ்சில் உரம்பெற
நித்தம் அவளருள் வளருமே!

ஆழக் கடலிலும் மோதும் அலையிலும்
அன்பாய் மலர்வதும் சக்தியே - எழில்
வேழ முகத்தனும் வேலன் முருகனும்
வெல்ல மகிழ்வதும் சக்தியே
ஊழிக் காற்றினை ஊதி விலக்கியே
உள்ளம் குளிர்ந்திடச் செய்குவாள் அவள்
நாழிக் கிணற்றினில் ஊறும் புனலினை
நாமும் பருகிட உதவுவாள்

கதிரின் ஒளியினில் நிலவின் குளிரினில்
காட்டில் மரங்களில் சக்தியே- நம்
புதிரின் விடைதனில் புலரும் பொழுதினில்
பொங்கி வழிவதும் சக்தியே
நதியின் அழகினில் மலையின் அமைதியில்
நடந்து மகிழ்வதும் சக்தியே - நம்
விதியின் வழியினில் விழியின் ஒளியினில்
விளையும் பயிரிலும் சக்தியே

கொஞ்சும் மலையினில் பஞ்சுப் பொதியென
மஞ்சில் கூட்டமாய்த் திரிவளே! அவள்
மஞ்சள் முகத்தினில் கண்கள் வடிவினில்
மதியும் கதிருமே தெரியுமே!
பஞ்ச பூதமாய் எங்கும் பரவினும்
பாரில் அமுதமாய் விளங்குவாள் - அவள்
நெஞ்ச மலர்களில் நேர்மை தவழ்ந்திடின்
நெற்றித் திலகமாய் அருளுவாள்!

இராம வேல்முருகன் வலங்கைமான்

# தன்னம்பிக்கையே பலம்

தன்னம்பிக்கை என்றால் என்ன? அது ஏன் மனிதவாழ்வில் தேவையாகிறது?

ஒரு மனிதன் தன்மீதும் தன்திறமை மீதும் கொண்டிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையே தன்னம்பிக்கை ஆகிறது. என்னால் முடியும் எடுத்தால் விடியும் என்று எண்ணும் ஒவ்வொரு கணமும் தன்னம்பிக்கை உறுதியாகப் பிறக்கிறது.

தன்னம்பிக்கை உருவாகையில்தான் ஒரு செயலை முடிப்போம் சாதிப்போம் என்ற எண்ணம் மனதிலே படிகிறது. எடுத்த உடனே என்னால் முடியாது என எண்ணாமல் முடியும் என்று எண்ணுவதே சிறப்பாகும். வாழ்க்கை பல சவால்களை தாங்கியே பயணிக்கிறது. கடினமும் வரும் சுலபமும் வரும். இரண்டையும் தாண்டுவது என்றும் சிறப்பு.

யானையின் பலம் தும்பிக்கையில் மனிதனின் பலமோ தன்னம்பிக்கையில் இருக்கிறது. தன்னம்பிக்கையுடன் முயலும் ஒவ்வொரு காரியமும் வெற்றியில்த்தான் முடிவடைகிறது. பல வண்ணங்களில் இல்லை வாழ்க்கை புது எண்ணங்களில் உள்ளதே வாழ்வு.

ஒரு இலக்கை குறி வைப்பவன் வாய்ப்புகளை பார்க்கிறான் சுமையாக நினைப்பவன் தடைகளை பார்க்கிறான். எனவே சுமை என நினைத்தால் சுகம் கூட பெறாமலே போய்விடும். எடிசனைப் பாருங்கள்! தன்னம்பிக்கையுடன் முயற் சித்ததாலே மின்விளக்கை கண்டார்.

1000 முறை தோற்றே மின்விளக்கை கண்டுபிடித்தவர். ஆயிரம் முறை தோற்றார் என்பதல்ல. ஆயிரம் முறை முயற்சித்தார் என எண்ண வேண்டும்.

எனவே ஒவ்வொரு தன்னம்பிக்கையும் வீண்போகாது. அது விடாமுயற்சியிலே தங்கியுள்ளது. நீ போராடும் ஒவ்வொரு முறையும் வீண் முயற்சியாக இருக்கலாம். வென்றபின்னரே அது விடாமுயற்சி ஆகிறது. சிந்தித்தால் ஒவ்வொரு சிறு முயல்வும்தன்னம்பிக்கைஊட்டுபவையாக எண்ணினால் வெற்றி நிச்சயம்.

உயிர் போகும் நிலை உனக்கு வந்தாலும் உன் தன்னம்பிக்கையை ஒருபோதும் இழக்காதே! அதுதான் உன்னை மீண் டும் கட்டியெழுப்பும் ஆற்றல் என்பதை மறந்து விடாதே! தோல்விகள் வந்து தட்டும்நேரம் எல்லாம்முடியும்என்றதன்னம்பிக்கைதானே உன்னை தட்டி எழுப்புகிறது. ஆகவே எதையும் இழக்கலாம் உன் தன்னம்பிக்கை மட்டும் நீ இழந்து விடாதே!

தன்னம்பிக்கை என்பது சாதாரணம் அல்ல. ஒரு வாழ்வையே பூங்காவனம் ஆக்குவது.

முயற்சியோடு எழும் நேரம் முனைப் போடும் ஆற்றல் பிறக்கிறது.

படிக்கும் குழந்தைகளுக்கு கூட நம்பிக்கைப்பலத்தை கட்டியெழுப்புங்கள்.

சமுதாயத்தில் சிறந்த சிப்பிகளை உருவாக்க முடியும். எனவே பலம் உள்ளவனே பலசாலி.

நல்ல நம்பபிக்கை உள்ளவனே திறமை சாலி. எனவே துடிப்பாக தன்னம்பிக்கை வளர்ப்போம்.

துணிவாக வாழப் பழகுவோம்.

**தமிழ்மணி நகுலா சிவநாதன்**
**யேர்மனி**



# தொடரும் மழை

தொடரும் மழையா லிங்குத்
தொல்லை மிகுந்து உயிர்களுமே
கடந்து போகா வெள்ளம்
கைகால் விறைக்கச் செய்கிறதே
இடரில் தவிக்கும் மக்கள்
இயல்பு வாழ்வு பாதிக்க
அடங்கி மனைக்குள் கிடந்தே
அழுது புலம்பும் அவலமெங்கும்

தினமும் உழைத்து வாழ்வோர்
தீராச் சோகம் கொண்டிங்கே
கனதி யான மழையால்
கண்ணீர் மல்கும் நிலைபாரீர்!
மனங்கள் வலியைச் சுமக்க
மனிதர் வாழ்வு துயரோடு
வனப்பை இழந்த வாழ்வு
வரமா யிப்போ பூமியிலே

இயற்கை சீற்றங் கொண்டால்
இடர்கள் வந்து நிறைந்திடுமே
முயற்சி கொண்ட மனிதர்
முயன்று தேடி வைத்திருப்பர்
முயலா உயிர்கள் நிலையோ
மூர்ச்சை யடங்கும் பெருந்துயரம்
இயலா மூப்புக் கொண்டோர்
இறப்பை அணைக்க வேண்டிவரும்.

உடுவிலூர்க்கலா

## கனவெல்லாம்-கண்ணோடு

ஒளி படைத்த நிலவை!
சிலை வடித்த உளியை!

கொஞ்சிப் பேசும் கிளியை!
கவிதை வரையும் விழியை!

உள்ளம் நனைத்த மழையை!
உறங்க வைத்த கலையை!

மயங்கச் செய்த மலரை!
மடியில் சாய்ந்த கொடியை!

உயிரில் கலந்த உறவை!
உயரப் பறந்த சிறகை!

உடைந்து போன பொழுதை!
மறக்கவில்லை மனதே!

அந்தக் கனவெல்லாம் கண்ணோடு!
காதல் தந்த புண்ணோடு!

விதியை நொந்து நெஞ்சோடு!
வாழுகிறேன் மண்மீது!

முதுமை இங்கே தனித்தது!
மரணம் நம்மை பிரித்தது!

கனவு என்னை நகைத்தது!
கண்ணீரோடு பகைத்தது!

- லீ.லியாகத்அலி

# சிறுவர்கள் சங்கமம்






பா. யுக்தா @ பா. யாழினி, ஐந்தாம் வகுப்பு, வித்யா மந்திர் எஸ்டான்சியா பள்ளி, கூடுவாஞ்சேரி. செங்கல்பட்டு

சி.உ.லக்ஷிகா





# இரண்டு குருவிகள்

ஒரு வயலில் வழி தொலைந்த இரண்டு குட்டிக் குருவிகள் வாழ்ந்து வந்தன. குருவிகளுக்கு அந்த வயல் மிகவும் பிடித்து இருந்தது .வயலில் அப்போதுதான் விதை விதைத்திருந்தார்கள். அந்த வயலைச் சுற்றி மாமரம், தென்னை மரம் எனப் பலவகை மரங்கள் வயல்வெளியின் வேலியாக அமைத்து இருந்தார்கள். அந்த வயல்வெளி பக்கத்தில் இருந்த மாமரத்தில் இரண்டும் கூடு கட்டி வாழ ஆரம்பித்தன. அவை வயலில் இருந்த பூச்சிகளைச் சாப்பிட்டு வாழ்ந்து வந்தன. கொஞ்சம் காலம் ஆனதும் வயலில் விதைத்திருந்த பயிர்களில் தானியங்கள் முளைக்க ஆரம்பித்தது. பிஞ்சுக் கதிர்களில் இருந்த தானியங்கள் மிகவும் இனிப்பாக இருக்கவே தானியங்களைச் சாப்பிட்டு இரண்டு குருவிகளும் சந்தோசமாக மாமரத்தில் வாழ்ந்து வந்தன .

அந்த வயலில் இப்போது தானியங்கள் பெரியதாக வளர்ந்து இருந்தன. குருவி களும் சற்றுப் பெரியதாக வளர்ந்திருந்தன. ஒரு நாள் வயலின் ஒரு மூலையில் நிறைய ஆட்கள் ஏதோ செய்து கொண்டு இருப்பதை ஒரு குருவி பார்த்து மற்றொரு குருவியிடம் சொன்னது, “அங்க பாரு தூரத்திலேயே நிறைய பேர் ஏதோ செய்து கொண்டிருக்கிறார்கள். வா அங்கு போய் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கலாம்.” என்றது. இரண்டும் அங்கு சென்று பார்க்க, அங்கு தானியங்களை அறுவடை செய்து கொண்டிருந்தார்கள் அதைப் பார்த்த குருவிகள் இரண்டும் “ஆஹா எல்லா செடியும் இவங்க வெட்றாங்களே, நாம சாப்பாட்டுககு இனி என்ன பண்றதுன்னு” யோசித்தன.

அப்போது ஒரு குருவி மற்றொரு குருவியிடம் சொல்லியது “இந்த வயலோட அந்த மூலைல இருந்து வெட்டுறாங்க இல்லையா... நாம மறுமூலையிலிருந்து கொஞ்சம், கொஞ்சமா தானியங்களைக் கொண்டு போய் நம்ம கூண்டுல சேமித்து வைப்போம். அதை நாம வயலில் கதிர் இல்லாத நேரத்துல பயன்படுத்திக்கலாம். அதே சமயம் வேற மரங்கள்ல வேற ஏதாவது உணவு இருக்கானு நாம தேடி பார்ப்போம்” அப்படி என்று சொல்லியது.

நல்ல யோசனை என்று இரண்டும் தானியங்களைத் தங்கள் கூண்டில் சேகரித்தன. தானியங்கள் கொண்டு செல்லும் வழியில் வேறு ஏதேனும் உணவு இருக்கிறதா என்று நோட்டமிட்டபடியே சென்றன.

அறுவடை முடியவும் மழைக்காலம் ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது. சேர்த்து வைத்த தானியங்களை மழைக்காலத்தில் பயன்படுத்தின. மழை முடிந்த பிறகு சிறு சிறு பூச்சிகள் வயல்வெளியில் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தன. இவ்வாறாக சேமிப்பின் அவசியத்தை குருவிகள் இரண்டும் அறிந்து கொண்டு பின் நாட்களிலும் தொடர்ந்து சேமிக்கத் தொடங்கின. சந்தோசமாக வாழ்ந்தன.

**இந்துமதி.ப,**
சென்னை





பி. தி. பிரதிபா ஸ்ரீ, மூன்றாம் வகுப்பு ‘அ ‘ பிரிவு மங்களாம்பாள் நிதியுதவி
நடுநிலைப்பள்ளி, வாலாஜாபேட்டை இராணிப்பேட்டை

## இழிந்த பண்பு

வறுமை இருந்தாலும்
இழிந்த பண்பில்லாமல்
மெய்யாய் ஊடுருவி
நற்பண்பை நாடி
அறிவின்மை உடையவன்
அறநெறி ஒழுகாதவன்
தீமையைத் தீண்டுபவன்
ஒழுக்கத்தோடு ஒன்றிணையாதவன்
கூடாநட்புடன் கூடியிருப்பவன்
தீ நட்புடன் தீண்டப்படுபவன்
ஈகைக் குணம் இல்லாதவன்
பொய்யோடு புணர்பவன்
புணர்ந்து செயல்படுபவன்
பகைமையோடு பயணிப்பவன்
ஒற்றுமையோடு சேராதவன்
கயமைக்கு எடுத்துக்காட்டு



**ம.லவன்**
சென்னை



## அஞ்சிய மனம்

இரவலுக்கு பயந்து
அதனால் துன்பப்பட்டு
வறுமை தூண்டும் துன்பத்தினை
முயற்சியால் நீக்கு
தம்மால் முயன்றதை
பிறர்க்கு ஈயும் குணம்
பல பண்பிற்கு சமம்
இரவல் கேட்பது
கொடுமை விட கொடியது
உதவி செய்ய இரங்குதல்
நெறியோடு கூடிய முயற்சியால்
தெளிந்த நீரோடை போல
இருப்பதே நற்குணம்
அண்டத்தில் நிகழும் அற்புதம்
அறத்தோடு வாழ்வோம்
இரத்தலை மறப்போம்

**ம.குசன்**
சென்னை

# புத்தாண்டு தீர்மானம்

நந்தவனம் என்ற ஊரில் நந்தினி என்ற சிறுமி ஐந்தாம் வகுப்பு படித்து வந்தாள். படிப்பில் மட்டுமல்ல, பாட்டு, நடனம், விளையாட்டு என எல்லாவற்றிலும் ஆர்வமாக கலந்து கொள்வாள்.

ஓய்வு நேரங்களில் அம்மாவோடு சேர்ந்து புது புது சமையல் செய்து அசத்துவாள்.

சமீப காலமாக சோம்பேறி தனமாக இருந்தாள். எதையும் ஆர்வமாக செய்வதே இல்லை. இதை கவனித்த பெற்றோர் கவலை கொண்டனர்.

"என்னாச்சி நந்தினி... வர வர ரொம்ப டல்லா இருக்க உடம்புக்கு ஏதாவது செய்யுதா..." என அம்மா அக்கறையோடு கேட்டார். "ஒன்னும் இல்லம்மா நல்லா தானே இருக்கேன்..." என்றாள் நந்தினி

''நீ சரியா சாப்டுறதும் இல்ல, தூங்குறதும் இல்ல... அதனாலதான் உனக்கு ரொம்ப களைப்பா இருக்கு...'' என்றார் நந்தினியின் அப்பா.

"எல்லாத்தையும் கத்துக்கணும், அதே நேரத்துல நாம ஆரோக்கியமாகவும் இருக்கனும்...'' அப்படினு அம்மா அப்பா இருவரும் சொன்னதும் புரிந்து கொண்டாள் நந்தினி.

"இந்த வருசம் முடிஞ்சி புது வருசம் வர போவுது..." "புது வருசத்துல எதெல்லாம் செய்யனும்... எதெல்லாம் செய்ய கூடாதுன்னு ஒரு தீர்மானம் எடுத்து அதை கடைபிடிக்க பழகு..." என அம்மாவும், அப்பாவும் அறிவுரை கூறினார்கள். அதுவும் சரியான யோசனைதான் என நந்தினிக்கு தோன்றியது.

புது வருடத்திற்கு ஆவலோடு காத்திருந்தாள். காலையில் நேரத்தோடு எந்திரிக்கனும்... வீட்டுப் பாடங்களை சரியான நேரத்துல முடிக்கனும்... படிக்கனும்... உடற் பயிற்சி செய்யனும்... காலை உணவை மறக்காமல் சாப்பிட்டு நேரத்தோடு பள்ளிக்கு போகனும்... என மனதுக்குள் தீர்மானம் செய்தாள் நந்தினி.

புது வருடம் பிறந்ததும் சந்தோசத்தில் துள்ளி குதித்து எல்லோருக்கும் வாழ்த்துகள் கூறினாள். குடும்பமாக கோவிலுக்கு சென்று வந்து, மதிய சாப்பாட்டுக்கு பிடித்த உணவை சமைத்து சாப்பிட்டார்கள். மாலையில் கடற்கரைக்கு சென்று விளையாடி மகிழ்ந்தனர்.

மறுநாள் நந்தினியின் அம்மாவிற்கு பிறந்தநாள். இரவு பன்னிரெண்டு மணிக்கு அம்மாவை ஆச்சரியப்படுத்துவதற்காக அப்பாவோடு ஆலோசனை செய்து, அவளே அம்மாவுக்காக சாக்லேட் கேக், அல்வா செய்தாள்.

இரவு பன்னிரெண்டு மணிக்கு அம்மாவை எழுப்பி பிறந்தநாள் வாழ்த்து கூறி, தான் செய்த இனிப்புகளை ஊட்டி விட்டாள். அவளின் அம்மாவும் அவளை ஆனந்தத்தில் கட்டி அணைத்து முத்தமிட்டார்கள். புத்தாண்டு இனிதே தொடங்கிய சந்தோசத்தில் நிம்மதியாக உறங்கினாள் நந்தினி.

தா.உ.பூர்வி

ஏழாம் வகுப்பு
பூம்புகார்







மு.அ.நந்திகா பத்மினி , வயது : 9
பள்ளி - எம்.ஏ.வித்யாஷ்ரம்





சி.உ.சஷ்டிகா







மு.அ.ஹிர்த்திக் பகத் , வயது:10 , பள்ளி-எம்.ஏ.வித்யாஷ்ரம்



பி.தி.லித்திஷா ஸ்ரீ, யு. கே. ஜி.
அங்கன்வாடி மையம் வாலாஜாபேட்டை
இராணிப்பேட்டை மாவட்டம்

# செம்பருத்தி பூ

ஜீ.மைத்ரேயி
வந்தவாசி

என் வீட்டுத் தோட்டத்தில் நிறைய பூச்செடிகள், கொடிகள், மரங்கள் என என் தாத்தா வளர்த்து வந்தார்.

தாத்தாவின் வயது 64. இருந்தாலும் அவர் தினமும் தோட்டத்திற்கு சென்று சொந்தப் பிள்ளைகளைப் பார்ப்பது போல, ஒவ்வொரு செடியாக பார்த்துப் பார்த்துக் களை எடுப்பது, மண் அணைப்பது, நீர் பாய்ச்சுவது என தினமும் செய்து வந்தார்.

அந்தத் தோட்டத்தில் பல செடிகள் இருந்தாலும் தாத்தாவுக்கு செல்லப் பிள்ளை மல்லிச் செடியும்,செம்பருத்திச் செடியும் தான்.

சுவைமிக்க பலாமரமும், தாகத்தைத் தீர்க்கும் தென்னை மரமும், தேன் சுவையும் மிஞ்சும் மாம்பழமும் இருந்தாலும். தாத்தாவுக்கு பிடித்தது மல்லிகையும், செம்பருத்தியும்தான். ஏன் என்று மற்ற செடி கொடிகள் அனைத்துக்கும் தெரியவில்லை. இது குறித்து பேசிக் கொண்டே இருந்தன.



இதனைக் கேட்ட மல்லிகைப்பூ பெரிய ஆணவத்தில் இருந்தது. ஆனால் செம்பருத்தி எப்பொழுதும் போல் அமைதியாக இருந்தது.

மல்லிகைப்பூ தான் தான் அழகாகவும், வாசனை உடையவையாகவும், பார்ப்பதற்கு வெண்மை நிறத்தில் தூய்மையாகவும் இருப்பதால் என்னைத் தான் எல்லாருக்கும் பிடிக்கும் என கர்வத்தில் இருந்தது.

தோட்டத்தில் உள்ள அனைத்துச் செடி, கொடி மரங்கள் இடத்தில் திமிராக நடந்து கொண்டது. ஆனால் செம்பருத்திப் பூ பார்ப்பதற்கு அனைவருக்கும் பிடித்த நிறமான சிவப்பு நிறத்தில் காணப்பட்டது .

தாத்தாவிற்கு இரு கண்களும் ஒன்று தான். அது போல் தான் செம்பருத்தி, மல்லிகையும். செம்பருத்திச் செடி அனைத்து நண்பர்களிடமும், தோழமையுடனும், ஒற்றுமையுடனும் இருந்தது.

செம்பருத்திப் பூ தனது மருத்துவ குணங்களை அறிந்து தன்னை பேணிக் காப்பதில் மிகுந்த அக்கறையுடன் இருக்க வேண்டும் என மாமரம் வலியுறுத்தியது.

செம்பருத்திப் பூ கசாயம் இருதய நோய்க்கு நல்லது, அதுபோல் அதன் இலைகளும் முடி வளர்வதற்கு பெரிதும் பயன்படுகிறது. மனிதனுக்கு குளிர்ச்சியை தரும் எனக் கூறியது.

இதைக் கேட்ட செம்பருத்தி “அப்படியா! உண்மையாகவா” என கேட்டு ரசரி... சரி, இப்போ நான் அனைவருக்கும் பயன்படும் வகையில் என்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்” என்று சொல்லியது.

இவை அனைத்தும் கேட்டுக் கொண்டிருந்த மல்லிகைப்பூ தன் தவறை உணர்ந்து அனைவரிடமும் நட்புடன் பழகத் தொடங்கியது.

# அகத்திய மலை சுற்றுலா

சு.பிரவந்திகா
**பட்டாபிராம், சென்னை**

அதிதியோட பள்ளியில் இருந்து அன்று எல்லோரும் சுற்றுலா போறாங்க... எங்க தெரியுமா? அகத்திய மலைக்குதான்.

அங்கே மலைக்கு மேல நிறைய மூலிகைகள், பெரிய பெரிய மரங்கள், அருவி, குகைகள் எல்லாம் இருக்கும். பார்க்கவும், தெரிந்து கொள்ளவும் நிறைய விசயங்கள் இருக்கிறதுனு ஆசிரியர் சொன்னதில் இருந்து அனைவருக்கும் ஒரே ஆர்வம். எப்படா மலைக்குப் போவோம்... இதெல்லாம் பார்ப்போமுனு ஆவலோட இருந்தாங்க.

இதோ சுற்றுலா போகும் நாளும் வந்துவிட்டது. அனைவரும் ஆசிரியர்கள் சொல்படி வரிசையாகப் பேருந்தில் ஏறினார்கள். ஒவ்வொருவரும் தண்ணீர், உணவு, தின்பண்டங்கள் நிரம்பிய பை வைத்திருந்தார்கள்.

பேருந்து புறப்பட்டதும் மாணவர்களில் சிலர் பாட்டுப்பாட, சிலர் நடனமாட, சிலர் கை தட்ட என்று மகிழ்ச்சியுடன் பயணம் செய்தனர். அப்போது ஆசிரியர் ஒருவர் எழுந்து நின்று ‘ மாணவர்களே... அகத்திய மலை குறித்து உங்களுக்கு எதாவது தெரியுமா? தெரிந்ததைக் கூறுங்கள்.. மற்றவர்களும் தெரிந்து கொள்ளட்டும்‘ என்று கூறினார்.

‘அங்கு கஸ்தூரி மஞ்சள், சாம்பிராணி பூ, கல் தாமரை... இன்னும் நிறைய மூலிகைகள் இருக்கிறதாம், எங்கள் பாட்டி சொன்னாங்க‘ செந்தமிழன் சொன்னான்.

‘தேவதாரு, சோழவேங்கை, இன்னும் பெரிய பெரிய மரங்கள் இருக்கிறதுனு எங்க அப்பா சொன்னார்‘ சொல்லிய



சந்தியா அனைவருக்கும் சாப்பிட கடலை மிட்டாய் தந்தாள்.

அப்போது எழுந்து நின்ற அதிதி 'நான் ஒரு விசயம் கேள்விப்பட்டேன்… உண்மையா என்று தெரியாது, சொல லட்டுமா அம்மா' என்று கேட்டாள்.

'சொல்லு அதிதி' ஆசிரியர் அனுமதி தரவும் 'அகத்திய மலையில் இருக்கும் குகைகளில் கற்கால மனிதர்கள் இன்னும் வாழ்ந்துகிட்டு வராங்கனு கேள்விப் பட்டேன் அம்மா' என்றாள்

அதிதி சொன்னதைக் கேட்டதும் மாணவர்கள் 'ஓஓஓஓஓஓ…' என்று கூச்ச லிட்டனர்.

'நானும் கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால் இப்போது அப்படி யாரும் அங்கில்லை. சத்தம் போடாமல் அமைதி யாக வாருங்கள்' ஆசிரியர் ஒருவர் சொல்லவும் அனைவரும் அமைதி காத்தனர். பேருந்து அகத்திய மலையை அடைந்தது.

பேருந்திலிருந்து மாணவர்கள் இறங்கிய தும் 'மாணவர்களே… மரங்கள் அடர்ந்து உள்ளதால் வழி மாறிப் போக வாய்ப்பு உள்ளது. அதனால் அனைவரும் ஒன்றாக சேர்ந்து சுற்றிப் பார்க்க வேண்டும். யாரும் கூட்டத்தை விட்டு தனியே போகக் கூடாது. மூலிகைச் செடிகளைப் பற்றி நாங்கள் கூறுவதை நீங்கள் கவனமாகக் கேட்டு எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இங்கே பார்த்தவைகளைப் பற்றி கட்டுரை எழுத வேண்டும். சரியா குழந்தைகளா… ?' கேட்ட ஆசிரியர் முன்னால் நடந்தார்.

வந்திருந்த ஆசிரியர்கள் வழிகாட்டுதலு டன் மாணவர்கள் மூலிகைகளைப் பற்றியும், மரங்களைப் பற்றியும், பறவை களைப் பற்றியும் குறிப்புகளை எடுத்துக் கொண்டனர். நேரம் போனதே தெரிய வில்லை. அனைவருக்கும் பசி எடுத்தது. அங்கு ஓடிய ஆற்றின் கரையில் அமர்ந்து அனைவரும் சாப்பிட்டார்கள்.

சாப்பிட்டுமுடித்ததும்சிறிதுஓய்வெடுப் பதற்காக அங்கேயே அமர்ந்து அனைவரும் பேசிக்கொண்டு இருந்தார்கள்.

அப்போது எதிர்ப்பக்கம் இருந்து 'ம்மா…. ம்மா…' என்ற சத்தம் கேட்டது. அனைவரும் சத்தம் வந்த பக்கமாக திருப்பிப் பார்த்தனர்.

நீண்ட முடிகளைக் கொண்ட காட் டெருமை சத்தமிட்டபடியே சென்று கொண்டிருந்தது. அதன் மீது துணியால் கட்டிய மூட்டையுடன் ஒருவர் அமர்ந்து இருந்தார். இவர்கள் சரியாக பார்க்கும் முன்பே காட்டெருமை இவர்களைக் கடந்து தூரமாகப் போய் விட்டது.

மாணவர்கள் 'கற்கால மனிதன்…. கற்கால மனிதன்…' என்று கூச்சலிட்டனர்.

அனைவரையும் அமைதிப் படுத்திய ஆசிரியர்கள் 'வாருங்கள்… நாமும் அந்தத் திசையில் போய்ப் பார்க்கலாம்' என்றதும் மாணவர்கள் ஆர்வத்துடனும், சிறிது பயத்துடனும் காட்டெருமை ஓடிய வழியில் நடந்தனர்.

நீண்ட நேரம் நடந்தும் எதையும், யாரையும் பார்க்க முடியாமல் களைத்துப் போனார்கள்.

'எங்காவது சிறிது ஓய்வெடுக்கலாம் அம்மா' மாணவர்கள் கேட்டதும் 'பொறுங்கள், தகுந்த இடம் பார்ப்போம் ' கூறிய ஆசிர்யர்கள் மரங்களில் இருந்து பறித்த கொய்யா, நாவல் பழங்களைச்

சாப்பிடத் தந்தனர்.

அருவி விழும் சத்தம் கேட்டு அவ் வழியே நடந்து சென்றனர். கொஞ்ச தூரம் நடந்ததும் அருவி அவர்களின் கண்களில் பட்டது. அருவியைப் பார்த்த இளஞ்செழியன் 'ஐஐஐ... அருவி, நான் குளிக்கப் போகிறேன்' என்று வேகமாக ஓடினான்.

'நில்லு இளஞ்செழியா...' அழைத்த படியே ஆசிரியர் ஓடிவர, 'போகாதே இளஞ்செழியா...' என்று தோழர்கள் கூப்பிட எதையும் கவனிக்காமல் ஓடிய இளஞ்செழியன் வேகமாக விழும் அருவி யின் பக்கத்தில் சென்று விட்டான். அனைவரும் பயந்து சத்தம் போட்டனர்.

அப்போது எங்கிருந்தோ ஓடிவந்த காட்டெருமையின் மேலிருந்து குதித்த ஒருவர் இளஞ்செழியனைப் பிடித்துத் தூக்கினார். அவர் கறுப்பாக, மிகவும் உயரமாக இருந்தார். தலைமுடி மிகவும் நீளமாக இருந்தது. அவர் அணிந்திருந்த ஆடையும் வித்தியாசமாக இருந்தது. காட்டெருமையின் மேல் வில்லும், அம்பும், தோலினால் ஆன பையும் இருந்தன. ஆசிரியர்கள் அவரின் அருகில் வேகமாகச் சென்றனர். மாணவர்கள் தயக்கத்துடன் தள்ளியே நின்றார்கள்.

இளஞ்செழியனை ஆசிரியர்களிடம் ஒப்படைத்தவர்'அருவியின்கீழ் பள்ளங்கள் இருக்கின்றன, கவனமாகக் குளிக்க வேண்டும், பழக்கம் உள்ளவர்களுக்கே சிரமம், சிறிது கவனம் குறைந்தாலும் ஆபத்து ' என்றார் அவர்.

'நீங்கள் கற்கால மனிதரா...' தூரத்தில் நின்றபடியே சத்தமாகக் கேட்டாள் அதிதி.

'இல்லைம்மா... ஏன் அப்படி கேட்கிறாய்' என்றார் அவர்.

'இல்லை, கற்கால மனிதர்கள் பற்றி சில விசயங்களைக் கேள்விப்பட்டு இருக்கி றோம். நீங்கள் அவர்களைப் போன்று இருக்கிறீர்கள் ' பதில் சொன்னாள் அதிதி.

'அப்படியா... இம்ம்... நான் கற்கால மனிதர்கள் இல்லை, இந்த மலையில் வாழும் பழங்குடி இன மனிதன், எனது பெயர் மலையப்பன்' என்றார் அவர்

' அப்படியா... உங்களைத் தொட லாமா...?' கேட்டபடியே அவரின் அருகில் போனாள் சந்தியா. மற்ற மாணவர்களும் தயக்கம் நீங்கி அவரின் அருகில் சென்றனர்.

'தொடலாமே...' கையை நீட்டினார் அவர். மெதுவாகத் தொட்டுப் பார்த்த செந்தமிழ்' உங்களின் கைகள் ஏன் இவ்வளவு கடினமாக இருக்கின்றன' என்று கேட்டாள்.

'நாங்கள் இயற்கையோடு சேர்ந்து வாழ்பவர்கள். இயற்கையை அழிக்காமல் கிடைக்கும் காய்கள், பழங்களை உண்டு வாழ்பவர்கள். மரங்களிலும், மலையிலும் ஏறி, இறங்கி இப்படி ஆகிவிட்டது '

அடுத்து அடுத்து மாணவர்கள் கேட்ட சந்தேகங்களுக்கு பதில் சொல்லிக் கொண்டி ருந்தார் மலையப்பன். அப்போது ஆசிரியர் ஒருவர் 'அடடா... நேரம் போனது தெரியாமல் பேசிக்கொண்டு இருந்து விட்டோம். மாலை வந்துவிட்டது. அதோ சூரியன் மறையப் போகிறது. இருட்டில் பாதை தெரியாமல் போகப் போகிறது. சீக்கிரம் கிளம்புங்கள்' என்றார்.

'கவலைப்படாதீர்கள், உங்களின் பேருந்து வரை நான் வழி காட்டுகிறேன்... இது என் அன்பளிப்பு ' என்றபடியே தேன்

நிறைந்த ஒரு குடுவையை ஆசிரியரிடம் தந்தார்.

'உங்களால் எங்களுக்கு ஒரு உதவி வேண்டும்' மாணவர்களிடம் கேட்டார் மலையப்பன்

' என்ன உதவி மாமா, சொல்லுங்க செய்கிறோம் '

'இதுபோன்றசுற்றுலாவரும்உங்களைப் போன்றவர்களால் இங்கு மக்காத குப்பைகள் அதிகம் சேருகின்றன. அதனால் இயற்கை வளம் கெடுகிறது. இனிவரும் காலங்களில் இது போன்ற குப்பைகளை இங்கே சேரவிடாமல் நீங்களே திரும்ப கொண்டு செல்ல வேண்டும். அதற்கான விழிப்புணர்வை நீங்கள் மக்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும். செய்வீர்களா...?' என்று கேட்டார் மலையப்பன் மாமா

'அவசியம் செய்கிறோம் மாமா' குழந்தைகள் அனைவரும் ஒன்றாக சொல்லவும் மகிழ்ச்சியுடன் சிரித்த மாமா பேருந்தில் அனைவரையும் ஏற்றி விட்டு விடை கொடுத்தார்.

# குயில் பாட்டு

பள்ளி விட்டு வந்தேனே
பாடம் எழுத அமர்ந்தேனே
கூக்கூ... கூக்கூ ... என்றே
கூவும் குரலைக் கேட்டேனே

துள்ளி எழுந்து ஓடினேனே
தோட்டம் முழுதும் தேடினேனே
தேடும் என்னைப் பார்த்ததுமே
குயிலும் மறைந்து கொண்டதே

மா மரக் கிளைகளினிலே
வேப்ப மர உச்சியினிலே
தென்னை மரக் கீற்றினிலே
எங்கும் குயிலைக் காணோமே

சிறிது நேரம் சிந்தித்தேனே
வழி ஒன்றை அறிந்தேனே
மரத்தின் பின்னே மறைந்தேனே
குயிலைப் போலக் கூவினேனே

சுட்டிக் குயிலுமே மெல்ல
எட்டிப் பார்த்துக் கூவியதே - கூக்கூ
பாடும் குயிலைப் பார்த்ததுமே
பட்டம் பெற்றதாய் மகிழ்ந்தேனே...

**அன்புச்செல்வி சுப்புராஜு**
பட்டாபிராம், சென்னை



# மழையே!!! மழையே!!!

மழை வருமா?
நடனம் ஆடலாம் என
காத்திருக்கும் மயில்கள்
கப்பலிட குதுகலமாய் குழந்தைகள்
பள்ளிவிடுமுறைக்காக
செய்தி பார்க்கும் மாணவர்கள்
சூடாக தேநீர் அருந்தி நொறுக்குத் தீனி
சாப்பிடும் நோக்கில் இளைஞர்கள்
மழை சீற்றமாகி என் நிலத்தை
பாழாக்கி விடுமோ என
சோகத்தில் அழும் விவசாயிகள்
கிடுகிடுக்கும் இடிமுழக்க சத்தமும்,
மின்னல் கீற்றுகளைக் கண்டு
குளிர்காற்றில் நடுங்கும் முதியோர்கள்!



மழையை கண்டு வியக்கிறேன்
அது உயிர்ப்பிக்க உதவி செய்யும்
அதன் நண்பர்கள் எத்தனை! எத்தனை!
மழை நமக்கு யாதுமாகி நின்று
அடிப்படை தேவைகளை
பூர்த்தி செய்வதை மறக்கலாகாது
தேனடையிலிருந்து தேன் போன்று
சொட்டும் மழையில் மனது மையலுறுகிறது!

ஆழிப்பேரலையாய்!
வெள்ளமாய்!
பேய்காற்றைக் கொண்டு
நீ ஊழித் தாண்டவம் ஆடுகிறாய்!

இம்மழை தீமையே என்று கருதினால்
இப்புவியில் உயிர்களே
உருவாகி இருக்காதே!

இப்படியெல்லாம் இருக்கையில்
நீ நன்மையா? தீமையா?
மனக்குழப்பம் ஏற்படும்பொழுது,
ஒன்றில் நன்மை இருக்கிறதெனில்
தீமையும் இருக்கத்தானே செய்யும்!!!

மழையே! நின் பெருமையை பாடினேன்
இதை அறிந்த நற்பண்பு உடையோர்
மரக்கன்றுகள் நடுவர்
அறியா மாந்தரோ மரங்களை வெட்டுவர்...

**தா.உ.ஜான்வீ**
பத்தாம் வகுப்பு
பூம்புகார்
மயிலாடுதுறை மாவட்டம்

# “சாதனைக் குழந்தை”

# அனன்யா

நாம் பூமியில் அனைத்தும் இருந்தும் எதுவும் செய்ய முடியாமல் துவண்டு போகின்றோம்... ஆனால், அனன்யா மூளை வளர்ச்சியில் குறை பாடுடன் பேசுவதில், நடப்பதில் சிரமம், பார்வையில் குறைபாடு போன்ற பல சிக்கல்களுக்கு நடுவிலும், ‘‘தன்னால் முடியும்’’ என்று சாதித்து காட்டிக் கொண்டு இருக்கிறார். மற்றவர்களுக்கும் முன்னுதாரணமாக திகழ்கிறார்.





அனன்யா பிறந்ததும் டாக்டர்கள் அவள் ஒரு ‘‘வெஜிடபிள் பேபி’’ (vegetable baby) என்று கூறினார்கள். அதாவது இவரால் ஒன்றும் செய்ய முடியாது, வெறுமனே படுத்துக் கொண்டு மட்டும்தான் இருப்பார்... என்று கூறி இருக்கிறார்கள்.

ஆனால், தற்போது ‘‘அனன்யா’’ நூற்றுக்கும் மேற்பட்ட போட்டிகளில் கலந்துகொண்டு பல்வேறு பரிசுகளையும், சான்றிதழ்களையும், கோப்பைகளையும் பெற்றுள்ளார். ‘‘இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி” திரு. மயில்சாமி அண்ணாதுரை, அவர்களிடமிருந்து “சாதனைக் குழந்தை” விருது பெற்றுள்ளார்.

அனன்யா ஓவியம் வரைவதில் வல்லவர், தற்போது பல்வேறு ஓவியங்களை வரைந்து பலருக்கும் அவர்களின் பிறந்தநாளுக்கு அன்பளிப்பாக கொடுத்து வருகிறாள்.. ‘‘அன்பின் சங்கமம் சிறுவர் உலகம்’’ வழியாகவும் தனது ஓவியத்திறமையை தமிழ்நெஞ்சம் இதழ், தமிழாழிக்காட்சி நிகழ்ச்சிகளில் வெளிக்காட்டி இருக்கிறார். அதுமட்டுமில்லாமல், முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. இறையன்பு ஐஏஎஸ் அவர்களுக்கும். புதுச்சேரி மாநிலத்தின் ‘‘மேதகு கவர்னர்’’ திருமதி. டாக்டர்.



முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. இறையன்பு ஐஏஎஸ் அவர்களுடன்

தமிழிசை சவுந்தர்ராஜன் அவர்களையும் நேரில் சந்தித்து அவர் கைப்பட வரைந்த ஓவியத்தை அளித்து மகிழ்ந்துள்ளார்.

இதுமட்டுமின்றி நவராத்திரி கொலு வின் போதும் ''அனன்யா'' பல்வேறு முயற்சிகளை செய்து உள்ளார். ஒவ்வொரு ஆண்டும் அனன்யா தனியாக சிறிய அளவில் கொலு அமைத்து அதற்கு காலை, மாலை இருவேளையும் விளக்கேற்றி அவள் அம்மாவின்உதவியுடன்பலவண்ணங்களில் பல்வேறு கோலங்களை வரைந்தும் பூக்களால் அலங்கரித்து அழகு செய்கிறார். மற்றும் நண்பர்கள், உறவினர்கள், உடன் படிக்கும் குழந்தைகள், ஆசிரியர்கள் பயிற்சி யாளர்கள் அனைவரையும் அழைத்து “சாதனைக் குழந்தை” அனன்யா மகிழ்ச்சி யுடன் கொலுவை கொண்டாடி சிறப்பித்து வருகிறார்.


அனன்யா போன்ற ஒரு சாதனைக் குழந்தையை நாமும் பாராட்டி மகிழ்வோம்.., இந்தச் சமுதாயம் அனை வருக்கும் ஆனது .

மாற்றம் ஒன்றே மாறாதது மாற்றுத்

திருமதி. டாக்டர். தமிழிசை சவுந்தர்ராஜன் அவர்களுடன்












திறனாளிக் குழந்தைகளின் வாழ்வில் முன்னேற்றத்திற்குக் கை கொடுப்போம். அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றுவோம்.

**அன்புச்செல்வி சுப்புராஜு**
*அன்பின் சங்கமம் சிறுவர் உலகம்*

# யார் புத்திசாலி

பாபு, மகேஷ¬ இருவரும் பள்ளிக் கூட நாட்களிலிருந்தே நல்ல நண்பர்கள். ஒரே விஷயத்தை இரண்டு பேரும் ஒவ்வொரு கோணத்தில் அணுகுவார்கள். இருவருக்கும் நீச்சல், சைக்கிள், ஒட்ட பந்தயம், எல்லாமே அத்துப்படி. தவிர படிப்பிலும் கெட்டிக்காரர்கள்.

அவர்களுடைய கிராமத்தில், வருடா வருடம் நடக்கும் போட்டிகளில் கலநது கொண்டு கிராமத்திற்கு பெருமை சேர்ப் பதை வழக்கமாகக் கொண்டி ருந்தனர்.

பாபு பள்ளிக்கூட படிப்பு முடிந்த உடனேயே, அவனுடைய தந்தைக்கு சென்னைக்கு மாற்றலாக கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தான். மகேஷ் கிராமத்திலையே தங்கி தந்தையுடன் விவசாயபணிகளுக்கு உதவி செய்தான்.

விவசாயத்தில் புது தொழில்நுட்ப வளர்ச்சி பற்றிய விவரங்களை அறிந்து கொண்டு அதனை முதலில் அவன்வீட்டில் ,சோதனை செய்ததன் மூலமாக லாபம் அடைய, அதனை ஊர் மக்களிடம், பஞ்சாயத்து தலைவர் மூலமாக தெரிவிக்க, ஊர் மக்கள் சந்தோஷப்பட்டு அதன்மூலமாக லாபம் கிடைத்தது.

இது தவிர மாணவர்கள் படிக்க ஏதுவாக, கிராமத்தில் நூலகம் நடக்க வழிவகுத்தான். மகேஷிடம் உள்ள நூல்களை, நூலகத்திற்கு இலவசமாக வழங்கினான். மேலும் அரசுத்தேர்வு,வங்கி தேர்வுகளுக்கு மாணவர்கள் தயாராக உதவி செய்தான் கிராமத்துக்கு அருகே உள்ள டவுனில் உள்ள கல்லூரியில் மாணவர்கள் கல்லூரி படிப்பு படிக்க ஏற்பாடு செய்தான்.

மாணவர்களின் எதிர்காலம் ஒளியுரச் செய்தான்மகேஷ் .தன்சொந்த வேலையை விடாமல் செய்தான். சென்னைக்கு சென்ற பாபு, நண்பனைத்தேடிவந்தான். பாபு கல்லூரியில் படிப்பு முடித்த பின்னர், கேம்பஸ் இண்டர்வியூ மூலமாக பெங்களூரில் வேலை கிடைத்து சென்று விட்டான்,தன்நண்பனிடம் விவரம் தெரிவித்து ஊருக்கு திரும்பி, பெங்களூரில் பணிபுரிய ஆரம்பித்தான்.

மகேஷ் கொஞ்சம் யோசிக்க ஆரம் பித்து, பக்கத்தில் உள்ள கிராமங்களில் நடக்கும் திருவிழா காலங்களில், பொது மக்கள் கவனத்தை கவரும் வண்ணம் வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பற்றிய குறும்படம் காண்பித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினான்.

இதன் மூலமாக மகேஷ் பிரபலமாக, ஊடகங்களில் மகேஷ் பெயர் வெளியே வர ஆர்ம்பித்து, பத்திரிக்கைகளில் பேட்டி வர ,பிரபலமானான் மகேஷ்.

ஊர் மக்கள் இதன் மூலமாக இரண்டு நண்பர்களில் யார் புத்திசாலி எனத்தெரிந்து கொண்டனர்.

ரங்கராஜன். எஸ்.வி.
அம்பத்தூர்



Power Point Storie - 14

பவர் பாயிண்ட் கதைகள் - 14

# கனவை நோக்கி...



## அத்தியாயம் : 1

எழுதியவர்:

**ருக்மணி வெங்கட்ராமன்**

அந்த இளம் காலை வேளையில் பறவைகள் கூட்டம் கூட்டமாகத் தன் இரை தேடி பறக்க, வேலன் தன் இரை தேடி பறக்கும் நாளை எண்ணி ஏக்கமாய் வானம் பார்த்தான்.!

'வேலா..! என் ராசா... நீ பன்னண்டாம் வகுப்புல பாஸ் பண்ணிட்டியாம்.' வேகமாய் வந்து தன் மகனின் கன்னம் தொட்டு கொஞ்சிய அவன் தந்தை,

'அய்யா... நம்ம முதலாளி உன்னை வரச் சொன்னாருப்பா.... போ சாமி.' என்றார் உற்சாகமாய்.

சட்டென கண்ணீர் மல்க சாமியைக் கும்பிட்டவன், உற்சாகமாக முதலாளி வீட்டிற்குச் சைக்கிளில் கிளம்பினான். அந்த ஓட்டை சைக்கிளின் 'கரகர' ஓசை, இன்று இனிமையாய் இருந்தது !

உள்ளே நுழைந்ததும் முதலாளி, 'வாப்பா வேலா... வாழ்த்துகள். பன்னிரண்டாம் வகுப்பில் தமிழ் நாட்டிலேயே இரண்டாவது மாணவனாக வந்திருக்க. இப்பதான் நியூசுல பார்த்தேன். நம்ம ஊருக்கே பெருமை சேர்த்திருக்க!' என்றார்.

'அப்படீங்களா ஐயா....' மிகுந்த உற்சாகம் அடைந்த வேலன், 'ஐயா..! நீங்க கொடுத்த ஊக்கம் தான் என் வெற்றிக்கு காரணம். அதுக்கு நான் எப்படி

**எழுதியவர்கள்:**

**அத்தியாயம் : 1**
**ருக்மணி வெங்கட்ராமன்**

**அத்தியாயம் : 2**
**வனஜா முத்துக்கிருஷ்ணன்**

**அத்தியாயம் : 3**
**விஜி சிவா**

**அத்தியாயம் : 4**
**கி. இரகுநாதன்**

**கதை நெறியாளுமை :**
**விஜி சிவா**

கைமாறு செய்ய போறேன்?' மகிழ்ச்சியில் கண்கலங்கினான்.

'உன் திறமைதான் காரணம் வேலா.... சரி, அடுத்து என்ன செய்யறதா உத்தேசம்?'

'படிக்கணும்னு ஆசைங்க ஐயா.... நீங்க என்ன சொல்றீங்கய்யா?' என்று பணிவுடன் கேட்டான்.

'உடனே அமெரிக்கா போக விசா, பாஸ்போர்ட்டுக்குஅப்ளை பண்ணு.அங்க போய் படித்து பட்டம் பெற்று பேரும் புகழோட வா. வந்து இந்த ஊர் பசங்களுக்கு நல்லது செய். உன் மூலமா இந்த ஊர் முன்னேறணும்... நீ நாலு பேர முன்னேத்தி விடு..'

'ஐயா...! நான் எப்படி அங்க போய்...!' தயக்கத்துடன் சொன்னான் வேலன்.

'அங்க என் பிரண்ட்டோட பையன் இருக்கான்; மூர்த்தினு பேரு.! நியூஜெர்சியில ஒருதொழிற்சாலை வைத்து நடத்துறான். அவன்கிட்ட உன்னப்பத்தி ஏற்கனவே பேசி இருக்கேன். பேங்கில் இருந்து உனக்கு லோன் கிடைக்க நான் கேரண்டி கையெழுத்து போடறேன். வேணும்னா இரண்டு ஏக்கர் நிலத்தை அடமானமா தரேன்'

'என்னால அங்க போயி படிக்க முடியுமா? பயமா இருக்குங்க ஐயா .'

'எதுக்கு பயம்? அந்த பையனும் உன்ன மாதிரி தயங்கினான் முதல்ல.. இன்றைக்கு தொழிற்சாலை வைத்து நடத்துற அளவுக்கு முன்னேறியிருக்கான்' என்ற முதலாளி, தன் அலைபேசியில் ஏதேதோ எண்களைத் தட்டி 'ஹலோ மூர்த்தி... நான் சொன்னேன்ல வேலன்னு... அந்த தம்பி வந்து இருக்கான், அமெரிக்கா வர்றது சம்பந்தமான விவரங்களை கொஞ்சம் தெளிவா அவன் கிட்ட சொல்லுப்பா' என்றார்.

சற்று தயக்கத்துடனும் பயத்துடனும் அலைபேசியை வாங்கி 'ஹலோ' என்றான் வேலன்.

மறுபக்கத்தில் ஒலித்த மூர்த்தியின் குரல்... அவன் கனவை நனவாக்க வழி சொல்லச் சொல்ல, வேலனின் முகம் மலரத் தொடங்கியது.!

'சரிங்க அண்ணா... நீங்க சொல்றபடி நான் டோபல் பரீட்சை எழுதிட்டு, பாஸ்போர்ட் விசா, லோனுக்கு அப்ளை பண்றேன்' என்றான் வேலன்.

......

அடுத்த ஆறு மாத காலத்தில் அனைத்துமே விரைவாய் நடந்தது... அக்கிராமமே அவனின் வெளிநாட்டுப் பயணத்தை ஆவலுடன் எதிர்பார்த்தது.

'தம்பி..! இந்த ஊருக்கு இது தான் முதல் பாஸ்போர்ட்' என்று ஒரு சுப நாளில் தபால்காரர் மகிழ்வுடன் கூற,

'அண்ணா...! நீங்க விமானத்தில் போகப் போறீங்களா? நானும் உங்களை மாதிரி படிச்சு வெளிநாடு போவேன்' எனச் சில குழந்தைகள் குதூகலமாய் வேலனின் கை பிடிக்க,

'நீங்க எல்லாரும் நல்லா படிக்கணும். உங்களுக்கு என்ன தேவைனாலும் நான் செய்யறேன்' சந்தோசமாய்ச் சொன்னான் வேலன்.

மூர்த்தியின் வழிகாட்டலிலும், முதலாளியின் கருணையாலும், வங்கி மேலாளரின் நம்பிக்கையாலும், ஒரு புகழ்பெற்ற

கல்லூரியில் வேலனுக்கு இலகுவாய் இடம் கிடைத்தது.

கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய பணமும், விமான பயணச்சீட்டும் முதலாளியின் நம்பிக்கையால் சாத்தியமானது... வேலனின் கனவு விரிந்தது.!

......

அமெரிக்கா புறப்படும் நாள் வந்தது.

'ராசா.. பார்த்து சூதானமா நடந்துக்கோ.' என்று அம்மா ஆதங்கத்துடன் கூற, ஊரே வாழ்த்தி வழியனுப்ப, சென்னைவரை வேலனின் அப்பாவும், முதலாளியும் வந்தனர்.

'வேலா... பயப்படாம நல்லபடியா போயிட்டு வா... நியூஜெர்சியில் இறங்குனதும் உன்ன கூட்டிட்டு போக மூர்த்தி வந்துடுவான்.' நம்பிக்கையுடன் கை அசைத்து விடை பெற்றனர்.

......

விமானத்தில் பறக்கும் போது அவன் மனம் துள்ளியது. துபாயில் வந்திறங்கினான்.

துபாயில் ஒரு மணிநேரம் இருந்ததால் ஏர்போர்ட்டைச் சுற்றி வந்தான். அடுத்த பிளைட்டில் பதினைந்து மணி நேரம் பயணித்து நியூஜெர்சி வந்திறங்கினான்.

வெளிநாட்டு பயணிகளின் பாஸ்போர்ட், விசா செக் செய்யும் வரிசையில் நின்றான்.

'யுவர் பாஸ்போர்ட் பிளீஸ்' எனும் போது தான் கவனித்தான்... தன் பாஸ்போர்ட் காணவில்லை என.

பயத்தில் தொண்டை வறண்டு போக திணறியபடி சொன்னான்... 'சார்.. ஐ... ஹேவ் மிஸ்ட் மை பாஸ்போர்ட்...!?'

'வாட்... ஆர் யூ ஜோக்கிங்..?' அந்த அதிகாரியின் புருவம் சுருங்கியது.!

......



## அத்தியாயம் : 2

எழுதியவர்:

**வனஜா முத்துக்கிருஷ்ணன்**

வேலன் சற்றே தடுமாற்றத்துடனும், பயத்துடனும் தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில்,

'சார்.. ப்ளீஸ் சார்.. ஐ டோண்ட் நோ எனிதிங்க் ஸார். ஐம் எ ஸ்டூடண்ட்... வில்லேஜ் பாய்!' திணறினான்.

'கமான்.. வாட்ஸ் யுவர் ஃபுல்நேம்' என்றார் அந்த விமான நிலைய அதிகாரி.

'மை நேம் இஸ் வேலன் சாரங்கபாணி.' அந்த அமெரிக்க அதிகாரியை பார்த்தவாறே ஒலித்த வார்த்தைகள் அழுகையாய் மாற,

'ஐ டோண்ட் அண்டர்ஸ்டாண்ட்'.

'வீ..ஏ..எல்..எ.... என்....' வேலன் தன் முழுப்பெயரையும் ஒவ்வொரு எழுத்தாக உச்சரிக்க...

'ஒ.. மை காட்.. ஹவ் மெனி ஏ'ஸ்!!.' என்ற அதிகாரி அவர்களை நோக்கி வந்த மற்றொரு அதிகாரியை அழைத்தார்... 'கமான்.. விஜய்..யூ நோ இண்டியன்

லாங்வேஜ்.. ப்ளீஸ் ப்ரசீட்.'

' எஸ் ஜான்...'

அந்த இந்தியன் ஆபிஸர் விஜய், வேலனை அமைதிப்படுத்தி அவன் பெயரையும், அவன் அமெரிக்கா வந்த காரணத்தையும் அறிந்து கொண்டார்.

'வேலன் நீ துபாயில் இருந்து கிளம்பும் போது உன் பாஸ்போர்ட் இருந்திருக்கு. அப்புறம் என்ன ஆச்சு?'

'ஆமாம் சார்.. என்னோட பேக்ல தான் பர்ஸ், பாஸ்போர்ட், டாலர் வச்சிருந்தேன். இப்போ எல்லாம் காணோம் ஸார். எங்க முதலாளி கஷ்டப்பட்டு வாங்கின நிலத்தை வித்து என்னைப் படிக்க அனுப்பி இருக்காரு. அந்தப் பணமும் போச்சு. நான் இனிமே என்ன செய்யறது சார். நான் படிச்சு தான் சார் எங்க கிராமத்தை முன்னேத்தணும்...' என்று விக்கி விக்கி அழ ஆரம்பித்தான்.

'சரி சரி... நீ அழாதே'. என்ற விஜய், பாஸ்போர்ட் ஜெராக்ஸ் ஏதாவது வச்சிருக்கயா?'.

'அடங்கொப்புரானே!! சுப்புலட்சுமி ஏதோ பேப்பர் கொடுத்துச்சே' என எண்ணியவன், 'சார் பள்ளிக்கூடத்துல என்னோட சீனியர், பக்கத்து வீட்டு சுப்புலட்சுமி புள்ளை... திரும்ப திரும்ப எல்லாத்தையும் ஜெராக்ஸ் எடுத்துக்கோன்னு சொல்லிச்சு சார்... ரொம்ப கெட்டிக்காரப் பொண்ணு சார் அது'. ஏதோ பேப்பரை நான் கிளம்பற சமயத்துல என் பேக்கில் வச்சது..' கையை விட்டு துழாவிக் கொண்டிருந்தான்.

வேலனின் அப்பாவித்தனமான பதிலில் புன்னகைத்த அதிகாரி விஜய், ஜானைப் பார்க்க... அவர், 'விஜய்... ஹூ வாஸ் சீட்டட் நெக்ஸ்ட் டு ஹிம் இன் த ஃப்ளைட்..' என்றார்.

'அன் இந்தியன் ஃபேமிலி. தேர் நேம்ஸ் ஆர் விவேக். ஹிஸ் ஒய்ப் கஸ்தூரி விவேக் அண்ட் தேர் டாட்டர் கமலி விவேக்...'

வேலன், 'எஸ் ஸார். அந்தப் பொண்ணு பாவம் ஸார். ஏழு, எட்டு வயசிருக்கும். அது ஒரு சிறப்புக் குழந்தை போல இருந்துச்சு. என்னோட நல்லா வெளயாடிச்சு' என்றான்.

'வேலன்.. இப்போ லோக்கல் போலீசுக்கு இன்பார்ம் பண்ணனும்.. என் கூட வா...'. என்று கூப்பிட்டுக் கொண்டே அடுத்த அறைக்குள் சென்றார் விஜய்.

......

விவேக் தம்பதியர் ஸ்பெஷல் கோட்டா வில் தனியாக விமானத்தில் இருந்து இறக்கப்பட்டு முன்பே சென்றனர்.. வரிசையில் நின்று லக்கேஜ் எடுக்க வரும் போது, குழந்தை கமலி அங்கு ஒரு அறையில் தனியாக கண்ணீருடன் அமர்ந்து இருந்த வேலனைப் பார்த்து,

'மாம்... அங்கிள்... அங்கிள்.' என்று அவனை நோக்கி உற்சாகமாக குரல் கொடுத்தாள்.

கமலி சொல்வதை முழுவதும் கேட் காமல், தன் பெட்டிகளைத் தேடும் அவசரத்தில் இருந்த கமலியின் தாய் கஸ்தூரி,

'என்ன ஆச்சு கமலி? ஆர் யூ ஹங்ரி? இரு.. கொஞ்ச நேரத்தில் வீட்டுக்குப் போகலாம். பாட்டி வில் பி வெயிட்டிங் பார் யூ' என்றாள்.

'டாடி... அங்கிள்... அங்கிள்..' என்று

திரும்ப திரும்ப அவள் குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது.

லக்கேஜ் எடுத்துக் கொண்டு வெளியே வந்ததும், அங்கு விவேக்கின் ஃபிரண்ட் மூர்த்தி நிற்பதைப் பார்த்த விவேக்,

'ஹாய் மூர்த்தி.. வாட் எ ஸர்ப்ரைஸ்... நானே உனக்குக் கால் பண்ணணும்னு இருந்தேன். கும்பிடப் போன தெய்வம் எதிரில் நிற்குது.... இங்க ஏன் வெயிட் பண்ற..? யாருடா வராங்க?' என்று மூர்த்தியின் கையைக் குலுக்கியபடி கேட்டான் விவேக்.

'ஹாய் விவேக்.. எங்க அப்பாவோட பிரண்ட்க்கு தெரிந்தவங்க இதுல வராங்க. அவர் அமெரிக்காவுக்கு வரது இதுவே முதல் முறை.. ஏன் பிளேன்ல வருவதே முதல் முறைன்னு நினைக்கிறேன். எல்லோரும் வந்தாச்சு. ஆனா அவரைக் காணோமே! ஏதாவது பிரச்சினையான்னு தெரியலை. ஒரே படபடப்பா இருக்கு.'

'ஒண்ணும் இருக்காது... பயப்படாதே மூர்த்தி' என்றவன், 'சாரி மூர்த்தி.. நான் ஏதாவது ஹெல்ப் வேணும்னா பண்ணவா.?' என்றான்.

'வேணாம்பா. பாவம்... இத்தனை நேரம் கமலியை வச்சுகிட்டு வந்திருக்கே. நீ கௌம்பு'

கமலி தூரத்தில் இருக்கும் வேலனை சுட்டிக் காட்டி, 'டாடி.. அங்கிள் அங்கிள்' என்றாள்.

அவள் சொல்வதைக் கேட்காமல், 'ஓகே..பை மூர்த்தி...' என்று கிளம்பினான் விவேக்.

'அடடா... வேலனின் போட்டோவைக் காட்டி, அவரைப்பற்றி விசாரித்து இருக்கலாமோ...' என்று மனதில் நினைத்தான் மூர்த்தி.

......

'ஹேய் கஸ்தூரி... கமலி அடிக்கடி 'அங்கிள் அங்கிள்'ன்னு யாரையோ காட்டினாளே.... அவர் யார் என்று கவனித்திருக்கலாமோ!! ஒரு வேளை மூர்த்தி அழைத்துப் போக வந்தவர், அந்த அங்கிளாக இருக்குமோ' என விவேக் கேட்க,

'தெரியலையே விவேக்... மே பி இருக்கலாம்... லக்கேஜ் கலெக்ட் பண்ண கொஞ்சம் லேட் ஆகும்... வேற ஒண்ணும் இருக்காதுபா' சமாதானம் சொன்னபடி புன்னகைத்தாள்.

சிறப்புக் குழந்தைகள் நுண்ணிய அறிவும், பாசமும் உள்ளவர்களாக இருப்பதைப் பற்றி அறிந்திருந்தும், அதை சற்று உற்றுப் பார்க்க தவறிவிட்டோமோ என யோசித்தபடி காரைச் செலுத்தினான் விவேக்.

......



## அத்தியாயம்: 3

எழுதியவர் :

**விஜி சிவா**

'சுப்பு... தாயீ.யீ...' தன் மகளைத் தேடிக் கொண்டு கொல்லைப்புறமாய் வந்த மணி, துணி துவைக்கும் கல்லில் உட்கார்ந்தபடி அண்ணாந்து வானத்தை பார்த்துக் கொண்டிருந்த மகள் சுப்புலட்சுமியை

புன்னகையுடன் பார்த்தார். தன் உடம்பிலும், தலையிலும் இருந்த சாம்பல் நிற மண்ணையெல்லாம் கைகளால் தட்டி விட்டபடி கேட்டார்.

‘என்னத்தா... ஃபோன கையில வச்சுக்கிட்டு, ஆகாசத்தை பார்த்துகிட்டு இருக்க... என்ன இம்புட்டு யோசன..?‘



அப்பாவைப் பார்த்தவுடன் சட்டென்று எழுந்த சுப்புலட்சுமி, கயிற்றில் தொங்கிய அப்பாவின் அந்தக் கிழிந்த துண்டை எடுத்துக் கொண்டு, ஓலை வேய்ந்த குளியலறை நோக்கிச் சென்றவள், குளியலறையைத் தாங்கியபடி நீட்டிக்கொண்டிருந்த ஒரு மூங்கில் கம்பின் மீது அந்த துண்டைப் போட்டாள்.

‘இல்லப்பா... இந்நேரம் வேலன் அமெரிக்கா போயிருப்பான்ல... அததாம்பா யோசிச்சிக்கிட்டு இருந்தேன்...‘ முகம் மலரச் சொன்ன தன் மகளைச் சற்று திரும்பிப் பார்த்த மணி, எதுவும் சொல்லாமல் ஓலைத்தட்டியைச் சாத்திவிட்டு குளிக்கத் தொடங்கினார். அந்த ஓட்டைச்சொம்பில் வழிந்த தண்ணீரோடு அவர் கண்ணீரும் கலந்தது.! ஒரு மூலையில் குவித்து வைக்கப்பட்டிருந்த கரம்பை மண்ணை எடுத்து தன் தலையிலும் உடம்பிலும் தேய்த்துக் கொண்டவர், தண்ணீரை அள்ளி அள்ளித் தன் தலையில் ஊற்றினார். ’தன் மகளை எப்படிக் கரை சேர்ப்பது’ என்ற அவரின் ஏக்கமும் பயமும், அந்தக் கரம்பை மண்ணோடு சேர்ந்து, அவர் உடம்பில் கரைந்து நிலத்தில் வழிந்தது.!

சட்டென அவர் நினைவு, இன்று காலையில் பார்த்த அந்தத் தாயையும் சேயையும் நினைத்தது... கஷ்டப்பட்டு இழுத்து குழியில் தள்ளிய அவர்களின் முகம், தன் கைகளில் இன்னும் ஒட்டிக் கொண்டிருப்பது போல் தோன்ற, கரம்பை மண்ணை எடுத்து கைகளை இன்னும் அழுத்தித் தேய்த்தார் மணி.

......

நியூ ஜெர்சி விமான நிலையத்தில் விமான அதிகாரி விஜய், வேலனிடம் தொடர்ந்து கனிவாக விசாரித்துக் கொண்டிருந்தார். அவரின் கைகள் வேலன் கொடுத்த அந்த ஃபைலை புரட்டிக் கொண்டிருந்தன.

வேலன் கூறுவதெல்லாம் உண்மை தானா என பரிசோதிக்க, வேறு ஒரு கோணத்தில் உரையாடலை இயல் பாக்கினார்.

‘எல்லா பேப்பர்சும் வரிசையா அழகா அடுக்கி வச்சிருக்கியேப்பா... ஒவ்வொரு பேப்பருக்கு மேலயும் ஒரு குறிப்பு எழுதி வெச்சிருக்கியே... சூப்பர். குறிப்புகளில் இருந்து எனக்குத் தேவையானதை எடுத்துக்கலாம் போல...‘ சிரித்தார்.

‘எல்லாமே சுப்புலட்சுமிதான் சார் பண்ணுச்சு... உண்மைல இது எல்லாம் எப்படி பண்ணனும்னு எனக்கு தெரியல, அதுதான் ஒண்ணு ஒண்ணா எனக்கு சொல்லிக் கொடுத்துச்சு...‘

‘ரொம்ப கெட்டிக்கார பொண்ணு போல உன் பிரண்டு...‘



'ஆமா சார். ஆனா என்னை விட மூணு வருஷம் சீனியர். எல்லாருக்கும் ஓடி ஓடி நல்லா ஹெல்ப் பண்ணும். எங்க ஸ்கூல்ல நடக்கிற எல்லா விளையாட்டிலும் அதுதான் சார் ஃபர்ஸ்ட் பிரைஸ் வாங்கும்' ஆர்வமாகச் சொன்னான் வேலன்.

'விளையாட்டுன்னா...?.' புருவம் உயர்த்தினார் விஜய்.

'லாங் ஜம்ப், ஹை ஜம்ப், கபடி, ஓட்டப்பந்தயம்... எந்த விளையாட்டு விளையாடினாலும் அது தான் சார் ஜெயிக்கும். எங்க பள்ளிக்கூடம்தான் ஜெயிக்கும்... காரணம் சுப்புலட்சுமி.'

'வாவ்... கிரேட். சூப்பர் கேர்ள் போல! அது சரி... நல்லா படிக்குமா அந்தப் பொண்ணு..?' கேள்வி கேட்டபடி தன் கணணியை இயக்கிக் கொண்டிருந்தார் விஜய்.

'நல்லா படிக்கும் சார். நான் பிளஸ் டூ ல இவ்வளவு மார்க் வாங்கினதுக்கு காரணம் அந்த பொண்ணுதான் சார்... பள்ளிக்கூடம் முடிஞ்ச உடனே ஒவ்வொரு நாளும் எனக்கு தெளிவா சொல்லிக் கொடுக்கும் சார்.'

வேலனின் ஆர்வமான பேச்சால், முகம் தெரியாத அந்த சுப்புலட்சுமி மீது விஜய்க்கு மிகுந்த மரியாதையும், மதிப்பும் ஏற்பட்டன.

இப்பொழுது வேலனைப் பற்றிய விபரங்கள் போதுமானதாக இருந்தன விஜய்க்கு.

'ஓகே வேலன்.. ஃபார்மாலிட்டிஸ் முடிஞ்சது... நீ ஒன்னும் பயப்பட வேண்டாம்.. நான் உதவி பண்றேன். ட்ரேஸ் அவுட் பண்ணிக்கிட்டு இருக்கோம்... சீக்கிரம் உன்னுடைய பாஸ்போர்ட் கிடைச்சுடும்... கொஞ்சம் இங்க வெயிட் பண்ணு வந்துடறேன்' தன் இருக்கையை விட்டு எழுந்தவன், சற்று யோசித்தபடி கேட்டான்... 'அது சரி.... ஏன் சுப்புலட்சுமி வெளிநாட்டில் படிக்க ட்ரை பண்ணல...? வசதி இல்லையா..'

'சார் அதுங்க எல்லாம் வராதுங்க சார். அது வெட்டியான் பொண்ணு... சாதி குறைஞ்சதுங்க...!'

'சோ வாட்..?' புரியாமல் விழித்தார் விஜய்.

'சாதி கொறஞ்ச பொம்பள புள்ளைங்க இதுக்கு மேல படிச்சு என்ன சார் பண்ணப் போகுதுங்க...?' ஒரு கேலியான புன்னகையுடன், வேலன் கேட்ட கேள்வியில் ஒரு நிமிடம் அதிர்ந்து போனார் விஜய். அவர் கையிலிருந்த தாள்கள் நழுவிக் கீழே விழுந்தன!.

வேலனைப் பற்றிய விஜய்யின் எண்ணம் ஒரு நொடியில் உதிரத் தொடங்கியது. வேலன் வாங்கிய மதிப் பெண்ணும், அவன் திறமையும் வேலனின் கேள்வியில் அர்த்தமற்றதாகி தூக்கிலிட்டுக் கொண்டதைப்போல தோன்றியது விஜய்க்கு.

'மனிதநேயமும், பரந்த சிந்தனையும் இல்லாத இவனா படித்து தன் ஊரை முன்னேற்றப் போகிறான்...?' யோசித்தான் விஜய்.

......



## அத்தியாயம்: 4

எழுதியவர் :

### கி. இரகுநாதன்

மூர்த்தி வேலனிடம் சொல்லிக் கொண்டி ருந்தார். சந்தித்த இடம்: விவேக் வீடு.

'முதலாளி ரொம்ப நல்லவரு வேலா.. உனக்காக என்கிட்ட எத்தனை நாள் பேசியிருக்காரு தெரியுமா..? ரொம்ப முயற்சி எடுத்து உன்னை இங்க அனுப்பி யிருக்காரு....'

வேலனுக்கு சற்றே எரிச்சலாக இருந்தது. 'என் மூளை.. என் திறமை.. நான் படிச்சேன்.. நான் மார்க் எடுத்தேன்.. முதலாளி பெரிசா என்ன செஞ்சிட்டாரு..?' என்றான் மனதுக்குள்.

அதற்குள் அவனுடைய கைபேசி அழைக்க, 'ஹே..! அவ் ர் யூ டூட்.. லாங் டைம் நோ சீ... வாட் ஹாப்பன்ட்....' என்று சுத்தமான அமெரிக்க ஆங்கிலத்தில் பேசிய வேலனை மூர்த்தி ஆச்சரியத்துடன் பார்த்தான். 'ஒரு வருடத்துக்கு முன்பு நான் பார்த்த அப்பாவி கிராமத்து இளைஞனா இவன்...?'

ஒரு வருட அமெரிக்க வாழ்க்கை, வேலனை முற்றிலும் மாற்றியிருந்தது. ஒல்லியாக இருந்த உடம்பு கொழுகொழு உடம்பாக மாறியிருந்தது. உடல்மொழியில் அலட்சியமும், நடையில் ஒரு கர்வமும் தெரிந்தது.

வேலன், 'ஐ'ல் பீ தேர் இன் அனதர் ஒன் ஆர்.. ப்ளீஸ் பேர் வித் மீ....' என்று சொல்லி இணைப்பை துண்டித்து மூர்த்தியைப் பார்த்தான்.

'மொத வருஷம்தான் உனக்கு பணத்துக்கு கஷ்டமாக இருக்கும்னு சொன்னேன். இப்ப பார்த்தியா..? நான் வாங்கிக் கொடுத்த வேலையில நீ பார்ட் டைம் வேலையும் செஞ்சிகிட்டு படிக்கவும் செய்யற...'

'என்ன சார் பெரிய்...ய வேலை! டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர்ஸ்ல வீக் எண்டுல சேல்ஸ்மேன் வேலை. இதை பெருமையா வெளியே சொல்லிக்க முடியுமா..?' தோளைக் குலுக்கி சலிப்பாய்ச் சொன்னான்.

வேலனின் கண்களை நேராகப் பார்த்துப் பேசினார் மூர்த்தி. 'எங்கப்பா இங்க வந்தப்ப ஓட்டல்ல சர்வரா வேலை பார்த்திருக்காரு. எந்த வேலைய செய்தாலும் அதில் நம்ம ஈடுபாட்டை காட்டணும். அப்பதான் நாம முன்னேற முடியும். எந்த நிலைக்கு உயர்ந்தாலும் நீ... பொறந்த மண்ணை மறக்காத. அந்த ஜனங்களுக்கு ஏதாவது செய். கிராமம் முன்னேறணும். நகரங்கள் கிராமத்தை நோக்கி வர நிலைமைய உருவாக்கணும் வேலா...'

வேலனுக்கு மேலும் எரிச்சலாக இருந்தது. 'இங்க நானே ராப்பகலா படிக்கவும், வேலை செய்யவும் திண்டாடிக் கிட்டு இருக்கேன். இதில் கிராமத்துக்கு ஏதாவது செய்யணுமாம்.. நல்ல கூத்து.. எனக்காக எதுவும் செய்யாத கிராமத்துக்கு நான் ஏன் செய்யணும். இவரு வேற பெரிசா அட்வைஸ் பண்ண வந்துட்டாரு... அடப் போய்யா.. உம்ம வேலைய பார்த்துகிட்டு..'

'வேலா ஹாவ் திஸ்..' என்றபடி விவேக் வந்தான். கையிலிருந்த ட்ரேயில் மூன்று கண்ணாடி கிண்ணங்களில் மேற்புறத்தில் சூடாக சாக்லெட் ஸாஸ் ஊற்றப்பட்ட ஐஸ்க்ரீமை அவனிடம் கொடுத்தான். 'என்ன வேலா.. மூர்த்தி அட்வைஸ் பண்ண ஆரம்பிச்சுட்டாரா..?' என்றான் சிரித்துக் கொண்டே.

'நீயும் அட்வைஸ் பண்ணாம இருந்தா போதும்' என எண்ணியபடி, பதிலேதும் சொல்லாமல் மெதுவாய்ப் புன்னகைத்தான்.

'மூர்த்தியோட பாஸ்போர்ட்டும், முக்கிய மான டாக்யூமெண்ட்சும் இருந்த சின்ன கவர் கமலி கையில் கிடைக்காம வேற யார் கையிலாவது கிடைச்சிருந்தா வேலனின் கதி என்னாகியிருக்கும்னு...? இப்போ நினைச் சாலும் பகீர்னு ஆயிடுது...' என்றபடி அங்கு வந்தாள் கஸ்தூரி.

விவேக், 'கமலிக்கு தரை எப்போதும் சுத்தமா இருக்கணும். ஏதாவது இருந்தா உடனே எடுத்து தன் பையில் போட்டுப்பா. வீட்டுக்கு வந்து அந்தப் பையில் இருந்ததை டஸ்ட் - பின்ல போடலாம்னு திறந்தா வேலனோட பாஸ்போர்ட். உடனே ஒரு சந்தேகத்துல உனக்கு போன் பண்ணப்புறம் தான் நீ தேடி வந்த அதே வேலனோட பாஸ்போர்ட்டுன்னு தெரிஞ்சது....'

மூர்த்தி, 'தட்ஸ் க்ரேட் ஆஃப் கமலி..' என்றான். 'எங்க அவ...?'

வேலனுக்கு ஆத்திரமாக வந்தது. 'இவ எடுக்காம விட்டிருந்தாலே யாராவது பார்த்து கொடுத்திருப்பாங்க.. லூசுப் பொண்ணு ஒருத்தி... அவளை பாராட்ட ரெண்டு பேர்.. போங்கடா...' என்று மனதுக்குள் கரித்துக் கொட்டினான்.

அவனுடைய கைப்பேசி மீண்டும் அழைக்க, 'ஐயாம் ஆன் மை வே... அனதர் ட்வெண்டி மினிட்ஸ்.. ஐ'ல் பீ தேர்..' என்றபடி எழுந்தான். மூவரையும் பார்த்து, 'சாரி... அங்க எனக்காக வெயிட் பண்றாங்க.. நான் வரட்டுமா..?' என்றவன் அவர்கள் பதிலுக்காகக் காத்திராமல் புறப்பட்டான். 'உங்களை மறுபடியும் பார்க்கவே போறதில்ல.. எதுக்கு தாங்க்ஸ் சொல்லணும்..'

'அங்கிள்... அங்கிள்..' என்ற கமலியின் குரல் கேட்டும், கேட்காதது போல் வெளியேறினான்.

இப்போது மூர்த்திக்கும், விவேக் குடும்பத்தினருக்கும் இது ஆச்சரியமாகப் படவில்லை. தன்னுடைய கிராமத்துப் பக்கம் இவன் செல்ல மாட்டான் என்பது மட்டும் புரிந்தது.

......

அந்த கிராமமே விழாக்கோலம் பூண்டிருந்தது. அக்கம் பக்கத்து கிராமங்க ளிலிருந்தும் மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். மாவட்ட ஆட்சியர், தாசில்தார், கல்வித்துறை அதிகாரிகள்.. என முக்கியப் பிரமுகர்கள் வந்திருந்தனர்.

மாவட்ட ஆட்சியர் பேச ஆரம்பித்தார்.

'ஒரு பெண்ணால் என்ன சாதிக்க முடியும்..?' என்று கேட்பவர்களுக்குப் பதிலாக ஒரு பெண்ணால் என்ன சாதிக்க முடியாது..?' என்கிற கேள்வியையே பதிலாகத் தந்திருக்கிறார் இந்த இளம் பட்டதாரி செல்வி சுப்புலட்சுமி' அவர்கள். தமிழ்நாட்டின் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் இந்தக் குக்கிராமத்தின் பக்கம், நாட்டின் மொத்தப் பார்வையையும் திருப்பியிருக்கிறார். சுப்புலட்சுமியின் சாதனையைப் பார்க்கும் போது நானும்

ஒரு பெண் என்பதில் பெருமைபடுகிறேன்.

பள்ளிக்கூடங்களில், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் நூறு சதவிகிதம் தேர்ச்சி என்பது பொதுவாக நகர்புறங்களிலும், மாவட்டங்களில் இயங்கும் பள்ளிக்கூடங்களிலும் மட்டுமே நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இந்த மாவட்டத்திலேயே எங்கும் இல்லாத அளவிற்கு இந்தக் கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் நூறு சதவிகிதம் தேர்ச்சி என்பது மட்டுமல்ல.. தேர்ச்சி பெற்ற அத்தனை பேரும் தொண்ணூறு மதிப்பெண்களுக்கு மேல் எடுத்து தேர்ச்சிப் பெற்றுள்ளனர் என்பது தான் ஆச்சரியம். செல்வி சுப்பு லட்சுமியோடு இணைந்து இந்த கிராமம் முன்னேற வேண்டும் என்கிற ஒரே குறிக்கோளோடு அதற்கான முயற்சியை, முனைப்போடு எடுத்த... முதலாளி என்ற ழைக்கப்படும்....' ஆட்சியர் சற்றே நிறுத்தி மீண்டும் தொடர்ந்தார்.

'.... பெயர் வேண்டாம்.. முதலாளி என்றே நானும் அழைக்கிறேன். அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவரைப் பற்றி நான் சொல்வதை விட.... கிராமத்து மக்களுக்காக தினமும் மாலைநேர வகுப்புகள் எடுத்து அத்தனை மாணவர்களையும் சிறப்பாக வழிநடத்தி, தனியொருத்தியாக சாதனை புரிந்த இந்தக் கிராமத்து தேவதை சுப்புலட்சுமி சொல்வது பொருத்தமாக இருக்கும்...' என்று சொல்லி அமர்ந்தார்.

பலத்த கரவொலிக்கிடையே மேடையேறினாள் சுப்புலட்சுமி.

'அனைவருக்கும் வணக்கம்... நான் என் வீட்டருகே வெட்ட வெளியில் பத்து மாணவர்களுக்குப் பாடம் எடுத்ததைப் பார்த்த முதலாளி, தன் வீட்டின் ஒரு பகுதியை மாணவர்களுக்காக மாலைநேர வகுப்புக்காக ஒதுக்கி என்னை அங்கே வந்து பாடம் சொல்லித் தருமாறு வேண்டினார். பத்தாவது படிக்கும் ஒவ்வொரு மாணவருடைய பெற்றோர்களிடமும் கல்வியின் முக்கியத்துவம் பற்றிப் பேசி எல்லோரையும்வரவழைத்தார். ஒவ்வொரு மாதமும் எனக்கான சம்பளப் பணம் என்று தன்னுடைய சொந்தப் பணத்தைக் கொடுத்தார். இத்தனைக்கும் மாணவர்கள் யாரிடமும் அவர் பணம் வாங்கியதில்லை. என்னைப் பொறுத்தவரை அவர் முதலாளி அல்ல.. இந்தக் கிராமத்து மக்களுக்கு அவர் தான் குலசாமி...' என்றவள் சட்டென முதலாளியின் காலில் விழுந்து வணங்கி எழுந்தாள். 'இந்தக் கிராமத்துக் குலசாமியோடு, நான் வணங்கும் இன்னொரு சாமி.. என்னை இந்த நிலைக்கு உயர்த்திய... என் குலசாமி... என் அப்பா....' என சொன்னவள், 'அப்பா... அப்பா' என ஒலிபெருக்கியில் கூப்பிட்டாள்.

கூட்டமே உணர்ச்சிப் பெருக்கில் நெகிழ, 'முதலாளி வாழ்க.. டீச்சரம்மா வாழ்க..' எனும் கோஷம் விண்ணைப் பிளந்தது.

'என் மகளை எப்படி கரை சேர்ப்பேன் என நினைத்தேனே... அவள் இந்த ஊரையே கரை சேர்க்கும் காவல் தெய்வம் எனத் தெரியாமல் போய்விட்டதே...' என்று முணுமுணுத்தவர், 'அய்யா கருப்பண்ணசாமி... என் பொண்ணு மாதிரி பல காவல் தெய்வங்களை உருவாக்கய்யா' என சத்தமாய்ச் சொல்லியபடி, எப்பொழுதும் கூனிக் குறுகி கைகட்டி நின்ற தன் உடம்பை நிமிர்த்தி, கையுயர்த்தி சத்தமாய்க் கைதட்டினார்.

பலரின் கைத்தட்டல்களுடன் சேர்ந்து, அவர் மேடையேற... அவரின் உடலும் மனமும் நிமிர ஆரம்பித்தன!

- முற்றும்.

# காதல் தேசம் இல்லை

கண்ணிரண்டின் அசைவினிலே கன்னியிவள் உணர்த்தும் கதை,
எண்ணிலடங்கா பொருளடக்கி எடுத்ததோர் நல்லியக்கமாக,
மண்ணாளும் மன்னவனும் மண்டியிடும் ஓர்நிலையாகி,
பெண்ணாளும் வழித்தடத்தில் பெயர்மறந்து தலைகுனிந்தான்.

புரிந்து கொள்ளும் இதயமென பூவையவளை முன்னிறுத்தி,
விரிந்ததோர் பார்வையாலே வில்லிமைக்குள் விழுந்தவனாய்,
தெரிந்ததோர் திருமுகத்தின் தீபவொளி காட்சியிலே,
தேவியே சரணமென்று தேடலை மறந்து நின்றான்.

மொழியொன்றும் இல்லாத மௌனத்தின் பார்வையிலே,
வழியறியாச் சிறுவன் போல் வசப்பட்ட ஆண்தகையும்,
விழி சொல்லும் கட்டளையை வேதமென உள்வாங்கி,
பழியறியாக் காதலோடு பயணப்படக் காத்திருந்தான்.

வழி சொல்லும் விழியசைவில் வலிகள் பல இருந்தாலும்,
மொழி சொல்லா மௌனத்தில் மோனத் தவம் கொண்டவனாய்,
எழில் மங்கை அழகினாலே ஏக்கம் மிகக் கொண்டவனும்,
எதிர்கால நிலையறிந்து எடுத்தாள மனம் கொண்டான்.

எழுத்தில்லா வரிகளாக எழுந்துவரும் விழிப்பூக்கள்,
பழுதில்லாப் பார்வைக்குள் பரவசத்தைச் சுமந்து நிற்க,
கருவிழிக்குள் நிறைந்திருக்கும் கனத்துப் போன அதிர்வலையில்
கன்னி மனச் சோலைக்குள் கனிமரமாய் கனிந்திருந்தான்.

ஒளி வரவாய் விழிமலர்ந்து வெளியுலகு நோக்கும் போது
ஒளிந்து நிற்கும் மனப்பூவும் ஒதுங்கி நின்று வழி கொடுக்கும்.
கடிதமில்லா கணினி யாக கருவிழிகள் உருவெடுக்க,
மொழியில்லா மௌனத்தில் மெல்லக் கதவு திறக்கும்.

இருமனப் பார்வையிலும் ஓர்நினைவே உயர்வாக,
கருக்கொண்ட காதலுக்கு கண்மலர்கள் களமாக,
திருவான காதலுக்குள் தேடுதலே முதற்காட்சியாக
தேவியிவள் திருக்கரத்தை தேடிவந்து கைபிடித்தான்.

பொய்யில்லாக் காதலென்றும் புதைந்து விடப்போவதில்லை,
மெய்யுணர்வு அதிலிருக்க முடித்துவிட யாருமில்லை,
நெய்ததோர் நல்லன்பில் நெஞ்சகத்து கனவுப்பூக்கள்
எய்ததோர் விழியம்பாய் என்றென்றும் தோற்பதில்லை.

பரணி சுப சேகர்

## அந்நாள்... மகிழ்ச்சி

வானின்மழை வாவென்றது பூத்தூவிய இன்பம்
தேனின்நிறை தெள்ளமுதென தெளிகின்றது துன்பம்
மானின்விழி மனம்மயங்கிட வந்ததோஒரு எண்ணம்
ஏனென்றிட பார்என்றது ஈதென்னடா
வண்ணம்...

## இந்நாள்....

நான்என்றது நலம்கண்டிட நாதன்அவன் வருவான்
வான்மீதொரு கோலங்களை வரைந்தாலவள் கனவில்
வீணென்றிட சொல்லியாயவன் விளையாடிட செய்வான்?
கோன்யாரது நீதானது கொள்வாயென?கேட்டேன்

சரியென்றிட இருந்தாலுமே தழும்பானது நெஞ்சம்
வரிவரியென போடும்துயர் வட்டாடிட துஞ்சா
எரிகின்றது ஏதாகிலும் எனக்கெனவரும் இறையே...
கரியாதது கரையாதது கல்லானதோ... தஞ்சம்...

– தென்றல்கவி தமிழ்ச்சிட்டு



பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
சனவரி 2024

## வீண்முயற்சியா? விடாமுயற்சியா?

புதுவைத் தமிழ்நெஞ்சன்

முயற்சி செய்ய முதலடி வைத்தால்
முட்டுக் கட்டை போட்டு சொல்வார்
வீண்முயற்சி + நீ
முயற்சி செய்து மூளையால் வென்றால்
முன்னே வந்து கைக்குலுக்கி சொல்வார்
விடாமுயற்சி !

முடியும் உன்னால் முயன்று வென்றிடு
மூச்சும் பேச்சும் முனைப்பாய் இருந்தால்
பெரும்வெற்றி + காரிருள்
மடியும், கதிரும் முளைத்தெ ழுந்தே
மண்ணில் விண்ணை மலர்த்திக் காட்டும்
கைப்பற்றி !

சரியெனப் பட்டதை சட்டென செய்திடு
சரிநிகர் தானே சம்மதம் ஆகும்
அறிந்துவிடு + தீப்
பொறியென பறந்து புறப்படு இன்றே
பொசுக்குத் தீதை புலம்பல் தவிர்த்தே
நிமிர்ந்துவிடு!